
# செஞ்சொல் உரைக்கோவை





கிருபானந்தவாரியார்



உ

சிவ சிவ சிவ

# சென்னைப் பல்கலைக்கழகச்
# செஞ்சொல் உரைக்கோவை



உரை ஆற்றியவர் :

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்

வெளியிடுபவர் :

துரை. கோதண்டபாணி

107, சிங்கண்ண செட்டித் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை,

சென்னை-600002

அக்டோபர்—1981



விலை: ரூ. 12-00

ஜீவன் பிரஸ், சென்னை—5.

உ

முருகா

# முன்னுரை

உடம்பை வளர்ப்பதுபோல் உயிரையும் வளர்க்க வேண்டும். உடம்பு இரை தேடுவதுபோல் உயிர் இறையைத் தேடவேண்டும். உடம்பை உணவு வளர்க்கும். உயிரை உணர்வு வளர்க்கும். அதனுல் திருவள்ளுவர் மெய்யுணர்வு என்று ஒரு அதிகாரமே வகுத்திருக்கின்ருர்.

ஆதலினுல் தன்னையும், தன் தலைவனையும், தலைவனுடைய திருவருட் செயலையும் சிந்திக்கின்றவன் உயர்வு பெறுவான். இதனுல் அருணகிரிநாதர்,

"சிந்திக்கிலேன்" என்று கந்தரலங்காரத்தில் உபதேசிக் கின்ருர்.

ஒவ்வொரு மனிதனும் சிவநெறியை ஆராய்தல் வேண்டும்.

இவ்வாறு ஆராயும் தன்மையில்லாதவர்கள் உள்ளத்துள் இறைவன் ஒளிந்திருப்பானும்.

"ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே" .

என்கின்ருர் மணிவாசகர்.

"ஓரவொட்டார் ஒன்றை உன்னவொட்டார்"

என்ற அருள்வாக்கும் இங்கு சிந்தித்தற்குரியது. ஆதலால் நாம் உய்வதற்குரிய உயர்ந்த ஞான நூல்களை ஓதி உணர்ந்து, சிந்தித்து, தெளிவு பெறுதல் வேண்டும்.

இந்தச் சிந்தனை வளம்பெற வேண்டி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் சில ஆராய்ச்சி விரிவுரைகள் நிகழ்த்தினேன். அவை அன்பர்கட்கு மிகவும் பயன் தரக் கூடியவை.

இவற்றை நாடாவில் (டேப்பில்) பதிந்து அவற்றை எடுத்து எழுதியதைத் திறம்படத் தொகுத்து துரை. கோதண்டபாணி என்பவர் மக்கள் உலகம் உய்ய அச்சிட்டு வழங்குகின்றார்.

இது மிகவும் பயனுடைய செயல். இதனைப் படித்தோர் பல நூல்களைப் படித்த நலம் பெறுவார்கள்.

வாழ்க—சிவநெறி!

வளர்க—அருள்நலம்!

சென்னை
4-10-81

அன்பன்
கிருபானந்தவாரி

உ

முருகன் துணை

# அணிந்துரை

[வாகீச கலாநிதி சீலத்திரு. கி. வா. ஜகந்நாதையர் அவர்கள்]

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் தமிழ் வழங்கும் இடங்களிலெல்லாம் சென்று பிரசங்கம் செய்கிற வர். அவர் சொற்பொழிவைக் கேட்க வருகிற அளவு சினிமாவுக்குக் கூடக் கூட்டம் வருவதில்லை சில சமயங்களில் ஓரிடத்தில் அவர் சொற்பொழிவு நடக்குமானால், அருகில் உள்ள சினிமாவுக்குப் போகிறவர்கள் குறைந்து விடுவார்கள். சினிமாவைக் கண்டு ரசிப்பவர்களைவிட அவருடைய பேச்சைக் கேட்டு ரசிப்பவர்கள் அதிகம்.

இதற்குக் காரணம் என்ன? அவர் பேச்சில் சினிமாவில் இல்லாத நயங்களை அவர்கள் காண்கிறார்கள். அவர் எவ்வளவு நுட்பமான விஷயமாயினும் தெளிவாக விளக்குகிறார். உலக அனுபவத்தை உதாரணமாகக் காட்டுகிறார். அவர் கூறும் உவமைகள் எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாக விளக்குகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் அவர் பேசிய சொற் பொழிவுகளைத் தொகுத்து, 'செஞ்சொல் உரைக்கோவை' என்ற பெயரில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகத் தில் உள்ள சொற்பொழிவுகளைப் படித்தால் ஏதோ புத்தகத் தைப் படிப்பது போல் இராது. திரு. வாரியாரவர்களே முன் நின்று பேசுவது போல் இருக்கும்.

எத்தனை நுட்பமான பொருள்களை அவர் விளக்குகிறார்!

பாரிஸில் உள்ள நூல் நிலையத்தில் முதலில் பைபிளை வைத்திருக்கிறார்களாம். அதை அடுத்து வைத்திருப்பது எந்த நூல் தெரியுமா? 'நம்பர் இரண்டு என்று போட்டுத்

திருக்குறளை வைத்திருக்கிறார்கள்' இதைப் படித்தால் நமக்குப் பெருமையாக இருக்கிறதல்லவா?

"யாதானும் நாடாமால் ஊராமால்" என்பதற்கு இவர் புதிய பொருள் ஒன்றைச் சொல்கிறார். மால் ஊராமால் என்று பிரித்து, 'நாராயணன் வாழ்கின்ற வைகுண்டம்' என்று பொருள் செய்கிறார். அந்தத் தாமரைக் கண்ணான் உலகத்தைத் திருவள்ளுவர் வேறிடத்திலும் சொல்லியிருக்கிறார். இந்த இரண்டையும் காட்டி விளக்கும்போது வாரியாரின் சாமர்த்தியத்தை மெச்சுகிறோம்.

திருப்புகழ்ப் பாடல்களில் துளைந்து விளையாடுகிறவர் வாரியார் சுவாமிகள். அதில் உள்ள நுட்பமான செய்திகளை, 'திருப்புகழ் இன்பம்' என்ற பேச்சில் எடுத்துத் தருகிறார்.

கந்த புராண நுண் பொருள் என்ன? சூரபன்மன் செய்ந் நன்றி கொன்றான்; அதனால் குலத்தோடு அழிந்து விட்டான். இந்தக் கருத்தைத் தக்க ஆதாரங்களுடன் விளக்குகிறார்.

'இந்த மகத்தான தத்துவங்களை யெல்லாம் முருகப் பெருமான் சிவபெருமானுக்கு உபதேசித்தாராம். சிவபெருமானுக்குத் தெரியாதது என்று அர்த்தமில்லை. சிவனே முருகன்; முருகனே சிவன். எப்போதுமே அப்பாவைவிடக் குழந்தைக்குப் பெருமை அதிகமாய் இருக்கும்' என்று சொல்லிவிட்டு அதற்கு ஓர் உவமை சொல்கிறார். 'வெண்ணெய்தானே நெய்? வெண்ணெயில் மணம் இருக்காது; நெய் மணக்கும்' என்று சொல்லும்போது 'சபாஷ்' போடத் தோன்றுகிறது. கந்தபுராண நுண் பொருளைச் சொல்லும் போது, 'ஆணவ மலம் சூரபன்மன், கன்ம மலம் சிங்கமுகாசுரன், தாரகாசுரன் மாயா மலம்' என்று அவற்றைத் தெளிவாக்குகிறார்.

இராமாயண சாரம் என்ன? 'ஆத்மா ராமர், ஆனந்தந்தான் சீதை, ஆனந்தமான சீதையைத் தேடிக்கொண்டு ஆத்மா ராமர் போனார். மெய்யுணர்வே ஆனந்தத்தைக் கண்டு பிடிக்கிறது. மெய்யுணர்வு ஆஞ்சநேயர்'—இப்படி

விளக்கிக்கொண்டு போகிருர். இராமாயணக் கதை முழுவதும் தத்துவத்தைச் சொல்கிறது என்பது தெளிவாகப் புரிகிறது.

இப்படியே இந்தப் புத்தகத்திலுள்ள அரிய கருத்துக்களையும் அவற்றை வாரியார் சுவாமிகள் எடுத்து விளக்கும் முறையையும் சொல்லிக்கொண்டு போனுல் அதுவே ஒரு புத்தகமாகிவிடும்.

அரிய கருத்துக்களைத் தெளிவாகவும் ஆதாரங்களுடனும் படிப்பவர் மனத்தில் பதியும் வண்ணம் சொல்லும் ஆற்றல் கைவந்தவர் திரு. வாரியார் சுவாமிகள். அவருக்கென்று அமைந்த தனிப் பாணி அது.

புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினுல், கதை படிப்பது போல இருக்கும். கதையில்கூட இத்தனை சுவை இராது. படித்து முடித்த பிறகு எத்தனையோ நுட்பமான கருத்துக்களைத் தெளிவாக உணர்ந்து கொண்டோம் என்ற மன நிறைவு ஏற்படும்.

இவ்வாறு, கேட்பாரை மயக்கும் சொல்லாற்றல் பெற்ற வாரியாரவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, இப்படியே அமுதமழை போலச் சொற்பொழிவுகளைப் பொழிந்து வர வேண்டும் என்று முருகப்பெருமானைச் சிந்தித்து வாழ்த்துகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்

உ

சிவசிவசிவ

# பதிப்புரை

தமிழக அரசின் நல்லெண்ணத்திஞல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம் ஆசிரியப் பிராஞர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள் 1979-80ல் ''தமிழிசை'' முதல், ''சைவ சித்தாந்தம்'' முடிய எட்டுத் தலைப்புக்களில் அரிய பெரிய சொற்பொழிவுகள் ஆற்றிஞர்கள்.

அவ்வுரைகளில் விளக்கியுள்ள கருத்துக்கள் மிகவும் விழுமியவை. அரிதினும் அரியவை. சைவ சித்தாந்தத்தை எளிய மக்களும் புரிந்துகொள்ளுமாறு விளக்கியுள்ளார்கள். ''சைவ சித்தாந்தம்'' என்பது 'இரும்புக் கடலை' என்று அதனைப் பலரும் படிப்பதில்லை. மிக்க எளிய முறையில் நன்கு விளங்கும்படி விளக்கியுள்ளார்கள். இந்த விளக்கம் அனைவருக்கும் பயன் தரும்.

இவ்வரிய கருத்துக்களெல்லாம் நூல் வடிவில் இருப்பின் பின்வரும் சந்ததியினர்க்குப் பெரிதும் பயன்தரும் எனப் பலகாலும் வலிமையாக எண்ணிச் சிந்தித்து முயன்றுகொண்டிருந்தேன்.

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

என்ற தமிழ் மறைப்படி அடியேனுடைய நீண்ட நாளைய எண்ணம் ஈடேறி, ''செஞ்சொல் உரைக்கோவை'' என்ற நூலாக இப்போது வெளியிடப் பெறுகிறது.

சுவாமிகளுடைய பாணி (தனித்தன்மை), அவர்களுடைய எடுத்துக்காட்டு, கருத்துக்கள் முதலியவை மிக மிக மிக

விழுமியவை. இந்த மிக அரியதாகிய சைவசித்தாந்தத்துக்கு இத்துணை எளிதாகவும், தெளிவாகவும், அனைவரும் புரிந்துகொள்ளுமாறும் விளக்கம் தருவது எல்லோராலும் இயலாத ஒன்று. இனி ஒருவரும் இப்படி விளக்கம் கூற இயலாதென்பது இதனை நன்கு ஊன்றிப் படித்து உணர்வார் கட்குப் புலனாகும் என்பது ஒருதலை.

ஆகவே அவ்வரிய கருத்துக்கள் பிற்காலச் சந்ததியினர்க்குப் பெரிதும் அரண் செய்யும் என்பதே இதனைப் பதிப்பித்ததன் முழு நோக்கம்.

சுவாமிகள் ஆற்றிய உரைகளை நாடாவில் (டேப்பில்) பதிந்து வைத்து, பிறகு எடுத்து எழுதப் பெற்று, அச்சுக்குத் தரப் பெற்றது. சொற்பொழிவுகளை எழுத்தில், கொணரும்போது சில இடர்ப்பாடுகள் நேரிடுகின்றன இயன்ற இடங்களில் சரிசெய்து இணைத்திருக்கின்றேன். சில இடங்களில் ''ஆசிரியர் கருத்துக்கு வேறுபட்டுவிடுமோ'' எனக் கருதி அப்படியே அமைத்துள்ளேன். சொற்பொழிவை நூல் வடிவாகச் செய்வது சிறிது சிரமந்தான். ஆகவே நூலில் குறைகள் இருப்பின் அவை அடியேனுடைய பிழை எனக் கொண்டு பொறுத்தருள வேண்டுகிறேன்.

அரும் பெரும் உரை ஆற்றியருளியவரும், முன்னுரை வழங்கியவரும் ஆகிய எம் ஆசிரியப் பிரானார் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகட்கும், அணிந்துரை அளித்து இதனை அணி செய்தருளிய வாகீச கலாநிதி 'கலைமகள்' ஆசிரியர் சீலத் திரு கி வா. ஜகந்நாதையர் அவர்கட்கும் அடியேனுடைய சிரம் தாழ்த்திப் பலகாலும் வந்தனம் செலுத்திக் கொள்கிறேன். டேப்பிலிருந்து எடுத்து எழுதி உதவிய திரு. K. இராமசுப்பிரமணியம் அவர்கட்கு நன்றி. அன்புடன் அச்சிட்டுத் தந்த ஜீவன் அச்சக உரிமையாளர் இனிய பண்பினர் K. M. ஜான் அவர்கட்கு நன்றி.

இதனை அச்சிடுவதற்கு உறுதுணையாயிருந்துதவிய இனிய அன்பினர் சென்னைப் பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவி

Dr. S. சீதா அம்மையார் அவர்கட்கும், ஏனைய அன்பர்கட்கும் நன்றி கலந்த வணக்கம் உரித்தாகுக.

தமிழுலகம் இதனைப் படித்து உணர்ந்து பயன் பெறுமாறு வேண்டுகிறேன்.

எண்ணிய எண்ணத்தை இனிது நிறைவேற்றி வைத்த தெய்வத் திருவருளை வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

இங்ஙனம்

சிவன் சீரடியார் அடிமை

**துரை. கோதண்டபாணி**

# உள்ளுறை

# பிழை — திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 30 | உயத்து | உய்த்து |
| 16 | 20 | மேனி | மேனிக் |
| 18 | 21 | அப்போ | அப்போது |
| 20 | 26 | பாருங்கள | பாருங்கள் |
| 21 | 10 | போய் | போய்த் |
| 23 | 18 | நாகரீகம் | நாகரிகம் |
| 24 | 30 | நிரம்ப | நிரம்பச் |
| 25 | 21 | போல | போலப் |
| 26 | 30 | பார்த்து | பார்த்துச் |
| 26 | 31 | போல | போலத் |
| 29 | 23 | எட்டு கோடி | எட்டுக்கோடி |
| 29 | 28 | எப்பவும் | எப்போதும் |
| 33 | 15 | நிரம்ப | நிரம்பக் |
| 34 | 2 | வாங்கி | வாங்கிப் |
| 34 | 32 | விழா | விழாக் |
| 35 | 6 | எப்பவும் | எப்போதும் |
| 35 | 12 | பாடிஞரே" | பாடிஞர்" |
| 38 | 17 | சிவத்த | சிவந்த் |
| 38 | 30 | கருப்பாய் | கறுப்பாய் |
| 42 | 8 | அப்போ | அப்போது |
| 43 | 7 | இதறகுப் | இதற்குப் |
| 50 | 24 | தவிர | தவிரத் |
| 51 | 20 | எடுக்க | எடுக்கத் |
| 51 | 25 | படுத்தி | படுத்திக் |
| 52 | 7 | கரளித்த | கரசளித்த |
| 52 | 28 | குறப்பவை | குறப்பாவை |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 53 | 4 | சின்ன | சின்னச் |
| 55 | 24 | புறநானூறில் | புறநானூற்றில் |
| 58 | 6 | தன்னுடைய | தம்முடைய |
| 60 | 30 | றவுரை அ | அறவுரை |
| 63 | 12 | சிலதெல்லாம் | சிலவெல்லாம் |
| 65 | 16 | வரண்டு | வறண்டு |
| 70 | 2 | பிரும்ம | பிரம்ம |
| 74 | 13 | காலகப் | காலாகப் |
| 79 | 12 | சிவபெருமனிடம் | சிவபெருமானிடம் |
| 81 | 29 | அரைபடி | அரைப்படி |
| 81 | 33 | விடுகிறது | விடுகின்றன. |
| 82 | 4 | விடுகிறது | விடுகின்றன. |
| 83 | 19 | முந்தி | முந்தித் |
| 86 | 26 | மூடுகிறது | மூடுகின்றன. |
| 86 | 32 | வள்ளியமைம்ம | வள்ளியம்மை |
| 88 | 17 | தன் | தம் |
| 89 | 31 | டிருப்பான் | டிருப்பார் |
| 93 | 24 | தன் | தம் |
| 95 | 17 | சுமகக்ாதே | சுமக்காதே. |
| 96 | 5 | விளக்கெண்ணே | விளக்கெண்ணெய் |
| 103 | 8 | வைத்து | வைத்துச் |
| 104 | 13 | அற்ப | அற்பப் |
| 105 | 2 | கொள் | கொள்ள |
| 105 | 25 | பாட்டு | பாட்டுப் |
| 107 | 22 | எந்தன் | என்றன் |
| 107 | 26 | யுகங் | யுகக் |
| 110 | 14 | 'ஆனல்' என்பதற்குப்பின் 'ஒரு சதுர்யுகம்' என்று படிக்கவும். | |
| 111 | 16 | எட்டு | எட்டுப் |
| 121 | 9 | இந்த | இந்தச் |
| 139 | 28 | தான் | தாம் |
| 146 | 10 | நிலஉலாவிய | நிலவுலாவிய |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 146 | 19 | நிலஉலாவிய | நிலவுலாவிய |
| 149 | 33 | கைப்பிடிந்து | கைப்பிடித்து |
| 155 | 1 | தவார | தேவார |
| 157 | 25 | பொருத்தணே | பொருந்தணே |
| 160 | 12 | பொருத்தணே | பொருந்தணே |
| 165 | 2 | தான் | தாம் |
| 169 | 11 | சின்ன | சின்னக் |
| 170 | 19 | சின்ன | சின்னக் |
| 178 | 24 | தன் | தம் |
| 179 | 29 | தன்னுடைய | தம்முடைய |
| 186 | 30 | மாம்பழச் | மாம்பழக்கவிச் |
| 187 | 23 | வாய்ப்பு | வாய்ப்புக் |
| 195 | 19 | யொழியிலே | மொழியிலே |
| 205 | 5 | தன் | தம் |
| 218 | 23 | தனக்கு | தமக்கு |
| 218 | 24 | தந்தது | தந்தவை |
| 223 | 15 | பாதி | பாதிச் |
| 224 | 8 | நிறைய | நிறையக் |
| 226 | 29 | நீரு | நீறு |
| 265 | 20 | கடினமானப் | கடினமான |
| 291 | 4 | சந்தணம் | சந்தனம் |
| 275 | 14 | உணடு | உண்டு |
| 308 | 22 | இருப்ப ஞல் | இருப்பதனுல் |
| 313 | 15 | யிரைக்குமால் | யிசைக்குமால் |

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்



சென்னைப் பல்கலைக்கழகம் 12—1—80

பதிவாளர் : இசைத்துறைத்தலைவி :

திரு C. K. குமாரசுவாமி அவர்கள் Dr. S. சீதா அம்மையார்

திருச்சிற்றம்பலம்

## சென்னைப் பல்கலைக்கழகச்

# செஞ்சொல் உரைக் கோவை

[திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்]

## 1. தமிழிசை

[1—9—1979]

**எ**ல்லாம் வல்ல வயலூர் எம்பெருமானுடைய தனிப் பெருங் கருணையினாலே, அறிவு என்ற ஒன்றைப் பெறுவதற்காகக் குழுமியுள்ள உங்கள் முன்பு தமிழிசை என்பதைப் பற்றி இப்பொழுது பேசுவதற்கு மேற்கொள்ளுகிறேன். அநேகம் பேர்கள் ஒரு கருத்தைத் தவறாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் என்ன எண்ணுகிறார்கள் ? படிப்பதனாலே அறிவு வரும் என்று எண்ணுகிறார்கள். அது ஒரு பிழையான கருத்து. படித்தால் அறிவு வராது என்பது நீண்ட நாளாக ஆராய்ந்து பண்ணின முடிவு. ஆனால் சாகும் வரை படிக்கலாம்.

> **''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
> **சாந்துணையும் கல்லாத வாறு''**

என்பார் திருவள்ளுவர். திருவள்ளுவர் சொன்னால் அது சுப்ரீம் கோர்ட் மாதிரி. அதற்குமேல் அப்பீல் கிடையாது.

நான் பாரீஸ் நகரம் போயிருந்தேன். அங்கே என்னை ஒரு நூல் நிலையத்துக்கு அழைத்துக்கொண்டு

போய்க் காண்பித்தார்கள். அதிலே மடக்கி வைத்தி ருக்கிற பீரோக்களையெல்லாம் நேராக நீட்டி வைத்தால் ஆறு மைல் நீளம் வரும். அவ்வளவு பெரிய பிரும் மாண்டமான லைப்ரரி. அதிலே நான் குறிப்பிடத் தக்கது, நம்பர் ஒன்று என்று போட்டு பைபிள் வைத்திருக்கிறார்கள். நம்பர் இரண்டு என்று போட்டுத் திருக்குறள் வைத்திருக்கிறார்கள். அதனால்தான் “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு” என்றார் பாரதி. திருக்குறள் ஐந்து கண்டத்தாராலும் மதிக்கத் தகுந்த நூல்

அன்று ஒருநாள் ஒரு அமைச்சர் என்னைப் பார்த்து தமிழருக்குச் சிறந்த நூல் எது என்று கேட்டார். எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய நூல் திருக்குறள் என்று சொன்னேன். அது எந்தக் காலத்துக்கும் ஒப்புக் கொள்ள வேண்டிய அரிய பெரிய தமிழருடைய பொக்கிஷம். அதிலே சொல்லுகிறார்.

**“யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு”**

ஏன் சாகும் வரை படிக்கவில்லை? என்று ஒரு கேள்வி கேட்கிறார். படித்தால் என்ன பயன் என்றார். யாதானும் நாடு ஆம். ஆல் என்பது அசை. ஊர் ஆம். ஆல் என்பது அசை. ‘என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு’. படித்தவனுக்கு எல்லா நாடும் சொந்தம். எல்லா ஊரும் சொந்தமாகும் என்று உரை எழுதியிருக் கிறார்கள். அப்பொழுது எத்தனை ஆல் வருகிறது. ஆல் என்பது அசைச் சொல். அதற்கு அர்த்தமில்லை. கொல், மன், அரோ, ஏ இந்த எழுத்துக்களெல்லாம் அசைச் சொற்கள். இசையை நிரப்புவதற்காக வருகின்ற அசைச் சொற்கள்.

**“கற்றதனா லாய பயன் என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்”**

இதில் 'கொல்' என்பது அசைச் சொல். அர்த்தம் பண்ணக் கூடாது. அர்த்தம் பண்ணினுல் விபரீதமாய் இருக்கும்.

'கற்றதனுலாய பயன் என் கொல்'

கொல் என்பது முன்னிலேயேவல். அப்போது ஸ்வாமி கும்பிடாதவனே எல்லாம் கொல்வதா? திருவள்ளுவர் சொல்வாரா அப்படி? அவர் அஹிம்சா மூர்த்தி. கொல் அசைச் சொல். சும்மா இருக்கிறது.

சில தகுதி உள்ளவர்கள் தங்க பட்டன்களேப் போட்டுக் கொண்டு, ஒரு பட்டனேத் திறந்து விட்டு ஒரு நாலு வடத்திலே செயின், ஒரு கிளாவர் டாலர் தொங்கும் சும்மா அழகுக்காக இருக்கும். அதற்கு அர்த்தம் கிடையாது. அது போல இசையை நிரப்பு வதற்காக அசைச் சொல் வைப்பார்கள். "கூர்வா மரோ"—அரோ என்ற வார்த்தை அசைச் சொல். வரந்தருவார் என்று ஒருவர் பாயிரம் பாடுகிறுர். அந்தப் பாடலில் இந்த அரோ என்ற வார்த்தை வருகிறது.

"நீடாழி உலகத்து மறைநாலொ டைந்தென்று நிலேநிற்கவே
∴ ∴ ∴
கோடாக எழுதும் பிரானேப் பணிந்தன்பு கூர்வாம் அரோ"

அரோ—அசைச் சொல். கூர்வாம்—மிகுதிப்படுதல். கூருதல் என்ற சொல்லுக்கு மிகுதல் என்று அர்த்தம். கண்ணிலே ஒளி உள்ளவன் கண்ணுடி போட்டால் பார்வை நன்ருக இருக்கும். அதுபோல அன்புள்ள வர்கள் இறைவனிடத்திலே மிகுந்த அன்பு கொள்ள வேண்டும். பிரான் என்ற வார்த்தைக்குப் பிரியான் என்று பொருள். பிரியான் என்ற வார்த்தை பிரான் என்று மருவி இருக்கிறது. உயிர்களே விட்டு எப்பொழுதும் எம்பெருமான் பிரிய மாட்டார்.

பால் குடிக்கிற|குழந்தையை விட்டுத் தாய் பிரிய மாட்டாள். புருஷனை விட்டுப் பிரிவாள். அண்ணு, அம்மா, தங்கச்சியை விட்டுப் பிரிவாள். பால் குடிக்கிற சிசுவைத் தாய் பிரிய மாட்டாள். தாயினும் சாலப் பரிவுடைய இறைவன் உயிரை விட்டுப் பிரிய மாட்டான். ராமபிரான், கண்ணபிரான் என்று வருகிற இடமெல்லாம் (பிரான் என்பதற்கு) பிரியான் என்று அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். இதைப் பாம்பன் சுவாமிகள் சொன்னுர்கள். ஆகவே இந்த ஆல் என்பது அசை. 'யாதானும் நாடு ஆம்' ஆல் அசை. 'ஊர் ஆம்' ஆல் அசை. இதில் என்ன ஒரு ஆச்சரியம் இருக்கிறது என்ருல், நாடு என்பது இப்போ நாம் இருக்கிற தொண்டை நாடு, மலே நாடு, சேர நாடு, பாண்டிய நாடு, சோழ நாடு, ஈழ நாடு. கற்றவனுக்கு எல்லா நாடுகளும் சொந்தமாகிறதுஎன்ருல் நாட்டிலேயே ஊரும் அடங்கிவிடுமே. சென்னை மாநகரம் முழுவதும் எனக்குத் தெரியும் என்ருல், திருவல்லிக்கேணி, மயிலே என்று சொல்ல வேண்டாமே. மற்றவர்கள் சொல்ல லாம். வள்ளுவர் அப்படிச் சொல்ல மாட்டார். ஒன்றே முக்கால் அடியிலே இரண்டு ஆல் போடுவாரா? கம்பரோ, சேக்கிழாரோ போடலாம். நாலு வரி பாடி ஞர்கள். இவர் ஒன்றே முக்கால் அடி. இதிலே இரண்டு ஆல் போட வேண்டிய அவசியம் இல்லே. நாட்டிலேயே ஊரும் அடங்கி விடுகிறது. வேறே என்ன பொருள் ? ஆனல் நான் முன்பு சொன்னதுபோல் தான் பரிமேலழகரும் உரை எழுதியிருக்கிருர்.

> ''யாதானும் நாடு ஆம் ஆல் ஊர் ஆம் ஆல் என்னெருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு''

இப்பொழுது நான் வேறொரு அர்த்தம் சொல்கிறேன். 'யாதானும் நாடு ஆம்' கூர்மையாகக் கேளுங்கள். ஆல் என்று பிரிக்காமல் மால் ஊர் ஆம் என்று பிரிக்க

வேண்டும். மால் ஊர்—மால் இருக்கின்ற ஊர், வைகுண்டம். கற்றவனுக்கு வைகுண்டமும் சொந்தமாகும் என்றார். ஆல் ஒரே அசை. "யாதானும் நாடு ஆம் மால் ஊராம் ஆல் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு." தனியாக இருந்து சிந்தித்துப் பாருங்கள். எவ்வளவு தித்திக்கிறது. நாடு என்பது மண்ணுலகம். மால் ஊர் என்பது விண்ணுலகம். விஷ்ணு உலகம் என்றால் அது புண்ணியம் பண்ணினவர் போய் இருப்பது–(ஊட்டி, சிம்லா போன்றது). கொஞ்சம் வசதி உள்ளவர்கள் ஊட்டிக்குப் போகிறார்கள். அப்படிப் புண்ணியம் பண்ணினவன் வைகுண்டம் போகிறான். நீங்கள் சந்தேகப்படலாம். "திருவள்ளுவர் பொதுமறை ஆசிரியர் ஆயிற்றே. வைகுண்டம் சொல்லுவாரா? ஒரு சார்பாகப் போகுமே" என்று தோன்றும். திருவள்ளுவர் குறளை முழுவதும் படித்தவர்களுக்குத் தெரியும். காமத்துப் பாலிலே வள்ளுவர் தெளிவாகச் சொல்கிறார், வைகுண்டத்தை.

**"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு."**

தாமரைக் கண்ணான்—புண்டரீகாக்ஷன். வைகுண்டத்தைத் திருவள்ளுவர் காமத்துப்பாலிலே சொல்லியிருக்கின்றார். ஆகவே அவர் பொதுமறை ஆசிரியர் என்பதற்கு அது இழுக்காகாது. புண்ணியம் பண்ணினவனுக்கு மேல் உலகம் கிடைக்கும் என்பது திரண்ட பொருள். எத்தனையோ உலகம்; இந்திர உலகம், சூரிய உலகம், சத்திய உலகம், வைகுண்டம், கைலாசம். எத்தனையோ சுகஸ்தலங்கள் இல்லையா? கொடைக்கானல், ஊட்டி, குன்னூர், காஷ்மீர், சிம்லா. வசதி உள்ளவன் அங்கே போய் சுகம் அநுபவித்துக் கொண்டிருக்கிறான். அப்படிப் புண்ணியம் பண்ணினால் மேல் உலகம் போகலாம். திருடினவன் எங்கே போவான்? ஜெயிலுக்குப் போவான். பாவம் பண்ணி

னவன் நரகத்துக்குப் போகிறான். வள்ளுவர் இரண்டையும் சொல்கின்றார்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்"

சொர்க்கத்தையும், நரகத்தையும் ஒரே குறளில் சொல்லுகிறார். அடக்கம் என்றால் பொறி, புலன்களை அடக்குவது. அடக்கம் என்றால், சும்மா இப்படி அடக்கமாக இருப்பது என்று அர்த்தம் இல்லை. சிலபேர் வணங்கினால் அவனுக்குக் குழி பறிக்கிறான் என்று பொருள். வில் வணங்கினால் வேகமாகப் போகும் என்று பொருள். டி. எம். நாராயணஸ்வாமி பிள்ளை எண்டோமெண்ட் போர்ட் கமிஷனராயிருந்தார். நானும் அவரும் ரெயிலில் முதல் வகுப்பில் போனோம். பிள்ளையவர்களுக்கு ஒரு "அட்வைஸ்" என்றேன். என்ன என்று கேட்டார். "எவன் பெரிய மாலை கட்டிப் போடுகிறானோ அவன் கோவில் சொத்தைத் திருடுகிறவன். உங்களுக்குப் பெரிய மாலை கட்டி உபசாரம் பண்ணினான் என்றால், அந்தப் பணத்தை எந்தக் கணக்கில் எழுதுவான்?" என்றேன். "சாமி சொல்லாமல் யார் சொல்லப் போகிறார்கள்?" என்றார், அதற்குப் பதில். அதனாலே அதிகமாய் உபசாரம் பண்ணுகிறவர்கள் கெடுதல் பண்ணுவார்கள். "தொழுத கையுளும் படை ஒடுங்கும்" என்றார் வள்ளுவர். ஆகையினாலே அதிகம் வணங்குகிறவனை நம்பாதீர்கள். நான் வயதானவன். அனுபவத்தைச் சொல்கிறேன். அதுபோல அடக்கம் என்றால் பொறி புலன்களை அடக்குவது. இந்த உடம்பை அடக்குவதா?

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்"

அப்பொழுது சொர்க்கத்தையும் நரகத்தையும் திருவள்ளுவர் சொல்லுகிறார். இந்த உலகியலிலே களவு செய்

கிறவன் ஜெயிலுக்குப் போகிறான். வசதி உள்ளவன் சுகஸ்தலம் போகிறான். அதுபோல மிகுந்த புண்ணியம் பண்ணினவன் வைகுண்டம் போகிறான். மால் ஊர்— மால் என்பது திருமால்; ஊர் என்பது வைகுண்டம். அப்பொழுது "யாதானும் நாடு ஆம் மால் ஊராம் ஆல் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு". அப்பொழுது சாகும் வரை படிக்க வேண்டும். இதை விட்டுப்போன பிற்பாடும் படிக்கவேண்டும். வயசானாலும் படிக்க வேணும். படித்துக் கொண்டே இருக்க வேண்டும். படித்தால் அறிவு வராது என்று முன்பு சொல்லியிருக்கிறேன். நான் முன்னுக்குப் பின் முரணாகப் பேச மாட்டேன். நீண்ட நாட்களாகப் பேசி அனுபவம். சாகும் வரை படிக்க வேண்டும். படித்தால் அறிவு வராது. என்ன பொருள்? அறிவு வரும் என்று சொன்னால் அதிலே ஒரு பிழை இருக்கிறது. வந்தது போகும் என்று சித்திக்கிறது. நம்ம வீட்டுக்கு விருந்தாளியாக வந்தவர் ஒரு வேளை போய்விடுவார். மாப்பிள்ளை வந்தார் என்றால் இரண்டு வேளையிலே போவார்; போக வைப்பார்கள். நமக்கு ஜுரம் வந்தால் சில நாளிலே ஜுரம் போகிறது. வயிற்று வலி வந்ததென்றால் வயிற்று வலி போய்விட்டது என்கிறான். வந்தது போகும். படித்தால் அறிவு வரும் என்று சொன்னால் வந்த அறிவு போகும் என்பது சித்திக்குமே?

தர்க்கரீதியாக இப்பொழுது ஒரு கருத்து சொல்லப் போகிறேன். நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். மலரும் மணமும் ஒன்று விளக்கும் ஒளியும் ஒன்று. பாலும் சுவையும் ஒன்று. ஆன்மாவும் அறிவும் ஒன்று. ஆன்மாவுக்கு அறிவு அன்னியமாயிருந்தால் தானே வரும் என்று சொல்லவேண்டும். கூர்மையாகக் கவனியுங்கள். அறிவும் ஆன்மாவும் ஒன்று என்று சொன்னால், படித்தால் அறிவு 'வரும் என்று சொன்னால் அந்தக் கருத்துப் பிழையல்லவா ? கல்கண்டிலே சுவை

இருக்கிறபோது இந்தக் கல்கண்டிலே தித்திப்பு வந்தது என்று சொன்னல் இந்தத் தித்திப்பு எந்த ஊரிலிருந்து வந்தது? தாயுமானுர் என்று ஒரு மகான் இருந்தார். வேதாந்த சித்தாந்த சமரசம் பெற்றவர். அவருக்கு அனுபவ ஞானம் உண்டு. சாஸ்திர ஞானம் உண்டு. ராமகிருஷ்ணருக்குச் சாஸ்திர ஞானம் கிடையாது. அனுபவ ஞானம்தான். சிலபேர் நிறையப் பேசுவார்கள். அனுபவம் கிடையாது. சிலபேருக்கு அனுபவம் இருக்கும். இராகம் பாடுவான். தியரி (தீனி) தெரியாது. சில பேருக்குத் தியரி (தீனி) தெரியும். பாடத் தெரியாது. ஆனல் தாயுமானுருக்குச் சாஸ்திர ஞானம் உண்டு. அனுபவ ஞானம் உண்டு. தமிழிலும் வட மொழியிலும் கரை கண்டவர். மற்ெருன்றும் ஞாபகப் படுத்துகிறேன். மற்றவர்கள் பாடலிலே ஒரு பாட்டு மெலிந்திருக்கும்; ஒரு பாட்டு வலிந்திருக்கும். ஒன்று கம்பீரமாய் இருக்கும்; ஒன்று சப்பட்டையாய் இருக்கும். என்ன காரணம்? அனுபவம் பெறுவதற்கு முன்பு பாடிய பாடல்கள் கொஞ்சம் சுவை குன்றியிருக்கும். அனுபவம் முதிர்ந்த பிற்பாடு பாடுகிற பாடல்களின் சுவை அதிகமாயிருக்கும். அருட்பாவிலும் அப்படித் தான். அருணகிரியார் பாடலிலேயும் அப்படித்தான். தாயுமானுர் பாடல் அப்படியில்லை. ஆரம்பத்திலிருந்தே சுவை. ஏன்? அவர் அனுபவம் பெற்ற பிறகு பாடினுர். ஓர் உதாரணம் சொல்லுகிறேன். அருணகிரியார் பாடுகிருர். முருகா! மரணமென்ற ஒன்று உண்டு. அப்பொழுது என் மனைவி மக்கள் எல்லாம் தொலைவிலே நிற்பார்கள். சாமான்களை எடுத்து ஒழுங்கு பண்ணு வார்கள். வெள்ளிச் சாமானை உள்ளே வைத்துப் பூட்டுவார்கள். அந்த வேளையிலே நீ வந்து என்னைக் காப்பாற்று.

> ''தந்த பசிதனை அறிந்து முலை அமுது
> தந்து முதுகு தடவிய தாயார்''

தாயாரைப் பற்றி இரண்டு வரி.

''மைந்தர்—மனைவியர்''

மனைவி என்று சொல்லவில்லை. 'மனைவியர்' என்றார். வசதி உள்ளவர்கள்.

'கடும்பு' கடும்பு என்றால் சுற்றத்தார்; பெரியப்பா பிள்ளை சிற்றப்பா பிள்ளை போன்றவர்.

''வந்து தலைநவிர் அவிழ்ந்து தரைபுக
மயங்க ஒருமகிட மிசையேறி
அந்தகனும் எனை அடர்ந்து வருகையினில்
அஞ்சலென வலிய மயில்மேல்நீ
அந்த மறலியொடு உகந்த மனிதன் நமது
அன்பனென மொழிய வருவாயே''

தாலி புலாகஞாயமாக ஒரு பாட்டு சொல்லினேன். இந்த மாதிரி ஐம்பது பாட்டு சொல்வேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். ''சுவாமீ! மரண பயம் வரும் போது என்னைக் காப்பாற்று'' என்றார்.

''இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்புன தாள் மலராகிய
இணைப்பதந்தரவே மயில்மீதினில் வரவேணும்''

அப்பொழுது அருணகிரியார் எமனுக்கு அஞ்சுகிறார்.

தண்டாயுதமுந் திரிசூலமும் விழத்தாக்கி யுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா அந்தகா வந்துபார் சற்றென்கைக் கெட்டவே.

அதே அருணகிரியார்தான் இங்கு எமனை அஞ்ச வைக்கின்றார். சில பேர் பெண் வாங்குகிற வரை பணிந்திருப்பான். பெண்ணை வாங்கிவிட்டால் அப்புறம் வேறு மாதிரி. ''உங்கப்பா பிச்சைக்காரண்டி'' என்பான். இந்த ஏற்றம் இருக்கிறதே அது தண்ணீர் இறைக்கிற போது வணங்க வேண்டும். மொண்டு கொண்டால்

நிமிர்ந்து கொள்ளும். அதற்குத்தான் ஏற்றம் என்று பெயர். நம்மிடம் காரியம் சாதிக்கிற வரைக்கும் கையைக் கட்டிக்கொண்டு நிற்பான். சாதித்த பிறகு வேறுபடுவான். இப்பொழுது அருணகிரியார் என்ன சொல்கிருர்.

**"தந்தைக்கு முன்னம் தனிஞான வாளொன்று சாதித்தருள்**
**கந்தச்சுவாமி என்னைத் தேற்றியபின் காலன் வெம்பி**
**வந்து இப்பொழுது என்னை என் செய்யலாம் சக்திவாள் ஒன்றினுல்**
**சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத் த்ரிசூலத்தையே"**

இரண்டும் ஒருவரே பாடியது. அங்கே அஞ்சுகிருர். இங்கே எமனை அஞ்ச வைக்கிருர். ஓட்டு வாங்குகிற வரைக்கும் தொங்குவான். ஓட்டு வாங்கி விட்டால் நாம் அவனிடம் தொங்க வேண்டும். சிலபேர் சரணம் சரணம் என்பார்கள். நீங்கள்தான் சரணம். தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே என்பார்கள். பிறகு நம்மைச் சரணம் போட வைப்பார்கள். இப்போது அருணகிரியார் பாடலிலே இந்த வித்தியாசம் தெரிகிறது. இதே மாதிரி ராமலிங்க சுவாமி பாட்டு. ஒன்ருென்ருகச் சொல்வதற்கு நேரமில்லை. தாயுமானுர் பாடல், ஒரு படித்தாய் இருக்கும். ஏன் என்ருல் முழுவதும் படித்து திரண்ட கருத்தாக உங்களுக்குத் தருகிறேன். எடுத்த எடுப்பிலேயே "அங்கிங்கெனுதபடி எங்கும் ப்ரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது." வேதாந்த சித்தாந்த தத்துவத்தைப் பிழிந்து கொடுக்கிருர் முதல் பாட்டிலே. மதுரை மணி எடுக்கிற போதே களை கட்டும். சிலபேர் அரை மணி நேரம் தொண்டையைக் கனைத்த பிறகு தான். மகா வித்வான்களெல்லாம் அப்படியில்லை. எடுக்கிற போதே நன்ருகயிருக்கும். அந்தத் தாயுமானுருக்கு ஒரு குரு இருந்தார். மௌன குரு என்று பெயர். திருமூலர் மரபிலே வந்தவர்.

தாயுமானுருக்கு அவர் உபதேசம் பண்ணினுராம். "மகனே! மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் நீ அன்று; மெய், வாய், கண், நாசி, செவி நீ அன்று; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் நீ அல்ல; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் நீ அல்ல. அறிவுதான் நீ" என்ருராம்.

> **"பாராதி பூதம் நீ அல்லே பார்இந்திரியம் கரணம் நீ அல்லே**
> **ஆராயும் அறிவு நீ என்ருன்".**

ஆகவே தாயுமானுருக்கு அவருடைய குருநாதர் சொன்னது. "என் குருநாதர் எனக்குச் சொன்ஞர்" என்று தாயுமானுர் திருவாக்கிலேயிருந்து என்ன நமக்கு விளங்குகிறது? அறிவும் ஆன்மாவும் ஒன்று. இந்த உடம்பும் உயிரும் ஒன்றல்ல. உடம்பிலே உயிர் குடியிருக்கிறது.

> **"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே**
> **உடம்போ டுயிரிடை நட்பு"**

என்ருர் திருக்குறளிலே. குடம்பை என்ருல் கோழி முட்டை. தாய்க் கோழி அடை காத்தால் முட்டையி லிருந்து வருவது குஞ்சு. முட்டை வேறு படுகிறது. அப்படி இந்தச் சரீரம் நின்று விடுகிறது. ஆத்மா வெளியே போய் விடுகிறது. சுவர்க்கத்துக்கோ, நரகத்துக்கோ போகிறது.

"கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்" என்ருர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

> **"நம்பினுர் இறந்தால் நமன்தமர் பற்றி**
> **எற்றிவைத் தெரி யெழுகின்ற**
> **செம்பினுல் இயன்ற பாவையைப் பாவீ**
> **தழுவென மொழிவதற்கஞ்சி"**

எனத் திருமங்கையாழ்வார் பாடியிருக்கிருர். ஆகவே இந்த உடம்பு வேறு. நாம் வேறு. சில பேருக்கு

விளங்குகிறதா ? தேகாத்மவாதிகள் என்று பேர். இந்த உடம்பையே தான் என்று நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். நீங்கள் இல்லை. தேகாத்மவாதிகள்.

ஒரு இருபது நாள் வெளியூருக்குப் போய்விட்டு வீட்டுக்கு வருகிருன். மனைவியைப் பார்ப்பான். சரோஜா நான் இளைத்து விட்டேஞ பார் என்பான். அந்த வாக்கியம் பிழை. நான் என்பது ஆன்மா. இளைத்தது சரீரம். “நான் இளைத்து விட்டேன்”. ஆத்மா இளைக்கவில்லையே. சரீரமல்லவா இளைத்தது. பின்பக்கம் சட்டையிலே ஆணி மாட்டி கிழிந்து விட்டது. அவன் என்ன செய்வான்? இந்தச் சட்டை கிழிந்திருக்கிறதா பார் என்பான். ஏன் என்ருல் பின் பக்கம் இவனுக்குத் தெரியாது. அப்படிச் சொல்லாமல் நான் கிழிந்திருக்கிறேஞ என்று சொல்வாஞ ? நீயா கிழிந்திருக்கிருய்? உன்சட்டையல்லவாகிழிந்திருக்கிறது. நான் கிழிந்து விட்டேஞ என்ற வாக்கியம் பிழைபோல, நான் இளைத்து விட்டேஞ என்ற வாக்கியம் பிழை. உவமைக்காகச் சொன்னேன்; சட்டை வேறு; நாம் வேறு; சரீரம் வேறு; நாம் வேறு. அது முட்டை, அது சட்டை, இது கட்டை.

‘‘அறம் பாவம் என்னும் அருங்கயிற்ருல் கட்டி’’

நாம் செய்த புண்ணிய பாவத்திலே இந்த உடம்பு யானை உடம்பு, பூனை உடம்பு, எலி உடம்பு, இன்னும் எத்தனையோ. அப்போ உடம்பு வேறு; உயிர் வேறு; ஆன்மாவும் அறிவும் ஒன்று. அதைத்தான் உங்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். அப்பொழுது ஆன்மாவும் அறிவும் ஒன்று என்று நாம் தெளிவாகத் தெரிந்துகொண்டால் படித்தால் அறிவு வரும் என்ருல் அந்தக் கருத்து பிழையல்லவா? இப்பொழுதுஉங்களுக்கு என்ன தோன்றுகிறது? தலைசுற்று கிருப்போல இருக்கிறது. ஆன்மாவும் அறிவும் ஒன்று.

அப்பொழுது ஏன் படிக்கவேண்டும்? அந்த அறிவை அறியாமை மறைத்திருக்கிறது. படிப்பதனுலே அறியாமை விலகுகிறது. இதுதான் கருத்து. இந்த விளக்கிலே தூசி மண்டியிருந்தால் விளக்கு எரியும்; பிரகாசம் வராது. அதிலே ஒளி உண்டு. அந்த ஒளியைத் தடுக்கிறது தூசி. அதை நன்ருகத் துடைத்துவிட்டால் தூசி விலகின உடனே அந்த ஒளி வருகிறது. ஆன்மாவாகிய விளக்கிலே அறிவு என்ற ஒளி உண்டு. அஞ்ஞானமான தூசி மறைத்திருக்கிறது. படிக்கிறவர்களெல்லாம் அதைத் துடைத்து விடுவார்கள். எப்பவுமே வேட்டி வெள்ளையாக இருக்கும். வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை. ஸரஸ்வதியே வெள்ளைக் கலை உடுத்து வெள்ளைப்பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கிருள். ஒரு 20 நாள் தோய்க்கவில்லையென்ருல் வேட்டி கருப்பாக இருக்கும். அழுக்கு மூடியிருக்கும. அதைத் தோய்த்தால் அழுக்கு விலகுகிறது. வெண்மையாக ஆகும். அதுபோல நாம் படிக்கிற நூல்களெல்லாம் சன்லைட் சோப்பு. அழுக்குப் போகிறது. திருக்குறள், நாலடியார், கம்ப ராமாயணம், இவைகளை எல்லாம் படிக்கப் படிக்க ஏற்கனவே மூடிக் கிடக்கின்ற அறியாமை விலகுகின்றது. இதைத்தான் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். படிப்பதனுலே அறியாமை விலகுகின்றது. உள்ள அறிவு வெளிப்படுகின்றது. இதைத் திருவள்ளுவர் எப்படிச் சொல்கிருர். வெட்ட வெளியிலே 10 பேர் சேர்ந்து மண்வெட்டி எடுத்து மணலை எடுத்தால் உள்ளே இருக்கிற நீர் வெளிப்படும்.

> "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு."

கற்றனைத்து ஊறும் என்று சொன்ருர். தண்ணீர் ஊறி வருவதுபோல இயற்கையாக உள்ள அறிவு வெளிப்படுகிறது. எத்தனைக்கெத்தனைப் படிக்கி

ருேமோ, அத்தனைக்கத்தனை அறிவை நாம் வெளிப் படுத்திக் கொள்கின்ருேம். வைரத் தோடு போட்டுக் கொண்டிருப்பவர்கள் அடிக்கடி துடைத்துக்கொண்டே இருப்பார்கள். துடைத்துக் கொண்டிருக்கிறபோது அந்தத் தூசி போனவுடன் ஒளி வருகிறது. நீங்கள் எல்லோரும் வைரத் தோடு. கொஞ்சம் துடைத்து விட்டால் இயல்பாக இருக்கிற அறிவுப் பிரகாசம் வெளிப்படும். ஆகவே இத்தனை நேரம் நான் பேசியதி லிருந்து அறிவும் ஆன்மாவும் ஒன்று. அறிவை அறியாமை மறைத்திருக்கிறது. அந்த அறியாமையை ஆன்ருேர்கள் தமது உபதேசத்தினுலே விலக்கு கிருர்கள். இதை அருணகிரியார் எப்படிச் சொல்கிருர். அருமையான பாட்டு. ஆண்டவன் குருநாதனுக வந்தானும் அருணகிரியாருக்கு. இசைத்துறையிலே அருணகிரியார்தான் சக்கரவர்த்தி. அவர் சொன்னுர். அருட் கண்ணுலே பார்க்கின்ருன் முருகப் பெருமான் அருணகிரிநாதரை. 'ஆணவ அழுக்கு அடையும்' என்ன அழுக்கு? "ஆணவ அழுக்கு அடையும் ஆவியை விளக்கி," (விளக்கி என்ருல் பாத்திரத்தை விளக்குவதுபோல்.) "ஆவியை விளக்கி அநுபூதி அடைவித்ததொரு பார்வைக்காரனும்" பார்வையினுலே வாழ வைத்தாராம் அருணகிரிநாதரை. 'ஆணவ அழுக்கு' அழுக்கு என்றே சொல்கிருர். வேட்டியிலே அழுக்கு மூடியிருப்பது போல ஆன்மாவிலே ஆணவ அழுக்கு மூடியிருக்கிறது.

> "ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி அநுபூதி
> அடைவித்ததொரு பார்வைக்காரனும்"
>
> —திருவகுப்பு

பார்வையினுலே வாழ வைத்தார். மகான்கள் கண் ணுலே பார்த்தால் நமக்கு க்ஷேமம் வரும். கையாலே தொட்டால் ஞானம் வருகிறது. அப்படி மார்பிலே

கையை வைத்தார் ஞானியாக ஆகிவிட்டார் நரேந்திரர். அவர் இருந்த பாறை 97 லட்சம் சாப்பிட்டது கன்னியா குமரியிலே. பரமஹம்சர் தொட்டார்—யோக கரண்ட் பாஸ் ஆகிவிட்டது. அதனால்தான் கல்யாணத்திலே மாங்கல்யத்தைத் தொட்டுப் பெரியவர்கள் ஆசீர்வாதம் பண்ணுகிறார்கள். திருமாங்கல்யத்தை மகான்கள் தொடுவதனாலே அந்த மாங்கல்யத்துக்கு நன்மை உண்டாகிறது. அப்படிப் பெரியவர்கள் பார்வையினாலே நம்மை வாழ வைப்பார்கள். அவர்கள் தொடுவதனாலே நம்மை வாழ வைப்பார்கள். அவர்கள் எத்தனையோ காலம் தவம் செய்து அனுபூதி பெற்றவர்கள். ஆகவே நம்மிடத்திலே அறியாமை நிரம்ப இருக்கிறது. கம்பன் ஒரு இடத்திலே சொல்கிறார். ரொம்ப உத்தமமான கவி கம்பர். எப்படிச் சொல்கிறார்? சொல்லுகிற அந்தப் பாணி மிக உயர்ந்தது. "நாராயணா! உனக்கு நான் ஒரு காணிக்கை கொடுக்கலாம் என்று இருக்கிறேன்" என்றார். யாரிடம் எந்தச் சாமான் இல்லையோ அதைக் கொடுத்தால் பிரியமாய் வாங்கிக் கொள்வார்கள். நல்ல பேனாவாக ஒருத்தருக்கு இல்லையென்று வைத்துக் கொள்ளுங்கள். 'நா' மட்டும் இருக்கிறது. பே நா இல்லை. "ஸார் நான் லண்டனுக்குப் போயிருந்தேன். முதல் நம்பர் பார்க்கர் பேனா வாங்கிக் கொண்டு வந்தேன், உங்களுக்குத் தருவதற்கு. நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிற பேனா சட்டையெல்லாம் நனைத்திருக்கு. சதா இங்க் ஊத்துகிறது சார்." அப்பொழுது நல்ல பேனா இல்லாதவனுக்கு உயர்ந்த பேனா கொடுத்தால் மகிழ்ச்சி அடைவான். இருக்கிறபோது இன்னொரு சாமானை விரும்பக்கூடாது. இரண்டு சாமான்களை வைத்துக் கொண்டிருக்கிறவனைத் திருடன் என்கிறார் காந்தி மகான். திருமணமே ஆகாதவனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் ரொம்ப சந்தோஷப்படுவான். எத்தனை நாளைக்கு ஹோட்டலிலே சாப்பிடுவது. அதற்குப்

பெயரே கிளப்பு. பசியாய் இருக்கிறவனுக்குப் பழம் கொடுத்தால் பிரியமாய் இருக்கும். வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியாருக்கு இரண்டு சென்ட் நிலம் கொடுத்தால் பிரியமாகவா வாங்குவார்? அவர் பெரிய நிலச்சுவான். டி. வி. எஸ். ஐயங்காருக்கு இரண்டு டயர் கொடுத்தால் பிரியமாகவா வாங்குவார்? யாருக்கு எது இல்லையோ அதைக் கொடுக்க வேண்டும்.

பெருமாளுக்கு இல்லாத சாமானைக் கண்டு பிடிக்க வேண்டும். நல்ல பசும் பாலிலே பாதாம் பருப்பைப் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கலாமா? அவர் பாற் கடலிலே பள்ளிகொண்டு இருக்கிறார். பொன் தர லாமா? லக்ஷ்மி வக்ஷஸ்தலத்தில் இருக்கிறார். இரண்டு ஏக்கர் நிலம்? அவர் பூமாதேவிக்குப் புருஷன். மனைவி நிலமகள்; லக்ஷ்மி பொன்மகள். என்ன இல்லை?...... கண்டு பிடித்தார். பெருமாளே! தேவரீரிடம் இல்லா தது என்னிடம் நிரம்ப இருக்கிறது. என்ன அது?

**நாராயணாய நம என்னும் நன்னெஞ்சர்**
**பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்**
**காராரு மேனி கருணாகர மூர்த்திக்கு**
**ஆராதனை என் அறியாமை ஒன்றுமே.**

இதை மாணிக்க வாசகர் சொன்னார்:

**"தினைத்துணை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே"**

'உலக சுகங்கள் எல்லாம் தினை அளவு. நினைக்குந் தோறும், பேசுந்தோறும், காணும்தோறும் எப்போதும், ஆனந்தத்தேன் இறை திருவடியில் உண்டு. ராஜ வண்டே!' என்கிறார். வண்டைப் பார்த்துப் பாடுகிறார். நம்மைப் பார்த்தா சொன்னார்? நம்மை நேராகப் பார்த் துச் சொன்னால், "உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போய்யா" என்போம். அதற்குத் தான் வண்டை முன் னிலைப்படுத்தி நமக்குத்தான் புத்தி சொல்கிறார், இந்த மண்டுகள் எல்லாம் இப்படியிருக்கிறார்களே யென்று.

அப்படி இந்த உலக சுகங்கள் எல்லாம் அற்ப இன்பம். கண்ணினுல் வரும் இன்பமும் அப்படித்தான். நல்ல பாட்டு கேட்கும்போது இன்பமாய் இருக்கும். முடிந்தது என்ருல் அவ்வளவுதான். இலக்கிய இன்பம் அப்படி யில்லை. எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இன்ப மாய் இருக்கும். நான் தமிழ் இலக்கியங்களை அல்லவா சொல்லிக் கொண்டிருக்கிறேன். அல்வாவினுலே உண் டாகும் இன்பம் அந்த நுனி நாக்கிலிருந்து அடி நாக்குக் குப் போகும் வரைதான். அது உள்ளே போனுல் விலாசமே வேறு. எல்லா இன்பமும் அப்படித்தான். பொருட்காட்சி, வனக்காட்சி, படக்காட்சி. இலக்கியத் திலே அப்படியில்லை. தனிமையிலே உட்கார்ந்து சிந்திக்கின்றபோது சிந்தை தித்திக்கும். ஒரு உதார ணம் சொல்கிறேன்.

மிகத் தகுதி உள்ளவர்களுக்கு ஒப்பனை செய்வ தற்கு ஒரு பெண் வருவாள். ஒப்பனை என்ருல் என்ன என்று உங்களுக்குத் தெரியுமே. அழகு செய்வது. தலை வாரி விடுவார்கள்; பூ வைத்து விடுவார்கள்; பொட்டு வைத்து விடுவார்கள்; நான் சுருக்கமாகச் சொல்கிறேன். கதாநாயகி; அந்தப் பாங்கி வந்து எல்லா அலங்காரங் களும் முடிந்தவுடன் இந்த மூக்கிலே ஒரு தங்கக் கம்பியைப் போட்டு இப்படிப் போடுவார்கள். நல் முத்துப் புல்லாக்கு. கிருஷ்ணன் படத்திலே முத்துப் புல்லாக்கு போட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அதற்கு மூக்கணி என்று பெயர். ஒரு பெண்மணிக்குப் பாங்கி வந்து அலங்காரம் பண்ணி மூக்கிலே முத்துப் புல்லாக்கு போட்டாள். சர்வகலாசாலையிலே புல்லாக்குப் போடுவதற்கு ஒரு பிரசங்கமா? என்பீர்கள். அது புலவர் கையில் அகப்பட்டவுடன், அப்படி அது சுவை பெறுகிறது. 10 ஆயிரம் அடி உயரத்திலே நம்மைப் பறக்க விடுகிருர். இப்பொழுது இலக்கிய இன்பம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எந்தப் பொருளுக்கு

எதை உவமை சொல்லுகிறார்களோ, உவமையைத் தவிர உபமானம் உயர்வானது. இதுதான் பொது விதி. அந்த அம்மாள் குரல் தேன் போலே என்றால் தேன் உயர்ந்தது. அந்த அண்ணா தர்ம ராஜா மாதிரி என்றால் தர்ம ராஜா உயர்ந்தவர். அந்த அம்மாள் அருந்ததி போன்றவள் என்றால் அருந்ததி உயர்வு. அவன் சிங்கம் போன்றவன் என்றால் சிங்கம் உயர்ந்தது. கவனித்தீர்களா? உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை பெண்மணியினுடைய பல்லைப் பற்றிச் சொல்லும்போது முத்தைப் போன்ற பல் என்று சொல்லுவார்கள். "முத்தன்ன வெண்ணகையாய் முன் வந்து எதிரெழுந்தென் அத்தன் ஆனந்தன் அமுதன் என்று..." திருவெம்பாவை எல்லாருக்கும் தெரியும். முத்தன்ன வெண்ணகையாய் என்றால்—முத்தைப் போன்ற பல் என்றால் எது உயர்வானது? முத்து உயர்வு. "ஒள் நித்தில நகையாய்"—மணிவாசகர். "முத்தைத் தரு பத்தித் திரு நகை"—அருணகிரியார். தெய்வயானையின் பல் முத்தைப்போல் இருக்கிறதாம். பவள இதழ், முத்த நகை என்று சொல்வார்கள். அப்போ முத்தைப் போன்ற பல் என்றால் எதற்குப் பெருமை? முத்துக்கு. உங்களுக்குத் தெரிந்திருக்கும். தமிழகம் தவிர வேறு ஒரு நாட்டிலும் முத்து தோன்றுவதில்லை. திருவனந்தபுரத்தில் முத்து கிடையாது. பம்பாய்க் கடலிலே முத்து கிடையாது. விசாகப் பட்டணம் கடலிலே முத்து கிடையாது. இன்றைக்கும் முத்து எடுப்பது தூத்துக்குடியில்தான். தமிழ் நாட்டில் தான் முத்து கிடைக்கிறது. முத்தும் முத்தமிழும் பிறந்தது தென் தமிழ்நாடு. தமிழன் ரொம்பவும் கொடுத்து வைத்தவன். தமிழனுக்குத் தன் மானம் அதிகம். நம்மைப் பற்றி யாரும் குறை சொல்லக் கூடாது. மானம் என்ற சொல்லே தமிழில் தவிர வேறு மொழிகளில் கிடையாது.

"மானம் இழந்த பின் வாழாமை மிக இனிது"

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

—பொதுமறை

வீட்டில் ஏதாவது அவமான நிகழ்ச்சி ஏற்பட்டால் அவர்கள் உடனே உயிரை விட்டு விடுவார்கள். கணவனார் ஏதாவது தப்பாக நடந்தால் உயிரைவிடுகிற பெண்கள் உண்டு, நம்முடைய புருஷன் இப்படிப் போய்விட்டானே என்று. இனி அவரைத் திருத்த முடியாது. நாம் உயிரை விட்டுவிடுவோம். இது எல்லாம் சர்வசாதாரணமாக நடக்கிற நடப்பு. அப்பொழுது மான உணர்ச்சி யாருக்கு அதிகம்? தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்கு, இதைத் தான் சேக்கிழார் "மானமிகு தருமத்தின் வழிநின்று" என்று பாடுகிறார்; "மானமிங்கிலை" என்று அருணகிரியார் பாடியிருக்கிறார். தமிழ் நாட்டிற்கே உள்ள சொத்து மானம். உவமையைத் தவிர உபமானம் உயர்வு என்று சொல்லியிருக்கிறேன். பல்லுக்கு முத்தை உபமானம் சொல்லுவார்கள். அப்போ பல்லுக்குப் பெருமையா? முத்துக்குப் பெருமையா? முத்துக்குத்தான். ஒரு புரட்சிப் புலவன். அவர் என்ன பண்ணினார்? "இந்த அம்மாவுடைய பல்லைப்போல முத்து இருக்கிறது" என்றார். தெரிகிறதா புரட்சி. முத்தைப்போலத்தான் பல் இருக்கிறது என்று வழிவழியாய்ச் சொல்லி வருகிறார்கள் புலவர் பெருமக்கள். இந்தப் புரட்சிப் புலவன் இந்த அம்மாவின் பல்லைப் போல முத்து இருக்கிறது என்றான். பல்லைப்போல முத்து இருக்கிறது என்றால் எதற்குப் பெருமை? பல்லுக்கு. அப்பொழுது அந்த முத்துக்கு அவமானம் வரும் இல்லையா? எனக்கு வயது 74. இவர் வாரியார் மாதிரி பிரசங்கம் பண்ணுகிறார் என்றால், எனக்குப் பெருமை. இவர் மாதிரிதான் வாரியார் பிரசங்கம் செய்கிறார் என்றால் சிறுமை.

அவன் 13 வயது பையன். என்னடா நாம் எவ்வளவு நாளாகத் தமிழ் நாட்டைச் சுற்றுகிறோம். இவன் முந்தாநாள் பையன். வாரியார் கூட இவன் மாதிரி பிரசங்கம் பண்ணுகிறார் என்றால், இழிவு. இந்தப் பெண் முந்தாநாள் பிறந்தவள். இவள் பல்லைப் போல் முத்து இருக்கிறது என்று புலவன் சொன்னால், இந்தப் பல் எங்கு குடியிருக்கிறதோ அங்கே போய் தூக்கு போட்டுச் சாகிறேன் என்று அந்தப் பல் குடியிருக்கிற வாய்க்கு நேராக வந்து தன்மானமுள்ள முத்து மூக்கில் தூக்குப் போட்டுக் கொள்கிற மாதிரி இருக்கிறதாம், புல்லாக்கு. எப்படி உவமை? இதுதான் இலக்கிய இன்பம். இதை நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். முத்து புல்லாக்கில் இருக்கிறது. பல் குடியிருக்கிற வீடு வாய். இந்த வாய்க்கு மேலே தூக்குப் போட்டுக் கொண்டால் முத்துக்கு அவமானம் வரும். ‘உன் வீட்டிலேயே வந்து உயிர்விடுகிறேன்'' என்பது போல்.

மோகனூர் என்று ஒரு ஊர். கி. வா. ஜகந்நாதையர் ஊர். நான் 1939 லே அருணகிரியார் பேரிலே அறச்சாலை ஒன்றை அங்கே அமைத்தேன். காஞ்சிபுரம் பெரியவாள் போய் தங்கியிருந்தார்கள். ஏக காலத்திலே 10 கல்யாணம் பண்ணலாம். 11 ரூபாய்தான் ஒரு கல்யாணத்துக்குக் கட்டணம். துணியும் சாப்பாடும் தவிர, மேளம், பூமாலை, சகல சாமான்களும் உட்பட 11 ரூபாய். எவ்வளவு மலிவு பாருங்கள். பத்துக் கல்யாணம் பண்ணலாம். அப்போது நான் கட்டும் போது ஒரு மூட்டை சிமெண்ட் 15 அணா. அப்பொழுதே லட்சம் ரூபாய் ஆகியது. அங்கே பழனியப்ப முதலியார் என்று ஒருவர் இருந்தார். அவர் நண்பர் ஒருவர் பொ. முருகன். இந்த லட்ச ரூபாய் வசூல் பண்ணும் பொழுது அவர்களெல்லாம் கூடவே உழைத்தவர்கள். அந்த நண்பரைக் காசிக்குப் போகும்

போது அவரையும் (பொ. முருகனை) வா என்று சொல்லாமல் பழனி முதலியார் காசிக்குச் சென்று விட்டார். இவர் என்ன பண்ணினார்! அவர் வீட்டுக்குப் போய் அவர் வீட்டிலேயே தூக்குப் போட்டுக் கொண்டு விட்டார். காரணம் தன்மானம்; என்னைக் கூப்பிடவில்லையே என்று. அதுபோல நமக்கு அவமானம் இந்தப் பொம்பளைப் பல்லாலே தானே வந்தது. முந்தாநாள் பிறந்தவள். இந்தப் பல் குடியிருக்கிற வீட்டுக்கு நேராகப் போய் தூக்குப் போட்டுக் கொள்வதற்கு இதுதான் தூக்கு மரம். இந்தத் தங்கக் கம்பிதான் தூக்குக் கயிறு. அந்தப் பாட்டைச் சொல்கிறேன் கேளுங்கள்.

> "தன்னை நிந்தை செய் வெண்ணகை மேல் பழிசார
> மன்னி"

மன்னி என்றால் நிலை பெற்று என்று அர்த்தம். கை, கால், மூக்கு, காது எல்லாம் ஆடும். பல் ஆடக் கூடாது. ஆடினால் பிடுங்கி எறிய வேண்டும். "மன்னி ஆங்கது நிகரற வாழ்தரு மனையின் முன் இறந்திடுவேன்...மூக்கணி ஒருத்தி எடுத்து இட்டாள்" நாலுவரிப் பாட்டு. இதில் இருக்கிற சுகம் அல்வாவிலே இருக்குமா? இந்தப் பாடலைப் பாடினவர் சிவப்ரகாச சுவாமிகள். அந்தப் பாடல் இருக்கிற நூல் பிரபுலிங்க லீலை. அதைச் சொன்னால்தானே படிக்க வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு உண்டாகும். ஒரு பாட்டிலேயே இத்தனை இருந்தால் இன்னும் எவ்வளவு இருக்கிறதோ?

> தன்னை நிந்தைசெய் வெண்ணகை மேல்பழி சார
> மன்னி அங்கது வாழ்மனை வாய்தன்
> முன்இறந்திடு வேன்என ஞான்றுகொள் முறைமை
> என்ன வெண்மணி மூக்கணி_ஒருத்திநின் றிட்டாள்.

இலக்கிய இன்பம். அந்தத் தமிழ்ச் சுவை எவ்வளவோ ! நாம் எண்ணுந்தோறும் எண்ணுந் தோறும் இன்பம் பயக்கும். அல்வா உண்டால் இன்பம். இது சிந்திக்குந்தோறும் சிந்திக்குந்தோறும் இன்பம். தமிழ் இலக்கியச் சுவை, இன்ஞென்று சொல்கிறேன். இங்கே பக்கத்தில் இருப்பது கடல். கடலிலே இருப்பது அலை. உங்களுக்கு அலை; கம்பருக்குக் கலை. அலையிலே என்ன ஸார் இருக்கிறது. அது கவிச்சக்கரவர்த்திக் குத்தான் தெரியும். நமக்கு என்ன தெரியும். ஆஞ்சனேயர் பிராட்டியாரை அசோகவனத்திலே பார்த் தேன் என்று அடையாளம் கொடுத்தார் சூடாமணியை. 70 வெள்ள வானர சைன்யங்களோடு பகவான் புறப்பட்டுப் போனுர் தென் கடலுக்கு. பதினைந்து நாட்கள் நடந்து போனுராம். இப்பொழுது லண்டனுக்கு ஏழு மணி நேரத்தில் போகிறேம். அந்தத் தென் கடலுக்குப் போனுர் ராமச்சந்திர மூர்த்தி. அந்தக் கடலிலே என்ன இருக்கும் ? அலை. இப்படி அலை வருகிறது. இப்படி போகிறது. ஏன் வருகிறது? ஏன் போகிறது? அது என்னவோ வருகிறது. அது என்னவோ போகிறது. நமக்கு இன்பம் துன்பம் வந்து வந்து போவதுபோல். நமக்கு அலை. கவிச்சக்கரவர்த் திக்குக் கலை. ஒரு அம்மாவுக்கு ஒரே பெண். அழகாக வளர்த்தார்கள். அந்தப் பெண் நன்ருகப் படித்தது. தமிழ், சமஸ்கிருதம், சங்கீதம், தையல் எல்லாம் பயின்ருள். மாப்பிள்ளை ஐ. ஏ. எஸ். அபட்ஸ்பாரியிலே கல்யாணம். எம். எஸ். கச்சேரி. பெண்ணை டில்லிக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார். ஒரே பெண் அல்லவா ? தாய் நினைக்கிருள். மாப்பிள்ளை பெண்ணை நன்ருக வைத்துக் கொள்வாரா ? நம் குழந்தை சொன்னபடி கேட்பாரா ? என்று. மனைவியிடம் மெத் தென்று பழக வேண்டும். “மலரினும் மெல்லிது காமம்” புஷ்பத்திடம் பழகுவது போல மனைவியிடம்

பழக வேண்டும். நான்கு பேர் இருக்கும் பொழுது மனைவியைச் சத்தம் போட்டுக் கூப்பிடக்கூடாது. பத்துப் பேருக்கு எதிரே மனைவியிடம் சத்தம் போட்டுக் கூப்பிட்டால் மனைவி கூசுகிறாள். மனைவியிடம் கையால் பேச வேண்டும். ராமச்சந்திர மூர்த்தி கல்யாணத்துக்குத் தசரத ராஜா போகிறார். இலக்கியம் சொன்னால்தானே உங்களுக்குப் புரியும். ஒரு மன்னர் பெருமான். இளம் மனைவி. அவன் மனைவியைப் பார்த்தான். அவள் புரிந்து கொண்டாள். தோழி பார்த்தாள். அவள் கண்ணால் கேட்டாளாம். அதற்கு அவள் கடைக் கண்ணாலே பதில் சொன்னாளாம். இதை யெல்லாம் கம்பர் சொல்கிறார்.

**தாழநின்ற ததைமலர்க் கையினால்**
**ஆழி மன்னொரு வன்உரைத் தான் அது**
**வீழி யின்கனி வாயொரு மெல்லியல்**
**தோழி கண்ணில் கடைக்கணில் சொல்லினாள்.**

தமிழனுடைய நாகரீகம். ஒரு தடவை சொன்னால் போதுமே.

**"ஆழி மன்னொருவன் தாழநின்ற ததைமலர்க்**
**கையினால்"**

தாழ நின்ற—கொடுத்துக் கொடுத்து நீண்ட கையாம். இந்தக் கையே கொடுக்கத்தான் வைத்தார்.

"......கடைக்கண்ணிலே சொன்னாள்." நாகரிகத்தைச் சொல்கிறார் கம்பர். வீட்டுக்கு மாப்பிள்ளை வந்தால் மாமியார் தாகத்துக்கு ஏதாவது கொடுப்பாள். மைத்துனன்தான் பாய் போட வேண்டும். பாயை உதறிப் போட வேண்டும். இது பண்பாடு. கம்ப ராமாயணம் இலக்கியச் சுவை. அங்கு என்ன இருக்கிறது? அலை. அங்கு வரும் காற்று என்ன காற்று?

தென்றல். தமிழன் ஒவ்வொன்றுக்கும் ஒரு பேர் வைத் தான். கிழக்கில் இருந்து வந்தால் கொண்டல். மேற்கு இருந்து வந்தால் கோடை. வடக்கிருந்து வந்தால் வாடை. தெற்கே இருந்து வந்தால் தென்றல். நான்கு காற்றுக்கும் நான்கு பெயர்கள் வைத்தான். கோடைக் காற்று, வாடைக் காற்று, கொண்டல் காற்று, தென்றல் காற்று. அருணகிரியார் சொன்னர்,

**"திங்களார் கொன்றை மத்தந்துழாய் துன்றுபொற்**
**செஞ்சடா பஞ்சரத் துறுதோகை**
**சிந்தையே தென்திசைத் தென்றல்வீசும் பொழில்**
**செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே."**

அந்தத் தென்றல் காற்று வருகிறது. அந்த அலை வரு கிறது; அந்த அலை வருகிறது இல்லையா? அந்தக் கரையில் வந்து உதறி முத்தையும் நுரையையும் சிந்தி அலை திரும்பிப் போகும் போது பாயை உதறி விரிப் பது போல இருக்கிறதாம், அலை போய் வருவது. உங்களுக்கு அலை. கம்பனுக்குக் கலை. பாயை விரிப்பது யார்? மச்சினன்–தென்றல். லக்ஷ்மி எங்கே பிறந்தாள்? கடலிலே. அப்பொழுது ராமருக்குக் கடல் என்ன வேண்டும்? மாமியார். மாமியார் வீட்டுக்குப் போய் இருக்கிறர் மாப்பிள்ளை ராமர். யார் பாய் விரிக்க வேண்டும்? மச்சினன்; தென்றல்–மச்சினன். பாய் எது? அலை. அலை அந்தக் கரையில் வந்து போவது உதறு கிறமாதிரி இருக்கிறதாம். பாட்டைக் கேளுங்கள்.

**"சேய காலம் பிரிந்து அகலத் திரிந்தான்**
**சேக்கையின் பால் மாயன் வந்தான்**
**வருந் தென்றல் ......... பாயை**
**உதறிப்படுப்பதே ஒத்த திரையின்பரப்பு அம்மா"**

நிரம்ப சுவையான பாட்டு. நீங்கள் எல்லாம் இந்தப் பண் இன்பம் பெற வேண்டுமென்ருல், இந்தப் பாடல்களை எல்லாம் கொஞ்சம், கொஞ்சம் படிக்க வேண்டும்.

“சேய காலம்—நெடுங்காலம். நாரயணன் எங்கே பள்ளிகொண்டிருக்கிறார்? கடல் நீரிடை துயின்றவர். தண்ணீரிலே படுத்துக் கொண்டிருக்கிறாராம் பெருமான். ஆகவே அந்தப் பாற்கடலுக்கு அப்பொழுது போய் இருக்கிறார்—மாமியார் வீட்டுக்கு. யார்? இராமர்; லக்ஷ்மி யோடு பிறந்தது தென்றல் காற்று. மச்சினன். அந்தப் பாயைக் கொண்டு வந்து உதறி விரித்தது போல இருக்கிறது என்றார். “பாயல் உதறி விரிப்பதே போன்ற திரையின் பரப்பு அம்மா” இது தான் இலக்கிய இன்பம்.

**சேய காலம் பிரிந்தகலத்**
**திரிந்தான் மீண்டுஞ் சேக்கையின்பால்**
**மாயன் வந்தான் இனிவளர்வான்**
**என்று கருதி வரும் தென்றல்**
**தூய மலர்போல் நுரைத் தொகையும்**
**முத்துஞ் சிந்திப் புடைசுருட்டிப்**
**பாயல் உதறிப் படுப்பதே**
**ஒத்த திரையின் பரப்பம்மா.**

இந்தத் தமிழ் மிகத் தொன்மையானது. மற்ற மொழிகளைப் போல பின்னே வந்த மொழி அல்ல. தமிழின் பெருமையைச் சொல்லுகிறேன். கைலாயத்தில் சிவ பெருமானுக்கும் உமா தேவி யாருக்கும் திருமணம். முனிவர்கள், சித்தர்கள், தேவர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். அப்போது வட கோடு தாழ்ந்து தென் கோடு உயர்ந்து விட்டது. என்ன பண்ணுவது? இமயமலை உச்சியில் எல்லோரும் உட்கார்ந்திருக்கிறார்கள். சிவ பெருமான் அகத்திய முனிவரைக் கூப்பிட்டார். “அப்பனே! வட கோடு தாழ்ந்து தென் கோடு உயர்ந்துவிட்டது. நீ பொதிய மலைக்குப் போ” என்றார். அவர் அடியார். அவர், “அடிக்கடி நடக்கின்ற கல்யாணமா ஸ்வாமி! இந்தப்

பாவி இந்தக் கல்யாணத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே'' என்றார். "நீ வருத்தப்படாதே; இந்தக் காட்சியை உனக்கு அங்கே தருகிறேன்'' என்றார். (டெலிவிஷன்). அவருக்குத் தமிழ் தெரியாது. அது தமிழ் நாடு. 3½ மணி நேரத்திலே தமிழ் சொல்லிக் கொடுத்தாராம்; கற்பூர புத்தி. உடனே தெரிந்து கொள்பவர்களும் உண்டுதானே? ஒரு அளவு தமிழ் பேசுவதற்கு ஞானம் வேண்டும். அப்புறம் அங்கு மகாவித்வான்கள் எல்லாம் வருவார்களே. பேசத்தான் தமிழ் கற்றுக் கொண்டார். இலக்கணம் படித்தால் தானே எல்லோரும் மதிப்பார்கள். முருகப் பெருமானை வேண்டித் தவம் செய்தார். கந்தக்கடவுள் வந்தார். எனக்குத் தமிழ் இலக்கணம் சொல்லிக் கொடு என்றார். முருகப்பெருமான்தான் அகத்தியருக்கு இலக்கணம் சொல்லிக் கொடுத்தார். அவர் அகத்தியம் என்று ஒரு இலக்கணம் செய்தார். நான் சொல்வதெல்லாம் ஒரு பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன். அதில் சில பாடல்கள் மட்டும் கிடைத்திருக்கின்றன. கடல் கோள்களால் அநேக பாடல்கள் அழிந்து விட்டன. அந்த அகத்தியம் சிதைந்த பிற்பாடு அவருக்கு 12 அறிவாளியான சீடர்கள். அந்தச் சீடர்களில் ஒருவர்தான் தொல் காப்பியர். அவர் தமிழ் இலக்கணம் செய்தார்; அது தான் தொல்காப்பியம். எப்பொழுதுமே மெய்யெழுத்து இயங்காது. உடம்பு நடக்குமா? நீட்டிக் கொண்டு இருக்கும். அதைத்தான் வந்து எல்லாரும் பார்த்து விட்டுப் போவார்கள். இது யாரையும் பார்க்காது. மனைவி பக்கத்திலே இருப்பாள்; பார்க்குமா? முன்பு பக்கத்தில் இருந்தால், எத்தனை முறை பார்த்த கண்; எத்தனை முறை பார்த்து சிரித்த முகம்; இப்பொழுது சிரிக்குமா? வெறும் உடம்பு இயங்காது. அது போல தமிழிலே 18 மெய்கள் இருக்கின்றன. அது தனியாக இயங்காது.

நம்முடைய வாழ்க்கை நான்கு வகையாகும். கிடத்தல், இருத்தல், நிற்றல், நடத்தல். ஒன்று படுத்திருப்போம்; எழுந்து உட்காருவோம்; நிற்போம்; நடப்போம். இந்த நான்கைத் தவிர வேறு கிடையாது. படுத்திருந்தான், உட்கார்ந்திருந்தான், நின்ருன், நடந்தான். யுகங்கள் நான்கு. கிருதயுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம். நிலம் நான்கு. குறிஞ்சி, முல்லே, நெய்தல், மருதம், பெண்மைக்கு நான்கு. நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு. ஆண்களுக்குப் புருஷார்த்தங்கள் நான்கு. அறம், பொருள், இன்பம், வீடு. எழுத்து நான்கு. மெய்யெழுத்து, உயிரெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆயுத எழுத்து. சொல் நான்கு. பெயர்ச் சொல், விணச்சொல், இடைச்சொல், உரிச்சொல். பாட்டு நான்கு. வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா, ஆசிரியப்பா. ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர். எல்லாம் நாலு நாலுதான். எல்லா மொழிகளிலும் சொல்லப் போகிறேன். நாலிலே அடக்கலாம். அதைச் சொல்லப் போகிறேன். ஒன்று சுழி, பிறை, நேர்க் கோடு, குறுக்குக் கோடு. இரண்டு நேர்க்கோடு போட்டு அடியிலே குறுக்குக்கோடு போட்டால் "ப". இப்படிப் போட்டால் "H". இப்படிப் போட்டால் "L". நீளமாகப் போட்டால் "ட". அறிவுக்குச் சிந்தனே. சுழி, பிறை, நேர்க்கோடு, குறுக்குக் கோடு. "அ" கரத்தில் இந்த நான்கும் வைத்தார்கள். "மெய்யின் இயக்கம் அகர மொடு சிவணும்"

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" —திருக்குறள்.

"அகர உயிர் போல் இறை"—திருவருட்பயன்.

"அகரமுமாகி, அதிபனுமாகி"—அருணகிரியார்.

ஆகவே சில நுட்பங்களையெல்லாம் தொல்காப்பியத்திலே ரொம்ப அற்புதமாகச் சொல்லியிருக்கிருர்.

நான்கு நிலங்களை வகுத்தார். அந்த நிலங்களுக்குத் தெய்வத்தைச் சொன்னார். நிலத்தை ஒப்புக் கொண்டால் தெய்வத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டும். இது சர்வகலாசாலை என்று சொன்னால் அதற்குத் துணை வேந்தர் ஒருவர் உண்டு என்று ஒப்புக் கொள்ள வேண்டும். ஒரு வீடு என்றால் எஞ்சினியர் ஒருவர் கட்டியிருக்கிறார் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். அவர் அங்கேயே நிற்கிறார் என்று அர்த்தம் இல்லை. உயர்ந்த நிலை எது? மலை. "தணிகை மால் வரையே" என்பது கந்த புராணம். வரை என்றால் மலை. வரை என்றால் கோடு. எதுவரை நீங்கள் போனீர்? வரை என்றால் கோடு. ஆகவே மலைதான் உயரமாய் இருக்கும். அந்த உயர்ந்த இடத்தில் முருகப் பெருமானை வைத்துச் சொல்கிறார் தொல்காப்பியர். "சேயோன் மேய மை வரை உலகு" தமிழைச் சொல்ல வந்தவர், தமிழின் நிலத்தைச் சொல்ல வந்தவர், அந்த நிலத்துத் தெய்வத்தைச் சொல்கிறார், தொல்காப்பியர். சேயோன்—செம்மைப் பண்புடையவர். இலக்கியங்கள் இந்த நாட்டிலே மிகவும் மலர்ந்தன. அதிலே 15-ம் நூற்றாண்டிலே வந்த இசை இலக்கியம் திருப்புகழ்.

இவ்வளவு நேரம் நான் பேசியது ஒரு தவறான கருத்து பரவியிருக்கிறது. படித்தால் அறிவு வரும் என்று எண்ணுகிறார்கள். அந்தக்கருத்து பிழை; ஆகவே படித்தால் அறிவு வராது. வரும் என்றால் என்ன பிழை. ஆன்மாவுக்கு அறிவு அன்னியம் என்று அர்த்த மாகும். பரம அநுபவஞானி தாயுமானார். அவருக்கு, குரு சொன்னார். ஆராயும் அறிவு நீ என்று. விளக்கும் ஒளியும் ஒன்று போல ஆன்மாவும் அறிவும் ஒன்று.

"யாதானும் நாடாமால்......கல்லாதவாறு" ஆல் என்பதை அசையாகப் பிரிக்காமல் மால் ஊர் என்று பிரிக்க வேண்டும். மால் ஊர்—நாராயணன் வாழ் கின்ற வைகுண்டம். கற்றவனுக்கு மண்ணுலகமும்

விண்ணுலகமும் சொந்தம். வள்ளுவர் சொன்னுல் அது சுப்ரீம் கோர்ட். பாரிஸ் நகரிலே பெரிய லைப்ரரியிலே இரண்டாம் நம்பரில் போட்டு, திருக்குறள் வைத்திருக்கிறது.

நான் சொன்னதெல்லாம் இப்பொழுது தொகுத்துச் சொல்கிறேன். ஆகவே திருவள்ளுவர் இந்த உடம்பு வேறு உயிர் வேறு என்று சொன்னுர். சொர்க்கத்தையும் நரகத்தையும் ஒரே குறளிலே சொன்னுர். ஆகவே புலன்களை அடக்க வேண்டும். அதனுலே நாம் நன்ருகப் படித்தால் விண்ணும் மண்ணும் நமக்குச் சொந்தமாகும். படிப்பதனுலே என்ன விளையும்? அஞ்ஞானம் விலகும். தோண்டுவதனுல் மணல் போன உடனே நீர் ஊறுவது போலே வேட்டி அழுக்கைப் போக்கினுல் அது வெண்மையாக ஆவதைப் போலே படிக்குந் தோறும் படிக்குந்தோறும் அறியாமை விலகும். சுவாமியிடம் இல்லாத பொருள் எது? அஞ்ஞானம். நம்மிடம் வண்டி வண்டியாக மண்டிக் கிடப்பது எது? அஞ்ஞானம். அஞ்ஞானம் உள்ளவன் எப்போதும் கவலைப்படுவான்.

ஒரு யூதன் ஒரு டாலர் போட்டு ஒரு லாட்டரி சீட்டு வாங்கினுன். இன்னெரு சீட்டும் மற்றெரு டாலர் போட்டு வாங்கினுன். எட்டாவது நாள் எட்டு கோடி ஒரு சீட்டுக்குப் பரிசு வந்தது. ஓ என்று அழுதானும். மனைவி வந்து ஏன் என்று கேட்டாளாம். ஒரு டாலர் வீணுகப் போய்விட்டதே என்ருனும். வந்ததற்குச் சந்தோஷப்படவில்லை. வராததற்கு அழுதானும்; அஞ்ஞானம். எப்பவும் ஞானிகள் சத்தோஷமாய் இருப்பார்கள். படிக்குந்தோறும்| படிக்குந்தோறும் நம்முடைய அறியாமை விலகி அறிவு உண்டாகும். பெரியவர்களைப் பார்த்தாலே ஞானம் வரும்; தொட்டால் ஞானம் வரும். மகான்கள் பார்வை நமக்கு ஞானத்தைக்

கொடுக்கும். இன்பத்திலே நாவினுல் வரும் இன்பமெல்லாம் அற்ப இன்பம். இலக்கியத்தினுலே வரும் இன்பம் மேலான இன்பம். உவமையைச் சொன்னுல் உபமானம் உயர்வு. முத்தைப் போல பல் என்கிருர்கள். அந்தப் புரட்சிப் புலவன் பல்லேப் போல் முத்து என்ருன். கடலிலே இருக்கிற அலே கம்பருக்குக் கலேயாக இருக்கிறது. தென்றல் காற்று மச்சினன். அந்தப் பாய் உதறி விரிப்பதைப் போல இருந்தது என்று அற்புதமாகப் பாடுகிருர்.

இந்தத் தமிழைச் சிவபெருமான் சொல்ல அகத்தியர் தென்ஞட்டிலே, அதைப் பிரகாசப்படுத்திஞர். இது தென் தமிழ் நாடு. "தென்ஞடுடைய சிவனே போற்றி," வடநாடுடைய வரதா போற்றி என்ரு சொல்வது ? 3¾ நாழிகையிலே தமிழைக் கற்றுக் கொண்டு வந்தார். முருகனிடத்திலே இலக்கணத்தைப் பெற்றுக் கொண்டார். நீண்ட காலத்துக்கு முந்தி கிட்டதட்ட 5000 ஆண்டுகளுக்கு அப்பால் இந்த அகத்திய முனிவர் இலக்கியத்தைச் செய்தார். அது கடல்கோளில் பல அழிந்து போய் ஒன்று இரண்டு தான் எஞ்சி நிற்கின்றன. அதைப் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான, (மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.) தொல்காப்பியர் இலக்கணம் சொன்ஞர். அதில் "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்று அற்புதமாகச் சொன்ஞர். நாலும் சேர்ந்து அந்த அகர எழுத்தாக வரும். சுழி, பிறை, நேர்க்கோடு, குறுக்குக் கோடு. அகர, உகர, மகரம் மூன்றும் சேர்ந்தால், ஓங்காரம். "அ"கரத்தைப் பாருங்கள். (உகரமும் மகரமும் சேர்ந்தால் அகரம்.) அந்த அகர எழுத்தாக இருக்கிறவன் ஆண்டவன். அவன் நமக்கு அருள் புரிகிருன் என்று சொல்லி, இந்த உரையை இந்த அளவிலே பூர்த்தி பண்ணிக் கொள்கிறேன்.

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்."

உ

முருகா

# 2. திருப்புகழ் இன்பம்

(3—9—79)

ஞானமே வடிவாகிய வயலூர் எம்பெருமானுடைய திருவருளினாலே திருப்புகழைப்பற்றி, அந்தச் சொல் நயம், அதன் சந்த நயம், லயத்திலே உள்ள நுணுக்கங்கள் ஆகிய பொருள்களைப் பற்றிச் சிந்தனைக்குக் கொண்டு வருகின்றேன்.

15-ம் நூற்றாண்டிலே திருவண்ணாமலையிலே சிவ ஞான பானுவாக அவதரித்தவர் அருணகிரிநாதர். இன்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய அவதாரம் நிகழ்ந்தது. சுவாமிகள் அவதரித்த காலம் தமிழ்நாட்டிலே சைவ வைஷ்ணவ சண்டை மிகுதியாக இருந்தது. எப்பொழுது நமக்குத் தாங்க முடியாத வெப்பம் வருமோ அப்பொழுது மழை வரும். அது போல மக்கள் உள்ளத்திலே கொடுமைகள் தோன்று கிறபோது ஞானிகள் வந்து தோன்றுவார்கள். ஒரு காகிதத்துக்கு இரண்டு பக்கங்கள் இருக்கும். ஒரே பக்கமுள்ள காகிதம் ஐந்து கண்டத்திலும் கிடையாது. அதேபோல இறைவன் இரண்டு பக்கங்களை உடையவனாக இருக்கின்றான். ஒன்று தட்பம், ஒன்று வெப்பம். தட்பம் என்பது குளிர்ச்சி. வெப்பம் என்பது சூடு. இந்த இரண்டும் ஒன்று சேர்ந்து இருக்கும் பொருள்தான் இறைவன்.

நம் உடம்பிலே சூடும் இருக்கிறது. குளிர்ச்சியும் இருக்கிறது. என்றைக்காகிலும் சூடு உடம்பிலே குறையுமானால் எல்லோரும் சுற்றி உட்காருவார்கள். இந்தக் கருத்தை அருணகிரியார் சொல்லுகிறார்.

**"அறிவழிய மயல் பெருக வுரையுமற விழி சுழல"**

அறிவு அழிய—இப்பொழுது இருக்கிற அறிவு எல்லாம் அப்போது அற்றுப் போகும். மயல் பெருக—மயக்கம் உண்டாகும். உரையுமற—வார்த்தைகள் பிறழும். விழி சுழல—கண் சொருகும்; அனலவிய—உடம்பில் இருக்கிற அனல் அற்றுப் போகும். அப்பொழுது உடம்பு ஜில்லிட்டுப் போகும். அப்போதுதான் எல்லோரும் சுற்றி உட்காருவார்கள் என்று சொன்னேன்.

**"அனையு மனை யருகிலுற"**

அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் அருணகிரி நாதர்.

ஆகவே இந்த உடம்பில் சூடும் இருக்க வேண்டும். குளிர்ச்சியும் இருக்க வேண்டும். ஒரு மலரிலே சூடும் குளிர்ச்சியும் இருந்தால் தான் மலர் மலராக இருக்கும். இல்லையென்றால், அந்த மலர் ஒன்று அழுகிப்போகும். இல்லையென்றால் வாடிப் போய்விடும். குளிர்ச்சி குறையுமானால் வாடிப் போகும். உஷ்ணம் குறையுமானால் அழுகிப் போகும். நான் ஒரு வீட்டிலே நுழையும்போது மண்டையிலே அடிபட்டது. இரண்டு காரணம். அந்த நிலை தணிவாக இல்லாதது ஒரு காரணம். நான் தணிவாகப் போகாதது இன்னொரு காரணம்.

ஆகவே அந்த சூடு என்று சொன்னேனே அது செம்மை நிறம். குளிர்ச்சி என்று சொன்னேனே அது பச்சை நிறம். எப்பொழுதும் பச்சைப் பயிர் எல்லாம் குளிர்ச்சியாய் இருக்கும். உஷ்ணம் வந்தால் கண்

சிவக்கும். முகம் சிவக்கும். சூடு வந்து சிவப்பு நிறம். குணங்களுக்கும் நிறங்கள் உண்டு. கடுமையான குணங்களைக் கருமையாகச் சொல்லுவார்கள். காளி, ராட்சஸன், பேய் இவை எல்லாம் கருமை; கடுமையாய் இருக்கும். சாந்தமான குணங்கள் எல்லாம் வெண்மை யாய் இருக்கும். யமனைக்கூடக் கருமையாகச் சொல்லு வார்கள். ஒரு பாட்டிலே வருகிறது.

**''தமர குரங்களும் காரிருட் பிழம்பு**
**மெழுகிய அங்கமும் பார்வையிற் கொளுந்தும்**
**தழலுமிழ் கண்களுங் காளமொத்த கொம்பு**
**முளகதக் கடமா மேல்''**

**—திருவண்ணுமலைத் திருப்புகழ்**

உயிர்களை எடுக்க எமன் வருவானும். அந்த யமனு டைய வாகனம் நிரம்ப கருமை. நிரம்ப கொடுமை. மழை வந்தாலும் அசையாது; கார் வந்தாலும் அசை யாது. தமரம் என்ருல் ஒலி. குரம் என்ருல் மிருகத்தி னுடைய குளம்பு.

**''...கொம்பு முள கத''**

கத என்ருல் வேகம். வேகமாய் வருகிறது, அந்த எருமை நம் உயிரைப் பறிக்க. அதன்மேலே எமதூதன் வருவான்.

**''தனிவரும் அந்தகன்''**

அந்தம் என்ருல் முடிவு. அந்தகன் என்ருல் நமக்கு முடிவைச் செய்கிறவன்.

**''தனிவரும் அந்தகன் பாசம் விட்டெறிந்து**
**அடவருமென்று சிந்தா குலத்திருந்து**
**தமரழ மைந்தரும் சோக முற்றிரங்க**
**மரண பக்குவமாநாள்''**

''சுவாமி! அப்படி ஒரு நாள் இருக்கிறது. அந்த நாளிலே எனக்கு யாரும் உதவி செய்ய மாட்டார்கள்.

வட்டி மேலே வட்டி வாங்கி பெட்டி மேலே பெட்டி வைத்த பணம் அப்பொழுது எனக்கு உதவாது. அப்பொழுது தேவரீர்தான் எனக்குக் கருணை புரிய வேண்டும். இந்தப் பயங்கரமான எமனுடைய முகம் வருகிற போது தாங்கள்,

''கமல முகங்களுங் கோமளத் திலங்கு
நகையு நெடுங் கணுங் காதினிற் றுலங்கு
கனக குதம்பையுந் தோடும் வஜ்ர அங்க
தமுமடற் சுடர்வேலும்''

தொங்குகிற அணிகலன்களுக்குக் குதம்பை என்று பெயர். தோடும்—காதிலே அணிகின்ற அணிகலன் தோடு.

சிவபெருமானைப் பற்றி ஞானசம்பந்தர் பாடிய போது முதன் முதலாக 'தோடுடைய செவியன்' என்று பாடினர். செவியன் என்று சொன்னாலே போதும். தோடுடைய செவியன் என்று சொன்னால் அதிலே ஒரு நயம் இருக்கிறது. இந்தத் தேவாரம் எல்லோர் காதிலேயும் விழுந்த தேவாரம்தான். ஒரு நயம் இருக்கிறது. அச்வதரன், கம்பளதரன் என்று இரண்டு கந்தர்வர்கள் இருந்தார்கள். இசை நுணுக்கத்திலே பெரியவர்கள். அவர்கள் பாடலைக் கேட்டு ரஸிக்கிறவர்கள் இல்லை. இப்பொழுது உலகம் எப்படியிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியும். ஸிலோன் ஸ்டேஷன்தான் வைப்பார்கள். உயர்ந்த பாடலைக் கேட்பதற்குத் தனியான ஞானம் வேண்டும். சில பேர் என்னென்னவோ ராகம் பாடுவார்கள். இவர் வராகம் மாதிரி உட்கார்ந்திருப்பார். என் வாழ்நாளிலே நடந்த கதை. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் என்று ஒருவர் இருந்தார் போன நூற்றாண்டிலே. இந்த நூற்றாண்டிலே நாகர்கோயிலிலே ஒருவர் இருந்தார் ஆறுமுக நாவலர். அவருக்கு நான் மணி விழா கொண்டாடினேன். அப்பொழுது மாரியப்ப

சுவாமிகள் பண்ணிசை பாடுவதிலே தலைசிறந்தவர். அவர் கிளிக்கண்ணி பாடிக்கொண்டிருக்கிறார். எனக்குத் தாரை தாரையாய்க் கண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. வேறே ஒரு தமிழ்ப் புலவர் அப்படியே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். எப்பவும் மறக்கமுடியாத காட்சி. அவர் அற்புதமாய்ப் பாடுகிறார். எனக்குக் கண்ணீர் வருகிறது. கண்ணீர் வரவேண்டாம். உள்ளம் உருக வேண்டாமா? அதைப்பற்றி அவருக்குப் புரியவில்லை. அவ்வளவுதான். இந்த மாதிரி ஆட்களை வைத்துக் கொண்டு என்ன சங்கீதம் பாடித் தொலைப்பது? "முத லிலே இருந்து ஒரே ராகம் தானே பாடினாரே" என்று கேட்பான். இதுவரையும் 17 ராகம் பாடியிருப்பான். அந்த அச்வதரன், கம்பளதரன் என்பவருடைய இசை யைக் கேட்டு ரஸிக்கிறவர்கள் இல்லை. இசையிலேயே ஆகப் பெரியவர் சிவபெருமான். சிவபெருமான் வீணை வாசிப்பார்.

**"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்**
**மிக நல்ல வீணை தடவி"**

வீணா தக்ஷிணாமூர்த்தி. முதல் முதலிலே புல்லாங்குழல் வாசித்தவர் முருகப் பெருமான். கிருஷ்ணர் இல்லை. கிருஷ்ணர் காலம் ஐயாயிரம் ஆண்டு. முருகப் பெரு மான் ஆதியும் அந்தமும் இல்லாதவர். திருமுருகாற்றுப் படையிலே,

**"குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்"**

என வருகிறது. குழல் என்றால் புல்லாங்குழல் என்று அர்த்தம். யாழ் செயற்கை வாத்தியம். குழல் இயற்கை வாத்தியம்.

**"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளாதவர்"**

என்று வள்ளுவர், முதலில் குழலைச் சொல்லிவிட்டு யாழைச் சொல்லுகிறார். எது முக்கியமோ அதை முத

லிலே சொல்லுகிருர். முருகப் பெருமான் குறிஞ்சி நிலக் கடவுள். அப்பொழுது குறிஞ்சி நிலத்திலே மலையிலே வாழுகிற தெய்வம், மலையிலே விளைகின்ற மூங்கிலை வெட்டி அதைத் துளையிட்டுப் புல்லாங்குழல் வாசித் தாராம். யார் ?சுப்பிரமணிய சுவாமி.

தன்னை அறியாது வாசித்தாராம். ஆகவே அந்தக் குடும்பமே சங்கீதக் குடும்பம். சிவபெருமான் ஆட வல் லான்; பாட வல்லான். நாட்டியக் கலையிலும் நடராஜா. வீணை வாசிப்பார். அவருக்கு வித்யாபதி என்று பெயர். இந்த இரண்டு கந்தர்வர்களும் சிவபெருமானை வேண்டித் தவம் செய்தார்கள். சுவாமி ரிஷப வாகனத் தோடு காட்சியளித்தார். அவர்கள் வணங்கி, “சுவாமி! எங்களுக்கு ஒரு வரம் கொடுக்க வேண்டும்” என்றனர். என்ன என்று கேட்டார். “24 மணி நேரமும் நாங்கள் பாடிக் கொண்டேயிருப்போம். தேவரீர் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். நீங்கள் பார்த்து எங்கள் பாட்டை ரசிக்கவேண்டும்” என்ருர்கள். அவன் பஞ்ச கிருத்யம் பண்ணுகிறவன். சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரௌபவம், அனுக்ரஹம் முதலானவைகளைச் செய்கிற வன். அத்தனை வேலைகளையும் செய்து கொண்டு 24 மணி நேரமும் எப்படிப் பாட்டைக் கேட்பது? பரமேசுவ ரன் வரம் கொடுத்தால் மாற்ற மாட்டார். என்ன பண்ணினுர்? இரண்டு பேரையும் தோடாகப் பண்ணி காதிலே மாட்டிக்கொண்டாராம். பாடிக் கொண்டே யிருந்தால் கேட்டுக்கொண்டே யிருக்கலாம்.

> “சந்தான புஷ்பபரி மளகிண் கிணீமுகச் |
> சரணயுக ளமிர்தப்ரபா
> ...................................
> சிவனை வலம் வருமளவில் உலகடைய நொடியில் வரு
> சித்ரக் கலாப மயிலாம்.”

மயிலினுடைய வேகத்தைச் சொல்கிருர், அருணகிரி நாதர். ஒரு மணிக்கு 35 மைலா? 45 மைலா? விநாயகப்

பெருமான் அப்பாவை ஒரு முறை அப்படிச் சுற்றி வரு வதற்குள்ளாக அகில உலகங்களையும் சுற்றி வந்து விட்டதாம் மயில்.

**''த்ரியம்பக விநாயகன் முதற்**
**சிவனைவலம் வரும்அளவில் உலகடைய நொடியில்வரு**
**சித்ரக் கலாப மயிலாம்''**

**... ... ... ... ... ...**

**இமய கிரி குமரிமகன் ஏறு நீலக்ரீவ**
**ரத்னக் கலாப மயிலே''**

மயில் விருத்தத்திலே அருணகிரி சுவாமிகள் பாடியிருக் கிறார். க்ரீவம் என்றால் கழுத்து. பத்துக் கழுத்துக் களையுடைய ஒரு அரக்கன் இருந்தான். அவனுக்குத் தசக்ரீவன் என்று பெயர். பத்துக் கழுத்து. அவன் கைலாச மலையைப் பெயர்த்தெடுத்து ஆயிரம் ஆண்டு கதறினான். சுவாமி நகத்தை மட்டும் ஊன்றினாராம். விரலை ஊன்றவில்லை. அப்படி சிறு நகத்தை ஊன்றிய வுடனே அப்படியே மலையால் அழுத்தப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் அழுதான். தசக்ரீவன்தான் ராவணன். அப்பொழுதுதான் வீணாகானம் செய்து வரம் பெறு கிறான். ஆகவே ராவணன் வீணை வாசிப்பான். அவ னும் வாசித்தான். சுவாமி அனுக்ரஹம் பெற்றான் என்பது வரலாறு. ராவணனுக்குத் தசக்ரீவன் என்று பெயர். திருமாலுக்கு ஹயக்ரீவன் என்று ஒரு பெயர் இருக்கிறது. அதாவது குதிரை முகத்தோடு வேதங் களைச் சொன்னார் ஹயக்ரீவ சுவாமி. சிவபெருமானுக்கு சுக்ரீவன் என்று ஒரு பெயர். சுக்ரீவன் என்றால் சிவ பெருமான் பெயர் என்று நம்மிலே பலருக்குத் தெரியாது. சுக்ரீவன் என்றால் வாலி தம்பி பேர் ஞாபகத்துக்கு வரும். க்ரீவம் என்றால் கழுத்து என்று சொன்னேன். சு என்றால் அழகு. அழகான கழுத்துள்ளவன் சிவபெரு

மான் தான். சிவபெருமான் பவள நிறம். செக்கச் செவேலென்று இருப்பார்.

**"………செம்பவளம்**
**தான் நோக்கும் திருமேனி தழலுருவாம் சங்கரன்."**

அப்பர் பெருமானுடைய தேவாரம்.

ஒரு பெரிய இசைவாணர் பாடுகிறபோது அந்த இசை உலகத்திலே தவழ்கின்ற வித்வான்களெல்லாம் ஒரு பக்கமாக நின்று கொண்டு, பார்ப்பார்கள். சரளமாகப் பாடுகிறார். அவர்கள் பெருமூச்சு விடுவார்கள்.

நிறத்திலேயே சிவப்பு (பவளம்) தான் ராஜா. அந்தப் பவளம் பகவானுடைய திருமேனியைப் பார்த்து வெட்கப்படுகிறதாம். இந்தப் பரம்பொருளினுடைய உடம்பு எவ்வளவு சிவப்பாய் இருக்கிறதென்று. "செம்பவளம் தான்நோக்கும் திருமேனி தழலுருவாம் சங்கரன்."

பெண்களுக்குச் சிவத்த பொருள்கள் என்றால் சந்தோஷமாய் இருக்கும். பார்வதி அம்மாள் கருமை. பரமசிவன் செக்கச் செவேல் என்று இருக்கிறார். அம்பாளுக்கு ரொம்ப சந்தோஷம். எண்ணி எண்ணி மகிழ்ச்சி அடைவாராம். அதனால்தான் அர்த்தநாரி. அந்தப் பாட்டிலே வருகிறது.

**தேன்நோக்கும் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளம்**
**தான்நோக்கும் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை**
**வான்நோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்**
**ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.**

அருமையான பாட்டு. ஆண்டவனை எங்கே வைக்க வேண்டும்? நெஞ்சத் தாமரையிலே வைக்க வேண்டும். ஆகவே சிவபெருமான் செக்கச் செவேலென்று இருப்பார். இந்தச் சிவப்பாய் இருக்கிற சகோதரி கருப்பாய்

இருக்கிற பொட்டு வைத்தால் அழகாய் இருக்கும். சிவப்புப் பட்டுக்குப் பச்சைக் கரை வைத்தால் அழகாய் இருக்கும். சிவபெருமான் செக்கச் செவேல் என்று இருக்கிருர். இங்கே நீலகண்டம். அவர் ஆலகால விஷம் உண்டதாலே கருமையான கண்ட மல்லவா? இதை அருணகிரியார் ஒரு திருப்புகழிலே சொல்கிருர். நான் இரவு 4 மணிக்குப் பூஜை பண்ண வேண்டுமென்று வைத்துக் கொள்ளுங்கள். பூ, பழம், தேங்காய் எல்லாம் முதல் நாளே வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதானே 4 மணிக்குப் பூஜையிலே உட்கார முடியும். இரவுக்குத் தேவை யானதைப் பகலிலே வாங்கி வைக்க வேண்டும். மாரிக் காலத்துக்குத் தேவையானதை கோடைக் காலத்தில் தயார் பண்ணி வைத்துக் கொள்ளவேண்டும். முதுமைக்கு வேண்டியதை இளமையிலே தேடி வைத்துக் கொள்ளவேண்டும். வயதாஞல் சம்பாதிக்க முடியாதல்லவா? கொஞ்சம் நமக்கென்று ரிசர்வ் பண்ணி வைத்துக் கொள்ளவேண்டும். இதெல்லாம் வாழ்க்கைக்கு நன்மை!

அதுபோல மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக் கொள்ளவேண்டும். இப்பொழுது நாம் செய்வ தைக் கொண்டுதான் மறுபிறப்பு அமையப் போகிறது. நன்ருக உழைத்த விவசாயிக்கு ஆறு மாதம் கழித்து வீடு நிறைய நெல் இருக்கும், அந்த உழைத்த உழைப்புக்கு. இப்பொழுது நல்ல பக்தி மார்க்கத்திலே இருந்து, தான தருமங்களேச் செய்து, தன்ஞலே முடிந்த அளவுக்கு உதவி செய்கின்ற வர்கள் தான் மறுபிறப்பிலே இந்திரலோகம் பெறுவார் கள். சிரமமில்லாமல் பலன் வரும். நல்ல மனேவி, நல்ல குழந்தைகள், நல்ல, ஆரோக்கியம், வயது 80 ஆகியும் 60 தான் மதிப்பு போடலாம். இப்படியெல்லாம்

அமைய வேண்டுமென்றால் முன்செய்த புண்ணியம். 'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்' என்பார்கள். இந்தக் கருத்தை வைத்துக்கொண்டு அருணகிரியார் ஒரு திருப்புகழ் பாடுகிறார். ஆண்டவனே! எனக்கு மறுபிறப்பு ஒன்று வருமானால், (வராமல் இருந்தால் நல்லது, ஒருவேளை வரக்கூடிய சூழ்நிலை வந்தால்,) 'நான்கு வேண்டாம்; நான்கு வேண்டும்' என்றார்.

**''திமிர வுததி யனைய நரக செனன மதனில் விடுவாயேல்**
**செவிடு குருடு வடிவு குறைவு சிறிது மிடியு மணுகாதே**
**அமரர் வடிவு மதிக குலமு மறிவு நிறையும் வரவேநின்**
**அருள தருளி யெனையு மனதொ டடிமை கொளவும் வரவேணும்'**

சிறந்த பொருள். மறுபிறப்பு ஒன்று வருமானால் செவிடு வேண்டாம். தனம்மாள் போன்றவர்கள் வீணை வாசித்துக் கொண்டிருப்பார்கள். செவிடன் என்ன பண்ணுவான்? வாசிப்பைக் கேட்டுத் தலையை ஆட்டிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்துக் கொண்டே இருப்பான். அந்தப் பாட்டுக் கச்சேரியைக் கேட்டு மகிழ முடியாது. 12 மணிக்கு மனைவி ஏதோ ரகசியம் பேசுகிறாள். இந்தச் செவிடன் என்ன கேட்பான்? அருணகிரியார் முருகப் பெருமானைப் பார்த்து சுவாமி! அடுத்த பிறப்பு வருமானால் என் காது செவிடாய் இருக்கக் கூடாது.

"...செவிடு, குருடு" கண் இல்லையானால் ஆண்டவனுடைய அருளுருவைப் பார்த்து ஈடுபட முடியாது. அபிஷேக, அலங்காரங்களைக் காண முடியாது. வடிவு குறைவு—அங்கக் குறைவு இருக்கக் கூடாது. கையில்லையென்றால் சுவாமியை எப்படிக் கும்பிடுவது? காலில்லை என்றால் எம்பெருமான் கோயிலை எப்படி வலம் வருவது ?

'சிறிது மிடியு மணுகாதே'—வறுமை கொஞ்சம் கூட இருக்கக் கூடாது. மனிதனை அடியோடு வாட்டி

வதைப்பது வறுமை. அதுதான் 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்று ஔவையார் சொன்னார்.

ஒரு தலைவி அம்மாவிடம் சொல்லாமலே தலைவனோடு நடந்துவிட்டாள், அம்மாவை உத்தரவு கேட்காமலேயே தனக்குப் பிரியமான தலைவனோடு. பெற்ற மனம் கேட்குமா? மகளைத் தேடிக்கொண்டு போனாள். அங்கே பாலைவனம். எந்த போஸ்ட்மேனாவது அவளாக லெட்டர் எழுதிக் கையில் கொடுத்திருக்கிறாளா? மகான்கள் சொன்னவைகளையே நான் யுகங்களாய்ச் சொல்லலாமே. நானாக ஏன் சொல்ல வேண்டும்? என்ன தலையெழுத்து? அந்தப் பாலைவனம் கொதிக்கிறது. அந்தப் பெண்ணைப் பெற்ற தாயார் வருந்துகிறாள். அப்படி வருந்துவதாக ஔவையார் பாடுகின்றார்.

**''அற்றாரைத் தாங்கும் ஐவேல்''**

அற்றார் என்றால் திக்கற்றவனைத் தாங்கிக் கொள்ளும் அந்த மன்னன். அந்தப் பாட்டினுடைய தலைவன் ஐவேல்.

**''அற்றாரைத் தாங்கும் ஐவேல் அசதி அருவரையில்''**

அருவரையில் என்றால் மலை.

**''முற்றா முகிழ்முலை எங்ஙனம் சென்றாள்?''**

என் குழந்தை எப்படிப் போனாளோ. இளம் பெண் என்று அர்த்தம். அதற்கு உதாரணம் சொல்லப் போனார் ஔவையார். அதுதான் ரசமான பகுதி.

**''முத்தமிழ் நூல் கற்றார் பிரிவும்.''**

ரொம்பப் படித்தவர் நம்மிடம் பழகியிருந்து பிரியும் பொழுது நமக்குக் கவலையாய் இருக்கும்.

**''கல்லார் இணக்கமும்.''**

கற்றார் பிரிகிறபோது உள்ளம் வருந்தும். கல்லாதவர் பேசுகிறபோதும் உள்ளம் வருந்தும்.

"கைப் பொருள் ஒன்று அற்றான் இளமையும்"— முதுமையிலே வறுமை இருந்தால் தோன்றாது. இப்பொழுது எனக்கு வறுமை இருந்தால் கவலை இல்லை. எனக்கு ஒன்றும் தேவையில்லை. கொஞ்சம் சாப்பிட்டால் போதும். சிறு வயதில் அப்படியில்லையே. நன்றாகச் சாப்பிடவேண்டும், சினிமா பார்க்கவேண்டும், ஹோட்டலுக்குப் போகவேண்டும். அப்போ பணம் அதிகம் தேவைப்படும். வயதானவர்களுக்குப் பணம் அதிகம் தேவைப்படாது.

அதுதான், "கைப்பொருள் ஒன்று அற்றான் இளமை போலே கொதிக்கும் இந்த அரும் சுரம்"—என் மகள் போன இந்தப் பாலைவனம் கற்றவர்கள் பிரிகின்ற போது எப்படிக் கொதிக்குமோ அது போலவும், கல்லாதவர்கள் பழகுகிற போது எப்படிக் கொதிக்குமோ அது போலவும், பொருள் இல்லாதவன் இளமை எப்படியோ அதுபோலவும் இருக்கிறது" என்றார். மூன்று உவமைகள். ஔவையார் பாட்டு எவ்வளவு அனுபவம்.

"அற்றாரைத் தாங்கும் ஐவேல் அசதி அருவரையில்
முற்றா முகிழ்முலை எங்ஙனம் சென்றனள் முத்தமிழ் நூல்
கற்றார் பிரிவும் கல்லார் இணக்கமும் கைப்பொருளொன்று
அற்றார் இளமையும் போலே கொதிக்கும் அரும் சுரமே.

இளமையான பெண்மணி எப்படித்தான் போனாளோ? புருஷனோடு. இது என்ன ஊட்டி மாதிரி இருக்கிறதா? கொடைக்கானல் மாதிரி இருக்கிறதா?

"முத்தமிழ் நூல் கற்றார் பிரிவும் கல்லார்
இணக்கமும் கைப்பொருள் ஒன்று அற்றான்
இளமையும் போலே கொதிக்கும் அரும் சுரமே"

ஆகவே வறுமை கொடிது. ஆண்டவனே எனக்கு மறுபிறப்பு வருமானுல் எனக்கு வறுமை' இருக்கக் கூடாது. நாலு சொன்னுர்.

''செவிடு குருடு வடிவு குறைவு
சிறிது மிடியு மணுகாதே''

இதறகுப் பதிலாக நாலு வேண்டும்.

'அமரர் வடிவும்' —நல்ல பர்சனுலிடி. கச்சேரிக்குப் போனுலும், பிரசங்கம் பண்ணப் போனுலும், ஒரு உத்யோகத்துக்குப் போனுலும் ஆள் தோற்றம் நன்ருக இருக்க வேண்டும். தினம் பூஜையில் சொல்ல வேண்டிய பாட்டு இது. வேடிக்கைக்காகச் சொல்ல வில்லே. அன்ருடம் பூஜையிலே இந்தப் பாட்டைச் சொன்னுல் முருகப்பெருமான் 12 கையாலே தருவார்.

''அமரர் வடிவு மதிக குலமும்
அறிவு நிறையும் வரவே நின்''
... ... ... ... ... ...
''சமர முகவெ லசுரர் தமது தலேகளுருள மிகவேநீள்
சலதியலற நெடிய பதலே தகர அயிலே''

தகர–அழிந்து போக. அயில் என்ருல் கூர்மை. அது இங்கு ஆகு பெயராக வேலேக் குறிக்கும். தகர–தகர்ந்து போக என்று அர்த்தம். தகர என்ருல் தகரம் என்று அர்த்தமில்லே.

''....தகர அயிலே விடுவோனே
வெமர வணேயி லினிது துயிலும்
விழிகள் நளினன் மருகோனே''

படுக்கை குளிர்ச்சியாய் இருந்தால்தான் தூக்கம் வரும். அதுதான் இயற்கை. சுவாமி எங்கே படுத்துக் கொண்டிருக்கிருர்? பாம்பைத் தொட்டுப் பார்க்கா தீர்கள். பாம்பு எதேச்சையாய் உடம்பிலே பட்டால் வாழைத் தண்டு பட்ட மாதிரியாய் இருக்கும். பாம்பி

னுடைய சுபாவம் என்னவென்ருல் குளிர்ச்சியாய் இருக்கும். பாம்பு மேலே பட்டால் ஐஸ் பட்டாற் போல் இருக்கும் அந்த அரவணையிலே பெருமாள் பள்ளிக் கொண்டிருக்கிருராம்.

**'வெமர வணையி லினிது துயிலும்'**

குட்டிப் பாம்பு வருகிறதென்ருலே தூக்கம் வராது. பாம்பு மேலேயே படுத்துத் தூங்குகிருரே. என்ன தைரியம்.

சிவப்பாய் இருக்கிறவர்கள் கறுத்த பொட்டு வைத்தால் மிக்க அழகாய் இருக்கும் என்று சொல்லித் தானே இந்தப் பாட்டை ஆரம்பித்தேன்.

**"...மிடறு கரியர் குமர பழநி**
**விரவுமமரர் பெருமாளே"**

அப்பொழுது சுவாமிக்கு என்ன பெயர்? நீலகண்டன். இன்னொரு பெயர் சுக்ரீவன். சிவனுடைய நாமங்களிலே ஒன்று சுக்ரீவன். அந்தப் பெயரை இந்த வாலி தம்பிக்கு வைத்தார். சுக்ரீவன் என்ற பேர் கேட்டாலே சிவன் ஞாபகம் வரவேண்டும். அந்த வாலி தம்பி பேர் ஞாபகத்துக்கு வரக்கூடாது. சிவபெருமானுடைய ஆயிரம் திருநாமங்களிலே ஒன்று 'ஓம் சுக்ரீவாய நம:' ஆயிரம் மந்திரங்களிலே சுக்ரீவ மந்திரம் ஒன்று. க்ரீவம் என்ருல் கழுத்து. மயிலுக்குக் கழுத்து எப்படியிருக்கும்? நீலமாய் இருக்கும். ஆகையினுலே மயிலுக்கு நீலக்ரீவம் என்று பெயர்.

**"சிந்தா மணிக் கலச கரகடக போலத்ரி**
**யம்பக விநாயகன் முதல்**
**... ... ... ... ... ...**
**......இமய கிரி குமரிமகன் ஏறு நீலக்ரீவ**
**ரத்னக் கலாப மயிலே"**

சிவனுக்கும் கழுத்து நீலம். மயிலுக்கும் கழுத்து நீலம். சிவபெருமான் விஷத்தை அடக்குவார். மயிலும் விஷத்தை அடக்கும். மயில் விருத்தம் பாராயணம் பண்ணுகிறவர்களுக்கு விஷ பயம் வராது. விஷ ஜ்வரம் வராது.

"நீலக்ரீவ ரத்னக் கலாப மயிலே" என்று அற்புதமாக மயில் விருத்தத்திலே அருணகிரி சுவாமிகள் பாடி உதவி செய்கிறார். இப்படி அந்த மயிலைத் தனக்கு வாகனமாக உடையவன் முருகன். மயில் என்பது ஓங்காரம். பிரணவம் தான் மயில். மயிலின் காலிலே பாம்பிருக்கும். பார்த்திருப்பீர்கள். அதற்கு என்ன அர்த்தம்? அப்படிச் சீறி வருவது பாம்பு. புற்றிலிருந்து சீறி வருகிறது. நம் உடம்பிலே சீறி வருகிறது பிராண வாயு. அப்படிச் சீறி வருகின்ற பிராண வாயுவை அது அடக்கும். ஓங்காரம். ஓம் என்ற மந்திரத்தாலேதான் பிராணனை அடக்க முடியும். தனியாக உட்கார்ந்து பிரணவ மந்திரத்தைச் சொல்லி மூச்சை அடக்க வேண்டும். அப்படிச் சாதனை செய்தவர்களுக்கு எத்தனை எத்தனையோ நன்மைகள் உண்டாகும். ஓம் என்பது மயில். அதன் காலில் இருக்கிற பாம்பு பிராண வாயு. இதெல்லாம் அருணகிரியார் சொல்லுகிறார்.

**"சூலமென வோடு சர்ப்ப வாயுவை விடாது அடக்கி"**

சர்ப்பவாயு என்றால் சர்ப்பம் என்றால் பாம்பு ஆயிற்றே. சூலம் என்று ஏன் சொன்னார். சூலத்துக்கு மூன்று இதழ் இருக்கிறது. மூன்று வழியாகப் பிராண வாயு வருகிறது. அந்தப் பிராணனைப் பிரணவத்தினாலே அடக்கவேண்டும்.

**"உடலு முட லுயிரு நிலை பெறுதல் பொரு ளெனவுலக
மொருவி வரு மநுபவன."**

மநு என்ருல் மந்திரம். பவனம் என்ருல் காற்று பவனம் என்ருல் மாளிகை. வடமொழி உச்சரிப்பெல் லாம் கொஞ்சம் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். பவனன் என்று சொல்லி விட்டால் கசடன் என்று அர்த்தமாய்விடும். ‘சரவண பவனம்’ அது வீட்டைக் குறிக்கும். பவன குமாரன் என்ருல் வாயுதேவனைக் குறிக்கும். ஆகவே மநு என்ருல் மந்திரம். பவனம் என்ருல் காற்று.

“.........மநுபவன சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
யுணர்வுவிழி கொடு நியதி தமதூடு நாடுவதும்......”

இவையெல்லாம் அருணகிரியார் வாக்கு. சீர்பாத வகுப் பிலே அந்தச் சிவயோக சாதனையைப் பற்றி அருண கிரிப் பெருமான் நமக்கு உபதேசிக்கின்ருர்.

“உடலுமுட லுயிரு நிலை பெறுதல் பொருளென வுலக
மொருவிவரு மநுபவன சிவயோக சாதனையில்
ஒழுகுமவர்”

அந்தப் பிரணவத்திருலே சீறி வருகிற பிராண வாயுவை யோகிகள் அடக்குவார்கள். அந்தப் பிரணவ மான மயில் அந்தப் பாம்பைத் தன் காலில் அடக்கிக் கொண்டிருக்கிறது. ஆடும் மயில். அந்தக் கழுத்து வளைந்திருக்கும். தோகை விரிந்திருக்கும். ஒரு கால் தூக்கியிருக்கும். ஒரு கால் ஊன்றியிருக்கும். ஆடும் மயில். சொல்லிக் கொடுக்காமலே மயில் நடனமாடும். நடராஜாவும் நடனம் ஆடுகிருர். மயிலும் நடனம் ஆடு கிறது. நட்டுவனுர் இல்லாமலே ஆடுகிறது. ஜதி சொல்வார் இல்லை. ஜதி சொன்னுல்தானே ஆடுபவர்கள் ஆடுவார்கள். அது தன்னந்தனியாக இருந்து ஆடு கின்றதாம். ஆகவே அந்தக் கழுத்து (பிரமதேவனு

டைய) சுழி. அந்தத் தோகை அதனுடைய விரிவு. தூக்கிய பாதம் ஊன்றிய கால்.

ஒரு முறை இரு முறை அழைத்தால் தான் வேலைக் காரன் வருவான். ஒரு முறை இரு முறை அழைத்தால் தான் மனைவி வருவாள். இரண்டு தடவை 'பெல்' தட்டினுல்தான் பியூன் வருவான். ஒரே ஒரு தடவை அழைத்தாராம் யானைப் பெருமான்; கஜேந்திராழ்வார். அருணகிரிநாதர் திருமாலைப் பாடுகிருர்; சமரஸம்.

''மதசிகரி கதறிமுது முதலைகவர் தரநெடிய
மடுநடுவில் வெருவி ஒரு விசை ஆதிமூலமென''

ஐயர் என்ற வார்த்தை ஒரு குலத்தையே குறிக்கிற வார்த்தை. பிள்ளை என்று சொன்னுல், ஒரு சமூகத்தைக் குறிக்கின்ற வார்த்தை. தனிப்பட்டவரைக் குறிக்காது. கடவுள், இறைவன், தெய்வம், பரம்பொருள் இதெல்லாம் தெய்வத்தினுடைய பொது நாமம். அந்த யானை நாராயணு என்று அழைக்கிறது. "ஆதிமூலமென...'' பள்ளி கொண்டிருக்கிற பெருமானைக் கூப்பிட்டவுடனே இந்த யானை சாகப் போகிறதே என்று ஓடி வந்தாராம். அந்தப் பாடலிலே முதலிலே சொன்னது கஜேந்திர மோட்சம். பின்னுலே வாமனுவதாரம் சொல்கிருர். அருணகிரியார் சமரஸத்தை இவ்வளவு நேரம் சொன்னேன். அவர் திருவானைக்கா போனுர். அங்கிருந்து அருகிலிருந்த திருவரங்கம் சென்ருர். அங்கே சொல்கிருர்,

"கருதிய ஆறங்க வேள்வி அந்தணர்
ஹரிஹரிகேசவா கோவிந்தா என்று இரு
கழல்தொழு ஸ்ரீரங்கராஜன் நண்புறு மருகோனே.''

தமிழ் தோன்றிய நாள்தொட்டு இன்று வரை தமிழ் பாடிய பலப்பலப் பெரியவர்கள் யாப்பிலக்கணத்தின் படி ஏழு வகையான விதியைத்தான் பாட்டில் அமைப்பார்கள். பாட்டுப் பாடினுல் எழுத்து, தளை, அசை,சீர்,

மோனை, எதுகை, அடி இந்த ஏழும் சேர்ந்தால் பாட்டு. மற்ற யாரும் போகாத ஒரு வழியிலே, இதுவரை அசைக்க முடியாத, சிந்திக்க முடியாத ஒரு புது நெறியை உண்டாக்கி, அப்படிப் பாடினார் அருணகிரியார். அது என்ன? ஓசை. ஓசை என்றால் உங்களுக்குத் தெரியும். காதிற்கு இனிமையாக வருவது தான். தமிழிலே மூன்று ஓசை உண்டு. வல்லோசை, மெல்லோசை, இடையோசை. வல்லோசை என்றால் ஆறு வல்லினம் க, ச, ட, த, ப, ற. மெல்லோசை நாசியில் வரும். ங, ஞ, ண, ந, ம, ன. இந்த நாசிக்கும் மார்புக்கும் நடுவில் வருவது இடையோசை. ய, ர, ல, வ, ழ, ள. தனியாக உட்கார்ந்து சொல்லிப் பாருங்கள். உங்களுக்குத் தெரியும். 3×6 18 எழுத்து. மெய்யெழுத்தே 18 தானே. முருகனுடைய கண்களும் பதினெட்டு; சபரிமலையின் படியும் 18, மெய்யெழுத்து 18, புராணங்கள் 18, பாரத பர்வம் 18, யுத்தம் பண்ணின நாள் 18, கீதை அத்யாயம் 18, ஆடி 18. எல்லாம் பதினெட்டு பதினெட்டாக வருகிறது. 6 வல்லினம், 6 மெல்லினம், 6 இடையினம். தமிழ் தோன்றிய நாள் தொட்டு இன்று வரை யாவரும் அனுசரிக்கிறார்கள். ஒரு உதாரணம் சொல்கிறேன். எல்லோருக்கும் தெரிந்த பாட்டைச் சொல்கிறேன்.

“பித்தா பிறை சூடீ பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன்”

பெருமானே என்று வந்தது. நினைக்கின்றேன் என்று போட்டார். இதில் தளை ஒத்து வருகின்றது. ஓசை ஒத்து வரவில்லை.

“வைத்தாய் பெண்ணை தென்பால், அங்கே ‘பித்தா பிறை’ என்றார்.: இங்கே ‘வைத்தாய் பெண்ணை’ என்றார். பெண்ணை என்றால் அசை சரி. யாப்பிலக்கணப்படி

பிழை இல்லை. ஓசை அவருக்கு ஞாபகம் இல்லை. 'வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணை' அங்கே என்ன வருகிறது. 'பெருமானே அருளாளா'. இங்கே 'நல்லூர் அருள் துறையுள் அத்தா உனக் காளாயினி அல்லேன் எனலாமே'.

அருணகிரிப் பெருமான்தான் யாரும் சொல்லாத ஓசை முறையைக் காட்டினர். அவர் வல்லினம் எடுத்தால் மெல்லினம் மருந்துக்குக்கூட வராது. நான் ஒன்று பாடப் போகிறேன். நீங்கள் தெரிந்து கொள்ளலாம். ஒரு பாடல் வல்லினத்தில் பாடுவேன். மெல்லினம் வருகிறதா பாருங்கள்.

"பத்தர் கணப்ரிய நிர்த்த நடித்திடு
பக்ஷி நடத்திய குகபூர்வ
பச்சிம தக்ஷிண உத்தர திக்குள
பத்தர்க ளற்புத மெனவோதும்
சித்ர கவித்துவ சத்த மிகுத்ததி
ருப்புக ழைச்சிறி தடியேனும்
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்த அநுக்ரகம் மறவேனே"

மெல்லினம்:

"மன்றலங் கொந்துமிசை தெந்தனந் தெந்தனென
வண்டினங் கண்டு தொடர் குழல்மாதர்
..........................................
திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றிலுறை பெருமாளே."

இடையினம்:

"அல்லிவிழி யாலு முல்லை நகை யாலு
மல்லல்பட ஆசைக் கடலீயும்"

ய, ர, ல, வ, ழ, ள. ஒவ்வொன்றுக்கும் 50, 50 பாட்டுச் சொல்வேன். அவ்வளவும் மனப்பாடம். வல்லினம்

என்ருல் ஆண்கள். மெல்லினம் என்ருல் பெண்கள். இடையினம் என்ருல் குழந்தை. அதுதான் பரம சிவம், பார்வதி, மத்தியிலே முருகன். ஸோமாஸ் கந்தர். சத்து, சித்து, ஆனந்தம். சச்சிதானந்தம். அருணகிரிப் பெருமானுடைய வாக்கு வன்மை. 16,000 பாடல் களைப் பாடினர். வல்லினம் வந்த இடத்திலே மருந் துக்கும் மெல்லினம் வராது.

தந்த என்று சந்தம் ஆரம்பிக்கிறது.

**"தந்த பசிதனை யறிந்து முலையமுது**
**தந்து முதுகுதட வியதாயார்**
**..............................................**
**அந்தகனுமெனை யடர்ந்து வருகையினி**
**லஞ்சலென வலிய மயில்மேல் நீ"**
**அந்த மறலியொடு கந்த மனிதன் நம**
**தன்பனென மொழிய வருவாயே"**

**"தந்த தனதனன..."**

அந்த 16 வரியிலும் அப்படியே வருகிறது. கடுகளவுகூட ஓசை நயம் குன்ருது. தியாகப்ரும்மம், தீக்ஷிதர் அவர்கள், சாமா சாஸ்திரிகள், முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார் இவர்கள் எல்லாம் கீர்த்தனங்கள் பாடியிருக்கிருர்கள். அவர்கள் எல்லாம் ராகத்துக்கு முக்யத்துவம் கொடுத்தார்களே தவிர தாளத்துக்கு முக்யத்துவம் கொடுக்கவில்லை. அருணகிரியார் திருப்புகழிலே 108 தாளங்களும் அமைந் திருக்கின்றன. லயத்திலே பெரியவர் அருணகிரிநாதர். அவருடைய லய வித்தியாசங்கள் அரிதினும் அரியது. எல்லோரும் ராகமாலிகை பாடினர்களே. அருணகிரியார் தாள மாலிகை பாடுகிருர். இதுவரைக்கும் தாள மாலிகை யாரும் பாடவில்லை.

"அருண கணபண புயக சுடிகையின்
அகில புவனமும் உதவு மலைகள்
அமலை ஆரியை அந்தரி சுந்தரி
இமய மாமயில் அம்பை த்ரியம்பகி
அச்சுத சகோதரி அனைத்து வேதத்தலைவி
..............................
......திருக்கைவேல்"

பாடினவர்கள் பாடினாலும் கேட்கிறவர்களுக்கு அலுப்புத் தட்டிவிடும். பாடினவருக்கு எப்படி இருக்கும்? அர்த்த புஷ்டி. வெறும் சொல்லடுக்கு இல்லை. ஆழமான அர்த்தம். நம்மாலே நினைக்க முடியாத தத்துவம். அந்தக் குருநாதர் மாதிரி யாராலே சொல்ல முடியும்? சிந்திக்க முடியாத கருத்துக்களை எல்லாம் எளிமையாகக் கூறுவார்.

சிலபேர் பாட்டு முந்திரிக் கொட்டை மாதிரி முந்திரிப் பழத்துக்கு மேலே கொட்டையிருக்கும். அது மாதிரி மேலேயே அர்த்தமிருக்கும். அருணகிரியார் பாட்டு பலாப்பழம். 'மாதுளம்பழம். உள்ளே எடுக்க எடுக்க தத்துவ முத்துக்கள்' வந்துகொண்டேயிருக்கும். அந்த நூல் ஓசைக்கு முக்கியத்துவம் கொடுத்துளது. ஓசை முனிவர் அருணகிரிநாதர்; அந்த மூன்று ஓசைக்கும் முக்யத்துவம் கொடுத்து, அந்த லயத்தை அதனுள்ளே நுழைத்து, (லயம் ரொம்ப கஷ்டம்) அவர் அந்த லயத்தையும் நாதத்தையும் ஒன்று படுத்தி கருத்துக்களை மேலே வைத்து, இசைத்துள்ளார். வெறும் சொல்லடுக்கு மட்டும் இல்லை.

"அகரமுத லெனவுரைசெய் ஐம்பந்தொ ரக்ஷரமும்
அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்
அபரிமித சுருதியும் அடங்குந் தனிப்பொருளை
எப்பொருளுமாய

அறிவையறி பவரறியும் இன்பந்தனைத் துரிய
முடிவை அடி நடுமுடிவில் துங்கந்தனைச் சிறிய
அணுவைஅணு வினின்மலமு நெஞ்சுங் குணத்ரயமும்
அற்றதொருகாலம்

..........................

முரசதிர நிசிசரரை வென்றிந்திரர்க் கரளித்த பெருமாளே.''

''தனதனன தனதனன தந்தந்த தத்ததன''

என்ற சந்த நடையிலேயே கொடுக்கிறார். அவர் சுப்ரமணி. அவர் ஒரு சந்த முனி; நாதமுனி. யுகங் கணக்காகச் சொல்லவேண்டும் திருப்புகழை. ஒரு ஏழு மணி நேரம் சொல்லக் கூடியது அல்ல. அதில் வேதங் கள் இருக்கின்றன. உபநிடதங்கள் இருக்கின்றன. மருத்துவ முறைகள் இருக்கின்றன. அதில் மாந்திரீகம் இருக்கிறது. குடும்ப தர்மங்கள் இருக்கின்றன. அதில் இராமாயணம், பாகவதம், திருவிளையாடல், பெரிய புராணம் முதலான அனைத்தும் உள்ளன. அருண கிரியார் சொல்லாததே இல்லை. அதைப் படித்தால் உலகத்தில் உள்ள அத்தனை நூல்களையும் படித்த மாதிரி ஆகிறது. ஆகவே திருப்புகழுக்கு ராகத்தை விட தாளத்துக்குத்தான் அதிக முக்கியத்துவம். நான் தொடக்கத்திலேயே சொன்னேன். 108 தாளங்கள் அதில் இருக்கின்றன. மற்றவர்கள் பாடலிலே ராகத்தை மட்டும் பார்க்கலாம். அருணகிரியார் பாடலிலே லயத் தினுடைய நுணுக்கங்கள் அதிகம்.

''மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்குமாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பவையாள் மகிழ் தருவேளே''

இதற்கு லளித தாளம் என்று பெயர். இப்படி 35 தாளங்கள் எல்லாம் திருப்புகழிலே பார்க்கலாம். அதிலே மிஸ்ர நடை, திஸ்ர நடை, கண்டநடை, சங்கீரண நடை எல்லாம் திருப்புகழிலே உண்டு. கங்கா ஜலம்

வெள்ளமாய் வரும். ஒரு சொம்பிலே கொண்டு வந்து கொடுப்பார். அம்மாதிரி அருணகிரியாருடைய திருப்புகழாகிய கங்கா ஜலத்திலே நான் ஒரு சின்ன சொம்பு கொடுத்தேன். அதை வாங்கினவர்கள் என்ன செய்தார்கள்? அதை ஒரு உத்தரணியிலே எடுத்துச் சாப்பிட்டார்கள். அது நமக்குப் புனிதத் தன்மையைக் கொடுக்கும். அருணகிரியார் திருப்புகழ் ஞானகங்கை. இதுகாறும் என்னைப் பேசுமாறு, உங்களைக் கேட்குமாறு செய்த திருவருளுக்கு நன்றி செலுத்தி இப்போது இதை இந்த அளவிலே முடித்துக் கொள்கிறேன்.

**திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்**
**திருப்புகழை நித்தம் செபிக்கத்—திருப்புகழை**
**அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றை வென்று**
**கொச்சிக்க லாமே கெடீ.**

உ

முருகா

# 3. கந்த புராண நுண்பொருள்

## (15—10—79)

**எ**ல்லாம் வல்ல வயலூர் எம்பெருமானுடைய திருவருளினுலே கந்த புராணம் என்பது பற்றிச் சில நுட்பமான கருத்துக்களை உங்களுக்குச் சொல்லு கிறேன்.

புராணம் என்ருல் பழமை என்பது பொருள். புராதனம் என்ற சொல் புராணம் என்று வந்தது. சில பேர் புராணம் என்ருல் புளுகு என்பார்கள். நரம்பில்லாத நாவிலே எதையும் சொல்வார்கள். திருவாசகத்திலே மாணிக்கவாசகர் முதலிலே பாடினது சிவபுராணம். அங்கே புராணம் என்ருல் இறைவனுடைய பழமையைச் சொல்கிருர்கள். ஆகவே புராணம் என்ற சொல்லுக்குப் பழமை என்பது பொருள்.

வியாஸ பகவான் 18 புராணங்களைப் பாடி அருளிஞர்கள். சிவபுராணம் 10, விஷ்ணு புராணம் 4, பிரும்ம புராணம் 2, அக்னி புராணம் 1, சூரிய புராணம் 1 ஆக 18. இந்தப் புராணங்கள் எதற்காக என்ற ஒரு விஞ எழும். இந்தக் கடிகாரம் கெட்டுப் போஞல் இதைப் பழுது பார்க்கின்றவன் பூதக் கண்ணுடி போட்டுக் கொண்டு பார்ப்பான். நுண்ணிய சக்கரங்களைப் பார்க்கின்ற ஆற்றல் இந்தக் கண்களுக்கு இல்லை. ஆகவே நுண்ணியச் சக்கரங்களை விரித்துக் காட்டுவது பூதக் கண்ணுடி. அது போல வேதங்களிலே வரும் நுண்ணிய தர்மங்களை விரித்துக் காட்டுவது புராணம்.

புராணம் வேண்டுமா, வேண்டாமா என்பதை நீங்கள் தீர்மானம் பண்ணிக்கொள்ளுங்கள். பழுது பார்க்கிறவனுக்குப் பூதக் கண்ணாடி இன்றியமையாததுபோல, வேதத்திலே உள்ள நுண்ணிய தர்மங்களை நமக்கு விரித்துப் புலப்படுத்துவது புராணம். ஒன்று, இரண்டு உதாரணத்துக்குச் சொல்கிறேன்.

"சத்தியம் வத" என்று வேதம் சொல்கிறது. சத்தியத்தைப் பேசு. அந்த ஒரே ஒரு தர்மத்தை நமக்கு விரிவாக எடுத்துக் காட்டுவது ஹரிச்சந்திர புராணம். "தர்மம் சர" தர்மத்தைச் செய். அந்த உண்மையை விரிவாக எடுத்துக் காட்டுவது மகாபாரதம். இப்படி வேதத்திலே உள்ள நுண்ணிய தர்மங்களையெல்லாம் விரிவாக எடுத்துக் காட்டுவது புராணம். நன்ருக மனதிலே பதிய வைத்துக்கொள்ளுங்கள்.

பாவங்களுக்கு எல்லாம் மிகப் பெரிய பாவம் நன்றி கொல்வது. கொலை, புலை, களவு முதலான பாவங்களுக்கெல்லாம் பரிகாரம் உண்டு. நன்றி கொன்ற பாவத்துக்குப் பிராயச்சித்தம் கிடையாது. நாம் எந்தப் பாவத்தைச் செய்தாலும் தெய்வம் மன்னிக்கும். நன்றி கொன்ற பாவத்தைத் தெய்வம் மன்னிக்காது.

**''எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு''**

என்பார் திருவள்ளுவர். புறநானூறில் ஒரு பாட்டு,

"நன்றி கொன்ரோர்க்கு உய்தி இல்லை என அறம் பாடிற்று" என்பது புறநானூறு. பசுவின் மடியை அறுத்தவனுக்கும் உய்வு உண்டு. நன்றி கொன்ருர்க்கு உய்வில்லை.

அதிலே இரண்டு பிரிவு உண்டு. நன்றி மறப்பது ஒன்று. நன்றி கொல்லுவது ஒன்று. செய்த நன்றியை மறந்து விடுவது ஒன்று. நன்றி மறத்தல் பாவம். நன்றி கொல்வதுதான் மிகப் பெரிய பாவம். அதாவது

உதவி செய்தவனுக்கு மேற்கொண்டு கெடுதல் பண்ணுவது, நன்றி கொல்லல். நன்றி கொன்முன் நிச்சயமாக உய்வு பெறமாட்டான் என்ற ஒரே ஒரு தர்மத்தை வலியுறுத்துவது கந்த புராணம்.

சூரபன்மனுக்கு 1008 அண்டங்களையும், 108 யுகங்களையும், வஜ்ஜிர யாக்கையையும் அள்ளி அள்ளி வழங்கிய சிவபெருமானுடைய திருக்குமாரர் முருகப்பெருமான் வந்தவுடனே, சூரபன்மன் அவரை வணங்கி, 'எம்பெருமானே! உனது தந்தையார் கொடுத்த வரம். தேவரீர் தந்தையாலே நான் வாழ்கின்றவன்' என்று நன்றி சொல்லாமல் சிவகுமாரனை அழிக்க முயன்முன். ஆகவே சூரபன்மனை வேலாயுதம் அழித்ததில்லை; அவன் கொன்ற நன்றி அவனை அழித்துவிட்டது. இப்பொழுது கந்த புராணத்தின் சாரத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீண்ட நாட்களாகப் படித்த சாரத்தைச் சொல்லுகிறேன்.

கந்த புராணத்திலே ஒரு திருவிருத்தத்திலே வருகிறது.

**ஒன்றொரு பயன்றனை உதவினோர் மனம்**
**கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்**
**புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே**
**கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?**

என்பது கந்தபுராணத் திருவிருத்தம். கருதிச் செய்வது—வேண்டும் என்றே தீங்கு செய்வது; திட்டம் போட்டுச் செய்வது. அப்படிச் செய்தவர்களைப் "புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ"—அவன் கொன்ற நன்றி அவனை அழித்துவிடும். ஆகையினுலே இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட எல்லோரும் நன்றி மறக்கக் கூடாது. நன்றி பாராட்டவேண்டும். அதுதான் கந்த புராணத்தினுடைய சாரம்.

சூரபன்மன் பரதார கமனம் செய்யவில்லை, பொய் சொல்லவில்லை. கொடுமைகளைச் செய்யவில்லை. செய்ந் நன்றி கொன்ருன். அதனுல் குலத்தோடு அழிந்து விட்டான். 18 புராணங்களுக்கும் 4 லட்சம் கிரந்தங்கள். கந்தபுராணம் மட்டும் 1 லட்சம் கிரந்தங்கள். 17 புரா ணங்களுக்கும் 3 லட்சம் கிரந்தங்கள். இந்த ஒரு புராணம் மட்டும் ஒரு லட்சம் கிரந்தம். ஆகவே அள விலும் பெருமை உடையது கந்த புராணம். மதிப்பில் மட்டுமல்ல; அளவிலும்.

அந்த கந்தபுராணம் ஆறு பகுதிகளையுடையது. காந்தா சம்மிதை, ஸூஹ்ருத் சம்மிதை, விஷ்ணு சம்மிதை, பிரும்ம சம்மிதை, வாயு சம்மிதை, சங்கர சம்மிதை. சங்கர சம்மிதை என்பது ஒன்று. அது 12 கண்டங்களை உடையது. அந்த 12 கண்டங்களிலே சிவ ரகஸ்யகண்டம் என்பது ஒன்று. அது 7 காண்டங் களை உடையது. அதிலே ஆறு காண்டங்களைக் கச்சியப்பர் தமிழிலே மொழிபெயர்த்து அருளினுர். கனவிலே எம்பெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து அடியெடுத்துக் கொடுத்தார் முதல் வார்த்தையை. ஆண்டவன் கொடுத்த முதலை வைத்துக்கொண்டு,

“ திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்”

இதுதான் கந்தபுராணத்தில் முதல் பாட்டு. கொஞ்சம் கடினமாய் இருக்கும்.

காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் கோவிலின் சந்நி தானத்திலே விநாயகர் பெயர் விகடசக்கர விநாயகர். ஏன் அப்படிப் பெயர் வந்தது? கோவிலுக்குப் போகிற வர்கள் எல்லாம் தங்கள் சாமான்களை வாசலில் வைத்து

விட்டுப் போவார்கள்; குடை, பாதரக்ஷை போன்றவைகளை. அப்படிச் சிவபெருமானை வணங்கப் போன தேவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் ஆயுதங்களை வாசலில் வைத்துவிட்டுப் போனார்கள். அதுமாதிரி நாராயணர் தன்னுடைய சக்கரத்தை வைத்துவிட்டுப் போய்விட்டார். பிள்ளையாரப்பன் அங்கே உட்கார்ந் திருக்கிறார். அவருடைய திருமார்பிலே இருக்கிற சிரசு மாலை இருக்குதே அந்த மாலை அந்தச் சக்கரத்தை வாயிலே கவ்விக் கொண்டது. காக்காய் வடையைக் கவ்விக் கொண்டாற்போல். அவர் வந்து பார்க்கிறார். சக்கரம் இல்லை. பிள்ளையாருடைய சிர மாலையிலே அந்த ஒரு தலை கவ்விக் கொண்டிருக்கிறது. சுவாமி எனக்கு அந்தச் சக்கரம் கிடைக்கும் படியாகப் பண்ணு என்றார். நீயே வாங்கிக் கொள் என்றார். அது எப்படிக் கிடைக்கும். அப்பொழுது அவர் விதூஷகனைப் போலே விகடக் கூத்து ஆடினாராம் பெருமான். எல்லோரும் சிரித்தவுடன் அந்தத் தலையும் சிரித்தது. சக்கரம் கீழே விழுந்துவிட்டது. எடுத்துக் கொண்டுவிட்டார். விகடக் கூத்து ஆடிச் சக்கரத்தைப் பெற்றதனால் அந்த விநாயகர் பெயர் விகடச் சக்கர விநாயகர். அதை முதல் பாட்டாக வைத்து,

**"திகட சக்கரச் செம்முக மைந்துளான்"**

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள். பத்துத் திருக் கரங்கள். சிவபெருமானுடைய தேர் இந்தப் பூமி. அதில் சக்கரமாய் இருப்பது ஆதித்த பகவான்; சூரிய பகவான். ஒளி வந்து ஒரு வினாடிக்கு லட்சத்து 86 ஆயிரம் மைல் பிரயாணம் பண்ணும். ஒரு நிமிஷத் துக்கு 60 வினாடி. அப்படி ஆதித்த பகவான் இருக்கிற மண்டலத்திலிருந்து ஒளி புறப்படுமானால் விநாடி ஒன்றுக்கு லட்சத்து 86 ஆயிரம் மைல் வீதம் பிரயாணம் பண்ணினால் அந்த ஒளி பூமண்டலத்துக்கு

வருவதற்கு 8 நிமிடங்கள் ஆகின்றன. நேரம் கிடைக்கும்போது கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். அத்தனைத் தொலைவிலே இருக்கிற ஆதித்த பகவான் விநாயகப் பெருமானுடைய இடையிலே அந்த உடையைச் சேர்த்துக் கட்டுகின்ற பாம்பினுடைய மணியாக இருக்கின்றார். அந்த விநாயகப் பெருமானுடைய அந்தத் திருவயிறு ஆதித்த மண்டலமாக்கி இருக்கிறார். அதற்கு மேலே மார்பு, அதற்கு மேலே கழுத்து, அதற்கு மேலே சிரசு. அகடு என்றால் வயிறு. அசக்கு என்றால் கட்டுதல். அரவு என்றால் பாம்பு.

"அகடு அசக்கு அரவின் மணியா உறை"

விநாயகப் பெருமானைப் பற்றி இந்த அற்புதமானப் பாடலைப் பாடுகிறார் கச்சியப்பர். கந்தபுராணம் உயர்ந்த ஞான பொக்கிஷம். எத்தனை எத்தனையோ அற்புதமான கருத்துக்களை எல்லாம் அதிலே நமக்கு அருளிச் செய்திருக்கிறார். அதைப் பாடிக் கொடுத்த கச்சியப்பர், இந்தக் காஞ்சிபுரம்; ஆதி சைவத் திருமரபிலே வந்தவர். ஒவ்வொரு நாளும் 200 பாடல் 300 பாடல் எழுதி அதை எம்பெருமானுடைய திருவடியிலே வைத்துவிட்டுப் போவார். அதிலே திருத்தங்கள் இருக்குமாம். ஆண்டவன் திருத்திய நூல் கந்தபுராணம். அப்படி மிக விரிந்த நூல். அந்த முருகனைப் பற்றிச் சொல்லுகின்ற நூல். அதிலே ஒன்று இரண்டு சொல்லுகின்றேன். எத்தனையோ தத்துவங்களையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறார் கச்சியப்ப சிவாசாரியார்.

உலகம் தோன்றிய நாள் தொட்டு தாய்மார்கள் குழந்தைகளைப் பெறுவார்கள். அப்பா பேர் வைப்பார். இது புரட்சி; அப்பா குழந்தை பெற்று அம்மா பேர் வைக்கிறாள். உலகத்தில் எங்குமே ஆண்கள் மருத்துவ விடுதி கிடையாது. ஒரு ஆண் பிள்ளை

குழந்தை பெற்ருன் என்று சரித்திரம் கிடையாது. கைலாயத்தில்தான் சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து முருகப் பெருமானை உண்டாக்குகிருர். ஆண்பிள்ளை அவர் ஒருவர்தான். நாமெல்லாம் பெண் பிள்ளைகள். பெண் வயிற்றிலிருந்து பிறந்தால் பெண் பிள்ளைகள் தானே. தேவர் எல்லோரும் பரமேசு வரனிடம் போய் முறையிட்டார்கள். "ஆண்டவனே! சூரபன்மனுடைய ஆட்சிக் கொடுமை எங்களுக்குத் தாங்க முடியவில்லை. நாங்கள் தவஞ்செய்ய முடிய வில்லை. எங்களையெல்லாம் துன்புறுத்துகின்ருன். அநேக தேவர்களையும், தேவ மாதர்களையும் சிறையில் அடைத்துவிட்டான் சுவாமீ" என முறையிட்டார்கள். இந்திரனுக்கு ஒரே ஒரு மகன். அவன் பெயர் ஜயந்தன். அந்த ஒரே மகனை ஜெயிலில் போட்டு அடைத்து வேதனைப்படுத்துகிருன் சூரபத்மன். நாம் ஜெயிலில் இருந்தால் ஒன்றும் தோன்ருது. நம் குழந்தை ஜெயிலில் இருந்தால் அப்பா அம்மாவுக்கு வேதனை. ஆகவே சுவாமீ! சூரபத்மனுடைய ஆட்சிக் கொடுமை எங்க ளாலே தாங்க முடியவில்லை.

**"ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்**
**ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி**
**வேதமும் கடந்து நின்ற விமல."**

தேவர்கள் சிவபெருமானிடத்திலே போய் முறையிடு கின்ற பாடல். கடவுளுக்கு என்ன என்ன இலக்கணங் கள் உண்டோ அத்தனையும் அந்தப் பாடலில் வரு கிறது. ஒரு பொருளுக்கு இலக்கணம் உண்டு. நான் ஒன்று இரண்டு சொல்கிறேன். கோவிலிலே பூஜை பண்ணுகிருர் அர்ச்சகர் என்ருல் அவர் ஆசாரமாய் இருக்க வேண்டும். நான் உலகத்தாருக்கு றவுரைஅ சொல்கின்றவன். சொல்லும் செயலும் என்னிடம் ஒன்ருக இருக்க வேண்டும். சொல் வேறு செயல் வேருக இருக்கக்கூடாது. ஆகவே சொற்பொழிவாளர்

என்று சொன்னால் சொல்லும் செயலும் ஒன்றியிருக்க வேண்டும். அதே மாதிரி அரசியல் தலைவர் என்று சொன்னால் நேர்மை இருக்க வேண்டும். ஒரு பெண் என்றால் அடக்கமாய் இருக்க வேண்டும். ஆண்கள் என்றால் வீரமாய் இருக்க வேண்டும். மாறியிருக்கக் கூடாது. அதே போல் கடவுள் என்று சொன்னால் கடவுளுக்குச் சில இலக்கணங்கள் உண்டு. என்ன இலக்கணம்? முதல் இலக்கணம் இறப்பும், பிறப்பும் இல்லாமல் இருக்க வேண்டும். நான் சொல்வதை யெல்லாம் எப்பொழுதும் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். எத்தனையோ காலமாக எத்தனையோ நூல்களைப் படித்து அனுபவத்தில் சொல்லுகின்றேன். பிறந்தான், இறந்தான் என்று சொன்னால் அது கடவுள் அல்ல. நம்மைப் போல பெரிய ஆத்மா என்று அர்த்தம். சிவ பெருமானுக்கு இறப்பும் பிறப்பும் கிடையாது. சிவனே முருகன். முருகனே சிவன். ஆகவே முருகனுக்கும் இறப்பும், பிறப்பும் கிடையாது.

> "செம்மான் மகளைத் திருடும் திருடன்
> பெம்மான் முருகன் பிறவான் இறவான்"

அருணகிரியாரின் கந்தரனுபூதி. ராமச்சந்திர மூர்த்தி அவதாரம் பண்ணின நாளை நாமெல்லாம் கொண்டாடு கிறோம்; ஸ்ரீராம நவமி. கண்ணபிரான் அவதாரம் பண்ணின நாளைக் கொண்டாடுகிறோம்; கிருஷ்ண ஜயந்தி, ஹனுமத் ஜயந்தி, சங்கர ஜயந்தி, மத்வ ஜயந்தி, ஸ்ரீ ராமானுஜ ஜயந்தி, பரசு ராம ஜயந்தி, வாமன ஜயந்தி. எந்தக் கோவிலிலாவது சிவ ஜயந்தி, சிவன் பிறந்த நாள் விழா. சுப்ரமண்ய சுவாமி ஜயந்தி, முருகன் அவதாரம் பண்ணின நாள் என்று இதுவரை யிலும் உண்டா? கிடையாது. சுப்ரமண்ய ஜயந்தி என்று கொண்டாடுவது கிடையாது. ஏன்? பிறப்பு இறப்பு இல்லாதவர் இறைவன். அதுதான் இறைவ னுடைய லட்சணம். இந்தப் பாட்டில் வருகிறது.

"ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி
வேதமும் கடந்து நின்ற விமல, ஓர் குமரன் றன்னை
நீ தரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்"

நீர் தர வேண்டும். ஆண்டவனே குழந்தையை நீரே தர வேண்டும். "நீ தர"—அது தங்களிடத்தி லிருந்து வர வேண்டும். "நின்னையே நிகர்க்க" என்றார். சிவனுக்குச் சமானம் கிடையாது.

'சமானரஹிதம் விபும்' என்று வேதம் சொல்லு கின்றது. சமானம் இல்லாத ஆண்டவனைப் பார்த்து உனக்குச் சமானமான குழந்தையைக் கொடு என்றால் என்ன பொருள்? நீயே குழந்தையாக வா என்று அர்த்தம். சில பிரச்னைகளை எல்லாம் ரொம்பப் பெரிய மனிதர்களிடத்தில் நேரிடையாகச் சொல்லக்கூடாது. கற்புடைய பெண்கள் கணவனைப் பார்த்து நெய் வாங்கி வா என்று சொல்ல மாட்டார்கள். ராத்திரி சாப்பாட்டுக்கு நெய் வேணும் என்பார்கள். நெய் வேணும் என்பதற்குப் பொருள் வேறு; வாங்கி வா என் பதற்குப் பொருள் வேறு. தேவர்கள் ஆண்டவனைப் பார்த்து, சுவாமீ! நீயே குழந்தையாக வா என்று சொன்னால் உத்தரவு போட்ட மாதிரி இருக்கும். அப்படிச் சொல்லக்கூடாது. உனக்குச் சமானமான குழந்தையைக் கொடு என்றால், தேவரீரே குழந்தையாக வா என்று அர்த்தம்.

"வந்திக்கும் மலரோன் ஆதி வானவர் உரைத்தல் கேளாப்
புந்திக்குள் இடர்செய்யற்க புதல்வனைத் தருதும் என்னு"

துன்பத்தை விட்டுவிடுங்கள். 'புதல்வனைத் தருதும்— இப்பொழுதே குமரனைத் தருகின்றேன். 10 மாதம் தேவையில்லை. 'புதல்வனைத் தருதும்' என்றார். 'அந்திக்கு நிகர் மெய் அண்ணல்'—செக்கர் வானம்

போல் இருப்பான் பரமேசுவரன். செவ்வானம் போல சிவந்த மேனி.

**"அந்திக்கு நிகர்மெய் அண்ணல் அருள்புரிந் தறிஞராயோர்**
**சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்.**

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் இருந்தன. ஈசானம், தத்புருஷம், அகோரம், வாம தேவம், சத்யோ ஜாதம். அதோ முகம் ஞானிகளுக்குத் தெரியும். இப்பொழுது பரமேசுவரனுக்கு ஐந்து முகங்கள் இருக்கின்றன. ஞானிகளுக்கு மட்டும் தெரியக் கூடிய அதோ முகம் வெளிப்பட்டது. புலவர் பெருமான் எப்படிப் பாடுகிறார். 'சிந்திக்கும்'—சிலதெல்லாம் சிந்தனையினாலேதான் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவர் அறிவாளியா, இல்லையா என்று நாமாக ஊகித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். பெரிய சபையில் ஒருவன் முன்னால் உட்கார்ந்து கொண்டு விரலைக் கடித்துக் கொண்டிருப்பான். நாம் அவரைப் பற்றி என்ன தீர்மானம் பண்ண வேண்டும். ஒரு மனிதனை உங்களுக்கு என்ன வயது என்று கேட்கலாம். சொந்த வீடு இருக்கிறதா என்று கேட்கலாம். என்ன உத்யோகம் என்று கேட்கலாம். உங்களுக்கு எத்தனைக் குழந்தைகள் என்று கேட்கலாம். உங்களுக்கு எவ்வளவு அறிவு என்று கேட்கக்கூடாது. அறிவு என்பது செயல் மூலம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. அது வெளியே தெரியாது. ஆகவே சுவாமிக்கு இப்பொழுது ஆறு திருமுகங்கள் தோன்றின. ஒரு முகம் ஞானிகள் தங்கள் ஞானத்தாலே அறிகின்ற முகம். 'அறிஞராயோர் சிந்திக்கும் தனது'—அந்த முகம் யாரிடத்திலும் இரவலாக வாங்கவில்லை. அவனுடைய முகம். அது நூதனமாக வரவில்லை. பழமையான முகம். தொல்லை என்றால் பழமை. 'ஆறும் கொண்டான்' இந்த ஆறும் கொண்டான் என்பது முற்றும்மை. இலக்கணம் படித்த

வர்களுக்குத் தெரியும். முற்றும்மை என்று பெயர். ஏனென்றால் 7 முகம், 8 முகம் வருமோ என்று எண்ணம் வரும் என்று "ஆறும் கொண்டான்" என்றார். சுவாமிக்கு ஆறு திருமுகங்கள் இருந்தன. அந்த ஆறும் அன்றைக்குக் கொண்டார். உதாரணம்: எனக்கு அவர் ரூ. 125 தர வேண்டும். மாதம் 12ம் போனேன். அவர் மனம் இளகவில்லை. மாதம் 12ம் போனேன் என்றால் 13வது மாதம் இல்லை. வாரம் 7ம் போனேன் என்றால் 8வது நாள் இல்லை என்று அர்த்தம். அதுபோல் 'ஆறும் கொண்டான்' என்ற உம்மை முற்றும்மை. "அறிஞரா யோர் சிந்திக்கும் தனது தொல்லை"-தொல்லையென்றால் பழமையான. 'திருமுகம் ஆறும்—கொண்டான்'—இப்பொழுது சிவபெருமானுக்கு ஆறு திருமுகம். அந்த ஆறு திருமுகங்களிலே நெற்றியிலே ஒரு கண் இருக்கும். அது ஞானக்கண். அது மேல் நோக்கி இருக்கும். விருபாக்ஷன். அந்த ஆறு நெற்றிக்கண்களைத் திறந்தார்; ஆறு அருட்பெரும் ஜோதி வெளிப்பட்டது அதன் வெம்மை தாங்க மாட்டாது தேவர்களெல்லாம் திசைக்கு ஒருவராக ஓடினார்கள். எங்கே ஓடுகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டே ஓடினார் பிரும்மா. எல்லோரும் மூலைக்கு ஒருவராக ஓடிப் போய் ஒளிந்தார்கள். திரும்பவும் கைலாசத்தை நாடினார்கள். என்ன காரணம்?

ஹார்பரிலே கப்பல் இருக்கும். அந்தக் கொடியிலே ஒரு 25 காகங்கள் இருந்தன. மாலுமி கப்பலைச் செலுத்தி விட்டார். கப்பல் 500 மைல்கள் கடலில், பிரயாணம் செய்து விட்டது. அந்தக் காகங்கள் எச்சமிடுகின்றன. மாலுமி தடி எடுத்து அடித்தார். அடிக்குப் பயந்த 25 காகங்களும் பறந்தன. எங்கே போகும்? திரும்பவும் அந்தக் கப்பலுக்கே வந்து விட்டது. இந்த உவமையைக் கச்சியப்பர் சொல்லியிருக்கிறார். 'கலம் தலை காகம் ஒத்த'-கலம் என்றால் கப்பல். தலை என்றால் மேல் பாகம். 'கலம் தலை காகம் ஒத்த' தமிழ் எவ்வளவு

அழகாக எழுதியிருக்கிருர். கப்பல் மேலிருந்து காகம் அடிபட்டு மறுபடியும் திரும்பக் கப்பலுக்கே வருமாப் போலே, தாய் என்ன அடித்தாலும் அந்தச் சேய் மீண்டும் தாயிடமே வருமாப் போலே, பீதியுற்ற தேவர்கள் மீண்டும் கைலாசத்துக்கே வந்து, "சுவாமி! நாங்கள் குழந்தையைக் கேட்டால் நெருப்பைக் கொடுக்கிறீர்களே" என்றனர். நான் குழந்தையைத் தான் கொடுத்திருக்கிறேன். உங்கள் கண்ணுக்கு நெருப்பாய்த் தெரிகிறது என்று சிவபெருமான் அருள் புரிந்து அந்த விண்ணெல்லாம் பரவியிருக்கின்ற அருள் சுடர்களைச் சிறியதாகச் செய்தார். ஹிருதயத்திலிருந்து மேல் நோக்கி வந்தது, அருட்பெரும் ஜோதிகள். அதை வானத்திலே நின்று வாயுதேவன் பிடித்தார். அவர் தாங்க முடியாமல் அக்கினி தேவரிடம் கொடுத்தார். அக்கினி கங்கையில் கொண்டுவந்து விட்டது. கங்கை வரண்டு திரண்டது. அது நிலத்துக்கு வந்தது. சரம் என்ருல் தர்ப்பை, வனம் என்ருல் காடு. சரவனம் என்ருல் தர்ப்பைக் காடு. இயற்கையான ஒரு நீர் நிலை சரவணப் பொய்கை. செய்கையாகச் செய்தது தடாகம். இயற்கையாக இருப்பது பொய்கை. கானகத்திலே இயற்கையாகவே தண்ணீர் நீர் நிலை இருக்கும். நாம் தடுத்துச் செய்வது தடாகம். ஐந்து தலை இருந்தால் நாகம். ஒரு தலை இருந்தால் சர்ப்பம். சர்ப்பம் என்ருலும், நாகம் என்ருலும் இரண்டும் ஒன்றல்ல. பல தலை இருந்தால் நாகம். ஒரு தலை இருந்தால் சர்ப்பம். இதுதான் சர்ப்பத்துக்கும், நாகத்துக்கும் உள்ள வித்தியாசம். நாகராஜா என்ருல் பல தலை உடையவன். சர்ப்ப ராஜா என்ருல் ஒரு தலை உடையவன். தான தருமம் என்று சொல்கிருர்களே, தன்னைவிட மேலானவனுக்குத் தருவது தானம். எளியவர்களுக்குத் தருவது தருமம். ஆகவே தானம் வேறு. தருமம் வேறு. இப்பொழுது ஐந்து தலையுள்ள நாகம், ஆயிரம் தலை உடைய நாகம்

தெய்வத்திடம் சம்பந்தமானது. அதுதான் நாகராஜா தெய்வம் என்று சொல்கிறார்கள். ஆகவே தடாகம் என்று சொன்னால் தடுத்துச் செய்தது. பொய்கை என்றால் இயற்கையாக இருப்பது. அந்தச் சரவணப் பொய்கையைச் சுற்றிலும் தர்ப்பைக் காடு. தர்ப்பைக்கு மின்சாரத்தை ஈர்க்கும் ஆற்றல் உண்டு. வானத்திலி ருந்து, வாயுவிலிருந்து, அக்கினி தேவனிடம் மாறி, தண்ணீரில் இறங்கி வருகிறது. அங்கே ஒரு தாமரைக் கமலம். 1008 இதழ் தாமரைக் கமலம். தண்ணீரை ஐஸ் பெட்டியில் வைத்தால் அது கட்டியாகிறது. ஹிமா சலத்தில் தண்ணீரெல்லாம் உறைந்து மலைபோல இருக்கிறது. நான் அமர்நாத்துக்குப் போயிருந்தேன். ஐஸ் எல்லாம் இறுகிக் கெட்டியாக இருக்கிறது. ஐஸ் இளகித் தண்ணீராக வருகிறது. நான் 1½ மைல் ஐஸ் மேலேயே போனேன். ஒரு பக்கம் ஐஸ் இளகி ஆறாக ஓடுகிறது. 14,500 அடி உயரம். ஆகவே அதிகக் குளிர்ச்சி தண்ணீரைக் கெட்டிப்படுத்துகிறது. அப்படி ஆண்டவன் அதிக கருணை கொண்டவன். உருவம் தாங்குகிறான். கடவுளுக்கு உருவம் கிடையாது; கருணை யினாலேயே உருவம் பெறுகின்றான். ஆகவே,

**அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனி யாகக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும்கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.**

கந்த புராணத்தில் ஒரு சிறந்த பாடல். சுவாமிக்கு 'அருவமும் உருவும் ஆகி'. அது கி. பி. யா? கி. மு. வா? என்றான் ஒருத்தன். "அநாதியாய்" – அவருக்கு ஆதி யில்லை 'பலவாய் ஒன்றாய்' – தோடு, செயின், மோதிரம், வளையல் அணிகலன்கள் பல. தங்கம் ஒன்றுதானே. பஞ்சு ஒன்று தானே, வேஷ்டியாய், சட்டையாய், அங்க வஸ்திரமாய், கைத்துண்டாய் (கர்ச்சீப்பாய்)வருகிறது.

மண் ஒன்று தானே. பானை, சட்டி, அகல், மடக்கு என ஆகிறது. அதைப் போல ஒரே இறை பலவாய் இருக்கிறது என்றார். "பலவாய் ஒன்றாய்" —ஏழு ஸ்வரந் தானே தோடி, கல்யாணி, பைரவி, ஆனந்த பைரவி; ஸப்த ஸ்வரம்தான் கிட்டத்தட்ட 3 லட்சம் ராகங் களாகப் பரிணமிக்கின்றன. ஏழு ஸ்வரங்களும் இத்தனை ராகங்களாக விரிவடைவது போல, ஒரு தங்கமே பல அணிகலன்களாக ஆவது போல, பஞ்சு ஒன்றே பல ஆடைகள் ஆவது போல, ஆண்டவன் ஒருவன் தான் பல்வேறு வடிவங்களாக இருக்கின்றான். "பலவாய் ஒன்றாய்............பிழம்பதோர் மேனியாக" கூர் என்ற வார்த்தைக்கு மிகுதல் என்று பெயர். "கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே" – சுவாமிக்கு ஆறு திருமுகங்கள். 12 திருக் கரங்கள். கச்சியப்பர் ஒன்று சொல்லவில்லை. 18 கண்கள் என்று சொல்லியிருக்க வேண்டும். கச்சியப்பர் சொல்லவில்லை. வடமொழி ஸ்காந்தத்திலே "ஷட் வக்த்ரம் துவாதச புஜம், அஷ்டாதச விலோசனம்." என்று வியாஸ பகவான் வடமொழியிலே சொன்னார். 'ஷட்வக்த்ரம்'—ஆறு திருமுகங்கள். 'துவாதசபுஜம்' பன்னிரண்டு திருக்கரங்கள். "அஷ்டாதச விலோசனம்" —பதினெட்டுக் கண்கள். முருகப் பெருமானுக்குப் பதினெட்டுக் கண்கள். அநேகம் பேர் 12 கண்கள் தானென்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். பதி னெட்டுக் கண்கள் என்பது அநேகருக்குத் தெரியாது. சிவபெருமானுக்கு மூன்று கண்கள். ஸோமன், சூரியன், அக்கினி, முக்கண்ணன். முருகப் பெருமான் சிவகுமாரன். அப்பாவைப் போலத் தானே பிள்ளையும் இருக்கும். அப்பாவுக்கு மூன்று கண்கள் என்றால் முருகனுக்கும் மூன்று கண்தானே. அப்பொழுது ஆறுமுகத்திலே, 6×3 18 கண்கள். விநாயகருக்கு மூன்று கண்கள். த்ரியம்பக விநாயகன்.

த்ரியம்பகி—அம்பாள். அப்பொழுது முருகப் பெருமானுக்கு 18 நேத்திரங்கள்; 'அஷ்டாதச விலோசனம்' என்பது வடமொழி ஸ்காந்தம். ஏன் கச்சியப்பர் சொல்லவில்லை? மறந்து விட்டாரோ? இல்லை. வடக்கே தைரியம் உண்டு. தபஸ் உண்டு. கூர்த்த ஞானம் சற்றே உண்டு. தெற்கு நோக்கி வர வர ஞானம் உண்டு. வடக்கு நோக்கிப் போகப் போக தைரியம் உண்டாகும். வடநாட்டானுக்கு முரட்டுத் தைரியம். அதனால்தான் ராமாவதாரம், கிருஷ்ணாவ தாரம் எல்லாம் வடக்கே. அப்படி வடக்கே போகப் போகத் தவம் அதிகம். தெற்கே வர வர அறிவு. ஒருவர் சொன்னார். வடக்கே போனால் விசாலமாய் இருக் கிறது. தெற்கே வரவர நிலம் குறுகிப் போகிறதே என்றார். குறுகிப் போனால் ஞானம் இருக்கிறது. நான் ஒரு உதாரணம் சொன்னேன். இளநீர் வெட்டும் கத்தி, சவுளம் பண்ணுகிற கத்தி பின்பக்கம் விசால மாய் இருக்கும். முன்பக்கம் கூராக இருக்கும். எது வேலை செய்கிறது? ;என்று கேட்டேன். கத்தி பின் பக்கம் விசாலமாயிருக்கும். முன்பக்கம் கூராயிருக் கிறது. எது வேலை செய்கிறது? கூரான பக்கம் தானே வேலை செய்யும். வடக்கே சிறந்த விவேகானந்தர் இருந்தார். கன்னியாகுமரியிலே தானே ஞானம் வந்தது. உலகம் தெரிந்த வரலாறு தானே. அங்கேதான் ஞானம் வந்தது. அவர் இருந்த இடத்துக்கு 97 லட்சம் செலவழித்தார்கள். இன்றைக்கும் ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், கம்பர், சங்கரர், ராமானுஜர், மத்வாச்சாரியார் எல்லோரும் தெற்கே தான் அவதாரம் செய்தார்கள். வடக்கே ஒரு ஞானாசிரியன் பிறந்தான் என்று இதுவரைக்கும் வரலாறு கிடையாது. தென்னாட்டில் உள்ளவர்களுக்கு ஆறுமுகம் என்றால் 18 கண்கள் என்று இவனாக எண்ணிக்கொள்வான்; ஒரு குழந்தையை ஒரு அம்மா

வைத்துக் கொண்டிருந்தால், அ ம் ம ா உங்கள் குழந்தையா என்ருல் கல்யாணம் ஆய்விட்டது என்று இவன் தீர்மானம் பண்ணிக் கொள்வான். குழந்தை வைத்துக் கொண்டிருக்கிற அம்மாவைப் பார்த்துக் கல்யாணம் ஆயிற்ரு என்று கேட்கக் கூடாது. ஆறுமுகம் என்ருல் $6 \times 3 = 18$ என்று தமிழன் தெரிந்து கொள்வான். அதனுல் கச்சியப்பர் சொல்லவில்லை. "கருணை கூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டே, ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய"—உதித்தனன் என்ருல் இங்கு பிறந்தான் என்று அர்த்தமில்லை. சூரியன் உதித்தான் என்ருல் பிறந்தான் என்ரு அர்த்தம்? என்றைக்கும் உள்ள ஆதித்த பகவான் சிலகாலம் மறைந்திருப்பான். இப்போது வெளிப்படுகிருர். அதுபோல என்றைக்கும் உள்ள எம்பெருமான் அப்போது வெளிப்பட்டுத் தோன்றினுர். "உதித்தனன் உலகம் உய்ய".

"உரககண........பூஜிக்கும் வானவனும்" பிரும்மா, விஷ்ணு, இந்திரன், சந்திரன் எல்லோரும் எம்பெருமானை வணங்கி அருள் பெற்ருர்கள். அந்தப் பிரபு ஞானமே ஒரு உருவம். ஞானந்தான் உருவாகிய நாயகன், தந்தைக்கே பிரணவத்தை உபதேசித்தார். அதனுல் தான் அவருக்குச் சுவாமிநாதன் என்று பெயர். ஒரு குறிப்பு உங்களுக்கு நான் சொல்லுகிறேன். எப்பொழுது நாம் எழுதத் தொடங்கினுலும், ஒரு சுழி போட்டு, இப்படி ஒரு கோடு. அதற்குப் பேசாத எழுத்து என்று பெயர். பிள்ளையார் சுழி என்று பெயர். அன்று தொட்டு இன்று வரைக்கும் எல்லா நூல்களிலும் முன்னேர்கள் எழுதி வந்த சுழி. அந்த எழுத்தை வாயினுலே உச்சரிக்க முடியாது. பேசாத எழுத்து என்று பெயர். அதிலிருந்து தான் அகில உலகமும் வெளிபட்டுத் தோன்றியது. (உ) பிள்ளையார் சுழி என்று பெயர். அதனுடைய நுட்பத்தை உங்களுக்கு நினைவுப்படுத்துகிறேன். இந்த

உலகங்கள் எல்லாம், உயிர்கள் எல்லாம் பிரும்மத்தி லிருந்து தோன்றிப் பிரம்மத்தில் ஒடுங்குகின்றது. "தஸ்யதேஹேசம் உற்பத்திம் யாம் சண்டானிம் புனர் லயம்"—அதாவது எல்லா உலகங்களும் இறைவனிடத் திலே தோன்றி இறைவனிடத்திலே ஒடுங்குகின்றன என்று வேதம் சொல்கிறது. இந்த உலகம் அறிவில்லா தது இறைவன் ஞானமே வடிவானவன். சித்து என்றால் அறிவு. அசித்து என்றால் அறிவில்லாதது. சித்தாயிருக்கிற பிரும்மத்திலிருந்து அசித்தான உலகம் தோன்றுது. தர்க்கரீதியாக அப்படித் தோன்றக் கூடாது. பரம பதிவிரதை வயிற்றிலிருந்து பொல்லாத குழந்தை தோன்றுது. தாயைப் போலத்தான் சேய் இருக்கும். அதாவது அகலமாய் இருக்கிற பீஸிலிருந்து கிழித்த துண்டு அகலக் கட்டையாக இருக்காது. பீஸ் போலத்தானே துண்டு இருக்கும். பிரும்மம் போலத்தானே உலகம் இருக்க வேண்டும். பிரும்மத் திலிருந்து உலகம் தோன்ற வேண்டுமானால் உலகம் அசித்து அல்லவா ?

சித்திலிருந்து அசித்து தோன்றுது. உலகம் அசித்து. அசித்திலிருந்து அசித்து தோன்றுகிறது. அந்த மாயையாயிருக்கிற மூலக் கருவிலிருந்து உலகம் தோன்றுவதற்குச் சித்தாயிருக்கின்ற பிரும்மம், உதவி செய்வதாலே பிரும்மத்திலிருந்து உலகம் தோன்றியது என்று வேதம் சொல்கிறது.

பிரும்மத்திலிருந்து உலகம் தோன்றி பிரம்மத்திடம் ஒடுங்குகிறது என்று வேதம் சொல்லுகிறது. அதைச் செய்கின்ற அர்த்தம் தான் தவறு. வேதத்தை நாம் நேரடியாகப் போய் அணுகக் கூடாது. ஆசாரியன் மூலம் அணுக வேண்டும். தாமரைக்குப் பங்கஜம் என்று ஒரு பெயர் உண்டு. பங்கஜம்—பங்கம் என்றால் சேறு; ஜம் என்றால் தோன்றுவது. சேற்றிலே தோன்று

வதனலே தாமரைக்குப் பங்கஜம் என்று பெயர். அதை ஆராய்ச்சி பண்ணினல் அது சேற்றிலா தோன்று கிறது? தாமரைக்கு ஒரு விதை உண்டு; தாமரை விதை யென்று. அந்த வித்திலே இருந்து தோன்றுகிறது தாமரை. அப்பொழுது என்ன பேர் வைக்க வேண்டும்? வித்தஜம் என்று வைக்க வேண்டும். வித்திலிருந்து வந்தால் வித்தஜம் என்றுதானே வைக்க வேண்டும்? அப்படிப் பெயர் வைக்கவில்லை. பங்கஜம் என்று முன்னேர்கள் வைத்தார்கள்.

என்ன காரணம். வித்திலிருந்து தாமரை தோன்று மானலும் அந்த வித்தை, கட்டையில், கல்லில் வைத் தால் தாமரை தோன்ருது. இந்தப் பலகை மேலே அந்த வித்தை வைத்தால் தாமரை தோன்ருது. அப்பொழுது வித்திலே இருந்து தோன்றுகிற தாமரையும் சேற்றிலே நட்டால் தான் அந்தச் சேற்றின் துணையினலே விதை யிலிருந்து தாமரை வெளிப்படுகிறது. அப்பொழுது வித்திலேயிருந்து தாமரை வெளிப்படுவதற்கு உதவி செய்கின்றது சேறு. அந்த உதவி செய்கின்ற சேற்றின் நினைவு வர வேண்டுமென்று பங்கஜம் என்று பெயர் வைத்தார்கள். அது போலே மாயையிலிருந்து உலகம் தோன்றுகிறது. மாயை அசித்து. அசித்திலிருந்து அசித்து தோன்றுகிறது. அந்த மாயையாயிருக்கிற மூலப் பொருளிலிருந்து உலகம் தோன்றுவதற்குச் சித்தாயிருக்கிற பிரம்மம் உதவி செய்வதாலே பிரம் மத்திலிருந்து உலகம் தோன்றியது என்று வேதம் சொல்லுகின்றது.

உங்களுக்கு விளங்கியிருக்கும் என்று எண்ணு கிறேன். வித்திலிருந்து தாமரை தோன்றினலும் உதவி செய்கின்ற அந்தச் சேற்றின் நினைவு வரவேண்டுமென பங்கஜம் என்று பேர் வைத்தது போல, (பங்கஜஞாயம் என்று அதற்குப் பெயர்.) மாயையிலிருந்து உலகம்

தோன்றினாலும் உதவி செய்கின்ற பிரும்மத்தைச் சொல்லிற்று வேதம், பிரும்மத்திலிருந்து உலகம் தோன்றியது என்று. எப்பவுமே உதவி செய்தவர்களை நினைக்க வேண்டும். நான் ஒரு ஊருக்குப் போய் பிரசங்கம் பண்ணுகிறேன் ஜனங்களுக்கு. என்னை யார் கொண்டு வந்து ஏற்பாடு பண்ணினார்களோ அவருக்குப் பாராட்டு செய்வார்கள். நன்மை வருமானால் அவர்களைத் தான் உலகம் பாராட்டும். அது போல இந்த மாயை யிலிருந்து உலகம் தோன்றுமானாலும், உதவி செய் கின்ற பிரும்மத்தை வேதம் எண்ணுகிறது. பிரும்மத் திலிருந்து உலகம் தோன்றியது என்று. இதற்கு என்ன பேர் சொன்னேன். பங்கஜ ஞாயம். அந்த மாயையா யிருக்கிற கோளம் அதிலேதான் எல்லா உயிர்களும் அடங்கியிருக்கின்றன. அது ஒரு கோளம்.

அந்த மாயையான கோளத்திலே கோடானு கோடி ஆன்ம அணுக்கள் அடங்கியிருக்கின்றன. இது தான் மூல நிலை. இந்த உலகம் தோன்றுவதற்கு முன்பு இருந்த நிலையை நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். தங்கம், பொன் வாங்குகிற வியாபாரி வருகிற தங்கத்தை உரைத்துப் பார்த்து அதை ஒரு தேன் மெழுக்கு உருண்டையிலே ஒட்டி வைத்துக் கொள்வார். இவ்வளவு சிறிய துண்டாயிருக்கிற தேன் மெழுக்கு உருண்டையிலே கோடிக்கணக்கான தங்க அணுக்கள் அடங்கியிருக்குமாப் போலே, மாயையான கோளத் திலே ஆன்ம கோடிகளெல்லாம் அடங்கிக் கிடக் கின்றன. அப்படியிருக்கிற ஆன்மாக்களுக்கு நலம் செய்ய வேண்டுமென்று அந்த அருட்பெருஞ்ஜோதி எண்ணிற்று. அந்த எண்ணிய எண்ணத்துக்குத் தனிப்பெருங் கருணை துணை செய்தது. அப்படி அந்த தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதியிலிருந்து வெளிப்பட்டது. அப்படி முதன்முதலாக வெளிப்பட்ட அந்த நிலைக்குப் பராசக்தி என்று பெயர். அப்பொழுது

அந்தக் கோளம் கொஞ்சம் விரிவாக ஆயிற்று. அந்தப் பராசக்தியின் வேகத்தை இந்த உயிர்கள் தாங்க மாட்டா என்று கருதிய அந்தத் திருவருள் அதிலிருந்து ஒரு ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது. அப்பொழுது இந்த மாயையான கோளத்திலே மூன்று கோடு பிரிந்தது. ஒன்று சுத்த மாயா, ஒன்று அசுத்த மாயா, ஒன்று மிஸ்ர மாயா. அப்பொழுது அதற்குப் பெயர் ஆதிசக்தி. முதலிலே பராசக்தி. இப்பொழுது ஆதிசக்தி. அந்த ஆதிசக்தியின் வேகத்தை இந்த உயிர்கள் தாங்க மாட்டா என்று எண்ணி மிகப் பெருங் கருணையினாலே அதிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது. அதற்கு ஞான சக்தி என்று பெயர். அப்பொழுது இந்த மாயை யான கோளத்திலே இருக்கிற உயிர்களுக்குக் கொஞ்சம் ஒளி உண்டாயிற்று. விடியற் காலம் 5½ மணிக்குக் கொஞ்சமாகக் கிடைக்கும் ஒளி போலே. அதனுடைய வேகத்தை இந்த உயிர்கள் தாங்க மாட்டா என்று கருதி மறுபடியும் அதிலிருந்து ஆயிரத் தில் ஒரு கூறு பிரிந்தது. அதற்குக் கிரியா சக்தி என்று பெயர். அப்பொழுது இந்த உயிர்கள் கொஞ்சம் நெளியத் தொடங்கின. இப்பொழுது இந்த உயிர் களுக்குப் பெயர் கிடையாது. மதம் கிடையாது. முஸ்லிம் உயிரா, கிறிஸ்துவன் உயிரா, பிராமணன் உயிரா, முதலியார் உயிரா, ஆண் உயிரா, பெண் உயிரா, ஒன்றும் கிடையாது. அணுமாத்திரம் தான் இருக்கும் அந்த உயிரிலே. மறுபடியும் அதன் வேகத்தை இந்த உயிர்கள் தாங்க மாட்டா என்று கருதி ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது. அதுதான் இச்சா சக்தி. புரிந்தாலும் புரியாவிட்டாலும் இதுதான் நம் நிலை. உதாரணம் சொன்னால் கொஞ்சம் விளங்கும்.

சீர்காழியிலே ஒரு பயிர் வயல். அதற்கு நலம் செய்ய வேண்டுமென்று குடகுமலை எண்ணிற்று. குடகு மலையிலிருந்து இவ்வளவு சிறியதாகவா வரும்? பிரும்

மாண்டமான காவிரி ஆறு. அப்படியே நேரே வந்து பாய்ந்தால் இந்த வயலோ, பயிரோ இருக்குமா? அப்பொழுது கொடுமுடி என்ற இடத்திலே பத்திலே ஒரு பங்கு பிரிகிறது. பெரிய ஆற்றிலிருந்து இவ்வளவு சிறிய வாய்க்காலாகப் பிரிய முடியாது. எங்கே பிரிந்தது? கொடு முடியிலே. அது ஒரு 60, 70 மைல் (சமயபுரத்துக்கு) வந்து 10–ல் ஒரு பங்கு பிரிகிறது. அப்படிக் கொஞ்ச கொஞ்சமாகப் பிரிந்து இங்கு வந்து பாய்கிற போது அப்பவே நாலு பயிர் சாயும். அப்பொழுது சீர்காழியிலோ, மாயூரத்திலோ இருக்கின்ற பயிர் தழைக்க வேண்டுமென்று, குடகு மலேயிலே இருக்கிற காவேரி ஆறு கால் காலகப் பிரிந்து வருவது போல, சக்தி பிரிந்து, பிரிந்து வந்து உயிர்களுக்கு அருள் புரிகின்றது. இன்னொரு உதாரணம். நான் குடும்பத்தோடு குத்தாலம் போயிருக்கிறேன். குழந்தை தண்ணீர் கேட்டது. குழந்தை வாயைக் கொண்டு போய் அப்படியே அருவியில் காட்டினல் என்ன ஆகும்? கருணேயோடு வருகிற அருவி, வாயை வைத்தால் கிழித்து விடும். சங்கில் கொண்டு வர முடியுமா? குடத்திலே கொண்டு வந்து, பஞ்ச பாத்திரத்திலே விட்டு, அதிலிருந்தல்லவா சங்கில் விட வேண்டும். இரண்டு படி அரிசி வடித்தால் அப்படியேவா இலேயில் கொட்டுவார்கள்? அதை வேறொரு குண்டானிலே வாங்கி, தட்டில் தள்ளி இலேயில் போட வேண்டும். அது போலத்தான் அந்தக் கருணே பிரிந்து பிரிந்து வருகிறது. இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும். இன்னொரு முறை வரிசையாகச் சொல்லுகிறேன். அது அருட்பெருஞ்ஜோதி. மாயையான கோளம். அந்தக் கோடிக்கணக்கான ஆன்மாக்கள் அதில் கிடந்தன. அந்த ஆன்மாக்களுக்குள்ளே வித்தியாசம் கிடையாது. உயர்ந்த ஆத்மா, தாழ்ந்த ஆத்மா, அறிவுள்ள ஆத்மா, அறிவில்லாத ஆத்மா, ஐயர் ஆத்மா, செட்டியார் ஆத்மா, முதலியார் ஆத்மா என்றும் கிடையாது.

எல்லாம் ஒரே பெயர்தான். அப்படி இருக்கிற உயிர்களுக்கு நலம் செய்ய வேண்டும் என்று அருட்பெருஞ் ஜோதி ஆண்டவன் எண்ணினுன். அப்படி எண்ணிய எண்ணத்திற்குத் தனிப் பெருங் கருணை என்று பெயர். அருட் பெரும் ஜோதி, தனிப் பெருங்கருணை. ஐந்து 'ஸெல்' போட்ட டார்ச் லைட்டிலிருந்து வெளிச்சம் வருவது போல, அந்த அருட்பெருஞ் ஜோதியிலிருந்து ஒளி புறப்பட்டது, பராசக்தி. அப்பொழுது கோளம் பெரியதாயிற்று. அதிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது; அது ஆதிசக்தி. அப்பொழுது மூன்று ரேகைகள் பிரிந்தன. சுத்த மாயா, அசுத்த மாயா, மிஸ்ர மாயா என்று. மறுபடியும் ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது; ஞானசக்தி. அப்பொழுது அந்த உயிர்களுக்குக் கொஞ்சம் வெளிச்சம் உண்டாயிற்று. மறுபடியும் அதிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது? கிரியா சக்தி. அப்பொழுது உயிர்கள் நெளியத் தொடங்கின. அதிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது; அது இச்சா சக்தி. அது மூன்று மாயை சொன்னேனே. சுத்த மாயா என்ற விந்திலே அந்த அருள் வீழ்ச்சி வந்து விழுந்தது. அப்படி விழுந்தவுடனே அந்த விந்து சுழன்றது. என் கையைப் பாருங்கள். காற்றுடி சுழன்றால் ஒரு சத்தம் வருவது போல அந்தச் சுழன்ற சுழற்சி அதிலிருந்து உம் என்று ஒரு சத்தம். சுழன்றது விந்து. வந்தது நாதம். அதுதான் விந்து நாதம். அது தான் பிள்ளையார் சுழி. (உ) இதை அருணகிரிநாதர் சொன்னுர்.

> "வாசித்துக் காணுெணுதது
> பூசித்துக் கூட ஒணுதது
> வாய்விட்டுப் பேசொணுதது விந்துநாத
> ஓசைக்குத் தூரமானது."

அதற்கு அப்பாலே இருக்கிறது அந்தப் பிரணவம். விந்து நாத ஓசைக்குத் தூரமானது. ஆகவே விந்திலேயிருந்து நாதம் வருகிறது. விந்து என்பது சுழன்றது.

வந்தது நாதம். அப்பொழுது இந்த 'உ'ஞ இருக்கிறதே இப்படிப் போட்டு இப்படி வந்து இப்படி வருகின்றது.'உ'ஞவிலேகழுத்து இருக்கு பிள்ளையார்சுழிக்கு கழுத்து கிடையாது. அந்தச் சுழி அப்படியே வெறும் கோடு. (கீழே வயிறு வராது) இப்பொழுது போடும் புத்தகங்களிலே (உ) பிள்ளையார் சுழியே கிடையாது. எத்தனையோ காலமாய் பாரம்பரியமாக இருந்த தர்மங்களையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக ஜனங்கள் கை நழுவ விடுகிறுர்கள். அதனுடைய தத்துவங்கள் அவர்களுக்கு விளங்கமாட்டா. ஆகவே இந்த மகத்தான தத்துவங்களையெல்லாம் முருகப் பெருமான் சிவபெருமானுக்கு உபதேசித்தாராம். சிவபெருமானுக்குத் தெரியாதது என்று அர்த்தமில்லை. சிவனே முருகன்; முருகனே சிவன். எப்பொழுதுமே அப்பாவை விட குழந்தைக்குக் கொஞ்சம் பெருமை அதிகமாய் இருக்கும். வெண்ணெய் தானே நெய். வெண்ணெயில் மணம் இருக்காது. நெய் மணக்கும். முருங்கைத் தழை போட்டுக் காய்ச்சினுல் மூக்கைத் துளைக்கும். பிரணவத்தினுடைய தத்துவங்களைச் சொல்லினேன். இதுதான் 'ஓங்காரம்'; இங்கே அகரம் இங்கே உகரம் கீழே மகரம். அகரம் சிருஷ்டிக்கிறது. உகரம் ரக்ஷிக்கின்றது. மகரம் சம்ஹாரம் பண்ணுகிறது. சம்ஹாரம் என்ருல் கொன்று விடுவது என்று அர்த்தம் பண்ணக் கூடாது. ஒரு கடவுள் எல்லாவற்றையும் கொன்று விட்டார் என்ருல் அவர் கொலைகாரன் என்று தானே பெயர். சம்ஹாரம் என்ருல் கொன்று போடுவது என்று அர்த்தம் கிடையாது. இந்த உலகத்தையெல்லாம் விரிவு படுத்துவது சிருஷ்டி. அதை நிலை பெறச் செய்வது ரக்ஷகம். மறுபடியும் கொண்டு போய் ஒடுக்கி விடுவது சம்ஹாரம். இந்த மாலைக்கு ஹாரம் என்று பெயர். அது ஹ்ரு என்ற தாதுவிலிருந்து வந்தது. உதிரிகளாக இருந்த மலர்களை ஒடுக்கி வைப்பது ஹாரம். நன்ருக

ஒடுக்குவது சம்ஹாரம். ஒரு உதாரணம் சொல்கிறேன். குழந்தையை எழுப்புகிறுள்—அது சிருஷ்டி. உணவு தருகிறுள்—அது ரக்ஷகம். தொட்டிலில் வைத்து தூங்க வைக்கிறுள்—அது சம்ஹாரம். குழந்தையை ஒடுக்கி விடுவது. தூங்க வைப்பது. தூங்க வைப்பது ரொம்ப முக்கியம். தாலப்பாட்டு என்றே ஒன்று உண்டு. ஓதுவார் பாடுவார். 'தாலோ தாலேலோ, சங்கரிதன்குமரா மங்கையர்தம் கணவா தாலோ தாலேலோ' என்று பிள்ளைத் தமிழிலே தாலப்பாட்டு ஒன்று இருக்கிறது. குழந்தையைத் தூங்க வைக்கிறது. அது என்ன பொருள்? தால் என்ருல் நாக்கு. இந்த நாக்குக்குத் தால் என்று பெயர். "துதித்திடல் வேண்டும் தாலு" என்பது கந்தபுராணம். அந்த நாவை அசைப்பதற்குத் தமிழிலே இரண்டு எழுத்துக்களைச் சொன்னுல் நாக்கு அசையும். இந்த நுனி நாக்கை மேலண்ணத்தில் வைத்து தம்புரா தட்டுகிற மாதிரி அப்படித் தட்டி விட்டால் 'ரா' வரும். 'லா' வரும். அப்பொழுது 'ரா, ரா' என்று தட்டினுல் தம்புரா தட்டுகிற மாதிரி இருக்கிறது இல்லையா. ரா, ரா ரா. என்று வேதாந்தத்தோடு குழந்தையைத் தாலாட்டு கிற பாட்டுக்குத் தாலப்பாட்டு என்று பெயர். பிள்ளைத் தமிழிலே தாலாட்டுகின்ற பாட்டு ரொம்ப அருமை யானது. அப்படிக் குழந்தையைத் தூங்க வைப்பது சம்ஹாரம். பிரணவத்திலே இந்தச் சுழி அகரம். இது உகரம். கீழே மகரம். அகர, உகர, மகரம். 'ஓ'. நாதம். விந்து. அதைக் கேட்டவுடனே சிறிது ஞானம் வருகிறதே அது கலை. எனவே அகர, உகர, மகரம், நாதம், விந்து, கலை. இந்த ஓரெழுத்திலே இந்த ஆறெழுத்தைச் சொன்னுராம் முருகன். அருணகிரியார் பாடுகின்ருர்.

''காது முக்ர வீர பத்ர காளி வெட்க மகுடாமா
காச முட்ட வீசி விட்ட காலர் பத்தி யிமையோரை
ஓது வித்த நாதர் கற்க வோது வித்த முனிநாண
ஓரெழுத்தி லாறெழுத்தை யோது வித்த பெருமாளே''

இது திருக்கழுக்குன்றம் திருப்புகழ். வேதாசலம். வேதாசலம்தானே ஆறெழுத்தைச் சொல்ல வேண்டும்.

“ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே”

என்று அருணகிரிப் பெருமான் அற்புதமாகப் பாடியிருக்கிறார். இந்தப் பிரணவம் சாஸ்திர ரீதியாக அப்பாவுக்குச் சொன்னாராம். அதனாலே சிவகுரு, குமர குரு, பரம குரு, குருசுவாமி, குருபரன் என்று அநேக நாமங்கள் அவனுக்கு உள்ளன. அப்பொழுது தேவர்கள் எல்லோரும் வந்து சிவனிடத்தில் முறையிட்டார்கள், சூரபன்மனுடைய ஆட்சிக் கொடுமை தாங்க முடியவில்லை என்று. சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் மூன்று பேர். இன்னொரு தடவை சொல்லுகிறேன். சூரபன்மன்; சிங்கமுகனுக்கு ஆயிரம் தலை, இரண்டாயிரம் கை. தாரகாசுரன். இந்த மூன்று பேரையும் எம்பெருமான் அடக்கி வைத்தார். அப்படி என்றால் என்ன பொருள்? நம்முடைய துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆணவ மலம். இப்பொழுது நான் சொல்வதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் ஆணவ மலம். அந்த ஆணவ மலம் ஆன்மாக்களுக்கு இடையே வந்ததல்ல. ஆன்மா என்றைக்கு உண்டோ அன்றைக்கே ஆணவமலம் உண்டு. செம்பு என்றைக்கு உண்டோ அன்றைக்கே களிம்பு உண்டு. அரிசி என்றால் தவிடு இருக்கும், செம்பு என்றால் களிம்பு இருக்கும், நீர் என்றால் சேறு இருக்கும். குழந்தைகள் என்றால் சேஷ்டை செய்யும். மனைவி என்றால் அடம் பிடிப்பாள்.

அதுபோல ஆன்மாவுக்கு ஆணவ மலம் உண்டு. இந்த ஒரு மலத்தைப் போக்குவதற்குப் பகவான் இரண்டு மலங்கள் கொடுத்தார். கன்ம மலம், மாயா மலம். ஒரு மலத்தைப் போக்க இருமலத்தைக் கொடுத்தார். உங்களுக்கு என்ன தோன்றும்? ஒன்றைப் போக்க இரண்டா? காலிலே முள் தைக்குமானால் பெரிய

முள்ளை எடுத்துக் குத்துவார்கள். முள்ளை முள்ளாலே போக்க வேண்டும். வைரத்தை வைரத்தாலே அறுக்க வேண்டும். துணியிலே இருக்கிற அழுக்கை உவர் மண் போட்டுத் துவைக்கிறார்கள். 'வாயை மூடு' என்று சத்தத்தாலே சத்தத்தை அடக்குகிறார்கள். அது போல மலத்தை மலத்தாலே போக்க வேண்டும். ஆணவமலத்தைக் கன்ம மலம், மாயா மலத்தாலே போக்கவேண்டும். எனவே மூலமலம் ஆணவ மலம். அதனைப் போக்க வல்லது கன்மமலம். அதைக் கழிக்க வல்லது மாயா மலம். மூன்று மலங்கள்.

சனகாதி முனிவர்கள் சிவபெருமனிடம் உபதேசம் கேட்க வந்தார்கள். பிரும்ம குமாரர்கள்: சனகர், சனந்தனர், சநாதனர், சனத் குமாரர். அந்த நால்வர்கள் வந்து ஆண்டவனே எமக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார்கள். சுவாமி ஒன்றும் சொல்ல வில்லை. இப்படி என்றார். என் கையைப் பாருங்கள் அப்படி. இது என்ன தாத்பர்யம். யாராவது நம் வீட்டுக்கு வந்தால் நாம் அப்பொழுது மனைவியைப் பார்த்து தாகத்துக்குக் காபியோ, மோரோ ஏதாவது கொண்டு வா என்போம். அந்தக் குறிப்பினாலே உணர்த்துவது. கண்ணாலும் சொல்வார்கள். கொஞ்சம் அறிவு குறைந்தால் கையாலே சொல்வார்கள். அறிவு அதிகமாய் இருந்தால் கண்ணால் சொல்வார்கள். நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது இருக்கிற சந்நிதானத்துக்கு நான்கு சந்நிதானத்துக்கு முந்தி திருவாவடுதுறையிலே அம்பலவாண மகா சந்நிதானம் என்று ஒருவர் இருந்தார். ஞானத்தின் வடிவமாம், அப்படிப் பார்ப்பாராம். அந்தப் பார்வையிலேயே தொகையைச் சொல்வாராம், கொண்டு வந்து கொடுப்பதற்கு. தசரத ராஜா சீதா கல்யாணத்துக்குப் போனார். மனைவியிடம் சத்தம் போட்டுப் பேசினால் கூட்டத்தில் தாய் மார்கள் கூச்சப் படுவார்கள். அந்தக் கல்யாணத்

திலே ராஜா மணவியிடம் கையாலே பேசினனும். தோழி வந்து கண்ணலே கேட்டாளாம். இவள் கடைக் கண்ணலே சொன்னளாம். கம்பர் சொன்னர். 'தாழ நின்ற......ஒருவன் உரைத்தான்........தோழி கடைக் கண்ணில் சொல்லினள்' எல்லாம் நாகரிகம்—கம்பர் சொல்லுவது.

அதைத் தான் சனகாதி முனிவர்க்குச் சிவபெருமான் கையாலேயே உணர்த்துகிருர். சில சங்கீத வித்வான் களுக்கு மேல் பஞ்சமம் எட்டாது. ஸ, ரி, க, ம, ப வுக்கு அப்படிக் கையைக் காட்டி விடுவார்கள். எட்டவில்லை யென்ருல் என்ன செய்வது? கையாலேதான் காட்டியாக வேண்டும்? சாரீர சம்பத்து இருந்தால் பஞ்சமம் எட்டலாம். இல்லாதவன் என்ன செய்வான்? அது போல பரமேசுவரன் நால் திசைக்கும் கை காட்டிச் சொன்னனும். இதற்கு என்ன பொருள்? முதலிலே இப்படிப் பாருங்கள். அப்புறம் அப்படிப் பாருங்கள். அப்புறம் இப்படி. இதுதான் (நடுவிரல்) உயரமாய் இருக்கும். ஆனல் இதற்குத்தான் பெருமை. பெருவிரல். நாலு பேர் செய்யும் வேலையை ஒருவன் செய்தால் ஏன் பெரிய மனுஷன் என்று சொல்லக் கூடாது? சில்லறைகள் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்திருக்கும். பெரிய மனுஷன் அந்தப் பக்கம் போய் விடுவான். எல்லாம் சில்லறை. அப்போ இது பதி—கடவுள். இது சுட்டிக் காட்டுகிறது ஜீவாத்மா; பசு; இதற்குப் பக்கத் திலே உயரமாக நிற்கிறது, ஆணவ மலம். இந்த விரல் சுண்ணம்பு தீட்ட, ஆள் காட்ட, மோதிரம் சூட்ட, கண்ணரைக் கூட்ட, விரல் நான்கு இருக்க, இந்த நடு விரல் உயரமாய் இருக்கும். ஆனல் ஒன்றுக்கும் உதவாது. விலாசம் பெரியதாய் இருக்கும். நல்ல காரியத்துக்கு நாலணு தரமாட்டான். அவனுக்கெல் லாம் நடுவிரல் என்று பெயர். படிக்காசு பாடுகிருர்.

சுண்ணும்பு தீட்டநல் ஆள்காட்ட மோதிரஞ்சூட்ட மலர்க்
கண்ணுரைக் கூட்டவிரல் நான்கிருக்கக் கதிர்க்கம்பிபோல்
எண்ணு நடுவிரற் கேதாம் உலோபருக் கேதுகண்டாய்
கண்ணூர் நுதலண்ணல் சேய்வணிகா செந்தில் காத்தவனே.

என்று படிக்காசு பாடுகிருர்.

அந்த உயரமாய் நிற்கிற விரல் ஆணவமலம. இந்த மோதிரம் அணிகின்ற விரல்தான் காரியம் செய்யும். (தர்ப்பை மோதிரம்.) சிறு விரல் மாயாமலம். ஆணவம், கன்மம், மாயை. இந்த மூன்று மலங்களோடு ஆத்மா சேர்ந்திருக்கிறது. பரமாத்மா தனியாக இருக்கிறது. தூக்கத்திலே இருக்கிற சுகத்தைவிட, தியானம் பண்ணிஞல் அதைவிடக் கோடி மடங்கு சுகம் வரும் தியானத்தாலே. ஆகையிஞலே இறைவன் திருவடியை இந்த ஜீவன் சேருகிறது. இங்கே பாருங்கள். மாயா மலம், கன்ம மலம், ஆணவ மலம் ஆகிய மும்மலத்தை விட்டு ஜீவன் சிவனே அடைகிறது. இப்படி நாளாக நாளாக ஆக எப்படி குமாஸ்தாவாக இருக்கிறவன் (பார்ட்னராக) கூட்டாளியாக ஆகிருனே அதுபோல அடிமையாய் இருந்த ஜீவன் சிவமோடு ஒன்றுபட்டு விடுகிறது. இப்பொழுது ஜீவனும் சிவனும் ஒன்ருகி விட்டது. அப்புறம் சாதக சின் முத்திரை. இது சாத்திய சின் முத்திரை. இது போதக சின் முத்திரை. இதைத்தான் தக்ஷிணுமூர்த்தி சுவாமிகள் சனகாதி முனிவர்களுக்கு அருள் புரிந்தார். இந்த ஜீவனும் சிவனும் ஒன்ருக இருந்தது. எது போல? நாழி என்ருல் கால்படி. அப்பு என்ருல் தண்ணீர். ஒரு கால்படி உப்பை அளந்து கால்படி தண்ணீரில் கலந்து ஒரு எவர்சில்வர் பாத்திரத்தில் கொட்டிஞல் அரைபடியாகவா இருக்கும்? கால்படி உப்பு கால்படி அப்பு இரண்டும் அளந்து கொட்டிஞல் ஒரு கால்படி ஆவதுபோலே, ஜீவஞயிருக்கின்ற உப்பும், சிவஞயிருக்கின்ற அப்பும் சேர்ந்து ஒன்ருகிவிடுகிறது.

"நாழி உப்பும் நாழி அப்பும் நாழியானவாறு போல்"

என்பது சிவ வாக்கியர் பாட்டு. ஆகவே இந்த இரண்டும் ஒன்றுபட்டு ஜீவனும் சிவனும் ஒன்ருகி விடுகிறது. அப்படி ஆனவர்தான் சதாசிவப் பிரம்மேந்திராள், தியாகப் பிரம்மேந்திராள். பிறகு பிரம்மம் என்று பதம் வந்துவிடும். சதாசிவப் பிரம்மம், தியாகப் பிரம்மம், மெய்கண்ட சிவம், அருள்நந்தி சிவம், மறைஞான சிவம், உமாபதி சிவம். ஜீவன் சிவனுகி விடுகிறது. ஆகவே ஒரு கட்டையைக் கொளுத்திஞல் கட்டை கனலாக மாறிவிடுகிறது அல்லவா. கட்டைக்குள் தான் கனல் இருக்கிறது. அந்தக் கனல் வெளிப்பட்ட உடன் அந்தக் கட்டையை விழுங்கி அது கனலாக மாறுமாப் போலே உள்ளே இருக்கிற சிவம் வெளிப்பட்டு அந்த ஜீவனைச் சிவமாக்கிக் கொள்ளுகிறது. அந்த மகத்தான தத்துவத்தைப் பரமேசுவரன் காட்டினுர். இப்பொழுது ஆன்மாக்களாகிற தேவர்களுக்கு மூன்று மலங்கள். சூரபன்மன் ஆணவ மலம். சிங்கமுகன் கன்ம மலம். தாரகாசுரன் மாயா மலம். நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது கந்தபுராணத்தின் நுண் பொருள். நான் கந்த புராணத்தின் கதையைச் சொல்லவில்லை. நுண் பொருளைச் சொல்லுகின்றேன். சூரபன்மன் ஆணவ மலம். பல தலைகளை உடைய சிங்கமுகாசுரன் கன்ம மலம். தாரகாசுரன் மாயா மலம். தேங்காய்க்கு மேல் பச்சையாய் இருக்கிற மட்டை மாயா மலம். உரித்து உரித்து எடுக்கின்ற நார் கன்ம மலம். சந்நிதானத்திலே உடைத்து எடுக்கின்ற ஓடு ஆணவ மலம். ஆசார்யன்தான் உடைக்கின்ருர். அது ஆணவ மலம். ஆணவம் சட்டென்று போகாது. சில தாய்மார்கள் சொல்வார்கள்: "ஆணவம் பிடித்து அலைகிருன்" என்றும், "அவன் கன்மத்தை அவன் தானே தொலைக்கணும்" என்றும், "மாயையிலே மூழ்கி இருக்கிருன்." என்றும் பேசுவது வழக்கத்தில்

உள்ளது. ஆணவ மலம் சூரபன்மன். கன்ம மலம் சிங்கமுகாசுரன். தாரகாசுரன் மாயா மலம். இந்த மூன்று மலத்தை எதனுல் அழிக்கவேண்டும்? ஞானத் தாலே. ஞானம்தான் வேல். அறிவு என்ருலும், வேல் என்ருலும், ஞானம் என்ருலும் ஒன்று. இருபத்தைந்து நயாபைசா என்ருலும், கால் ரூபாய் என்ருலும், நாலணு என்ருலும் ஒன்று. அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு. ஒன்று அறிவு ஆழமாக இருக்க வேண்டும். அறிவு எதையும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். குழந்தைகள் மேலே அம்மாவுக்குத் தான் மிகவும் பிரியம். ஏனென்ருல் முந்நூறு நாள் சுமந்து பெற்றவள். அப்பாவுக்குப் பிரியம் உண்டு. அப்பாவைவிட அம்மாவுக்குப் பிரியம் அதிகம். இராமச்சந்திர மூர்த்தி கானகம் போனுர். அப்பாவாகிய தசரதர் மாண்டாரா? அம்மாவாகிய கௌசல்யை மாண்டாளா? சக்கரவர்த்தி மாண்டார். அப்பாவை விட அம்மாவுக்குத் தான் பிரியம் அதிகம் என்று முந்தி தீர்மானம் பண்ணினேம். ஏன் அப்பா இறந்தார்? அம்மா சாகவில்லே? இராமன் பேரிலே அன்பு வைத்தாள் கௌசல்யை. ஆசை வைத்தான் தசரதன். ஆசை மனிதனே அழிக்கும். அன்பு மனிதனே வாழவைக்கும். இதிலிருந்து நாம் குழந்தை கள் மேலே அன்பு வைக்கலாம். ஆசை வைக்கக் கூடாது. இதை ஆழமாகச் சிந்திக்கிறவர்களுக்குத் தெரியும். அறிவு ஆழமாக இருக்க வேண்டும். பிறகு விசாலமாக இருக்க வேண்டும். அப்படி அறிவு பரந்து இருக்க வேண்டும். பிறகு கூர்மையாக இருக்க வேண்டும். வேலாயுதத்தைக் கவனியுங்கள். அடிப்பகுதி ஆழமாக இருக்கிறது. நடுப்பகுதி விசால மாக இருக்கிறது. நுனிப் பகுதி கூர்மையாக இருக் கிறது. வேல் என்ருல் ஞானம். எல்லாவற்றையும் ஞானம் தான் வெல்லும். முதலில் மாயா மலமாயிருக் கின்ற அந்தத் தாரகனே வென்ருர். பிறகு ஞானத்

திஞலே கன்ம மலமாயிருக்கின்ற சிங்கமுகாசுரனை வென்ருர். ஆணவ மலம்தான் கடைசி வரைக்கும் இருக்கும். அதைச் சட்டென்று வெல்ல முடியாது. அது கடைசி மலம். சூரபன்மன் பல்வேறு வடிவங்கள் எடுத்தான். அந்த ஞானத்தாலே அத்தனை வடிவங் களையும் எம்பெருமான் அழித்து அருளினுர்.

கடைசியில் அவன் ஆயிரம் கோடி அமாவாசை யாக ஆனுன். இருட்டு—ஆணவ இருள். ஆணவத்தின் தன்மை இருளாக இருக்கும். இந்தப் பூலோக இருள் எந்தப் பொருளையும் காட்டாது. தன்னையும் காட்டாது. சில பேர் திருடிவிட்டு அவனும் நம் கூட இருப்பது போலே. அதுபோல் ஆணவ மலம். அது எதையுமே காட்டாது. சூரபன்மன் ஆணவ மலம். ஆயிரம் கோடி அமாவாசையாக வடிவெடுத்தான். அந்த இருள் மேலே ஒளியை விட்டார். ஒரு திருப்புகழ்.

> "அரியும் அயனோடு அபயம் எனவே
> அயிலை இருள் மேல் விடுவோனே"

அயில் என்ருல் வேல். இருள்மேல் விடுவோனே! அந்த ஆணவ மலமான இருள்மேலே ஞானத்தை விடுவது. அது எப்படி இருக்கும்? நான் எப்படிச் சொல்வேன் உங்களுக்கு. இப்பொழுது எனக்குத் தெரிந்தது சூரிய பகவான். இந்தச் சூரியனைத் தான் சொல்ல முடியும். 'பலர் புகழ் ஞாயிறு' என்ருர் நக்கீரர். அருணகிரியார் அப்படிச் சொல்வாரா?

> "உததியிடை கடவுமர கதவருண குலதுரக
> வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள் உதயமென"

நக்கீரர் ஒரு சூரியன் என்ருர். அருணகிரியார் சதகோடி சூரியர்கள் என்ருர். மிகுந்த ஒளியாம். அதிசூரியப் பிரகாசம். நூறு கோடி சூரியனுடைய மின்சாரத்தைச் சேர்த்து, அதை டாடா கம்பெனியிலே கொடுத்து

அதையெல்லாம் பொடி பண்ணி அதைப் பெரிய மூசையிலே வைத்து உருக்கி, (எதை ஆதித்தனை,) தேன் மெழுக்கில் வேல் போல தட்டி, அந்த நூறு கோடி சூரியர்களை உருக்கி வார்த்தால்—அதைப் பார்த்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்குமாம் வேலாயுதம். சிந்தைக்கு எட்டாதது. அதை அருண கிரியார் சொன்னார். அம்பாள் ஞானமய வடிவு. எப்பவுமே பெண்களுக்கு அறிவு அதிகம். ஏனென்றால் அவர்கள் நிழலில் இருக்கிறார்கள். நிழலில் இருப்பதனால் உயர்வாக இருப்பார்கள். நாம் வெய்யிலில் அலை கிறோம். எந்தப் பொருளும் வெயிலில் இருந்தால் கொஞ்சம் மெருகு குறைந்திருக்கும். அதனால்தான் அருணகிரியார் அம்பாளிடம் ஆரம்பிக்கிறார், வேலைப் பற்றிச் சொல்வதற்கு.

**''அருண கணபண புயக சுடிகையில்**

**∴ ∴ ∴**

**இமய மாமயில் அம்பை த்ரியம்பகி......**

**∴ ∴ ∴**

**மரகத பக்ஷ குலத்துரகத் திவாகரர்**
**வடிவை உருக்கி வடித்த திருக்கை வேல்''**

கடைசியில் என்ன வந்தது? வேல். அது வெல் என்ற முதல்நிலை நீண்ட தொழிற் பெயர். எல்லாவற்றையும் வெல்லுவது ஞானம். ஆயுதம் அல்ல. அறிவாளிதான் ஐந்து பூதங்களையும் வென்று அடக்குகிறான். வெள் ளத்தை அணை போட்டு நிறுத்துகிறான். அக்கினியைச் சாந்தப்படுத்துகிறான். ஆகவே எல்லாவற்றையும் வெல்லுவது ஞானம். இச்சைதான் வள்ளி அம்மை யார். கிரியைதான் தெய்வயானை. உள்ளபடியே இரண்டு பெண்டாட்டி என்று யாரும் நினைக்கக்கூடாது. இச்சா சக்தி வள்ளி நாயகி. கிரியா சக்தி தெய்வயானை. ஆகவே கிரியா சக்தி என்பது தெய்வயானை. இடப்பக்கம் இருக்க வேண்டும். வள்ளி எந்தப் பக்கம்

இருக்கவேண்டும்? வலப்பக்கம். எல்லாவற்றுக்கும் ஒரு அடையாளம் உண்டல்லவா? திருநீறிட்டால் சைவன். நாமம் தரித்தால் வைஷ்ணவன். சிலுவைக் குறி அணிந்தால் கிறிஸ்துவன். இப்படி அடையாளம் உண்டுமாப் போலே வள்ளிக்கும் தெய்வயானைக்கும் என்ன அடையாளம்? நீலோற்பலம் கையில் இருந்தால் தெய்வயானை. தாமரை இருந்தால் வள்ளி அம்மையார். இன்றைக்கு நூற்றுக்கு நூறு முருகன் படத்தைப் பாருங்கள். வள்ளி கையிலும் தெய்வயானை கையிலும் தாமரையைத் தான் வைத்து எழுதுவார்கள் ஓவியக்காரர்கள். அவர்களுக்குப் படிப்பு கிடையாது. ஏதாவது வைத்து எழுதிவிட வேண்டியது. தெய்வயானை கையிலே நீலோற்பலம் இருக்க வேண்டும். வள்ளி கையிலே தாமரை இருக்கவேண்டும். தாமரை இருந்தால் வள்ளி. நீலோற்பலம் இருந்தால் தெய்வயானை. என்ன காரணம்? சுவாமிக்கு மூன்று கண்கள். இந்த (இடப்) பக்கம் சந்திரன் இருக்கிறுன். இந்த (வலப்) பக்கம் சூரியன் இருக்கிறுன். இங்கே (நெற்றி நடுவில்) அக்கினி இருக்கிறது. இடக்கண் சந்திரன்; வலக் கண் சூரியன்; இந்த நடுவில் இருப்பது அக்கினி. இந்தக் கண் இப்படி இருக்கும். விரூபாக்ஷன். சந்திரனைக் கண்டு மலர்வது நீலோற்பலம். சூரியனைக் கண்டு மலர்வது தாமரை. சுவாமிக்கு எப்பொழுதும் திறந்த கண்கள். 24 மணி நேரமும் திறந்திருக்கும். இமையா நேத்திரங்கள். நமக்குத்தான் கண்கள் மூடுகிறது. தூங்குகிறோம். சுவாமிக்குத் தூக்கம் கிடையாது. ஆகவே 24 மணி நேரமும் திறந்த விழி. அந்த இடப்பக்கமாயிருக்கிற தெய்வ யானையின் கரத்தில் உள்ள நீலோற்பலத்திலே 24 மணி நேரமும் சந்திர ஒளி பட்டு 24 மணி நேரமும் மலர்ந்திருக்கும். வலப் பக்கம் இருக்கிற வள்ளியம்மையார் கரத்தில் உள்ள தாமரையிலே 24 மணி நேரமும் சூரிய ஒளி பட்டு 24

மணி நேரமும் மலர்ந்திருக்கும். தெய்வயானை கையிலே தாமரை இருந்தால் சந்திர ஒளிபட்டு 24 மணி நேரமும் தாமரை மலராது. (சந்திரனைக் கண்டு தாமரை மலராது.) ஆகவே தெய்வயானை கையிலே நீலோற்பலம் இருக்க வேண்டும். வள்ளி அம்மையார் கையிலே தாமரை மலர் இருக்க வேண்டும். இதன் உட்பொருள் என்ன? முருகப் பெருமானை நிஷ்காம்யமாகப் பலாபலன்கள் இல்லாமல் வழிபடும் அடியார்கள் வாழ்வு என்றும் மலர்ந்திருக்கும். கூம்பிப் போகாது. ஒரு நாள் உயர்ந்திருக்கும்; ஒரு நாள் தாழ்ந்திருக்கும் என்று இல்லாமல் என்றும் ஒன்று போல இருக்கும். சில பேருக்குத் திடீரென்று பெயர் வரும். பிறகு மறைந்து விடும். அப்படி இல்லாமல் என்றைக்கும் ஒன்று போல் இருக்கும் என்ற தத்துவத்தை விளக்குவது அந்த தெய்வ யானை கரத்திலே மலர்ந்து இருக்கிற நீலோற்பல மலரும், வள்ளி கையிலே மலர்ந்து இருக்கிற தாமரை மலரும். நீங்கள் எல்லோரும் முருகப் பெருமானை நிஷ்காம்யமாக வழிபட்டால் உங்கள் வாழ்வு என்றும் மலர்ந்த வண்ணமாக இருக்கும். ஆகவே வள்ளி என்பது இச்சா சக்தி. தெய்வயானை என்பது கிரியா சக்தி. அவர் கையிலே இருக்கிற வேல் ஞான சக்தி. இந்த மூன்று சக்திகளின் தலைவனாக அந்த சுப்பிரமணி ஒரு மணியாக விளங்குகிறது என்று சொல்லி எல்லோரும் எல்லா நலனும் பெற்று வாழ எம்பெருமானை வாழ்த்தி இந்த அளவிலே இதனை முழுமை செய்கின்றேன்.

**இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்**
**சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்**
**அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்**
**கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.**

---

உ

முருகா

# 4. இராமாயண சாரம்

## [17—10—79]

எல்லாம் வல்ல வயலூர் எம்பெருமான் திருவருளினாலே இராமாயண சாரம் என்பது பற்றி உங்கள் நினைவுக்குச் சில கருத்துக்களைத் தெரிய வைக்கிறேன். இராமாயணம் என்பது பழைய காலத்து வரலாறு. இராமாயண வரலாற்றைப் பற்றிப் பல ஆன்றோர்கள் தமது பாடல்களிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். திருவள்ளுவர், தாயுமானவர், அப்பர், குலசேகராழ்வார், அருணகிரிநாதர் இம்மாதிரிப் பல பெரியோர்கள் தமது பாடல்களிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இராமாயணம் பொய் என்றால் ஆழ்வார்களும் பொய்தான். தேவாரத்தில் ஞான சம்பந்தரும் இராமாயணத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். அப்பர் பெருமான் தன் பாடல்களில் பாடியிருக்கிறார். அந்த வரலாற்றைச் சொல்வதில் முன் பின் இருக்கலாம். வரலாறு நடந்த கதை. ராவணன் ஒருத்தன் இருந்தான்; ராமன் ஒருத்தன் இருந்தான். சீதையை இராவணன் அபகரித்தான். புறநானூறு படித்தவர்களுக்குத் தெரியும்.

> "கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
> வடிவாள் அரக்கன் வவ்விய ஞான்று"

என்று புறநானூறு சொல்கிறது. ஆகவே இராமாயணம் நடந்த வரலாறு. அப்பொழுது உரித்துக் கொடுத்தால்தான் தின்பார்கள். இப்பொழுது பிழிந்துக்

கொடுத்தால்தான் குடிப்பார்கள். இராமாயண இதிகாசத்தை உங்களுக்குப் பிழிந்து கொடுக்கப் போகிறேன்.

ஆன்மாக்களுக்கு இயற்கையாகவே மூன்று குணங்கள் இருக்கின்றன. ஒன்று ராஜஸ குணம். ஒன்று தாமஸ குணம். ஒன்று சத்துவ குணம். இதை நான் சமயச் சார்பாகச் சொல்லவில்லை. இந்து மதமா? வைஷ்ணவ மதமா? இது பொது. ஆன்மாக்களுக்கு அறிவு உண்டு என்றால் எந்த மதத்திலே மறுப்பான்? அறிவு என்றால் எந்த மதத்தவனானாலும் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்பானா? எனக்கு அறிவில்லை என்று எவனாவது சொல்வானா? நான் அறிவில்லாதவன் என்று எவன் ஒத்துக் கொள்வான்? அதுபோல இந்த மூன்று குணங்கள் கிறிஸ்துவருக்கும் உண்டு. சைவத்துக்கும் உண்டு. வைஷ்ணவனுக்கும் உண்டு. முஸ்லிம் மதத்துக்கும் உண்டு. அரசனுக்கும் உண்டு. ஆண்டிக்கும் உண்டு. ராஜஸம், தாமஸம், சத்துவம். ராஜஸம் என்றால் என்ன? டம்பம், கோபம், வீண்பெருமை, ஆடம்பரம் இவையெல்லாம் ராஜஸ குணம். ஒன்றுமே இருக்காது. இருக்கிற மாதிரி வேஷம் போடுவான். இங்கிருந்து நேராக மூன்றாவது வகுப்பில் ரயிலில் போவான். போய்ச் சேரவேண்டிய இடத்துக்கு முந்தைய ஸ்டேஷனிலிருந்து முதல்வகுப்பில் போவான்; டம்பம். தனக்கு ரொம்ப இருக்கிற மாதிரி பாவனை பண்ணுவான். சில பேர் அடிக்கடி மனைவியின் பேரில் கோபித்துக் கொள்ளுவார்கள். இவையெல்லாம் ராஜஸ குணம். தூக்கம், மயக்கம், சோம்பல், அலட்சியம் இவையெல்லாம் தாமஸ குணம். சிலபேர் மெத்தையைப் போட்டுக்கொண்டு சாய்ந்துகொண்டு படுத்துக் கொண்டிருப்பான். சிலபேர் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு கொஞ்சம் கண்ணை மூடுவார்கள். சில தாய்மார்கள் வாசலில் உட்கார்ந்து கொண்டு 'ஆ' என்று வாயைத்

திறந்து கொண்டு தூங்குவார்கள். (தூக்கம், சோம்பல்' மயக்கம், அலட்சியம்) இவையெல்லாம் தாமஸ குணம். அன்பு, அடக்கம், சாந்தம், பொறுமை, ஞானம் இவை எல்லாம் சத்துவகுணம். ஒவ்வொருவருக்கும் இம்மூன்று குணங்களும் இருக்கின்றன. கூட குறைய இருக்கலாம். ஒருவருக்கு 90 மடங்கு சத்துவ குணம். காந்தி மாதிரி. சில பேருக்குத் திடீரென்று கோபம் வரும். பிறகு வருத்தப்படுவார்கள். மனைவி மேலே கோபிப்பார் அதன்பிறகு நைஸ் பண்ணுவார். ஆகவே தொண்ணூறு மடங்கு சாந்த குணம்; ஐந்து மடங்கு தாமஸ குணம். ஐந்து மடங்கு ராஜஸ குணம். சில பேருக்கு 90 மடங்கு ராஜஸம். மூன்று மடங்கு சத்துவம். பாக்கி ஏழு மடங்கு தாமஸம். இப்படியே கூடக் குறைவாக இருக்கும். இனிமேல் உங்களை நீங்களே சோதனை பண்ணிக் கொள்ளவேண்டும். நம்மிடம் எந்தக் குணம் அதிகமாய் இருக்கிறதென்று, அவரவர்களுக்குத் தெரியுமல்லவா? அதைக் கொஞ்சம் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். நம்மை நாமே திருத்திக்கொள்ளவேண்டும். இதை அருணகிரிநாதர் சொல்லுகிறார். அவர் சொன்னால்தான் உறுதி.

"கருவிலுருவே தங்கு சுக்கில நிதானவளி
பொரும அதிலே கொண்ட முக்குண விபாகநிலை

இந்த மூன்று குணங்கள் எங்கே விளைந்தது?

"கருவிலுருவே தங்கு..."

ஒருவர் நிற்பார். ஒருவர் வருவார். "அண்ணா! கபாலி கோயில் எங்கே இருக்கு?" தெரிந்தது என்றும் சொல்ல மாட்டார். தெரியவில்லையென்றும் சொல்லமாட்டார். அதுதான் தாமஸ குணம். "எங்கே இருக்கு? மனுஷன் ஏதோ யோசனையிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்," அப்படி என்று, 'வள்' என்று கடிக்கிற மாதிரி பேசுவான். அதுதான் ராஜஸ குணம்.

இன்னொருவன் "நேராகப் போங்கள் அங்குதான் இருக்கிறது; இன்று தங்கக் கவசம் சாத்தியிருப்பார்கள்" என்று சொல்லுவான். அதுதான் சத்துவ குணம். சமையல் ஆச்சா என்று கணவன் கேட்பான். ஒன்றும பதில் சொல்ல மாட்டாள். அதுதான் தாமஸ குணம். சமையல் ஆச்சா? "ஆனால் சொல்லமாட்டேன்" என்பாள். அதுதான் ராஜஸ குணம். சமையல் ஆச்சா? "பத்து நிமிஷத்திலே இலை போட்டு விடுகிறேன்" என்பாள். அதுதான் சத்துவ குணம். இவையெல்லாம் சொன்னால்தானே விளங்கும். நம் வீட்டில் என்ன குணம் என்று ... நான் இராமாயணம் சொல்லிக்கொண்டிருக்கிறேன். என்னமோ சொல்லுகிறேன் என்று எண்ணிவிடாதீர்கள். ரராஜஸ குணம், தாமஸ குணம், சத்வ குணம். இந்தச் சரீரமான இலங்கையிலே ராஜஸ குணம் ராவணன்; பத்துத் தலை: மெய், வாய், கண், நாசி, செவி, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்; இந்த ராஜஸ குணம் இப் பத்து இந்திரியங்கள் மூலமாகத் தெரிகிறது. கண் மூலமாய், காது மூலமாய், வாய் மூலமாய் இப்படி, தசேந்திரியங்கள் மூலமாக ராஜஸ குணம் வெளிப்படுகிறது. பத்து இந்திரியங்கள்; இந்த இந்திரியங்களை அடக்குகிறவன்தான் தசரதன். அவன் தசக்ரீவன். இவன் தசரதன். பத்து இந்திரியங்களை வென்றவன் தசரதன். பத்து இந்திரியங்களை வெல்லாதவன் இராவணன். நான் இராமாயண ஸாரம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். பத்துத் தேர்களை வென்றான் என்றால் வெளியுலகத் தேர்களையா? இல்லை. பத்து இந்திரியங்களை—கண்ணை, காதை, நாவை, நாசியை இப்படிப் பத்து இந்திரியங்களை. அருணகிரியார் இதைச் சொல்கிறார்.

"சாலவுடைய தவர் கண்டு கொண்டது...
... ... ... ... ... ...
இந்த்ரிய
தாபசபலம் அற"

திருவானைக்கா திருப்புகழ். அடுப்பில்லாத வீடு இருக்கலாம். திருப்புகழ் இல்லாத வீடு இருக்கக் கூடாது. வேத சாரம் திருப்புகழ். என்ன சொன்னார்?

"ஓல மறைகள் அறைகின்ற ஒன்றது."

வேதங்கள் ஓதி அறைகின்றனவாம். அது எங்கே இருக்கிறது?

"மேலை வெளியில் ஒளிரும் பரஞ்சுடர்,
ஓது சரியை கிரியையும் புணர்ந்தவர் எவராலும்
ஓத அரிய துரியம் கடந்தது"
... ... ... ... ... ... ...
"மெய் வீடு பரமசுக சிந்து..."

சிந்து என்றால் சமுத்திரம். சுக சிந்து—ஆனந்தக் கடல். அந்தப் பத்து இந்திரியங்களை வென்றவன் தசரதன். பத்து இந்திரியங்களை வெல்லாதவன் தசக்ரீவன்; இராவணன். பத்து இந்திரியங்கள் மூலமாக கெடுதலைப் பண்ணிக் கொண்டிருந்தானும். சிலர் கண்ணாலே பார்த்தாலே சாப்பாடு இறங்காது. சில பேர் கண்ணாலே பார்த்தால் அவ்வளவுதான். ஆறு மாதத்துக்கு உடம்புக்கு வந்து விடும். கண்ணிலே இருந்து நச்சு அலைகள் வருகின்றன. ஆகவே தசஇந்திரியங்களை வெல்லாதவன் இராவணன். என்ன குணம்? ராஜஸ குணம். தூங்கிக் கொண்டே இருப்பான் கும்பகர்ணன். அவன் ரொம்ப கெட்டவன் இல்லை. கும்பகர்ணன் நல்லவன். ஆனால் முரடன். சில பேர் அடித்துவிட்டு ஐந்து ரூபாய் கொடுப்பார்கள். கும்பகர்ணன் அண்ணனைத் திருத்துகிறான். "அண்ணே! 1979-ல்கூட அரசியலிலே எதிர்க் கட்சித் தலைவர் எதிர்க் கட்சித் தலைவரைத் தான் திட்டுவார். எதிர்க் கட்சித் தலைவர் மனைவியை வையமாட்டார். நீ ராமனைக் கொண்டு வந்து சிறையிலே வை. லட்சுமணனைக் கொண்டு வந்து அடி, உதை, குத்து, கொல். சீதை என்ன பண்ணினாள்?

"ஆசில்பர தாரமவை அஞ்சிறை அடைப்பேம்
மாசில் புகழ் காதலுறு வேம்வளமை கூறப்
பேசுவது மானமிடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நம கொற்றம்"

ஆசு என்றால் குற்றம்.

கும்பகர்ணன் அண்ணனைத் திருத்துகிறான். அவன் திருந்தவில்லை. தாமச குணம் கும்பகர்ணனுக்கு. சத்துவ குணம் விபீஷணாழ்வாருக்கு. விபீஷணர் என்ற வார்த்தை சிவபெருமானுடைய திருநாமம். பரமேசுவரனுக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. சகஸ்ர நாமம்.

"பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை"

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

கோவிலிலே ஆயிரம் நாமங்களிலே அர்ச்சனை பண்ணுவார்கள். அந்தச் சிவனுடைய ஆயிரம் நாமங்களிலே ஒன்று ஓம் விபீஷணாய நம: விபீஷணன் என்றால் பயம் இல்லாதவன் என்று அர்த்தம். வருமானவரி பயம், மரண பயம்; மனைவியிடம் பயம்; பிள்ளைக்குப் பயப்படுகிறானே, எத்தனை பேர். நமக்கெல்லாம் பயம் உண்டு. கடைசி பயம் மரண பயம். பரமேசுவரன் காலனை வென்றவர். காலனை உதைத்தவர். காமனை எரித்தவர். பயம் இல்லாதவன் பரமேசுவரன். அதனாலே சிவபெருமானுக்கு விபீஷணன் என்று பெயர். அந்தப் பெயரை விச்சிரவசு என்ற முனிவர் தன் மகனுக்கு வைத்தார். விபீஷணன் என்றால் சிவனுடைய நாமம் என்று நீங்கள் தெரியாமல் இருந்திருக்க முடியாது. இருந்தாலும் நினைவுபடுத்துகிறேன். நல்ல பெயர். அந்த விபீஷணர்தான் சாந்த குணம். சந்தேகப் படாதீர்கள்.

"மகனறிவு தந்தை அறிவு"

என்று நாலடியார் கூறுகிறது. அப்பா குணம் குழந்தைக்கு. அப்பா பொல்லாதவனாயிருந்தால்—

அப்பா திருடினுல் குழந்தைகளும் திருடுவார்கள். அப்பா நல்லவராய் இருந்தால் குழந்தைகளிடம் நல்ல குணம் வரும். சீதம்மாவை வாழ வைத்தது யார்? திரிஜடை. விபீஷணுழ்வார் மகள். “அம்மா! தாயே எங்கள் பெரியப்பா இராவணன் உங்களைத் தீண்டமாட்டார். விருப்பமில்லாத பெண்ணைத் தீண்டினுல் ஆயிரம் துண்டாகத் தலை வெடிக்குமென்று வேதவதி சாபம். நீங்கள் விரும்பினுலொழிய இராவணேஸ்வரன் தங்களைத் தீண்டமாட்டார். தாயே இராமச்சந்திர மூர்த்தி வருவார். தங்களுக்கு அபயம் தருவார். கவலைப்படாதீர்கள் அம்மா” என்று விஞடிக்கு விஞடி பேசிக் கொண்டிருந்தாள் திரிஜடை. நாகரிகம் அப்பொழுதே, மூன்றுஜடை போடுகிற அளவுக்கு வளர்ந்திருந்தது. இப்பொழுது இரண்டு ஜடைதானே? மூன்று ஜடை போட்டார்கள்; திரி ஜடை; விபீஷணுழ்வாரின் மகள். விபீஷணுழ்வார் சதா சிவபூஜை பண்ணுகிறவர். ஆஞ்சனேயர் போனுல் அங்கேதான் குடலை இருக்கிறது, சிவலிங்கம் இருந்தது, வேதிகை அந்தப் பூஜைக்கு உரிய சாதனங்கள், சூடம் டப்பா இருந்தன. மற்ற இடமெல்லாம் பாட்டிலாய் இருந்தது. எல்லாம் தண்ணீர் பாட்டில்தான். எல்லாம் பெருங்குடி மக்கள். விபீஷணுழ்வார் வீட்டில்தான் பூஜைக்குரிய சாதனங்கள் இருந்தன. இராவணன் அநுமாரைக் கொல்ல வேண்டும் என்று சொன்ன போது, அப்போது விபீஷணுழ்வார் தடுத்தார். “மாதரையும், தூதரையும் கொல்லக் கூடாது. நீ புலத்தியருடைய பேரன். இந்தக் குலத்துக்கு இழுக்கு வரும்” என்று விபீஷணுழ்வார் தடுத்து நிறுத்தினுர். அறிவுரை பகர்ந்தார். அண்ணு! நீ ராமனை வெல்ல முடியாது. இராமன் தசரத குமாரன் அன்று. சிவன், நாராயணன், பிரம்மா இந்த மூன்று பேரும் சேர்ந்து கூட்டணியாக வந்திருக்கிருர்கள், உன்னை அழிக்க. முதன் முதலிலே கூட்டணியைக் கண்டு பிடித்தவர் ராமர். அனுமார் சொன்னுர்:

மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தான்.

என்ன துறந்தாராம். சூலமும்—சிவன் ஆயுதம். கரகமும்—பிரம்மாவினுடைய ஆயுதம். திகிரி சங்கு—சங்கு சக்கரம் பெருமாள் ஆயுதம்.

ஆலிலை மேலே படுத்திருந்தார் நாராயணர், மலரிலே இருக்கிறார் பிரம்மா. மலையில் இருக்கிறார் சிவன். அந்த மூன்று பேரும் சேர்ந்து கூட்டணியாக வந்திருக்கிறார்கள். விபீஷணாழ்வார்,

"ஏகனாய் அந்த மூவரும் தசரத
ராமனென்று வந்தார் நாம் அங்கே
போவோம் அந்த ராகவன் பகை
நமக்கு ஆமோ"

"அண்ணா பழி சுமக்காதே." விபீஷணாழ்வார் இராவணனைப் பார்த்துச் சொல்லுகின்ற அறவுரை.

இந்தக் காலத்திலே 'நியாயம் சொன்னால்தானே சண்டைக்கு வருவான். யதார்த்தவாதி வெகு ஜன விரோதி. உண்மையைச் சொல்லுங்கள், சண்டைக்கு வருவான்.

விபீஷணாழ்வாரை வாளை எடுத்து வெட்டப் போனான், இராவணன்; நன்மையைச் சொன்னதற்கு. "தம்பி! நீ சொல்வது எனக்கு உடன் பாடில்லை" என்று சொல்லலாம். இதற்கு வெட்டப் போகலாமா?

"இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்"

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

அண்ணா! இந்த வழியில் போகாதீர்கள். இது நல்லது இல்லை என்று சொல்கிறவன் எல்லாம் நண்பன்.

எப்பொழுதுமே கசக்கின்ற மருந்து நல்லது செய்யும் வேப்பிலை, சுண்டைக்காய், பாகற்காய். இனிக்கின்ற பலாப்பழம், மாம்பழம் வயிற்று வலியை உண்டாக்கும். கொஞ்சம் குமட்டும் விளக்கெண்ணெ, உடம்புக்கு நல்லது செய்யும். பகவத் கீதை படித்தால் கொஞ்சம் தூக்கம் வரும். ஆனால் நன்மை செய்யும். நாவல் படித்தால் தூக்கம் வராது. ஏப்பம் வரும். இதைத்தான் இருபத்து நான்கு மணி நேரமும் படித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பான். புத்தகத்தின் பேர் இழந்த காதல். பகவத் கீதையையா படிக்கிறது. இரண்டு வரி படித்தால் தூக்கம் வந்துவிடும். அதுதானே ஆத்ம க்ஷேமத்தைக் கொடுக்கும். உலகம் அப்படி இருக்கிறது. விபீஷணாழ்வார் நியாயத்தைச் சொன்னார். இராவணன் என்ன செய்தான்? தம்பியை வெட்டப் போனான். விபீஷணர் நினைத்தார். தீயவனோடு ஒட்டிப் பழகினால் அந்தப் பாவம் நமக்கு வரும். நான் உங்களையெல்லாம் வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். எந்தப்பாவத்துக்கும் மன்னிப்பு உண்டு. மதுபானத்தைக் கூட கடவுள் மன்னிப்பார். லைசென்ஸ் வாங்கிக் கொண்டு குடித்தால். குடித்தால் நான்தான் கெட்டுப் போவேன். உங்களுக்கு இல்லை அது. பொய் சொன்னால் நான்தான் கெட்டுப் போவேன். உங்களுக்கில்லை, அது. ஒருவன் மனைவியை நாம் விரும்புவோமானால் அந்தக் குடும்பமெல்லாம் அவமானப்பட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ளும். ஈடு செய்ய முடியாத ஒரு அபகீர்த்தி. நஞ்சு உண்டால் நான்தான் செத்துப் போவேன். யாருக்கு என்ன கெடுதல்? திருடினால் நான் ஜெயிலுக்குப் போவேன். யாருக்கு என்ன கெடுதல்? லஞ்சம் வாங்கினால் விசாரணை வரும். யாருக்கு என்ன கெடுதல்? பரதார கமனம் என்பது அந்தக் குடும்பம் அபகீர்த்தி அடையும். அந்தப் பாவத்தைச் செய்கின்றான் இராவணன். எல்லாப் பாவத்தையும்விட மன்னிக்க முடியாத பாவம் அதுதான்.

**''அறன்கடை நின்ருருள் எல்லாம் பிறன்கடை**
**நின்ருரில் பேதையார் இல்.''**
**''பிறன்மனை நோக்காத பேராண்மை சான்ருேர்க்கு**
**அறனென்ருே ஆன்ற வொழுக்கு''**

என்பார் திருவள்ளுவர்.

அந்த மகத்தான பாவத்தைச் செய்தான் இராவணன். இவனேடு கூடிஞல் அந்தப் பாவம் நமக்கும் வரும் என்று விபீஷஞழ்வார் தீயவனை விட்டு விலகி விட்டார்.

**''கொம்புளதற் கைந்துமுழம் குதிரைக்குப் பத்துமுழம்**
**வெம்புகரிக் காயிரம்தான் வேண்டுமே—வம்புசெறி**
**தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து**
**நீங்குவதே நல்ல நெறி''**

என்று ஔவையார் பாடிஞர். அதனுலே அவனை விட்டு விலகி விட்டார். அண்ணனைக் காட்டிக் கொடுப்பது என்று அர்த்தமில்லை. சில பேர் கருங்காலி என்பார்கள். அந்த நோக்கம் அவருக்கில்லை. இராமாயணத்தை முழுக்கப் படித்தால்தான் எல்லாம் விளங்கும். விபீஷஞழ்வார் அண்ணனைப் பார்த்து அஞ்சலியிட்ட கையோடு சொல்லுகிருர். அந்தப் பாடலைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

**எந்தைநீ யாயுநீ எம்முனீ தவம்**
**வந்தனைத் தெய்வநீ மற்று முற்றுநீ**
**இந்திரப் பெரும்பதம் இழக்கின்ருய் என**
**நொந்தனென் ஆகலின் நுவல்வ தாயினேன்.**

"அண்ணு, எனக்கு நீ தமையனுர் என்ற அந்த ஒரு முறையில் மட்டும் சொல்லவில்லை.

"வந்தனைத் தெய்வம் நீ''—நான் வணங்குகின்ற தெய்வம் அண்ணுதான். அண்ணுதான் எனக்குத் தெய்வம், அண்ணுவைத் தவிர வேறு தெய்வம் கிடையாது என்று தொடங்குகிருர்.

**''வந்தனைத் தெய்வம் நீ. மற்றும் முற்றும் நீ''**

நான் ஏன் இதைச் சொல்கிறேன் ?

**''இந்திரப் பெரும் பதம் இழக்கின்றாய் என
நொந்தனென்.''**

இந்திரனுக்கு எய்தாத ஒரு பெரும் பதவியை இழக்கப்போகின்றாயே என நொந்து சொல்கின்றேன். அதனாலே தங்களுக்குச் சொல்லுகின்றேன். இதுதான் ஆரம்பம். அவன் நலத்துக்காகச் சொல்லுகிறார். அவனுக்குப் பிடிக்கவில்லை. மனைவி சொல்லுவாள் மணி எட்டானால் வீட்டுக்கு வாருங்கள் என்று. இவனுக்கு நன்மையைத்தான் அவள் சொல்லுகிறாள்.

சிவன் விரும்பினாராம். அதனாலே சிவகாம சுந்தரி' பொதுவாக ஆன்மாக்களுக்கு விருப்பத்தை உண்டாக்குகிறவன் காமன். இந்துக்களுக்கு ஒரு மன்மதன், கிறிஸ்துவர்களுக்கு ஒரு மன்மதன், முஸ்லிம்களுக்கு ஒரு மன்மதன் என்று கிடையாது. எல்லோருக்கும் காமன் (Common—பொது)நல்லதைச் சொன்னால் யார் கேட்பார்கள்? அதற்காக இராவணன் புத்தி சொன்ன விபீஷணனைக் கத்தி எடுத்து வெட்டப் போனான். இராவணன் ராஜஸகுணம் இல்லையா? விபீஷணாழ்வார் என்ன குணம்? சத்துவ குணம். ராஜஸத்தை விட்டுச் சத்துவம் பிரிகிறது. நேராக வடக்கு நோக்கி வந்தார். தெற்கு நோக்கிப் போவது மரண யாத்திரை. வடக்கு நோக்கிப் போவது சரண யாத்திரை. வடக்கேதானே ஹிமாசலமும் கைலாசமும். அதனால் தானே இமய மலையிலிருந்து கல் கொண்டுவந்து கண்ணகி படிமம் செய்தான் செங்குட்டுவன். தமிழ் நாட்டில் கல்லா இல்லை? இமாசலத்திலிருந்து கல் கொண்டு வந்தான் என்று இளங்கோவடிகள் பாடுகிறார். அப்பொழுது வடக்கே இருக்கிற கல்லுக்கு உயர்வு என்று தெரிகிறதல்லவா ? இன்றைக்கு நீங்கள் காவேரி ஜலமோ, வைகை ஜலமோ எடுத்து பாட்டிலிலே

ஊற்றிவையுங்கள். பத்து நாள் ஆனால் புழுத்து விடும். கங்கா ஜலத்தைப் பாட்டிலில் ஊற்றி வையுங்கள். ஆயிரம் வருஷங்களானாலும் புழுக்காது. அந்த எம் பெருமான் தவழ்ந்த நதி க்ங்கா நதி. அது உற்பத்தி யாகும் இடம் ஹிமாசலம், ஹிமாசலத்திலே கைலாசம் இருக்கிறது. கைலாச மலையைச் சுற்றிவர வேண்டு மென்றால் 29 நாட்கள் ஆகும். அப்பொழுது வடக்கு நோக்கிப் போவது சரண யாத்திரை. விபீஷணாழ்வார் சரண யாத்திரையாகப் போய் இருக்கிறார். சத்துவ குணம் போகிறது என்று அர்த்தம். எந்தக் குணத்தை விட்டுப் பிரிந்தது ? ராஜஸ குணத்தை விட்டு.

அங்கே சேனாதிபதி நின்று கொண்டிருந்தான், நீலன். போன ஜென்மத்திலே அக்கினி. அக்கினி எவ்வளவு குளிர்ச்சியாய் இருக்கும் ? கொளுத்தும். இவர் அழுத கண்ணும் தொழுத கையுமாக வந்தார். “நில்” என்றான் நீலன். பயந்து விட்டான். சேனாதிபதி இல்லையா ? சேனைகளைப் பார்த்து, ‘சேனைகளே போருக் குப் புறப்படுமாறு மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன்’ என்று சொல்லுவான்? ‘மார்ச்’ என்பான். அவன்தானே சேனைத் தலைவன். சேனைத்தலைவன் என்றால் வணக்கத்துடனா கேட்டுக் கொள்வான் ? சேனாதிபதி அக்கினி பகவான். யார் ? நீலன். “நில், யார் நீ ?” “நான் இலங்கை; விபீஷணன்; இராவணன் தம்பி. எம்பெருமானை அடைய வேண்டும்” என்றார். “இராவணன் தம்பியாம், விபீஷணனாம். அழுத கண்ணும் தொழுத கையுமாக வந்திருக்கிறான். விடட்டுமா, ‘விடட்டுமா’? விடவா, ‘விடவா’? என்றான். இராமன் உடனே இதைப் பார்த்து, (இராமனுக்குச் சமானமாக யார் இருக்கிறார்கள்? (சமானமில்லாதவன். இருந்தாலும் அரசியல் என்றால் எல்லோரையும் கலந்து கொள்ள வேண்டும். நம் இஷ்டத்துக்குச் செய்து கொள்ளக் கூடாது.) “தோழர்களே! இராவணன் தம்பி

யாம். விபீஷணனும். வந்திருக்கிறுன். என்ன செய் வது?'' எனக் கேட்டார். தேவரீர் திருவுள்ளம் என்று சொல்ல வேண்டும். எழுந்தான் சுக்ரீவன். சுக்ரீவன் என்ருல் அழகான கழுத்துள்ளவன். அதுவும் சிவ நாமம். சிவபெருமான் திருமேனி பவளத் திருமேனி. அது நீலத் திருமேனி. மணிகண்டன். நீல கண்டன். சுக்ரீவாய நம: என்று ஒரு நாமம். வாலி தம்பிக்குச் சுக்ரீவன் என்று பெயர்-சிவனுடைய நாமம். அவன் "அண்ணு உத்தரவு என்று சொல்லக் கூடாதா?'' "என்ன இருந்தாலும் கூடப் பிறந்த அண்ணன் தெய் வத்துக்குச் சமானம். அண்ணனை விட்டு வருகிறவன் சகோதரத் துரோகி. அவனைச் சேர்க்கக் கூடாது'' என்ருன்.

யார்? சுக்ரீவன் சொல்கின்ருன், 'அண்ணன்தான் தெய்வம்' என்று. இதை மற்றவர்கள் சொல்லலாம். சுக்ரீவன் சொல்லலாமா? அண்ணனைக் காட்டிக் கொடுக் கிருனே. இவன் ஒரு அயோக்யன். அங்கதன் சொன் ஞன், அங்கேயே குழி தோண்டிப் புதைக்க வேண்டு மென்று. இப்படி எல்லோரும் சொன்னுர்கள். ஒருத்தர் தான் பேசாமலிருந்தார்; ஆஞ்சனேயர். அறிவாளிகள் பேசமாட்டார்கள். அவசியம் வந்தால் பேசுவார்கள். தங்க மணிக்கு ஒலி வராது. ஓசை வருவதெல்லாம் பித்தளை, வெண்கலத்தில்தான். "ஆஞ்சனேயா! நீ என்ன சொல்கிருய்?'' "எல்லோரும் சொல்கிருர்களே. என்று பேசாமல் இருந்தேன். நீங்கள் கண்டவர்கள் பேச்சைக் கேட்காதீர்கள். கண்டவன் பேச்சைக் கேளுங்கள். நான்தான் நேராகக் கண்டவன். இவர் வீட்டில்தான் சிவ பூஜைக்குரிய சாதனங்கள் இருந்தன. இவர் புதல்விதான் அம்பிகைக்கு ஆதரவு தந்து கொண் டிருந்தாள்; திரிஜடை. விபீஷணன் உத்தமமானவன். நற்குணமுடையவன். அறவுரை பகர்கின்றவன்.

**''ஆதலால் இவன் வரவு நல்வரவே என உணர்ந்தேன்''**

மற்றவர்கள் சொன்னபடி அவனைத் தீயவனாகவே வைத்துக் கொள்ளலாம். வந்து என்ன பண்ணுவான்? அறிவாளி பேசுகிறார். தாங்கள் யார்? வீரராகவன். தங்கள் கையில் என்ன இருக்கிறது? பிரசண்ட கோதண்டம். இவன் கெட்ட எண்ணத்தோடு வந்து தேவரீரை என்ன பண்ணுவான்? ஒரு மூட்டைப் பஞ்சு வந்து நெருப்பை என்ன பண்ணும்? ஒரு மூட்டை உப்பு காவேரி வெள்ளத்தை என்ன பண்ணும்? காவேரி பயப்படுமா? அதைப் போல,

**தேவர்க்கும் தானவர்க்கும் திசைமுகனே**
**முதலாய தேவ தேவர்**
**மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை**
**முற்றுவிப்பான் மூண்டு நின்றே**
**ஆவத்தின் வந்தபய மென்றானை**
**அயிர்த்தகல விடுதி யாயின்**
**கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த**
**தொவ்வாதோ கொற்ற வேந்தே.**

தானவர்களாலும், தேவர்களாலும், வானவர்களாலும் முடிக்க முடியாத காரியத்தை நான் முடிப்பேன் என்று பிரசண்ட கோதண்டத்தை ஏந்தியிருக்கிறீர் தாங்கள். விபீஷணன் தங்களைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்தாலும் தேவரீரை என்ன பண்ணுவான்? தங்கள் கையில் இருப்பது அந்தக் கோதண்டம் அல்லவா?

**,‘தேவர்க்கும் தானவர்க்கும்...**
**ஆவத்தில் வந்து அபயமென்றானை அயிர்த்து அகல’’**

அயிர்த்து—சந்தேகப்பட்டு. கூபம் என்றால் கிணறு. கூவம் என்று அது தமிழிலே திரிந்து வருகிறது. பாபம் என்பது பாவம் என்று வருகிறது. பகரம் வகரமாகிறது.

"கூவத்தின் சிறு புனலை"

கிணற்றுத் தண்ணீரைக் கண்டு கடல் அஞ்சுமா?

"கூவத்தின் சிறுபுனலைக் கடல் அயிர்த்தது
ஒவ்வாதோ கொற்ற வேந்தே".

சமுத்திரமானது கிணற்றுத் தண்ணீரைக் கண்டு அஞ்சுமா?

"கூவத்தின் சிறுபுனலை...கொற்ற வேந்தே"

நாம் இருப்பது சென்னை. இந்தக் கூவம் தண்ணீரைக் கண்டால் கடல் பயப்படுமா? (கூவம் என்ருல் கிணறு.)"

"ஆதலால் இவன்வரவு நல்வரவே
என உணர்ந்தேன் அடியனேன் உன் திருவுளத்தின்
குறிப்பு அறியேன் என விட்டான்"

தன் கருத்தைச் சொன்னுர். "தேவரீர் திருவுளம் எப்படியோ?" என்ருர். அப்படிச் சொன்னவர் யார்?

"காதல் நான்முகனுலும், கணிப்பரிய
கலை அனைத்தும் கதிரோன் முன்சென்று
ஓதினுன்"

கல்வியிலே பெரியவர் ஆதித்தர். யாக்ஞுவல்கியரிடமிருந்து ஆதித்தன் யஜுர் வேதம் கொண்டு வந்தார் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். சுக்ல யஜுர் வேதம் ஆதித்தியன் இடமிருந்து யாக்ஞுவல்கியர் கொண்டு வந்தார். கோவிலிலே 9 விக்ரஹம் இருக்கிறது. நவக்ரஹம். நடுவிலே இருப்பது ஆதித்யர். அவர்தான் கல்வி க்ரஹம். மற்றதெல்லாம் கல் விக்ரஹம். ஆதித்யன்தான் கல்வியிலே பெரியவர். இப்போது ஞாயிற்றுக்கிழமை அன்று பள்ளிக்கூடம் கிடையாது. நாம் என்ன பண்ண வேண்டும்? பிள்ளைகளை

ஞாயிற்றுக்கிழமையன்று படிக்கச் சொல்ல வேண்டும். ஞாயிற்றுக்கிழமை படித்தால் படிப்பு நன்ருக வரும். ஆதித்யன் கல்விக்குத் தலைவன். ஆஞ்சனேயருக்குக் குரு. துரோணுசாரியரால்தான் அர்ஜுனனுக்குப் பெருமை. மீனுட்சி சுந்தரம் பிள்ளையாலே. உ. வே. சுவாமிநாதய்யருக்குப் பெருமை. ராமகிருஷ்ணராலே விவேகானந்தருக்குப் பெருமை. ஆசார்யனை வைத்து சிஷ்யனை எடை போட வேண்டும். நான் வடலூர் திருப்பணி செய்யும் பொழுது எம். எம். தண்டபாணி தேசிகரைப் பாலக்காட்டிலே கூப்பிட்டு கச்சேரி வைத்தேன்; நிதி வசூலுக்கு. அங்கே கல்லிடைக்குறிச்சி பிராம்மணர்கள் எல்லோரும் அவரைத் தனியாகச் சந்தித்து, இப்படி அற்புதமாகப் பாடுகிறீர்களே, யார் சிக்ஷை? என்று கேட்டார்கள். நான் ராஜமாணிக்கம் பிள்ளையிடம் சிக்ஷை பெற்றேன் என்ருர். குருவை வைத்துத்தான் சிஷ்யனுக்குப் பெருமை.

எனக்கு ஒரு குரு இருந்தார், மதுரையிலே. அவர் சொன்னுல், அப்படியே பலிக்கும். எங்கள் ஊருக்கு வந்திருந்தார் காங்கேயநல்லூருக்கு. புதியதாக வந்திருக்கிருர். "சுவாமி! எங்கள் ஊரிலே அம்மன் கோவில் இருக்கிறது. ஊர் க்ஷேமமாய் இல்லை. அந்தக் கோவிலுக்கு நீங்கள் வந்து ஏதாவது மங்களாசாசனம் மாதிரி உங்கள் கையாலே தொட்டு ஏதாவது செய்யுங்கள்" எனக் கேட்டோம். "பின்னப்பட்ட சுவாமியிடம் நான் ஏண்டா வரேன்?" என்ருர். போய்ப் பார்த்தால் மூக்கு உடைந்திருக்கிறது. புதியதாய் வந்தவர் பின்னப்பட்ட சுவாமி என்கிருர். உள்ளூர்க்காரனுக்குத் தெரியவில்லை. அந்த மாதிரியான குருநாதரிடம் நான் குருகுலவாசம் பண்ணினேன். அதனுல் தான் ஏதோ கடுகளவு ஞானம். ஆசார்யனுல்தான் சிஷ்யனுக்குப் பெருமை. நல்ல குரு தேவரை அடைய வேண்டும். எனவே ஆஞ்சனேயர் குரு ஆதித்ய பகவான். அவர்.

எவ்வளவு வேகமாய்ப் போகிறவர். அவ்வளவு வேகத் துக்குப் போய்ப் படித்தாராம், ஆஞ்சனேயர்.

**"கதிரோன் முன்சென்று காதல் நான்முகனுலும்**
**கணிப்பரிய கலை அனைத்தும்**
**ஓதினுன்...உலகை உய்யக் கொண்டான்"**

என்று கம்ப நாட்டாழ்வார் சொல்லுகிறுர். "ஆகவே விபீஷணன் நல்லவன். தங்களை அவர் சரணடைய வருகிறுர். வரட்டும்" என்ருர். தங்களைப் பார்க்க வந் திருக்கிறுர். வருக, வருக, வருக. அப்பொழுது ராமர் சொன்னுர். யாராயிருந்தாலும் அடைக்கலம் புகுந்தவனை ஆதரிப்பது எங்கள் குலத்தின் பழக்கம். அடைக்கலம் புகுந்த அற்ப புருவுக்காக உடல் தசையை அறுத்துக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியின் பேரன் நான். என்ன செய்தார்? ராமனுடைய அறிவின் திறம். ஆஞ்சனே யனை விட்டு அழைக்கவில்லை. "சுக்ரீவா! நீ போய் அழைத்துக் கொண்டுவா" என்ருர். இனம் இனத்தோடு சேர்த்தார். இவனும் அண்ணனை விட்டு வந்தவன். அவனும் அண்ணனை விட்டு வந்தவன். ஆகவே சுக்ரீ வன் போய் அவரைக் கட்டித் தழுவினுன். எம்பெரு மான் தங்களை அழைக்கின்ருர். வாருங்கள். சத்துவ குணம் இப்பொழுது ராமரிடம் வருகிறது. விபீஷணுழ் வார் வரவில்லை. தாமஸ குணத்தை விட்டுப் பிரிந்து சத்துவ குணம் வருகிறது. சத்துவ குணம்தான் பகவானைப் பார்க்கும்.

பெரிய புராணம் படித்தவர்களுக்குத் தெரியும். பெரிய புராணத்திலே முக்கியமான பாடல்

"ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள" சுந்தர மூர்த்தி நாயனுர் நடராஜாவைப் பார்க்கிறுர். இந்தக் கண்ணிலே ஐந்து புலன்களும் அடங்கி விட்டனவாம்.

''ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆக, குணமொரு மூன்றும் திருந்து
சாத்துவிகமேயாக''

இதுதான் நீங்கள் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டியவை. ராஜஸம், தாமஸம், சத்துவ குணம் இந்த மூன்று குணங்களிலே இரண்டு குணங்கள் அழிந்து சத்துவ குணம் மேலிட்டதாம் சுந்தரருக்கு. அந்த சத்துவ குணம் பரமாத்மாவிடம் அடைக்கலம் புக வருகிறது. அங்கே

''ராமனைக் கண்ணுரக் கண்டானே விபீஷணன் கை
மாமுடி மேல் வைத்துக் கொண்டானே''

ஏன் இப்படிச் சொல்ல வேண்டும் ? சுவாமி அங்கேயும் இருக்கிறார். இங்கேயும் இருக்கிறார். அவருக்கும் சேர்த்து வணக்கம். எல்லோர் தலையிலேயும் பகவான் இருக்கிறார்.

பெருமாளுடைய மார்பிலே பிறந்தவன் மன்மதன். பூவிலே இருக்கிறவர் பிரமன்.

''காமனும் செங்கமலப் பூமனும் பணிபரந்
தாமனை ஆயிர நாமனைக் கோதண்ட
ராமனைக் கண்ணுரக் கண்டானே''

அந்தக் கவியின் அழகு. ராமனை என்று எடுத்தார். காமனை என்று முடித்தார். இதுதான் எதுகை என்று பெயர். ஒரு பாட்டு பாட வேண்டும் என்றால் ஏழு விஷயம் பார்க்க வேண்டும். எழுத்து, அசை, சீர், தளை, எதுகை, மோனை, அடி. இவையெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஞாபகப்படுத்துகிறேன். பாட்டுப் பாடினால் எது கைவிட்டாலும் எதுகையை விடக்கூடாது. 'தோடுடைய' என்று ஆரம்பித்தார். பீடுடைய, காடுடைய, ஏடுடைய, என வரும். இப்பொழுது, ''குப்ப

னும் குளத்துக்குப் போனான். கோவிந்தனும் கூடவே போனான். அப்பனும் அங்கே வந்தான். ஆத்தாளும் வந்து சேர்ந்தாள். எப்படா வந்தே என்றாள். இப்போதான் வந்தேன் என்றான்" எனப் பாடுவார்கள். ஒரு மண்ணும் இருக்காது. அருணாசலக் கவிராயர்,

"வெள்ளம் ஆன வானர வர்க்க"

மேலே கலசம் வைப்பார்கள், தங்கக் கலசம். ஏழு கலசத்துக்கு நடுவே.

"நடுவே தம்பி மேரு மலை போல் அருகே நிற்க"

பதினாலு ஆண்டுகள் பூமியிலே உட்காரவில்லை லக்ஷ்மணன்.

"......புள்ளியில் போடாத மேகம் ஒக்க"

சில தாய்மார்களுக்கு அளவில்லாமலே இயற்கை அழகு இருக்கும். தங்கக் குடம் பொட்டு வைக்காமலேயே நன்றாக இருக்கும். சில பேர் சும்மா பேசினாலே அழகாய் இருக்கும். அப்படி "தோள்வளை நீங்கி சோபிக்க"

"கள்ள அரக்கர் தினம் கிள்ளிக் கிள்ளி அருந்த
கொள்ளை கொடுத்தமரர் துள்ளித் துள்ளி வருந்த
வள்ளல் ஆதிமுறை உள்ளபடி திருந்த
பள்ளி அரவணையைத் தள்ளி யெழுந்திருந்த
ராமனைக் கண்ணாரக் கண்டானே விபீஷணன்கை
மாமுடி மேல் வைத்துக் கொண்டானே"

இந்தப் பாட்டினுடைய வேகம், அதனுடைய தனி பாவம்,அருமையிலும் அருமை. ராமச்சந்திர மூர்த்தியை நேருக்கு நேராகப் பார்க்கிறார். எது பார்க்கிறது? பகவானைத் தரிசிப்பது சத்துவ குணம். பலாப் பழத்தை வாங்கினால் அப்படியேவா சாப்பிடுகிறோம். எவ்வளவு தள்ளிவிட்டு சுளையை எடுக்கிறோம். ராமாயணமான

பலாப்பழத்திலே சத்துவ குணம் பகவானை அடைகிறது என்கிற சுளையை உங்கள் கையிலே தருகிறேன். நாம் எல்லாம் இன்றிலிருந்து என்ன செய்ய வேண்டும்? சத்துவ குணத்தை அடைய வேண்டும். அண்ணு என்று காலிலே விழுந்தார். அவன் பகைவனுடைய தம்பி. சீதையை அபகரித்த பரம சண்டாளனுடைய தம்பி. வந்திருக்கிறுன் நம்பி. அப்பொழுது எம் பெருமான் சொன்ஞா.

"இந்தா விபீஷணு இலங்காபுரி ராஜ்யம்"

அப்பொழுது என்ன புரிகிறது? ராவணனை ஒரு தூசாக நினைத்துக் கொண்டிருக்கிறுர். ஒரு விநுடியிலே இராவணனைச் சம்ஹாரம் பண்ணி விடுவார். வானரங் களுக்குப் பெருமை வரட்டுமென்று, இப்படித் திருவிளை யாடல் செய்கிறுர். பதவி, ஏழு நாள் எட்டு நாள் இல்லை.

"இந்திராதி தேவர்கள் உள்ள நாள்
வரைக்கும் இந்தா இந்தா இந்தா!
வேதம் உள்ளளவும், வேத கீதம்
உள்ளளவும் பஞ்ச பூதம் உள்ளளவும்
பாரிஜாதம் உள்ளளவும் இந்தா!
கார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், ஈரேழ்
பார் உள்ளளவும், எந்தன்பேர்
உள்ளளவும் தந்தேன்! தந்தேன்!! தந்தேன்!!!"

ராமா என்ற பேர் எதுவரைக்கும் இருக்குமோ அது வரைக்கும் இலங்கையை ஆள் என்றுர். அவர் எண்ணு கிறுர். ராமா என்ற பேர் யுகங் கணக்காக இருக்குமே. நான் இருப்பேனு ?

"கேள்வியும் நீயே, பிர
தாபியும் நீயே என்
ஆவியும் நீயே சிரஞ்சீவியும்
நீயே சொன்னேன்"

நாம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்தால் கட்டில், மெத்தை எல்லாம் தானே கொடுக்கிறோம். இலங்கையை மட்டும் கொடுக்கவில்லை. ஆயுசும் கொடுத்தார். "சிரஞ்சீவியும் நீயே" இப்படிச் சொன்ன வுடனே ஆஞ்சனேயர் ஒரு குதி குதித்தார். அர்த்தம் தெரியாமல் எல்லோருமே குதித்தார்கள். இப்பொழுது சந்தானம் பாடிக் கொண்டிருக்கிறார். ஆதி தாளத்திலே நடனம் நடந்து கொண்டிருக்கிறது. எதிரில் இருக்கிறவர் கள் எல்லாம் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். தகதிமி தகதிமி என்று பாடிக்கொண்டிருக்கிறார். அதற்கு ஒரு கணக்கு இருக்கிறது. அவர் என்ன செய்தார் என்கிற கமால் வேலை சில பேருக்குத் தெரியும். விஷயம் தெரிந் தவன் கை தட்டுவான். ஒன்றுமே புரியாதவனும் கையைத் தட்டுவான். இதெல்லாம் லயத்திலே உள்ள நுட்பங்கள். இப்படிச் சொன்னவுடனே ஆஞ்சனேயர் ஒரு குதி குதித்தார். அர்த்தம் தெரியாமல் எல்லோரும் குதித்தார்கள்.

அந்த அம்மாள் மகா பதிவிரதை; சீதை. அந்த அம்மாவின் கண்ணிலே இராமரைப் பார்த்தனராம். அதைப் பார்த்து ஆஞ்சனேய சுவாமி விஷயம் தெரிந்து குதித்தார். ஏன் ஆஞ்சனேயர் குதித்தார்? ஒருவனுக்குக் கலை மாமணிப் பட்டம் கொடுத்தார்களா னால் மற்றவர்கள் எல்லாம் பெருமூச்சு விடுகிறார்கள் அல்லவா? ஆஞ்சனேய சுவாமி கணையாழியைக் கொடுத்தவுடன் ஆஞ்சனேய சுவாமிக்குச் சிரஞ்சீவிப் பட்டம் கொடுத்தார் எம்பிராட்டியார்.

"பாழிய பணைத்தோள் வீர துணையிலேன் பரிவுதீர்த்த
...ஊழி ஓர் பகலாய்"

கம்பராமாயணம் குருகுல வாசம் பண்ணிப் படிக்க வேண்டும். நான் குருகுலவாசம் பண்ணினவன்.

"பாழிய பணைத் தோள்"

ஒரு மனிதனுக்குப் புகழ் முகத்திலே இல்லே. தோளிலே இருக்கிறது. அதனுலேதான் ராமச்சந்திர மூர்த்தி மிதிலேக்குப் போனபோது "தோள் கண்டார் தோளே கண்டார்" என்ருர். தோளேப் பார்த்தால்தான் பெருமை விளங்கும்.

அவர் கணேயாழியையா கொடுத்தார்? உயிரைக் கொடுத்தார்.

"ஊழி ஓர் பகலாய்"

என்ன அர்த்தம்? தை மாதம் தொடங்கி ஆறு மாதங்கள் தேவர்களுக்கு ஒரு பகல். ஆடி தொடங்கி மார்கழி இறுதிவரை ஆறு மாதம் தேவர்களுக்கு இரவு. மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற் காலம். அதனுல்தான் "அர்ஜுனு! மாதங்களிலே நான் மார்கழி மாதமாய் இருக்கின்றேன்" என்ருர் பகவான். மார்கழி கீர்த்தி வாய்ந்த மாதம். எல்லாக் கோயில்களிலும் பூஜை, ஜபம், தபம் நடக்கும். மார்கழி மாதம் வியாழ பகவான் வீட்டிலே ஆதித்திய பகவான் சஞ்சரிக்கிற மாதம். ஜோஸ்யம் படித்தவர்களுக்குத் தெரியும். அந்த தனம் வீடு, வியாழனுடைய வீடு. அதிலே ஆதித்திய பகவான் சஞ்சரிக்கிற மாதம் மார்கழி மாதம். வியாழ னுக்குச் சொந்தமானது தனுர் ராசி. மார்கழி மாதம் விடியற்காலம் ஒரு நாள் பூஜை பண் ணிஞல் கோடி பூஜை பண்ணினதற்குச் சமானம். மார்கழி மாதம் விடியற்காலம் தூங்கக் கூடாது. கொஞ்சம் பகவன் நாமாவையாவது சொல்ல வேண்டும். கோயிலுக்குப் போக வேண்டும். மார்கழி மாதம் தேவர்களுக்குப் பிராதக் காலம். தை தொடங்கி ஆனி வரைக்கும் பகல். ஆடி தொடங்கி மார்கழி வரைக்கும் இரவு. அப்பொழுது நமக்கு 360 நாள் என்ருல் தேவர்களுக்கு ஒரு நாள். நமக்கு 360 ஆண்டுகள் என்ருல் தேவர்களுக்கு ஒரு ஆண்டு. நான்

இப்பொழுது சொல்லுவது கணிதம். கணிதம் ஒரு போதும் தவருது. 360 ஆண்டுகள் தேவர்களுக்கு ஒரு ஆண்டு. தேவ ஆண்டிலே 4000 ஆண்டுகள் கிருத யுகம். ஆரம்பம் 400; அந்தம் 400. வருஷ, மாசத்தைச் சந்தேகப்படலாமா? சூரிய கிரகணத்தை 5000 ஆண்டு களுக்கு முன்பே கணித்து வைக்கின்ருனே. தேவ ஆண்டிலே 3000 ஆண்டுகள் திரேதா யுகம். ஆரம்பம் 300; அந்தம் 300. தேவ ஆண்டிலே 2000 ஆண்டுகள் துவாபர யுகம்; ஆரம்பம் 200; அந்தம் 200. தேவ ஆண்டிலே 1000 ஆண்டுகள் கலியுகம். ஆரம்பம் 100; அந்தம் 100. நான்கும் சேர்ந்து எவ்வளவு ஆயிற்று? 4800, 3600, 2400, 1200. 12,000 ஆண்டுகள். எது. தேவ ஆண்டிலே. 12,000 ஆண்டுகள் ஆனுல். அப்படி 1000 சதுர்யுகம் ஆனுல், அதுதான் பிரம்ம பதவி. அப்போதுதான் பகவான் உலகத்தை ஜலம் ஆக்கி ஓய்வு எடுத்துக் கொள்கிருர். பகவான் ஆல் இலேயில் இருப்பார்; அதற்கு ஊழி என்று பெயர். அந்த ஊழி தான் பிரம்மாவின் படைப்பு.

> **“ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டெலாம்**
> **உலகம் ஏழும் ஏழும்”**

என்ருள் சீதை.

> **“ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டெலாம்”**

அப்பொழுது ஊழி ஒரு பகல் என்று சொன்னேன். 1000 சதுர் யுகம் ஆனுல் ஒரு ஊழி. இன்னொரு 1000 சதுர் யுகம் ஆனுல் அது இரவு ஊழி. அது மாதிரி அந்த நாள் முப்பது நாளானுல் மாதம். அந்த மாதம் 12 ஆனுல் ஒரு ஆண்டு. அந்த ஆண்டு100 ஆண்டானுல் பிரம்மா ரிடையராகி விடுவார். அப்புறம் ஆஞ்சனேயர் பிரம்மாவாகி விடுவார். பதவிக்காகத் தபசு பண்ணு கிருர் ஆஞ்சனேயர். இப்பொழுது இந்திரன் ரிடையர் ஆனவுடன் அடுத்த இந்திரனுக வரப் போகிருர்

மகாபலிச்சக்கரவர்த்தி. இப்பொழுது பிரம்மாவுக்கு 50 ஆண்டு முடிந்து 51-ம் ஆண்டு வரப் போகிறது. ஒரு பிரம்மா ஆயுளில் 7 கல்பங்கள் இருக்கும். இப்பொழுது 3 கல்பம் முடிந்து ஸ்வேத வராக கல்பம் நடக்கிறது. அதிலே 8—வது மன்வந்திரம் நடக்கிறது. ஒரு மன் வந்திரத்துக்கு 81 சதுர்யுகம். இப்பொழுது 28–வது சதுர்யுகம். நான் புள்ளி விவரமாகச் சொல்லுவேன். பிரம்மாவினுடைய கணக்கு மாதிரி.

**''ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்**
**ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி என்ருள்''**

பதினாலு உலகமும் அழிந்தாலும் நீ அழியாமல் இருப்பாய். இதைக் கேட்டவுடன் ஆஞ்சனேயர் சந்தோஷப் படவில்லை. துக்கப்பட்டார். ஏன்? பதினாலு உலகமும் போய், எல்லோரும் போய் நான் மட்டும் ஒத்தையிலே இருந்தால் இதை விடக் கவலை உண்டா? காரிலே எட்டு பேர் போகிருேம், குடும்பமாய். 7 பேர் செத்துப் போய் நாம் மட்டும் பிழைத்தால்? நாமும் போய் இருந்தால் நன்ருக இருக்குமே. நீங்கள் எல்லோரும் போய் நான் மட்டும் உட்கார்ந்து பேசினுல் எப்படியிருக்கும்? தன்னந் தனியாக. தன்னந் தனியாக இருப்பது அந்த ஞானம்.

**''தன்னந் தனி நின்றது தானறிய**
**இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ**
**மின்னும் கதிர்வேல் விகிர்தா நினைவார்**
**கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே''**

அதுதான் தனிமையிலே இனிமை உண்டாகும். ஆஞ்சனேயர் அறிவாளி. பதினான்கு உலகமும் அழிந் தால் நான் எப்படி ஒத்தையிலே இருப்பேன் என்று கவலைப்பட்டார், சிரஞ்சீவிப் பட்டம் சீதை கொடுத்த போது. இப்பொழுது விபீஷணாழ்வாருக்கு இராமர் கொடுத்தார் சிரஞ்சீவிப் பட்டம். அனுமார் பார்த்தார்.

துணை கிடைத்ததே என்று மகிழ்ந்தார், ஆஞ்சனேயர் ஒன்றும் அர்த்தமில்லாமல் மற்றவர்களும் களித்தனர். சத்துவக் குணத்துக்கு அடைக்கலம் கொடுத்து, சரீர மான இலங்கையிலே தாமச குணமான கும்பகர்ண னையும், ராஜஸ குணமான இராவணனையும் கொன்று சத்துவக் குணத்திற்கு முடிசூட்டி விட்டார். நான் சொல்லுகிற இராமாயணமே வேறு. ராமன் யார்? ஆத்மா என்பதுதான் ராமர். ஆத்மராமர். அதிலே சீதை யார்? ஆனந்தம்தான் சீதை. ஆனந்தமான சீதையைத் தேடிக் கொண்டு ஆத்மராமர் போனார். மெய்யுணர்விலே ஆனந்தத்தைக் கண்டு பிடிக்கிறது. மெய்யுணர்வு ஆஞ்சனேயர். இப்பொழுது ராமாயணத் தின் சாரத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆஞ்ச னேயர் என்றால் ஏதோ ஒரு குரங்கு என்று எண்ணி விடாதீர்கள். மெய் உணர்வு. திருவள்ளுவர் திருக் குறளிலே மெய்யுணர்வு என்று ஒரு அதிகாரம் வைத்தி ருக்கிறார். அது பூஜை அறை மாதிரி! எத்தனை எத்தனை தத்துவங்களை எல்லாம் அவர் அற்புதமாய்ச் சொல்லி யிருக்கிறார். அதற்கு எத்தனையோ பேர் உரை எழுதி யிருக்கிறார்கள். இருந்தாலும் இதுவரைக்கும் யாரும் சொல்லாத உரைகளும் உண்டு. அந்த மெய்யுணர்வு என்ற அதிகாரம் தான் ஆஞ்சனேய சுவாமி. ஆஞ்ச னேயர் மெய்யுணர்வு. மெய்யுணர்வுதானே நமக்கு என்றைக்கும் அழியாத சிரஞ்சீவி. அந்த மெய்யுணர்வு ஆனந்தமாகிய சீதையைத் தேடிப் பிடித்தது. வந்து ஆத்மராமனுக்குச் சொல்லுகிறது. என்ன சொல்லிற்று?

"கண்டனென்"

சீதை என்று ஆரம்பிக்கவில்லை. கண்டனென் சீதையை என்றால் சீதை எந்த நிலையிலே இருக்கிறாள் என்று ராமர் கேட்பார். ஆஞ்சனேயர்-மெய்யுணர்வு சொல்லு கிறது. கற்புக்கு அணிகலன் என்று அந்த அம்மாள் கண் சொல்லுகிறதாம். "கண்டனென் கற்புக்கு அணி

யைக் கண்களால்" - கண்களால் என்ருல் சீதையின் கண்களிலே என்று அர்த்தம். "கம்பராமயணத்துக்கு நான் நீண்ட நாட்கள் ஆராய்ச்சி பண்ணி அர்த்தம் சொன்னவன்."

"கண்டனென்.........கண்களால்"

இன்ெனுரு அர்த்தம். அந்த அம்மாள் கண்ணிலே உன்னைக் கண்டேன். கற்புடைய பெண்கள் கண் களிலே கணவர் இருப்பார்கள். ஒரு பெண்மணி கண் ணிலே மை எழுதவில்லையாம். தோழி கேட்டாளாம். அதற்கு அந்தப் பெண்மணி கணவனுர் கண்ணிலே இருக்கிருர். மை எழுதினுல் கணவர் கறுத்துப் போய் விடுவார் என்ருளாம். ஆத்மா ஆனந்தத்தை விரும்பும். அதுதான் ஆத்மானந்தம். அந்த ஆத்மாவாகிய ராம னிடத்திலே மெய்யுணர்வு என்ற ஆஞ்சனேயர் போய் ஆனந்தத்தை அறிமுகப்படுத்தினுர். அந்த ஆனந்த மாகிய ஒன்றை எது அபகரித்தது? ராஜஸ குணம். அப் பொழுது எதை அழிக்க வேண்டும்? தாமஸ குணத்தை அழிக்க வேண்டும். சத்துவ குணத்தை வாழ வைக்க வேண்டும். விபீஷணரை வாழ வைத்தார் என்று ராமாயணத்திலே வருகிறது. சத்துவ குணத்தை வாழவைத்தார் என்பது அதன் தாத்பர்யம். அப்படி சத்துவ குணமான விபீஷணருக்கு முடி சூட்டிவிட்டு, ஆத்மா என்ற ராமன் சீதையாகிய பிராட்டியைச் சிறை மீட்டு அப்படிப் புறப்படுகின்ற நேரம். பாரத்வாஜர், "அப்பனே! கொஞ்சம் ஆகாரம் பண்ணிவிட்டுப் போகலாம்" என்ருர். அங்கே தம்பி நெருப்பிலே விழுகிற நேரம். பெரியவர் சொல்லுகிருரே என்று சாப்பிட ஒப்புக் கொண்டார். அவர் சீதாராமன். அயோத்தியா ராமன், தசரத ராமன், ரகுராமன். சாப்பிட ஒப்புக் கொண்டார். அதனுலே அவருக்கு மற்ெருரு பேர் வந்தது. அதை நான் சொல்லவில்லை. அந்த பக்தி எதை

அடைகிறது? இரண்டு திருவடிகளை அடைகிறது. உன்னுடைய திருவடிகளிலே, என்னைச் சேர்த்துக்கொள் என்றால் கரப்பான்பூச்சியைப் போல் எல்லோரும் ஒட்டிக் கொள்வதா? என்ன அர்த்தம்?

**''மாணடி சேர்ந்தார்'', ''அறவாழி அந்தணன் தாள்''**

வள்ளுவரே சொன்னார். திருவடி திருவடி என்று.

**''அடிசேராய், அடிசேராய்''**

திருவடி என்றால் ஞானம். எத்தனை திருவடி. இரண்டு திருவடி. ஒன்று அபர ஞானம். ஒன்று பர ஞானம். அபர ஞானம் என்றால் சாத்திர ஞானம். பர ஞானம் என்றால் அனுபவ ஞானம். படித்து வருகிற ஞானம் ஒன்று. லண்டனுக்குப் போகாமல் லண்டனைப்பற்றிப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். அதன்பின் நேராகவே பார்த்துத் தெரிந்து கொள்ளுதல். புத்தகத்தைப்படித்து வருகிற ஞானம் கலைஞானம். கண் மூடித் தியானித்து வருகிற ஞானம் அனுபவ ஞானம். இதைத்தான் சேக்கிழார் சுவாமி, அந்த சிவஞானப் பாலை அந்தக் குழந்தை உண்ட உடனே இரண்டு ஞானம் உண்டாயிற்று என்றார்.

**''..............ஓங்கிய ஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்''**

ஞான சம்பந்தருடைய பாட்டு ரொம்ப உயர்ந்த பாட்டு. இரண்டு ஞானத்தைப் பெற்றாராம் திருஞான சம்பந்தர். ''உவமையிலாக் கலை ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்''. இராமகிருஷ்ணர் அனுபவ ஞானம் பெற்றவர். சாத்திர ஞானம் (அ, ஆவன்னா) தெரியாது. படித்தவர்கள் எல்லாம் அவரைத் தலை வணங்கி நின்றார்கள். அவர் இந்த அனுபவ ஞானம் பெற்றவர். சில பேர் படித்திருப்பார்கள். அனுபவ ஞானம் இருக்காது. சில பேர் பாடுவார்கள். ராகத்தினுடைய

தியரி தெரியாது. சில பேருக்குத் தியரி தெரியும். பாடத் தெரியாது. சில பேரிடம் பணம் இருக்கும். அனுபவிக்க மாட்டான். ஒன்றும் இருக்காது. சௌக்கியமாக அனுபவித்துக் கொண்டிருப்பார்கள் சில பேர். இந்த இரண்டு ஞானத்தைப் பக்தியினுல் தான் அடைய முடியும். பர ஞானம் ஒன்று. அபர ஞானம் ஒன்று. பர ஞானம் என்ருல் அனுபவ ஞானம். இப்போது நமக்கெல்லாம் மின்சாரத்திலே கை வைத்தால் ஆபத்து என்று தெரியும். சாத்திர ஞானம். அனுபவம் கிடையாது. ஈரத் துணியினுலே (பூஜை ரூமிலே) சுவிட்சிலே கை வைத்தால் 'ஹா' என்கிருேம். இது அனுபவம். 'ஷாக்' என்பது தொட்டால்தான் தெரியும். அது அனுபவ ஞானம். அதைத்தான் தாயுமானுர் சொன்னுர். இந்த உலகத்தையெல்லாம் பார்க்கிருராம் தாயுமானுர். உலகம் தெரியவில்லையாம், தாயுமானுருக்கு. எல்லாம் சிவமாகத்தான் தெரிகின்றது. எப்படிச் சொன்னுர் ? ஆண்டவனே,

''பாரில் கண்டவை யாவும் பருகினே''

இந்த உலகமே அவருக்கு மறைந்து விட்டது. எல்லாம் சிவமாகக் காட்சியளிக்கிறது. அதை எப்படிச் சொல்லுகிறது ?

''ஊமன் கனவென யாருக்கும் சொல்ல

வாயிலை ஐயனே''

ஊமைக்கும் அறிவு உண்டு. ஒரு அற்புதமான கனவு கண்டான். நான் பிள்ளையார் பட்டிக்குக் கதைக்குப் போயிருந்தேன். அன்றைக்கு ஏதோ ஒரு நல்ல நாள். கைலாசத்துக்குப் போவது மாதிரி கனவு கண்டேன். ரிஷிகள் மணி அடிக்கிருர்கள். நான் அந்தக் கனவை யாருக்கும் சொல்லவில்லை. அதற்குப் பிறகு நான் தூங்கவில்லை. நல்ல கனவு கண்டால் அதற்குப் பின்

தூங்கக்கூடாது. நல்ல கனவு கண்டால் நாலு பேருக்குச் சொல்லலாம் என்று தோன்றும். அப்பொழுது நல்ல கனவை ஊமன் கண்டான். எப்படிச் சொல்வான் எல்லோரிடமும்? அவனுக்குத்தான் வாயில்லையே. (ஜாடையாகக் காட்டுகிறான்) அப்படி அனுபவத்தைச் சொல்ல மாட்டாமல் திணறு கிறாராம், தாயுமானவர்.

"பாரில் கண்டவை யாவையும் பருகினை
ஓரில் கண்டிடும் ஊமன் கனவென
யாருக்கும் சொல வாயில ஐயனே"

அனுபவ ஞானம் பெற்றவர்கள் ஒருத்தரோடும் பேச மாட்டார்கள். அதுதான் "கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்". அதைத்தான் கோபால கிருஷ்ண பாரதி "கண்டாரும் கிடையாது விண்டாரும் சொன்னதில்லை. அண்டரண்ட கோடியெல்லாம் ஒன்றாய் சமைந்திருக்கும் அல்லவோ" என்றார். இப்பொழுது நடந்து போகிறவனுக்குப் புங்க மரம், புளிய மரம், வேலமரம், ஆலமரம், அரச மரம் தெரியும். உயரமாய்ப் பறக்கிறவனுக்கு மேலேயிருந்து கீழே பார்த்தால் புங்க மரம் தெரியுமா? பச்சையாகத் தெரியுமே தவிர புங்க மரமா, புளிய மரமா என்று தெரியும்? எப்படி நான் சொல்கிற உதாரணம்? உயரமாகப் பார்க்கிறவனுக்குச் சைவமா, வைஷ்ணவமா, செட்டியாரா, நாயுடுவா' முதலியாரா? தெரியாது. மேலே பறக்கிறவர்களுக்கு.

"அண்டரண்ட கோடியெல்லாம் ஒன்றாய்
சமைந்திருக்கும் அல்லவோ......
ஐயே மெத்த கடினம்..."

ஒன்று படித்து உணர்வது, அதன் பிறகு அனுபவத்தில் உணர்வது. இரண்டும் வர வேண்டும் நமக்கு. கொஞ்சம் படித்தும் தெரிந்திருக்க வேண்டும்; கொஞ்சம் கண்ணை மூடித் தியானம் பண்ணியும் பழக வேண்டும்;

அனுபவத்துக்கு. அந்த இரண்டு ஞானம் தான் பரதாழ்வார், பூஜை பண்ணிபது. இரண்டு திருவடி வைத்தாரே. ஏதோ மரத்திலே செய்ததையா கொண்டு வந்து வைத்தார்? பக்தி உள்ளவனுக்குத் தானே ஞானம் வரும். இரண்டு ஞானத்தைக் கொடுத்தாராம் பகவான். யாருக்கு? பரதருக்கு. அந்த ஞானத்தை வைத்துப் பூஜை பண்ணுகிறபோது தெய்வம் வரவில்லையே என்று நெருப்பிலே விழப் போகிறர். பக்திக் கனல். அப்பொழுது அங்கே மெய்யுணர்வு போயிற்று.

"வந்தார் வந்தார் பரதா"

மெய்யுணர்வு போய் சொல்லுகிறது.

"ஸ்ரீ ரகுராமர் வந்தார் வந்தார் பரதா வந்தார் வந்தார்
மோதிரம் தந்தார் தந்தார் கைமேல் இந்தா இந்தா தீயில்
முந்தாதே முந்தாதே வந்தார் வந்தார் பரதா"

இதைக் கம்பர் சொன்னர்.

**ஐயன் வந்தனன் ஆரியன் வந்தனன்**
**மெய்யின் மெய்யனே நின்னுயிர் வீடினல்**
**உய்யு மேயவன் என்றுரைத் துட்புகாக்**
**கையினல்எரி யைக்கரி யாக்கினன்.**

என்று கையினல் எரியைக் கரியாக்கினர். கரி என்ருல் சாட்சி. அக்கினி சாட்சியாகத் தானே கல்யாணம் பண்ணிக் கொள்கிருன். கையினல் எரியைக் கரியாக்கினன். நெருப்பு இருந்தால்தானே விழுவதற்கு. பரதாழ்வாருக்கு மிகுந்த மகிழச்சி உண்டாயிற்று.

**வேதியர் தமைத்தொழும் வேந்தரைத் தொழும்**
**தாதியர் தமைத்தொழும் தன்னைத் தான்தொழும்**
**ஏதுமொன் றுணர்குரு திருக்கு நிற்குமால்**
**காதலென் றதுவுமோர் கள்ளிற் ரேற்றிற்றே.**

வந்தார் என்று சொன்ன உடனே பக்திக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. சந்தோஷம் அதிகமானல் என்ன

தோன்றும்? பரதாழ்வாருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டா யிற்று. என்ன செய்தாராம்! சக்கரவர்த்தித் திருமகன்.

"வேந்தரைத் தொழும்........"

சிற்றரசர்களைச் சக்கரவர்த்தி கும்பிடப் போனர்.

"வேதியரைத் தொழும்"

நல்ல வேத வித்துக்களை வணங்கிருராம். அது சரி,

"தாதியரைத் தொழும்..."

கூட்டிக் கொண்டு இருக்கிற குப்பம்மாள் காலில் விழு கிருராம். பாத்திரம் தேய்க்கிற பங்கஜம்மாளைக் கும்பிடு கிருராம். அந்தப் பக்தி அதிகமாய்ப் போய், "தாதி யரைத் தொழும்." இன்னும் கொஞ்சம் அதிகம்— "தன்னைத் தான் தொழும்"—தன்னையே கும்பிட்டுக் கொள்கிருராம். அந்தப் பக்தி வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. அப்போது பகவான் போனர். அவர் அந்த திருவடிகளை வைத்தார். பெரிய ஏற்பாடெல்லாம் பண் ணினர்கள். ஆத்மாதான் முடி சூட்டி ஆளப் போகிறது. அந்த ஆத்மாதான் ஆனந்தத்தை அனுபவிக்கப் போகி றது. ஆத்மானுபவம். அந்த மெய்யுணர்வு எப் பொழுதுமே அதை விட்டுப் பிரியாது. மெய்யுணர்வு என்றல் ஆஞ்சனேயர். அது என்ன செய்ததாம்? "அரியணை அநுமன் தாங்க" அநுமன் என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது. மெய்யுணர்வு என்று அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். "அரியணை அநுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த" அங்கதன் யார் என்று சொல்லப் போகிறேன். வாலி மகன் என்று உங்களுக்குத் தெரியும். அதற்கு மேலே ஒன்று. பெரிய பதவியில் உள்ளவர்களுக்குப் பகை வரும். (கென்னடிக்குப் பகை வந்த மாதிரி.) பெரிய பதவியில் உள்ளவர் இந்திர பகவான். மூன்று உலகங்களுக்கும் தலைவர் இந்திர பகவான். அந்த இந்திரனுக்குப் பல

பகை வரும். காத்தற் கடவுள் நாராயணன். அவர் தானே ரட்சிக்க வேண்டும். அந்த நாராயண பகவான் அதிதிக்குக் கருவிலிருந்து ஒரு குழந்தையாகப் பிறந்தார். இந்திரனுடைய தாயார் அதிதி. அப்போது இந்திரனுடைய தாயார் வயிற்றில் சாக்ஷாத் நாராயணரே கருவிலிருந்து குழந்தையாகப் பிறந்தார். அவருக்கு உபேந்திரன் என்று பெயர். உபேந்திரன் என்ருல் நாராயணர். அந்த உபேந்திரன்தான் அங்கதன். அப்பொழுது அங்கதன் என்ருல் யார்? நாராயணன் என்று அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். நீங்கள் வாலி மகன் என்று எண்ணிக் கொள்ளக் கூடாது.

**"பரதன் வெண்குடை கவிக்க"**

பரதன் என்ருல் பரதன் என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளக்கூடாது. பரதன் என்ருல் பக்தி.

**"......இருவரும் கவரி வீச......"**

லக்ஷ்மணன்தான் திடப்பிரக்ஞை. சத்ருக்கனன் அடக்கம். நீங்கள் ராமாயணம் பூராவும் படித்திருப்பீர்கள். சத்ருக்கனன் ஒரே இடத்தில்தான் வாய் திறந்து பேசினுன். அதன்பின் பேசவேயில்லை. செயல் வீரன்! சிலபேர் பேசவே மாட்டார்கள். காரியம் செய்து கொண்டேயிருப்பார்கள். அந்த அடக்கமே ஒரு வடிவம் சத்ருக்கனன்.

**"விரைசெறி குழலி ஓங்க"**

ஆனந்தம் ஓங்குகிறது என்று அர்த்தம். தனக்கு உணவு கொடுத்தவர் சடையப்ப வள்ளல். சடையப்ப வள்ளல் 12-ம் நூற்ருண்டிலே வாழ்ந்தவர். ராமாயணம் எந்தக் காலத்து வரலாறு? அங்கு எப்படி சடையப்ப வள்ளலை நுழைப்பது? இவர்களுடைய முன்னோர்கள் இருந்திருப்பார்களே,

**"வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்**
**மரபுளோர் கொடுக்க வாங்கி வசிஷ்டனே புனைந்தான்மௌலி"**

இத்தனைப் பேரைச் சொன்ன கம்பர் இராமரைச் சொல்ல வில்லை. ஏன்? அவர் சொல்லுக்கு அடங்காதவர். வார்த்தைகளினாலே அவரைச் சொல்லிவிட முடியாது. அதனாலேதான் மதுரகவியாழ்வார் போய் நம்மாழ்வாரிடம் "சித்திலே பிறந்தால் அது எப்படியிருக்கும்" என்றாராம். "அது அத்தைத் தின்று அப்படியிருக்கும்" என்றாராம். "எது எதுவானால் எதுவாகும்? அது அதுவானால் அதுவாகும்." இதைத் தான வளளலார், "இது காட்டி அது காட்டி என் நிலையும் காட்டி" என்றார். சுருக்கமாகச் சொல்லுகிறேன். இது காட்டி அது காட்டி—இதற்கு என்ன அர்த்தம்? இது—இது, அது—அது; வேறே என்ன இருக்க முடியும்? ஆகையினாலே பகவானைப்பற்றிச் சொல்லவேயில்லை. ஆகவே,

**அரியணை அநுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்**
**பரதன் வெண் குடை கவிக்க இருவரும் கவரி வீச**
**விரைசெறி குழலி ஓங்க வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்**
**மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான்**
**மௌலி.**

பிராட்டியார் எம்பெருமான் அருகிலே உட்கார்ந்திருக்கிறார். உட்கார்ந்தார் என்று சொல்லக் கூடாது. 'ஓங்க' பகவானை நினைக்கிறவர்களுக்கெல்லாம் லட்சுமி கடாட்சம் ஓங்கும். இன்றையிலிருந்து உங்களுக்கெல்லாம் லட்சுமி கடாட்சம் ஓங்கப்போகிறது.

**"விரை செறி குழலி ஓங்க"**

கம்பர் வாயிலிருந்து வருகிறது. "ஓங்க வெண்ணெயூர்ச் சடையன்"—தன்னை ஆதரித்த வள்ளல்.

**'மரபுளோர் கொடுக்க வாங்கி வசிஷ்டனே"**

ஆசார்யன்தான் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும். ஆசார்யனுக்குத்தான் பவர் இருக்கிறது. ஆகவே 'வசிஷ்டனே புனைந்தான் மௌலி"—மௌலி என்றால்

மணி மகுடம். இப்பொழுது ஏது ஆட்சி புரிகிறது? ஆத்மா. ஆத்மா என்பது எது? இராமர். எங்கே ஆட்சி புரிகிறது? சரீரமாயிருக்கிற அயோத்தியிலே. அயோத்தி என்ருல் என்ன? யுத்தம் இல்லாதது. காலம் இல்லாதது அகாலம். நீதி இல்லாதது அநீதி. யுத்தம் இல்லாதது அயோத்தி. இந்த சரீரத்துக்குள்ளே ஒன்றுக்கொன்று யுத்தம் பண்ணக் கூடாது. வாதம் பித்தம் எல்லாம் இந்த சரீரத்துக்குள்ளே அடங்கி யிருக்கின்றன. அப்பொழுதுதான் ஆரோக்கியமாக இருக்க முடியும். இந்த உடம்பாய் இருக்கிற அயோத் தியிலே, ஆத்மாவாகிய ராமச்சந்திர மூர்த்தி, அந்த பக்தி என்ற வெண் கொற்றக் குடையின் கீழ், திடப்ரக்ஞையும், அடக்கமும் துணை செய்ய, ஆனந்தம் மேலுக்கு ஓங்க—அதுதான் பிரம்மானந்தம், ஞான னந்தம், சிவானந்தம். எத்தனேயோ ஆனந்தம் என்று சொல்வார்கள்—அப்படி ஆத்மாவானது மெய்யுணர் வோடு ஆட்சி புரிகிறதுதான் ராமாயணம். இதுதான் ராமாயணத்தின் ஸாரம். சில பேர் சொல்லுவார்கள்- இந்தக் கதையை எல்லாம் சொல்லித்தான் நாடு இப்படி ஆயிற்று என்று. ஆத்மா இல்லேயா? ஆத்மாவிலே ஆனந்தம் இல்லேயா? பக்தி இல்லேயா? மெய்யுணர்வு இல்லேயா? நம்மிடம் மூன்று குணங்கள் இருக்கின்றன. அதுதான் முக்குணம் அந்த மூன்று குணங்கள்தான் மூன்று ராட்சஸர்கள். சரீரமான இலங்கையிலே ராஜஸ குணமான ராவணன் தாமஸ குணமான கும்பகர்ணன் இரண்டு குணங்களே அழித்து சத்துவ குணமான விபீஷணனுக்கு முடி சூட்டி, மெய்யுணர்வு என்ற அனுமான் காட்ட ஆனந்தமாகிய சீதையைச் சிறை மீட்டு, அந்த அயோத்தி மாநகரத்திலே வந்து—(அது சூட்சும சரீரம்; அதிலேதான் ஆத்ம அனுபவத்தைப் பெற முடியும். இது ஸ்தூல சரீரம்.) ஆகவே ஆத்ம ராமன் அங்கேயிருந்து அவர் என்றைக்கும் ஆட்சி

புரிகின்றார் என்று இந்த மகத்தான தத்துவத்தை—இராமாயண சாரம் என்ற இந்தச் சொற்பொழிவை நிறைவு செய்கிறேன். இதைத்தான் நமக்குப் பெரியவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் எப்போதுமே' கொஞ்சம் கருத்துக்களை வளைத்துச் சொல்லுவார்கள். கருத்துக்களை வளைத்துச் சொல்லும் பொழுது மகிழ்ச்சி உண்டாகும். நேராகச் சொன்னால் மகிழ்ச்சி வராது. கருத்துக்களை வளைத்துச் சொன்னால் மகிழ்ச்சி வரும். சத்துவ குணத்துக்கு முடி சூட்டினார் என்றால் மகிழ்ச்சி வராது. விபீஷணாழ்வாருக்கு முடி சூட்டினார் என்றால் மகிழ்ச்சி வரும். நான் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். பெரிய இன்பம் எது என்று ஔவையாரை முருகன் கேட்டார். ஔவையார் சொன்னார். "இனிது இனிது ஏகாந்தம் இனிது. அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்; அதனினும் இனிது அறிவினர் சேர்தல். அதனினும் இனிது அறிவுள்ளோரைக் கனவிலும் நனவிலும் காண்பது.'' இன்னொரு தடவை. பெரிய இன்பம் எது? ஏகாந்தம்; தனியாக இருப்பது. அதைவிட இன்பம் எது? கடவுளை வணங்குவது. அதைவிட இன்பம் எது? அறிஞர்களோடு பழகுதல். இதுதான் நேராகச் சொல்வது. திருவள்ளுவர் வளைத்துச் சொல்லுகிறார்.

> ''பெரிது இனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
> பீழை தருவதொன் றில்''

மேதை என்றால் அறிவு. பேதை என்றால் முட்டாள். "முட்டாள்கள் நட்பு மிக இனிது. ஏன்? பின் பிரிவு வரும் போது துன்பமில்லை. ஆதலால்'' என்று எத்துணை விழுமிதாகச் சொல்கிறார் திருவள்ளுவர். இதுதான் கருத்தை வளைத்துச் சொல்வது. நேருக்கு நேராக வேதாந்தத்தைச் சொன்னால் மக்கள் கேட்க மாட்டார்கள். சீனியைத் தனியாக வாயில் போட்டால்

அவ்வளவு சுவைக்காது. நெய், முந்திரிப் பருப்பு கலந்த சீனியைப் போல வால்மீகி, கம்பர் கலந்து சொன்னார்கள். கலந்த நெய்யும் சீனியும்போல வால்மீகியும் கம்பரும் கவிகளை இயற்றித் தத்துவத்தைச் சொன்னார்கள். கம்பருக்கும், வால்மீகிக்கும் நாம் எவ்வளவு நன்றி சொல்ல வேண்டும்? கம்ப நாட்டாருக்கும், வால்மீகிக்கும் யார் நன்றி சொல்கிறார்கள்? சொல்லத் தெரியாது. பாராட்டு விழாவா நடத்துகிறார்கள்? நெஞ்சார நினைத்து வாழ்த்த வேண்டிய மகானுபாவர்கள். மகத்தான தத்துவங்களை உலகம் உள்ள நாள் வரைக்கும் அனுபவிக்குமாறு வழங்கியவர்கள். உலகம் மறைந்தாலும் ராமாயணம் அழியாது. ஆகவே இந்தத் தத்துவங்களையெல்லாம் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நான் உங்களுக்கு வற்புறுத்திச் சொல்லிக் கொண்டு, இந்த உரையை இந்த அளவில் பூர்த்தி செய்து கொள்கிறேன்.

**தேவியை வௌவிய தென்னிலங்கைத் தசமா முகன்**
**பூவியலும் முடி பொன்றுவித்த பழிபோய் அற**
**ஏவிய லுஞ்சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்**
**மேவிய சிந்தையினார்கள்தம் மேல்வினை வீடுமே.**

—திருஞானசம்பந்தர்

உ

முருகா

# 5. தேவார இன்பம்

## [3—11—79]

எல்லாம் வல்ல வயலூர் எம்பெருமானுடைய தனிப் பெருங் கருணையினாலே தேவார இன்பம் என்பது பற்றிச் சில நுண்ணிய கருத்துக்களை உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். பொதுவாக மரபு வழுவாமல் பேசுவதுதான் அறிவுடைமை. தமிழிலே தான் மரபியல் உண்டு. ஏனைய மொழிகளிலே மரபியல் கிடையாது. தொல்காப்பியத்திலே மரபியல் சூத்திரம் என்றே ஒன்று உண்டு. இந்தச் சொல்லை இப்படித்தான் சொல்ல வேண்டும். அது தான் மரபு. அது வேறு மாதிரியாகச் சொல்லுவது மரபு அல்ல. வெள்ளைக்காரன் தமிழ் பேசுகிற போது மரபோடு பேச மாட்டான். அவனுக்கு அவ்வளவுதான் ஞானம். "காபியைத் தின்றான். இட்லியைக் குடித்தான்" என்பான். அவன் தமிழ். அவன் பக்கத்தில் இருக்கிறவன் என்ன சொல்லுவான்? துரை தீனி திங்கறார் என்பான். சாப்பிடுகிறார் என்று சொல்லத் தெரியாது. அதனாலே அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என்று சொல்லுகிறேன். தமிழ் தெரிந்தவர்கள் அப்படிப் பேச மாட்டார்கள். ஆகவே இந்தச் சொல்லை இப்படித் தான் சொல்ல வேண்டுமென்பது தமிழிலே மரபியல் பேசுகிறது. இரண்டு உதாரணங்கள் சொல்லுகின்றேன். சமையல் பண்ணுகின்ற இடத்துக்குச் சமையலறை என்று பெயர். என் வீட்டுக்கு வந்தவர் சமையலறை எங்கே என்று கேட்கலாம். கோயிலிலே

போய் சமையலறை எங்கே என்று கேட்கக் கூடாது. மடைப்பள்ளி என்று கேட்க வேண்டும். இரண்டும் தமிழ்தான். மடைப்பள்ளி என்ருலும் சமையலறை என்ருலும் தமிழ். ஆனல் வீட்டிலே பேசுகிற போது சமையல் கட்டு எங்கே என்று கேட்க வேண்டும். கோயிலிலே மடைப்பள்ளி எங்கே என்று கேட்க வேண்டும். இது தான் மரபு. என் மனைவி குழந்தை பெற்ருள் என்று சொல்ல வேண்டும். பசு குழந்தை பெற்றது என்று சொல்லக்கூடாது. பசு கன்று ஈன்றது என்று சொல்லவேண்டும். கன்றுபோட்டது என்றுசொல்லக்கூடாது. கன்றுஈன்றது. நாய் கன்றுஈன்றது என்று சொல்லக் கூடாது. நாய் குட்டி போட்டது என்று சொல்ல வேண்டும். பன்றி குட்டி போட்டது. யானை கன்று ஈன்றது. கோழி குஞ்சு பொறித்தது. என்பது தான் மரபு. கொஞ்சம் மாறிப் பேசினுல் கொஞ்சம் விகாரமாய் இருக்கும். 'என் மனைவி குட்டி போட்டாள்.' தெரிகிறது இல்லையா, விகார தொனி. என் மனைவி குழந்தை பெற்ருள். சீர்காழியிலே பகவதி அம்மையார் குழந்தை பெற்ருள் என்று சொல்லக் கூடாது. பாவம். குழந்தை அவதரித்தது.

> "தாவில் சராசரங்களெலாம்
> சிவம் பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார்"

ஞான சம்பந்த சுவாமிகள் அவதாரம் செய்தார் என்று பிரபு சேக்கிழார் சொல்கிருர். ஞானசம்பந்தர் பிறந்தார் என்று சொன்ருல் பிழை. அது போல அது.

காளமேகப் புலவர் கும்பகோணத்தில் ஒரு அன்னச் சத்திரத்திலே ஆகாரம் பண்ணிக் கொண்டிருக்கிருர். அவர் எதிரிலே முன் குடுமிச் சோழியப் பிராமணர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிருர். அந்தக் காலமெல்லாம் ஹோட்டல் கிடையாது. எங்கேயாவது போய் தர்மத்துக்குத்தான் சாப்பிட வேண்டும். என்ன

விக்கிரயம் பண்ணினாலும் பண்ணுவார்கள். அன்ன விக்கிரயம் பண்ண மாட்டார்கள் பழைய காலத்திலே. சோறு நிச்சயமாக விலைக்கு வாங்க முடியாது. அந்த அன்னச் சத்திரத்திலே காளமேகப் புலவர் சாப்பிடுகிறார். எதிரிலே அந்த முன் குடுமிச் சோழியப் பிராமணர் சாப்பிடுகிறார். அந்த முன் குடுமிப் பிராமணருக்குச் சாப்பாட்டிலே வேகம். வேகம் வேகமாய்ச் சாப்பிடுகிறார். (வைகை எக்ஸ்பிரஸ் மாதிரி.) அந்தக் குடுமி அவிழ்ந்து அன்னத்திலே விழுந்தது. அதை மெள்ள எடுக்கலாம். அவனுக்குச் சாப்பாட்டிலே இருக்கிற அவசரம். அதை வேகமாகத் தள்ளினான். அந்தக் குடுமியிலே ஒட்டிய எச்சில் அன்னம் காளமேகப் புலவர் இலையிலே விழுந்து விட்டது. சீற்றம் வரும் தானே. உடனே ஆரம்பித்தார்.

**''சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்**
**பொருக்குலர்ந்த வாயா புலையா—திருக்குடந்தைக்**
**கோட்டானே நாயே குரங்கே உனைஒருத்திப்**
**போட்டாளே வேலையற்றுப் போய்''**

பெற்றாளே என்று பாடவில்லை. ஏ குரங்கே, நாயே என்றால் , 'போட்டாளே' என்றுதான் பாட வேண்டும். ஒரு நுட்பம் சொல்லப் போகிறேன். பன்றியும் விலங்கு. நாயும் விலங்கு. மாடும் விலங்கு. எல்லாம் விலங்குதான். அப்பொழுது பசு கன்று ஈன்றது என்று சொன்னோம். நாய் குட்டி போட்டது என்று சொன்னோம். என்ன காரணம்? ஒன்றே ஒன்று போட்டால் ஈன்றது. ஐந்தாறு போட்டால் போட்டது. அதுதான் ரயிலிலே ஒரே குழந்தையை வைத்திருந்தால் உன் குழந்தையா என்று கேட்பார்கள். 5, 6 இருந்தால் உன் குட்டிகளா என்று கேட்பார்கள். யானை ஒன்று போடும். அதனாலே கன்று ஈன்றது, என்று சொல்ல வேண்டும். இதுதான் மரபு. இப்பவும் நான் என்ன கருத்திலே சொன்னேன்

என்றால் இப்பொழுது நான் பேச எடுத்துக் கொள்வது தேவார இன்பம். பொதுவாக நம் ஜனங்கள் தேவாரம் என்றால் ஞானசம்பந்தர் பாடினது, அப்பர் பாடினது, சுந்தரர் பாடினது; மூவரும் பாடினது என்று சொல் கிறார்கள். அது முறைப்படி பிழை. அப்பர் பாடிய ஒன்றுக்குத்தான் தேவாரம் என்று பெயர். இத்தனைக் காலமாய் நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருந் தீர்களோ? அப்பர் பாடிய பாடல் ஒன்றுதான் தேவாரம். ஞானசம்பந்தர் பாடி அருளியது திருக்கடைக் காப்பு. சுந்தரர் பாடலுக்குத் திருப்பாட்டு என்று பெயர். மணிவாசகர் அருளியது திருவாசகம். அருணகிரியார்— திருப்புகழ். வள்ளலார்– திருவருட்பா. மூன்று பேர் பாட லும் தேவாரம் என்பது நியாயமில்லைதானே. மூன்று பேர் அண்ணன் தம்பி என்றால் ஒரே விலாசமா போடு வான். வீட்டு விலாசமே மாறுகிறது அல்லவா? மரபு வழுவாமல் பேசுகிறார்கள். திருவருட்பாவை எடுத்துப் பாருங்கள். நான் சொன்ன அந்த மரபு வழுவாமல் இராமலிங்க அடிகளார் பாடியுள்ளதை. கொஞ்சம் நுட்பமான விஷயம்தானே. ஆகையினாலே தேவாரம் என்பது அப்பர் பெருமானுடைய வாக்கையே குறிக்கும். பொதுவாகத் தேவாரம் என்று சொன்னாலும் ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது அது மரபு வழு. ஆகவே, நான் தேவாரம் என்றவுடனே அப்பர் பெருமான் வார்த்தையைத் தான் சொல்லப்போகிறேன். ஞான சம்பந்தர் வார்த்தையையோ, சுந்தரர் வார்த் தையையோ சொல்ல மாட்டேன். சொன்னால் நான் மரபு வழுவிப் பேசுவதாக அர்த்தமாகிவிடும். எனவே தேவாரம்; அது அப்பருடைய திருவாக்கு. அது என்ன பொருள். தே—இறைவன்; வாரம்—அன்பு. இறைவனி டத்திலே அன்பு விளைவிக்கின்ற பாடல் தேவாரம். சில பேர் தே ஆரம் என்று சொல்வார்கள். இகர, ஈகர, ஏகாரங்களுக்குப் பின் வருகிற உயிர் யகர உடம்படுக்

கும். வகர உடம்படுக்காது. ஆகவே அருணகிரியார் சொல்லுகிருர் ஒரு பாடலிலே.

> "செஞ்சொலடியார்கள் வாரக்கார முடிமேலே
> அஞ்சலி செய்வோர்கள் நேயக்கார."

செஞ்சொல் என்ருல் தமிழ் செம்மையான சொல் தமிழிலே இருப்பதாலே தமிழுக்குச் செஞ்சொல் என்று பெயர்.

> "செஞ்சொல் புனைமாலை சிறந்திடவே
> பஞ்சக்கர ஆனைபதம் பணிவாம்"

செஞ்சொல் புனைமாலை-செஞ்சொல் என்ருல் தமிழையே குறிக்கும். அதற்கு ஒரு எடுத்துக் காட்டு சொல்லப் போகிறேன். ஏன் என்ருல் நான் பேசுகிற போதே சில பேருக்கு, செஞ்சொல் என்ருல் தமிழைத்தான் குறிக்குமா? வேறு மொழியைக் குறிக்காதா? என்ற ஒரு வினு தோன்றும். அருணகிரிநாத சுவாமிகள் தான் எனக்கு ஞானகுரு. அவர் போன வழியிலே அடியேன் போய்க்கொண்டிருக்கிறேன். என்னுடைய உபாஸனு மூர்த்தி அருணகிரிநாதர். நான் முருகப் பெருமானை மறந்தாலும் மறக்கலாம். அருணகிரிநாதரை மறக்க மாட்டேன். அருணகிரியார் வாக்குதான் உபநிடதம் என்று எண்ணுகின்றவன். அந்த குருநாதர் சொல்லு கிருர். நான்கு திசைகளையும் சொல்லுகின்ருர். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு. இந்த நாலு திசையை அருண கிரியார் சொன்னுர். அந்தப் பாட்டைச் சொல்லுகிறேன்.

> "செஞ்சொல் மாதிசை வடதிசை குடதிசை
> விஞ்சு கீழ்த் திசை"

பஞ்ச பாதகம் என்று அந்தப் பாடல் ஆரம்பம். நான்கு திசைகளைச் சொல்ல வருகிருர்.

'குடதிசை விஞ்சு கீழ் திசை'

தெற்கே என்ன சொன்னர்? செஞ்சொல் மாதிசை—தமிழ் பேசுகிற திசை. தமிழிலே கடினமாக ஒருவரை வைய முடியாது, நினைத்தாலும். அல்வாவினுலே அடித்த மாதிரி இருக்கும். கோபமாக அடித்தாலும் அடித்தது அல்வாவினுலே. எவ்வளவு வலிக்கும்? அதனுல் முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப் போன். தமிழிலே வைதாலும் அது இனிமையாய் இருக்கும். பழைய காலத்திலே 125 கிரந்தங்கள் எழுதினவர் சோம சுந்தர நாயகர்; சைவ சித்தாந்த சண்ட மாருதம். கொஞ்சம் வயதானவர்களுக்குத் தெரியும். மறைமலை அடிகளுக்குக் குரு அவர். ஞான சம்பந்தர் உபாஸனை. பாஸ்கர சேதுபதி சைவ சித்தாந்த சண்ட மாருதம் என்று பட்டம் கொடுத் தாராம். அந்த நாயகர் அவர்கள் சில கொள்கைகளைப் பற்றி, சிலரைப் பற்றிக் கண்டிப்பார்களாம். வன்மை யாகக் கண்டிப்பார்களாம். அந்தக் கண்டிக்கப் படுகிற வர்களும் போய்க் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருப் பார்களாம். "உன்னைக் கண்டிக்கிருரே, ஏன் போகிருய்" என்று கேட்பார்களாம். 'நாசூக்காகக் கண்டிக்கிருரே' என்பார்களாம். இனிமையாகக் கண்டிக்கிருராம். ஆகை யினுலே தமிழ் வந்து ஒரு 'மெத்' தென்றிருக்கும் மொழி. மென்மையான மொழி. அதில் கடினமான சொற்கள் கிடையாது.

அதனுலே செஞ்சொல் என்பதற்குச் செந்தமிழ் என்பது பொருள். 'செஞ்சொல் அடியார்கள் வாரக்கார' வாரக்கார என்ருல் அன்புடையவன். தமிழினுலே முருகப் பெருமானைப் பாடுகின்ற அடியார்களிடத்திலே பிரியமாய் இருப்பாராம் முருகன். வாரம்—அன்பு என்ற பொருளிலே அருணகிரியார் பேசுகின்ருர். ஆகவே தேவாரம் என்ற வார்த்தைக்கு இறைவனிடத்திலே அன்பை விளைவிக்கின்ற பாடல் என்பது பொருள். அதை நமக்குப் பாடிக் கொடுத்தார் அப்பர் பெருமான்.

அவர் ஏழாம் நூற்ருண்டிலே திருவாமூரிலே அவதரித்த வர்கள். வேளாளர் குலம். குறுக்கையர் குடி. நான் வரலாறு சொல்லவில்லே. வரலாறுதான் உங்களுக்குத் தெரியுமே. 7-ம் நூற்ருண்டிலே வேளாளர் குலத்திலே (வேளாளர் என்ற வார்த்தைக்கு உபசரிக்கின்றவர்கள் என்பது பொருள். எப்பொழுதும் மற்றவர்களுக்கு உபகாரம் பண்ணுகின்றவர்கள் வேளாளர்கள்.) குறுக் கையர் குடியிலே புகழனுருக்கும் மாதினியாருக்கும் ஞான பானுவாகத் தோன்றினுர்கள். பின் மலரும் மருள் நீக்கியார் வந்து அவதாரம் செய்தார். அவர்கள் தேக நிலேயாமையை அறிந்து, தந்தையார், தாயார், தமக்கையார், கணவனுர் திடீர் திடீர் என்று மறைந்து போனதனுலே நிலே குலேவு ஏற்பட்டு, "நல்லாறு தெரிந்து உணர நம்பரருளாமையினுல் கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகுவார்"—சைவ சமயத்தைவிட்டு, (இந்தக் கட்சி மாறுவது போல, மதம் மாறுவது போல) அப்பர் பெருமான் சமண சமயம் புகுந்தார். நன்ருகத் தமிழ் படித்தவர். அதனுல் அவர் கள் மிகப் பிரியமாக ஏற்றுக் கொண்டார்கள். தருமசேனர் என்று பட்டம் கொடுத்தனர். காவித் துணிச் சட்டை அணிந்து, மயிற் பீலி ஏந்திக்கொண்டு தெருத் தெருவாகச் சமண மதப் பிரசாரம் பண்ணு கின்ருர். யார்? நாவுக்கரசர். அப்பொழுது அவருக்குத் தருமசேனர் என்று பெயர். நன்கு அழகாய்ப் பேசுவார். பேச்சிலே வல்லமை உள்ளவர். "சிவன் கோயிலே இடி யுங்கள். திருநீறு தரித்தவனே விலக்குங்கள். திருநீறு ஒழிக. சிவன் கோயில் வீழ்க" என்று பிரசாரம் பண்ணி னுர். அவருடைய தமக்கையார் திலகவதி அம்மையார் ஒவ்வொரு நாளும் திருக் கோயிலிலே போய் (ஆண்டவன் தானே நமக்குக் கதி.) சுவாமீ! எனக்கு ஒரே தம்பி. அவனுக்காக நான் வாழ்ந்தேன். அவன் சமண் சமயம் புகுந்து சைவத்தை நிந்திக்கின்ருன். ஆண்டவனே,

''ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்று எடுத்தாள
வேண்டும்''

எனப் பலகாலும் விண்ணப்பம் செய்தார்கள். நிலை பெற்ற தவம் உள்ளவர்கள் திலகவதியார். ஆண்டவன் அந்த அம்மையார் கனவிலே சென்று,

''மன்னு தபோதனியார்க்குக் கனவின்கண் மழவிடையார்
உன்னுடைய மனக்கவலை ஒழிநீ உன் உடன் பிறந்தான்
முன்னமே முனியாகி எனையடையத் தவம் முயன்றான்''

"அம்மே! அவன் முன்னே வாகீச முனி என்று என்னை அடையத் தவம் முயன்றவன். ஒரு சிறு பிழையாலே இப்போது இந்தப் பூலோகத்திலே வந்து பிறந்திருக்கிறான். அவனுக்குச் சூலை வலி கொடுத்து ஆட்கொள்ளுவோம்'' என்றார். ஒருவருக்குப் பாலைக் கொடுத்து ஆட்கொண்டார். ஒருவருக்குக் காலைக் கொடுத்து ஆட்கொண்டார்; திருக்கழுக்குன்றத்திலே. ஒருத்தருக்கு ஓலைகொடுத்து ஆட் கொண்டார். இவருக்குச் சூலை கொடுத்து ஆட் கொண்டார். ஆண்டவன் அருளுகின்ற விதம் வேறு வேறு மாதிரி. ஆகவே தாய் ஒரு குழந்தைக்கு மோர் கொடுப்பாள். ஒரு குழந்தைக்குக் காபி கொடுப்பாள். ஒரு குழந்தைக்கு ஹார்லிக்ஸ் கொடுப்பாள். ஒரு குழந்தைக்குப் புனர்ப்பாகம், கஞ்சி கொடுப்பாள், உடல்நலத்துக்கு ஏற்ப. சூலை வலி கொடுத்து ஆட்கொள்ளுகிறார். அவருக்கு வஜ்ராயுதமோ, வடவா முகாக்கினியோ என்று வயிற்றிலே நுழைந்து மிகப் பெரும் வேதனை அடைந்தார். தாங்கிக்கொள்ள முடியாத வேதனை. சமையல் பண்ணுகிறவன் இடத்திலே சொல்லி அனுப்பினார் தமக்கையாருக்கு.

''நன்றறியா அமண் பள்ளி நண்ணுகிலேன்''

என்று மறுத்துவிட்டார். சமணர்கள் செய்த மந்திரத்தினாலே அந்த நோய் நீங்கப் பெறாது, இரவிலே சமையல்

காரன் தோளிலே கை வைத்துக்கொண்டு நடக்க முடியாத தளர் நிலையிலே விடியற்காலம் திருவதிகைக்கு வந்தார்கள். அப்போது அம்மையார் திருவெண்ணீறணிந்து ஆலயத்துக்குப் புறப்படுகின்ற நேரம். இப்போது சுவாமிகளுக்கு வயது ஒரு சில மாதங்கள் முன் பின்னாக 77 வயது. அவர் சைவ சமயத்திலே வாழ்ந்தது நாலே ஆண்டுகள். இப்படியெல்லாம் நான் சொன்னால் சில பேருக்கு அதிர்ச்சியாய் இருக்கும். அதற்கெல்லாம் காரணங்களோடு நான் சொல்லுகிறேன். 6 நாட்கள் தானே வாழ்ந்தார் கண்ணப்பர். சுந்தரமூர்த்தி நாயனார் இரண்டு ஆண்டுகள் தானே வாழ்ந்தது. பதினாறுவது ஆண்டிலே தடுத்தாட் கொள்ளப் பெற்றார். 18-வது வயதிலே கைலாயம் போய்விட்டார். அல்வா எவ்வளவு இருக்கும்? குங்குமப் பூ எவ்வளவு இருக்கும்? கடலைப்புண்ணாக்கு ஒரு மூட்டை 5 ரூபாய் இருக்கும். குங்குமப்பூ தோலா ரூ. 125. எத்தனை நாள் வாழ்ந்தால் என்ன? வாழ்வாங்கு வாழ வேண்டும். 77 வயது. தளர்ந்த பருவத்திலே வந்து தமக்கையாருடைய திருவடியிலே விழுந்து வணங்கி நடுங்கி ஒடுங்கி நின்றார், கண்ணீர் மல்கி. இளம் வயதிலே பார்த்த தம்பியை முதுமையிலே பார்க்கிறார். 'தம்பி! எழுந்திரு' என்றார். எங்கிருந்து? பரசமயப் படுகுழியிலேயிருந்து எழுந்திரு. திருவாளன் ஐந்தெழுத்தை ஓதி, திருநீற்றைக்கொடுத்து சிவபெருமான் திருவடிக்கு அன்பு செய் என்று உபதேசித்தார்கள். அவர்கள் திருக்கோவிலுக்கு வந்தவுடனே அந்த ஞான ஒளி அவருக்குத் தோன்றியது. ஞானவாணி நாவிலே வந்து நடம் புரிகின்றாள். ஏற்கனவே தமிழ் படித்தவர். இப்போது அனுபவ ஞானம் வந்து சேருகின்றது. அந்த அருள் ஞான ஒளியிலே சுவாமிகள் இப்போது தான் முதலாவதாகத் தேவாரம் பாடத் தொடங்குகின்றார்.

"கூற்ருயினவாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தனன் நானறியேன்
ஏற்ருய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்ருதென் வயிற்றி னகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே."

இதுதான் முதல் முதலாகச் சுவாமிகள் பாடுகின்ற தேவாரம். "ஆற்றேன்" என்பது தமிழிலே ஒரு உயர்ந்த அழுத்தமான வார்த்தை. ஆற்றேன் என்ருல் தாங்கிக் கொள்ள முடியவில்லையே என்று அர்த்தம். ஒருத்தருக்கு ஏழு பெண் குழந்தை. எட்டு ஆண் குழந்தை. ஒன்றே கால் டஜன். எது உள்ளே போனது, எது வெளியே போனது என்று தெரியாது. 2 கொழுந்தியாள், அத்தை, பாட்டி இப்படியெல்லாம் அந்தக் குடும்பத்திலே இருந்தால் அந்தக் குடும்பம் எப்படித் தாங்க முடியும்? இப்பொழுது இருக்கிற விலைவாசியிலே. அந்த குடும்ப பாரம் தாங்க முடியவில்லையே என்று சொல்லுவார் அவர். இதைத்தான் ஔவையாரும் சொன்ஞர்.

"கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை
அதனினும் கொடிது ஆற்ருெணுக் கொடுநோய்"

ஆற்ருெணு-தாங்கிக் கொள்ள முடியாத நோய். இந்தக் கருத்தை மாணிக்க வாசகர் சொன்ஞர்.

"வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்"

திருமுறைகளிலே இந்த வார்த்தை எங்கே எங்கே வருகிறது என்று எடுத்துக் காட்டுகின்றேன். திருவாசகத்திலே மணிவாசகர் சொல்லுகின்ருர்.

அந்த வார்த்தையைச் சொல்லுகின்ருர் அப்பர் பெருமான். "ஆற்றேன் அதிகைக் கெடில வீரட்டானத் துறை அம்மானே." என்ற செந்தமிழ்ப் பாடலைப் பாடிஞர். ஏழு உலகங்கள் கேட்க எம்பெருமான் "நாவுக்கரசு" என்ற பட்டத்தைக் கொடுத்தார். யாரோ ஒரு சங்கத்தார் கொடுத்த பட்டமல்ல. பரமேசுவரன்தான் எல்லா வித்தைகளுக்கும் தலைவன். சிவபெருமானுக்கு வித்யாபதி என்று பெயர். சிவபெருமான்தான் வீணை வாசிப்பதிலே வல்லவர்.

> "வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
> மிக நல்ல வீணை தடவி"

அப்படி வீணை வாசிக்க வல்லவனுகிய சிவபெருமான் வேதாகமங்களை எல்லாம் சொன்னவர். அந்தப் பெருமான் இவருக்குப் பட்டம் கொடுத்தாராம், 'நாவுக்கரசு' என்று. இப்பொழுது அடியேன் பேசுவதற்கு இது ஒரு கருவி துணை செய்கிறது. தாய்மார்கள் படைக்கின்ற போது கரண்டி முதலான கருவிகள் துணை செய்யும். இசை வாணர்கள் பாடுகின்ற பொழுது, மிருதங்கம், பிடில் இந்தக் கருவிகள் துணை செய்யும். எழுதுவதற்கு உங்களுக்குப் பேஞ துணை செய்கின்றது. அதுபோல நாம் இந்த மண்ணுலகத்திலே வாழ்வதற்கு நமக்கு 36 கருவிகள் துணை செய்கின்றன. 36 கருவிகள் சுவாமி நமக்கு இலவசமாகக் கொடுத்திருக்கிருர். ஒன்று மண், ஒன்று நீர், ஒன்று நெருப்பு, ஒன்று காற்று, ஒன்று ஆகாசம். மண்ணிலேதான் எல்லாம் விளைகின்றன. தண்ணீர் இல்லையென்ருல் வாழமுடியாது. நெருப்பில்லையென்ருல் ஒரு விஞடி இருக்க முடியாது. நான் சொல்வது வெளி நெருப்பு அல்ல. உள்ளே ஒரு நெருப்பு இருக்கின்றது. ஜாடராக்கினி. இந்த அக்கினி என்றைக்கு அணையுமோ அன்றைக்குத்தான் எல்லோரும் சுற்றி உட்காருவார்கள். இதை அருணகிரியார் சொல்லு

கின்றார். அருணகிரியார் சொல்லாதது என்ன இருக் கிறது?

“அறிவழிய மயல் பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக அகலாதே
......மறலியெனே யழையாதே”

திருச்செந்தூர்த் திருப்புகழ். உள்ளே இருக்கிற அக் கினியை நான் சொன்னேன். அதன்பின் ஆகாசம். காற்று. ஐம்பெரும் பூதங்கள். மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாசம். வேகமாகச் சொல்லுகிறேன். நாக்கு, மூக்கு காது, கண், சரீரம். இந்த ஐந்துக்கும் ஞானேந்திரியம் என்று பெயர். மறுபடியும் சொல்லு கிறேன். நாக்கு, மூக்கு, காது, கண், சரீரம். இந்த ஐந்தும் ஞானேந்திரியங்கள். நாக்கு, கை, கால், மலம் விடும் கருவி, நீர்விடும் கருவி. இது கன்மேந்திரியங்கள். ஞானேந்திரியம் என்றால் அறிவோடு தொழில் படும். கன்மேந்திரியம் என்றால் அறிவு இல்லாமலே தொழில் படும். நம் வீட்டிலே கூட்டிப் பெருக்குபவனுக்கு அறிவு தேவை இல்லை. வருமான வரி கணக்கு எழுதுபவருக்கு அறிவு தேவை. பாத்திரம் தேய்க்கிற அம்மாளுக்கு அறிவு தேவை இல்லை. பூஜைக்குச் சாமான் எடுத்து வைப்பவனுக்கு அறிவு வேண்டும். ஆகவே இந்தக் கையுக்கும், காலுக்கும் அறிவு கிடையாது. நாக்குக்கு அறிவு கிடையாது. அது கன்மேந்திரியங்கள். அந்த ஞானேந்திரியத்திலே வருகிற நாக்கு. இரண்டு தடவை நாக்கு என்று சொல்லியிருக்கிறேன். கவனமாகக் கேளுங்கள். சரீரம், நாக்கு, மூக்கு, கண், காது. இந்தக் கண்ணுக்கு அறிவு இருக்கு. இந்தக் கையுக்கும் காலுக் கும் அறிவு கிடையாது. ஞானேந்திரியம் ஐந்து. கன் மேந்திரியங்கள் ஐந்து. உடம்பு, நாக்கு, மூக்கு, கண், காது ஞானேந்திரியம். நாக்கு, கை, கால், நீர்விடும் கருவி, மலம் விடும் கருவி. இது கன்மேந்திரியம். இப்

பொழுது நீங்கள் நினைக்கிறீர்கள். நான் நாக்கு இரண்டு தடவை சொல்லியிருக்கிறேன். ஞானேந்திரியத்திலும் நாக்கு சொல்லியிருக்கிறேன். கன்மேந்திரியத்திலும் நாக்கு சொல்லியிருக்கிறேன். திருமுருகாற்றுப்படை என்று ஒரு நூல் உண்டு. அது பத்துப் பாட்டிலும் வரும். பதினோராந் திருமுறையிலும் வரும். ஒருவர் இரண்டு சங்கத்திலும் அங்கம் வகிப்பார். அங்கே செயலாளராயிருப்பார். இங்கு, காஷியராய் இருப்பார். தகுதி காரணம். நாக்கு ஞானேந்திரியத்திலும் வரும். கன்மேந்திரியத்திலும் வரும். அதிலே என்ன வித்தியாசம்? ஞானேந்திரியத்திலே வருகின்ற நாக்கு சுவை உணரும். கன்மேந்திரியத்திலே வரும் நாக்கு வசனிக்கும். பேசுகின்ற நாக்கு ஒன்று. சுவை உணருகின்ற நாக்கு ஒன்று. கவனமாகக் கேளுங்கள். சில வீட்டுத் தாய்மார்கள் சமையலும் பண்ணுவார்கள். ஆபீஸ் பைலும் பார்ப்பார்கள். சில டிரைவர் கணக்கும் எழுதுவான். காரும் ஓட்டுவான். விளங்குகிறது அல்லவா? சில கோவில் ஓதுவார்கள் ஓதுவாராகவும் இருப்பார்கள். திருப்பணிக்கு வசூலும் பண்ணுவார்கள். சில தாய்கட்குச் சமையல்தான் பண்ணத் தெரியும். வேறு ஒன்றும் தெரியாது. யாராவது வந்தால் கூட சரியாகப் பேசத் தெரியாது. ஆகவே இரண்டு தடவை சொல்லியிருக்கிறேன். வசனிக்கின்ற நாக்கு ஒன்று. சுவையை உணர்கின்ற நாக்கு ஒன்று. அந்தச் சுவையை உணர்கின்ற நாக்கு அறிவுள்ள நாக்கு. இந்த வசனிக்கின்ற நாக்குக்கு அறிவு கிடையாது. அதனுல்தான் கண்டதைப் பேசுகிருன். கண்டதைத் தின்பானு? கொஞ்சம் ஊசிப்போனுல் துப்பி விடுகிருனே. முன்பு யாரை இகழ்ந்தாரோ அவர்களை இப்பொழுது புகழ்வான். அன்றைக்கு இகழ்ந்த நாக்கு இன்றைக்குப் புகழ்கிறது. அறிவில்லாத நாக்கு. எதை வேண்டுமானுலும் சாப்பிடாது. சாப்பிட வேண்டியதைத் தான் சாப்பிடும். இதையெல்

லாம் நீங்கள் நினைவுக்குக் கொண்டு வரவேண்டும். இப் பொழுது எத்தனை சொன்னேன்? 15 சொன்னேன். மண், தண்ணீர், நெருப்பு, காற்று, மெய், ஆகாசம், வாய். வாய் என்பது ஆகு பெயராக நாக்கைக் குறிக் கிறது. ஆகு பெயர். இடவாகு பெயர் என்று இலக்க ணம் பேசுகிறது. பாட்டு அரியக்குடி என்றால் ராமானுஜ ஐயங்கார். பாட்டு மதுரை என்றால் சோமு என்று அர்த்தம். பிடில் கும்பகோணம் என்றால் ராஜமாணிக் கம். வாய் பேசுகிறது என்றால் நாக்கு பேசுகிறது என்று அர்த்தம். இடவாகு பெயர். வாய் பேசாது. நாக்குதான் பேசும். அதுதான் 'நாமேல் நடவீர் நடவீர் இனியே' என்று அருணகிரியார் பாடுகிறார். அற்புத மாகப் பாடுகிறார்.

> ''யாமோதிய கல்வியும் எம் அறிவும்
> தாமே பெற வேலவர் தந்ததனால்
> பூமேன் மயல் போய் அற மெய்ப்புணர்வீர்
> நாமேல் நடவீர் நடவீர் இனியே''

நாவின் மேல் நடவுங்கள் என்று அருணகிரிநாதர் சொல்லுகிறார். அப்பொழுது அந்த நாவு வசனிக்கின்ற நாக்கு. 15 சொன்னேன். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் தன் மாத்திரைகள். வடமொழியிலே சொன் னால் சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம். தமிழிலே சொன் னால் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். மொத்தம் 20 சொன்னேன். மனம் ஒன்று, புத்தி ஒன்று, அகங்காரம் ஒன்று, குணம் ஒன்று, அந்தக் கரணங்கள் நான்கு. சில பேர் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனச்சொல்வர். அப்படிச் சொன்னால் தப்பு இல்லை. ஆனால் ஆழமாகச் சிந்தித்தால் பிழை, மனமும் சித்தமும் ஒன்றுதான். அப்படி எண்ணுவது மனம். தீர்க்கமாக எண்ணுவது சித்தம். தயிரும் மோரும் ஒன்றுதான். கொஞ்சம் தீர்த்தம் விட்டால் மோர். கொஞ்சம் கெட்டியாய் இருந்தால் தயிர். இனம் ஒன்றுதானே. ஆகவே மனம்

எண்ணுகிற கருவி. புத்தி தெளிவிக்கின்ற கருவி. அகங்காரம் மேலே கொண்டு வருகிற கருவி. அதன்பிறகு குணம். மிகவும் ஆழமாகச் சிந்தித்தவர்கள் அந்தக் கரணங்களைச் சொல்லுகின்ற பொழுது மனம், புத்தி. அகங்காரம், குணம். இப்பொழுது 24சொன்னேன். இந்த இருபத்து நாலும் ஆன்ம தத்துவங்கள். காலம், நியதி, அராகம், கலை, வித்தை, புருஷன், மாயை இந்த ஏழும் வித்யா தத்துவங்கள். ஈஸ்வரம், சுத்தவித்தை, சாதாக்கியம், விந்து, நாதம் இந்த ஐந்தும் சிவ தத்துவங்கள். கொஞ்சம் தலைவலியாய் இருக்கும் கேட்பதற்கு. எத்தனை நாளைக்குத்தான் கதையே கேட்டுக் கொண்டிருப்பது? இதெல்லாம் நமக்கு ஆண்டவன் கொடுத்த கருவி என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், விந்து, நாதம். முதல் கருவி மண். கடைசி கருவி நாதம். அதுதான் மண் முதல் நாதம் ஈறாக உள்ள 36 கருவிகள். இதிலே இரண்டு வேலை செய்கிற கருவி நாக்கு. இந்த நா படைத்தவர்களுக்கெல்லாம் அரசர் நாவுக்கரசர். கிறிஸ்துவருக்கும் நாவு உண்டு. முஸ்லிமுக்கும் நாவு உண்டு. ஆங்கிலேயருக்கும் நாவு உண்டு. அந்த நா படைத்தவர்களுக்கெல்லாம் தலைவர் நாவுக்கரசர். அப்படிப் பட்டம் கொடுத்தவன் பரமேஸ்வரன். யாரோ சங்கத்தார் கொடுக்கவில்லை. திருநாவுக்கரசு என்று ஏழு உலகம் அறியப் பட்டம் கொடுத்தானும் ஆண்டவன். நாக்கு மிக்க முக்கியம். அதனுல் தான் நாக்கு இல்லாத பிராணிகளுக்கெல்லாம் அஃறிணை. பேசுகின்றவர்கள் தான் உயர் திணை. நாவினுல் பேசுகின்றவர்களைத் தான் உலகம் மதிக்கும். மரங்களுக்கு அரசு—அரச மரம். பர்வதங்களுக்கு அரசு,—இமவான். விலங்குகளுக்கு அரசு,—சிம்மம். பட்சிகளுக்கு அரசு,—கருடாழ்வார்; தேவராஜா; கஜராஜா. முனிவர்களுக்கு அரசு—முனிராஜா. இவர் நா படைத்தவர்களுக்கெல்லாம் அரசு—திருநாவுக்கரசு.

''திருநாவுக்கரசு வளர் திருத் தொண்டின் நெறிவாழ
வரு ஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ்
பெரு நாமச்சீர் பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக்கு உரை செய்ய ஒண்ணுமை உணராதேன்''

என்பது சேக்கிழார் வாக்கு. அவர் குன்றத்தூரிலே அவதரித்து சோழவளநாட்டிலே அனபாயச் சக்கரவர்த்திக்கு முதலமைச்சராக இருந்து, பதவி வேண்டாம் என்று வெளியே வந்தவர். சோழ மகாராஜா ஒரு பட்டம் கொடுத்தாராம் 'உத்தமச் சோழப் பல்லவன்' என்று. இவரை யானை மேல் அமர வைத்து அனபாயச் சக்கரவர்த்தி பின் பக்கம் இருந்து வெண் சாமரம் இரட்டுகிருராம். இதெல்லாம் நமக்கும் பெருமை நால்வரோடு ஒப்ப எண்ணத் தக்கவர், சேக்கிழார் சுவாமி. அவர் பாடுகின்ற பாட்டு,

''திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின்
...........ஒண்ணுமை உணராதேன்''

ஒரு நாவினுலே அவருடைய அருட் பெரும் திறத்தை எடுத்துச் சொல்ல முடியாது என்று அவையடக்கத்தோடு பேசுகிருர். அத்தகைய பெரிய ஞானமூர்த்தி நாவுக்கரசு சுவாமிகள். அவர் முதலாகப் பாடினது,

''கூற்ருயினவாறு விலக்ககிலீர்''

அந்த வயிற்றுவலி கூற்றுவனைப் போலத் துயரத்தைக் கொடுத்ததாம். ஆண்டவனே இந்த வலியைத் தேவரீர் விலக்கவில்லையே. மிகப் பெரியவர். பெரியவர்கள் எப்பொழுதுமே குற்றத்தை ஒப்புகொள்வார்கள். இன்ஞெரு ஜென்மத்துக்கும் ஒப்புகொள்ள மாட்டார்கள் சிறியவர்கள். சுவாமிகள் தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்கிருர் ஆண்டவனிடத்திலே.

**''கொடுமை பல செய்தனன்''**

அவர் கொலே செய்யவில்லே. வேளாளர். அந்த மரபிலே கொலே, கொள்ளே கிடையாது. ஆனுலும் சைவ சமயத் திலே பிறந்து, இந்தச் சைவத்தை விட்டு, சமண சமயம் புகுந்து நான் தெய்வத்தை நிந்தித்தேனே என்று எண்ணி, 'கொடுமை பல செய்தனன் நான் அறியேன்' என்ருர். சிவன் ஒழிக என்றுசொன்னேனே. வெண்ணீறு ஒழிக என்று சொன்னேனே. எங்கள் அப்பா புகழனுர் மூன்று வேளேயும் பூஜை பண்ணும் மரபாயிற்றே.

**''கொடுமை பல செய்தனன் நான் அறியேன்''**

அப்படி இருக்கின்ற என்னே "ஏற்ருய் அடிக்கே; இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்."

**"தோற்ருது என் வயிற்றின் அகம்படியே**
**குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன், அடியேன் அதிகைக் கெடில**
**வீரட்டானத் துறை அம்மானே''**

என்று பாடினுர்.

அவர் வழிவழியாக உயர்ந்த பரம்பரையிலே வந்தவர். முந்தின ஜென்மத்திலே வாகீச முனிவர். நம் கி. வா. ஜகந்நாதய்யருக்கு "வாகீச கலா நிதி". என்று காமகோடிப் பெரியவர்கள் பட்டம் கொடுத்தார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் போன ஜன்மத்தில் வாகீசர். ஆகவே கல்வியிலே கரை கண்டவர். அற்புதமாகப் பாடுகின்ற ஆற்றல்; ஆழத்தோடு பாடுகின்ற திறமை உடையவர். ஒரு கருத்தை உங்களுக்கு நினைவு செய் கின்றேன். துன்பங்களுக்கெல்லாம் மூல காரணமாக இருப்பது ஆணவ மலம். இதெல்லாம் சிந்தனேக் குரியது. நீங்கள் நினைவிலே வைத்துக் கொள்ள

வேண்டும். துன்பத்துக்கு மூல காரணமாய் இருப்பது ஆணவ மலம். அந்த ஆணவ மலம் இடையே வந்த தல்ல. ஆன்மா என்றைக்கு உண்டோ அன்றைக்கே ஆணவ மலம் உண்டு. செம்பு என்றைக்கு உண்டோ அன்றைக்கே களிம்பு உண்டு. அரிசி என்றைக்கு உண்டோ அன்றைக்கே தவிடு உண்டு. அந்த ஆணவ மலம்தான் நம் துன்பம் எல்லாவற்றுக்கும் மூல காரணம். இந்த ஆணவ மலத்தின் மூலம் மாயாமலம். ஒரு மலத்தைப் போக்க இரு மலங்களைக் கொடுத்தான், இறைவன். குழந்தைக் காலிலே முள் தைக்குமானால் பஞ்சை வைத்தா கட்ட வேண்டும்? இல்லை சந்தனம் வைக்க வேண்டுமா? காலிலே உள்ள முள்ளை எடுக்க இன்னொரு பெரிய முள்ளை எடுத்துக் குத்த வேண்டும். முள்ளை முள்ளினாலே குத்தி எடுப்பது போலே, குழந்தைகள் போன மலத்தைப் பசுவின் மலத்தினாலே அகற்றுவதுபோல், அழுக்கை அழுக்கினால் போக்குவதுபோல், வயிரத்தை வயிரத்தால் அறுப்பது போலே ஆணவ மலத்தைக் கன்ம மலத்தாலும், மாயா மலத்தாலும் நீக்க வேண்டும். இப்பொழுது மூன்று மலங்கள். ஆணவ மலம், கன்மம், மாயை. நாம் செய்கின்ற ஜபதபங்களால் ஒவ்வொரு மலங்களாக நீங்கும். வேஷ்டியைத் துவைக்கிறபோது அழுக்கு நீங்குவது போலே. முதலில் மாயா மலம் விலகும். அதற்கப்பாலே கன்ம மலம் விலகும். கடைசியிலே ஆணவ மலம் வலி குன்றி இருக்கும். அழிந்தே போகாது. சைவ சித்தாந்தத்திலே சத்காரியவாதம் என்று ஒன்று உண்டு. அது உள்ளது சிதையாது. இல்லது தோன்றாது. நூதனமாக ஒரு பொருள் தோன்றுவதில்லை. ஒன்று ஒன்றாகப் பரிணமிக்கின்றது. ஆகவே பால் தயிராகப் பரிணமிப்பது போலே மாயை உலகமாகப் பரிணமிக்கின்றது. இந்த உலகத்துக்கு மூல காரணம், முதற்காரணம் மாயை.

ஒரு குயவனார் பானை வனைகின்றார். அவருக்குத் துணைக் காரணமாய் இருப்பது தண்ட சக்கரம். முதற்

காரணமாயிருப்பது மண். நிமித்த காரணம் குயவனார். எல்லாம் கவனமாகக் கேளுங்கள். பெரிய தத்துவம் அது. இறைவன் குயவனாரைப் போல. இறைவனுடைய அருள் சக்தி தண்ட சக்கரம் போல. மாயை வந்து மண் போலே. மண்ணாயிருக்கிற முதல் காரணத்தைக் கொண்டு, தண்ட சக்கரம் என்ற துணைக் காரணத்தை வைத்து, நிமித்த காரணமான குயவனார் பானையை வனைவது போல மாயையான முதல் காரணத்தை வைத்து சக்தியாகிற துணைக் காரணத்தைக் கொண்டு நிமித்த காரணமான இறைவன் இந்த உலகத்தை வனைகின்றான். இதைப் பார்த்த உடனே உங்களுக்கு என்ன தோன்றும். இதைக் கட்டிய என்ஜினீயர் ஒருவர் உண்டு என்று தோன்றும். இந்தத் துணியைப் பார்த்தவுடன் நெய்தவன் ஒருவன் வேண்டும் என்று தோன்றும். ஒரு நூலைப் பார்த்தவுடன் அதை எழுதிய ஆசிரியர் ஒருவர் வேண்டும் என்று தோன்றும். அது போல உலகத்தைப் பார்த்தவன் உலகத்தை இயற்றியவன் ஒருவன் இருக்க வேண்டும் என்று அறிவாளி எண்ணுவான். அல்லாதவர்களைப் பற்றி நான் என்னச் சொல்லுவது? பெரியஅறிவாளி யார்? வள்ளுவர். அவர் சொன்னார்:

"உலகு இயற்றியான்"

என்று குறளிலே வருகிறது. வள்ளுவரையும் நம்ப வில்லையென்றால் நான் என்ன செய்கிறது? நான் பிறந்து 13 மாதம் கழித்து எங்கள் அம்மா பிறந்தார் என்று ஒருத்தர் சொன்னால், அவரோடு நாம் பேசிக் கொண்டு இருக்கலாமா? இதையெல்லாம் எந்த மியூசியத்திலே வைப்பது? அதைப் போல வள்ளுவரை விட அறிவாளி என்றால் அவர்களோடு பேசலாமா? வள்ளுவருடைய வாக்கிலேயே வருகின்றது. "உலகு இயற்றியான்" என்று.

உலகத்தை இயற்றியவன் இருக்கின்றான். அவன் கண்ணுக்குத் தெரிய வேண்டுமென்று ; அவசியமில்லை. உங்களுக்குச் சொந்த வீடு : எங்கே இருக்கிறது என்று கேட்கலாம். நீங்கள் என்ன மரபு என்று கேட்கலாம். உங்களுக்குத் திருமணம் ஆயிற்றா என்று கேட்கலாம். நீங்கள் எங்கே வேலை பார்க்கிறீர்கள் என்று கேட்கலாம். எத்தனைக் குழந்தைகள் என்று கேட்கலாம். உங்களுக்கு அறிவு இருக்கிறதா என்று கேட்கலாமா? கேட்டால் என்ன கிடைக்கும்? பெரிய விபரீதமாய்ப் போய்விடும். அது எப்படித் தெரியும். செயற்கையிலே இருந்து தெரியும். அறிவு தானாக வெளிப்படுகிறது. அது போல இந்த உலகம் ஒழுங்காக நடப்பதனாலே இதை இயற்றியவன் இருக்கின்றான். கார் லேட்டாய் வருகிறது. விமானம் தாமதமாய் வருகிறது. ரயில் தாமதமாய் வருகிறது. சூரியன் என்றாவது தாமதமாக உதித்திருக்கிறானா? உலகம் தோன்றிய நாள் தொட்டு வானத்தில் சஞ்சரிக்கின்ற கோளங்கள் ஒன்றோடொன்று இடித்துக் கொண்டனவா? மரங்களுக்கு நோட்டீஸ் கொடுத்தவர்கள் யார்? 'மரங்களே! இப்போது இலைகள் உதிர வேண்டும். தமிழக சர்க்கார் உத்தரவு. இப்போது பனி அடிக்க வேண்டும். இப்போது காற்று அடிக்க வேண்டும்' என்று ஒருவரும் உத்தரவு போடவில்லையே. அவைகள் எல்லாம் முறையாக இயங்குவதனாலே அதை இயக்குகிறவன் ஒருவன் இருக்க வேண்டும். அவனுக்கு இயவுள் என்று பெயர். 'பெரும் பெயர் இயவுள்' என்பது திருமுருகாற்றுப் படை. ஆகவே எல்லாவற்றுக்கும் தலைவனாய் இருக்கின்ற இறைவன் இதனை இப்படிச் செய்கின்றான்.

ஒன்று ஆணவம். ஒன்று கன்மம். ஒன்று மாயை. ஒரு மலம் நீங்கினால் இரண்டு மலங்கள் இருக்கும். இரண்டு மலங்கள் நீங்கினால் ஒரு மலம்

இருக்கும். ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன் எல்லாருக்கும் விளங்க வேண்டும். வலை மாதிரி ஒரு பனியன் மட்டும் வீட்டில் இருக்கும்போது போட்டிருப் பார்கள். பனியன், சட்டை, கோட்டு. அந்தப் பனியன் மாதிரி ஆணவ மலம். சட்டை மாதிரி கன்ம மலம். கோட்டு மாதிரி மாயா மலம். கோட்டு, சட்டை, பனியன். அப்பொழுது ஒரே மலம் உடைய ஆன்மாக்களுக்கு விஞ்ஞான கலர் என்று பெயர். இரண்டு மலமுடைய ஆன்மாக்கள் பிரளயா கலர். மூன்று மலமுடைய ஆன்மாக்கள் சகலர். இப்பொழுது நாம் எல்லாம் மூன்று மலமுடைய ஆன்மாக்கள். அந்தச் சகலர்களுக்கு இறைவன் படர்க்கையிலே வந்து அருள் தருவான். குருநாதனாக வந்து ஆட்கொள்வான்.

"அந்தண னாவதும் காட்டி வந்தாண்டாய்"

—மாணிக்கவாசகர்.

"குரு வடிவாய் வந்து என் உள்ளம் குளிரக் குதி கொண்டவே"—அருணகிரிநாதர். படர்க்கையிலே வந்து காட்சி தருவான், மும்மலமுடைய ஆன்மாக் களுக்கு. இந்த இரண்டு மலமுடைய பிரளயாகலருக்கு முன்னின்று காட்சி தருவான். ஒரு மலமுடைய ஆன்மாக்களுக்குத் தன்மையிலே முன்னின்று காட்சி தருவான். உள்ளுக்குள்ளே ஜோதியாகக் காட்சி தருவான் ஒரு மலமுடைய ஆன்மாக்களுக்கு. தன்மை, முன்னிலை, படர்க்கை. மூன்று மலமுடைய ஆன்மாக்க ளுக்குப் படர்க்கையிலே இருந்து காட்சி தருவான். இரண்டு மலமுடைய ஆன்மாக்களுக்கு முன்னிலையாக நின்று காட்சி தருவான். ஒரு மலமுடைய ஆன்மாக் களுக்கு உள் நின்று ஜோதி வடிவாகக் காட்சி தருவான். இப்பொழுது இந்த மூன்று மலங்களும் போக வேண்டுமே.

விறகிலே தீ இருக்கின்றது. ஆனால் கண்ணுக்குத் தெரியாது. அந்தக் கட்டையை இன்னொரு கட்டையி

ஞலே நன்ருகக் கடைந்தால் கனல் வெளிப்படுகிறது. பாலிலே நெய் இருக்கிறது. கண்ணுக்குத் தெரியாது. அதைக் காய்ச்சி உறையிட்டு, பிராதக் காலத்திலே மத்துவிட்டுக் கயிறு கொண்டு கடைந்தால் அந்த நெய் வெளிப்படுகின்றது. அப்பொழுது நன்ருகக் கடைந்தால் வெளிப்படும் கனல், கட்டையிலே. லேசாகக் கடைந்தால் வெளிப்படும் பாலிலே நெய். இந்த மணியிலே ஒளி இருக்கிறது. அதை அப்படி லேசாகத் துடைத்தால் ஒளி வரும். வைர மூக்குத்தி போட்டுக் கொண்டிருக்கிற தாய்மார்கள் அவர்களே அறியாமலே துடைத்துக் கொள்வார்கள். அப்பொழுது ஒளி வரும். அப்படித் துடைத்தால் போதும் வைரத்தை. ஸ்வாமி யின் வைர ஆபரணங்களைத் துடைத்தாலே அதிலே ஒளி வரும். அப்பொழுது கடைந்தால் முன்னிற்கும் மணியிலே ஒளி. வாங்கிக் கடைய முன்னிற்கும் பாலிலே நெய். முறுக வாங்கிக் கடைய முன்னிற்கும் விறகிலே தீ. இந்தக் கருத்தை அப்பர் சுவாமி தேவாரத்திலே,

**''விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றிஞல்**
**முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே''**

உயர்ந்த வாக்கு. எத்தனையோ தத்துவங்களை நம் முடைய நினைவுக்குக் கொண்டு வருகிருர் அந்தச சுவாமிகள்.

எப்படிச் சொன்ஞர்? 'விறகில் தீயினன்'. அவரா பாடுகிருர்? அந்தச் சரஸ்வதி நாவிலிருந்து பாடுகிருர். 'விறகில் தீயினன்' — விறகிலே தீயிருக் கிறது — அது மூன்று மலம் உடைய ஆன்மா. பாலிலே வெண்ணெய்—இரண்டு மலமுடைய ஆன்மா.

மணியிலே ஒளி—ஒரு மலமுடைய ஆன்மா. இந்தக் கருத்தை நினைவிலே வைத்துக் கொண்டால் நான் தொடக்கத்திலே சொன்ன பாடல் நினைவுக்கு வரும்.

**உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்'—அது மும்மலமுடைய ஆன்மா. 'நில உலாவிய நீர்மலி வேணியன்'–அது இரு மலமுடைய ஆன்மா. 'அலகில் ஜோதியன்'–அது ஒரு மலமுடைய ஆன்மா. அந்த ஒரு மலமுடைய விஞ்ஞான கலருக்கு, ஜோதி வடிவாகக் காட்சி தருவான். இரு மலமுடைய பிரளயா கலருக்கு முன்னின்று சந்திர ஜடாதரன் காளகண்டத்தோடு காட்சி தருவான். மும்மலமுடைய ஆன்மாக்களுக்கு மானுடச் சட்டை தாங்கி வருவான். அதைத்தான் 'உலகெலாம்...அரியவன்' — மும்மலமுடைய சகலரை. 'நில உலாவிய...வேணியன்'- பிரளயா கலரை. 'அலகில் ஜோதியன்' – என்ருல் விஞ்ஞான கலரை. இதையெல்லாம் சாஸ்திரக் கருத்து கொண்டு அந்தப் பாடலை அணுக வேண்டும். எனவே, விறகில் தீயினன்—முறுக வாங்கிக் கடைய முன்னிற்கும் விறகில் தீ. பாலில் படு நெய்—வாங்கிக் கடைய, முன்னிற்கும். மணியிலே ஒளி—கடைய முன்னிற்கும். வார்த்தைகளை எல்லாம் அளந்து போடுகிருர். 'முறுகவாங்கிக் கடைய', 'வாங்கிக் கடைய', 'கடைய' முன்னிற்குமே. 'விறகில் தீயினன்', 'பாலில் படுகிற நெய் போல்'. இந்த நடுவில் இருக்கிறது, பாலில் படு நெய்.

நல்லவர்களைப் பார்த்து நாம் என்ன என்று சொல்லுகிருேம்? அந்த அண்ணு பால் போன்றவர். பால் போன்றவர் என்று சொன்ஞல் வெண்மைக்காகச் சொல்லுவதில்லை. வெண்மையைக் கருதிச் சொல்ல

வேணுமேயானுல் அந்த அண்ணு சுண்ணும்பு மாதிரி உள்ளம், முள்ளங்கி மாதிரி உள்ளம், சலவைத் துணி மாதிரி, தும்பைப் பூ மாதிரி என்று சொல்லலாமே. பால் போன்ற உள்ளம். பால் இனிமைக்காகச் சொல்வ தில்லை. அந்த அண்ணு மனது தேன் போல, சீனி போல, கல்கண்டு போல என்று சொல்லலாமே. அப்படியெல்லாம் சொல்வதில்லை. பால் போல். ஏன்? இந்தப் பாலிடம் உயர்ந்த குணம் ஒன்று இருக்கிறது. வேறு எந்தப் பொருளுக்கும் இல்லாத ஒரு தனிப் பெருங் குணம். பால் வியாபாரிகள் அதில் தாராள மாகத் தங்கள் குணத்தைக் காட்டுவார்கள். அரைப்படி பாலிலே அரைப்படி தீர்த்தம் விடுவார்கள். அந்தப் பாலினுடைய உயர்வு, அந்த அரைப்படி தண்ணீரை ஐக்கியம் பண்ணிக் கொண்டு அரைப்படிப் பாலுக்கு ஒரு ரூபாய் என்ருல் அரைப்படி தண்ணீருக்கும் ஒரு ரூபாய். அதற்கு நிறத்தையும் கொடுத்து, உயர்வையும் கொடுத்து, விலையையும் கொடுத்து, மதிப்பையும் கொடுக்கிறது. அப்படித் தன்பால் சேர்ந்த ஏழை மனிதனுக்குத் தனக்கு உண்டான நலன்களையெல்லாம் பகிர்ந்துகொடுக்கின்ற ஒருபுண்ணியவானைப் பார்த்துப் பால் போன்றவர் என்பர். இவர் 5 ரூபாய் டிக்கட் கொடுத்து சினிமா பார்க்கப் போனுல் அந்த ஏழைக்கும் 5ரூபாய் டிக்கட்டுதான். இவர் 7 ரூபாய்க்கு உயர்ந்த ஆகாரம் சாப்பிடுவார். அவனுக்கும் 7 ரூபாய் உணவு. இவருக்கு நாலு கரண்டி நெய் என்ருல் அவனுக்கும் நாலு கரண்டி நெய். சிலபேர், இவனுக்கு நெய்; அவனுக்கு நை. அந்தப் பக்கமாக வைத்துப் போடுவான். கார் ஓட்டும் டிரைவர் காரை ஓட்டும் போது வேலைக்காரனுய் இருக்க வேண்டும். சாப்பிடும் போது அவனை மகன் போலக் கருத வேண்டும். ஆகையினுலே தான் என்ன நலம் அனுபவிக்கிருரோ அதை யெல்லாம் தன் நண்பனுக்கும் பகிர்ந்து

கொடுக்கின்ற உத்தமர் பால் போன்றவர். இப்பொழுது பாலிலே அரைப்படி தணணீர் விடப்பட்டிருக்கிறது. தாராளமாய். தாய்க்குலம் என்ன செய்கிறது? அந்தப் பாலேக் காய்ச்சுகிறுர்கள். பாலேயா காய்ச்சுகிறுர்கள்? தண்ணீரை வற்ற வைக்கிறுர்கள். இந்தப் பால் என்ன செய்கிறது? "ஏ அக்கினி பகவானே! என்பால் தஞ்சம் புகுந்த என் நண்பனுய் இருக்கிற தண்ணீரை நீ வற்ற வைக்கிருயே. என் உயிரைக் கொடுத்தாவது என் நண்பனேக் காப்பாற்றுவேன்" என்று பானேயிலே இருக்கிற பால் முழுக்க மேலே வருகிறது. அந்த அம்மாள், "பாலே! கோபிக்காதே. உன் நண்பனே விடுகிறேன்" என்று ஒரு சொட்டுத் தண்ணீர் விட்டால், 'டப்' என்று உள்ளே போய் விடுகிறது. பிரத்தியட்சப் பிரமாணம் இது. இது பழைய காலத்து நூலிலே சொல்கிறது.

"பாலில்நீர் தீயணுகப் பால் வெகுண்டு தீப்புகுந்து
மேலும்நீர் கண்டமையும் மேன்மை போல்"

—நீதிவெண்பா.

இந்தக் கருத்தை அருணகிரிப் பெருமான் சொல்கிறுர்.

"ஓதமுற்றெழு பால் கொதித்தது
போல எட்டிகை நீச முட்டரை
ஓடவெட்டிய பானு சத்திகை எங்கள்கோவே"

திருத்தணித் திருப்புகழ். ஆகவே பால் உயர்ந்த பொருள். அதைக் காய்ச்சி (கொதிக்கிற பாலிலே உறை விட மாட்டார்கள். ஆறிப் போன பாலிலேயும் உறை விட மாட்டார்கள்.) இளம் சூட்டிலே உறை விடுவார்கள். அதுபோல நம்மிடம் உள்ள காம, குரோத, லோப, மோக, மத மாச்சர்யமான தீர்த்தத்தை ஞானுக்கினியினுலே வற்ற வைத்து, பக்குவக் காலத்திலே ஐந்தெழுத்தாய் இருக்கிற உறையை, ஆசாரியன்,

செவியிலே விட்டு, அந்தப் பால் உறியிலே இருப்பது போலே, விடியற்காலத்திலே ஆசாரியன் சொன்ன மந்திரத்தை, நிஷ்டானுபூதியாக இருக்கின்றவர்கள் அன்பு என்ற மத்தை விட்டு ஞானமாய் இருக்கிற கயிறு கொண்டு நாள் தோறும் தியானுக்கினியினுலே கடைந்தால் ஆண்டவன் வெளிப்பட்டுத் தோன்றுவான். கொஞ்சம் 10 நிமிஷம், 15 நிமிஷம் பிராதக்காலத்திலே தியானம் பண்ண வேண்டும். நிச்சயமாக அந்தப் பரம் பொருள் வெளிப்பட்டுத் தோன்றும். வைகுண்டத்தி லிருந்து வருவது இல்லே. கைலாயத்திலிருந்து வருவது இல்லே. உங்கள் உள்ளத்திலிருந்து வெளிப்படும். பாலிலே இருந்து நெய் வெளிப்படுமாப் போலே.

"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா"

அரசியலிலே ஒரே ஒரு ஆள் கலந்து கொள்ளாமலே இருந்தான். யார்? சகாதேவன். அவனுக்கு அரசியலே பிடிக்கவில்லே. கிருஷ்ணர் சொன்னுர்: 'ஏண்டா! நீ அரசியலிலே கலந்துகொள்வதில்லே' என்று. 'நல்லவர்கள் இனி அதில் நுழைய மாட்டார்கள்' என்ருன். அப்பொழுது சுவாமி சொன்னுர். இந்தப் பாரதப் போர் வராமல் இருக்கிறதற்கு என்ன வழி? என்று கேட்டார். இருக்கிறது. என்ன? "நாலு வழி. எதிர்க்கட்சி லீடருக்கு ஒரு கவர்னர் பதவி கொடுக்க வேண்டும். இந்த ஆயுதம் கண்டு பிடிக்கிறவனேத் தூக்க மாத்திரை கொடுத்துக் கொன்று விடவேண்டும். இந்தக் கூந்தலே முடிக்க மாட்டேன் என்று பிடிவாதம் பண்ணும் திரௌபதியை வடபழனிக்குக் கூட்டிப் போய் 5ரூ. கொடுத்து கூந்தலே அறுத்துவிடவேண்டும். பிரித்து ஆளுகிற உன்னேக் கயிறு போட்டுக் கட்டி வைக்க வேண்டும்" எனச் சகாதேவன் சொன்ஞன்.

"பாராளக் கன்னன் இகல் பார்த்தனேயும் கொன்றுஅணங்கின்
காரார் குழல் களேந்து காலில் தளே பூட்டி
நேராகக் கைப்பிடிந்து நின்னேயும் யான் கட்டுவனேல்
வாராமல் காக்கலாம் மா பாரதம் என்ருன்"

கால் என்ருல் இந்தக் கால் இல்லை. கால்—பிராணவாயு. சகாதேவன் சொன்ஞன். (அவன் கடைக்குட்டி.) சுவாமி கேட்டார்: "கர்ணனுக்குக் கவர்னர் பட்டம் கொடுத்து விடலாம். அர்ஜுனனுக்கும தூக்க மாத் திரை கொடுத்துச் சரிக்கட்டி விடலாம். திரௌபதியை வட பழனியில் அழைத்துப் போய் மொட்டை அடித்து விடலாம். என்னைக் கட்ட முடியுமா?" என்ருர்.

'முன்னம் நீ கூறியவை எல்லாம் முடிந்தாலும்
என்னை நீ கட்டுமாறு எவ்வாறென'

அவன் சொன்ஞன்: "பகவானே! உன்னை உனக்குத் தெரியாது. இந்தக் கண் எல்லாவற்றையும் பார்க்கும். அது தன்னைப் பார்த்துக் கொள்ளாது. சிலபேர் அப்படித்தான். ஊருக்கெல்லாம் சொல்லுவான். அவன் நடக்க மாட்டான். எல்லோருக்கும் சொல்லி, தான் நடக்கவில்லையென்ருல் என்ன பயன்? பரிமாறுகிறவன் அவனும் கொஞ்சம் அள்ளிப் போட்டுக் கொள்ள வேண்டும். பிரசங்கம் பண்ணுகிற நானும் தியானம் பண்ணி தெய்வத்தோடு தொடர்பு கொள்ள வேண்டும். அநேகம் பேருக்கு அந்தப் பழக்கமே கிடையாது. கிருஷ்ணு! உன்னை உனக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். உன் சுயவடிவத்தைக் காட்டு. உன்னை நான் கட்டுகிறேன்" என்ருன். (இந்தக் கிருஷ்ண வடிவம் வேஷம் இது. உன் சுயவடிவத்தைக் காட்டு என்ருன்.) சுவாமி என்ன பண்ணிஞர்?

"மாயவனும் அன்பன் மனமறிவான் கட்டுக என்று
ஆய வடிவு பதிஞருயிரம் கொண்டான்"

பதிஞருயிரம் கிருஷ்ணன். இப்பொழுது பதிஞருயிரம் தாம்புக் கயிரு எடுத்தான்? அவனுக்குத் தெரியும் மெயின் ஸ்விச் இங்கே இருக்கிறதென்று. மெயின்

ஸ்விச்சை 'ஆப்' பண்ணினால்தான் எல்லா லைட்டும் ஒன்றாக நின்றுவிடுமே. சுவாமி இங்கல்லவா இருக்கிறார். (உள்ளமாகிய கோயிலில்).

"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா"

சகாதேவனுக்குத் தெரியும். அவன் தியானம் பண்ணுகிறவன். தனியாக உட்கார்ந்து கண்களை மூடினான். சுவாமி இங்கே ஜோதி வடிவாகக் காட்சி அளிக்கின்றார். இரண்டு திருவடி சுவாமிக்கு. ஒன்று பர ஞானம். ஒன்று அபர ஞானம். பர ஞானம், அபர ஞானம் என்ற திருவடிகளைப் பக்தி என்ற கயிறு போட்டுக் கட்டி விட்டான்.

"பத்தி வலையில் படுவோன் காண்க"

சுவாமி இங்கே அகப்பட்டுக் கொண்டார்.

நீதேவன் என்றறிந்து நெஞ்சால் தனைக்கட்டும்
சாதேவன் கண்களிக்கத் தானேயாய் முன்னின்றான்
பூதேவ ருங்கனகப் பூங்கா நிழல் வைகும்
மாதேவருந் தேடிக் காணா மலரடியோன்.

வில்லிபுத்தூராழ்வார் தமிழ் அழகாய் இருக்கும்.

[ நீ — அந்த 'நீ' என்ன என்று எல்லோருக்கும் தெரியுமா?—இசைக்குறிப்பு]

நீ தேவன்.........முன் நின்றான் – சுவாமி உள்ளுக்குள்ளே சகாதேவனுக்குக் காட்சி கொடுத்தார். அது பாரதக் கதை. அப்பொழுது தியானம் பண்ணினால் தெய்வத்தை உள்ளுக்குள்ளே பார்க்கலாம். அப்படிப் பார்த்தவர் இராமகிருஷ்ண பரம ஹம்ஸர். அப்பர் பெருமான் ஆண்டவனை நேருக்கு நேராகக் கண்டவர். அவர் சொன்னார்:

"யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப் பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

இது அப்பருடைய தேவாரம்; நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது தேவார இன்பம்.

"கண்டேன் அவர் திருப்பாதம்"

ஆகவே "விறகில் தீயினன் பாலில் படுநெய் போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" உபாயம் சொல்கிறார். ஒரு ஊர் சொன்னால் போதாது. ஊருக்கு வழி சொல்லவேண்டும். 'உறவுக் கோல் நட்டு'–பக்தி என்பது மத்து. உணர்வு என்பது ஞானம். பக்தியாகிய மத்தை இட்டு ஞானமாகிய கயிறு கொண்டு கடைந்தால் நெய்யாய் இருக்கிற வெண்ணெய் வெளிப் படும். இப்படியே கேட்டுவிட்டுப் போகக் கூடாது. நாளையிலிருந்து ஒரு ஐந்து நிமிடம் தியானம் பண்ண வேண்டும். எவ்வளவோ நேரம் வீணாகப் போகின்றது. தலை வாருவதற்கு அரை மணி நேரம். காற்றடித்தால் கலைந்து போய் விடும். நாம் செய்வதெல்லாம் ஒரு விநாடியில் மறைந்து விடுகிறது. அந்தத் தியானம் ஆண்கள் பெண்கள் எல்லோரும் கொஞ்சம் கொஞ்சம் தியானம் பண்ண வேண்டும். அருணகிரியார் சொன்னார்.

"சரண கமலாலயத்தை அரை நிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சட கசட மூட மட்டி பவ வினையிலே ஜனித்த
தமியன் மிடியால் மயக்கம் உறுவேனோ"

அப்படிக் கொஞ்சம் நேரமாகிலும் தியானம் பண்ணிப் பழக வேண்டும். ஒரு குறிப்பு சொல்லப் போகிறேன். பக்தி என்பது மத்து. ஞானம் என்பது கயிறு. அந்தக் கவியிலே வருகிறது.

## ''உறவு கோல் நட்டு''

உறவு என்றால் பக்தி. உணர்வு என்றால் ஞானம். இவருக்கும் எனக்கும் அண்ணன் தம்பி உறவு என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கும் எனக்கும் மச்சினனும், மாமனும் உறவு இல்லை. சித்தப்பா பிள்ளை பெரியப்பா பிள்ளை. அது உறவு. அப்பொழுது உறவு தொடர்பு படுகிறது. எங்கள் சொந்தக் காரப் பையன், எங்கள் உறவினன் என்று சொல்கிறார்கள். அப்பொழுது ஆண்டவனோடு உறவுதான் தொடர்பு படுகிறது. உணர்வு கொஞ்சம் விலகியிருக்கிறது. ஞானம் கொஞ்சம் விலகி நிற்கும். பக்தி நெருங்கி நிற்கிறது. பக்தி மத்து. ஞானம் கயிறு. பால் கடைந்தால் வெண்ணெய் எங்கு வருகிறது? கயிறிலா படுகிறது. மத்திலேதானே வெண்ணெய் ஒட்டுகிறது. அப்பொழுது பக்தியிலேதான் ஆண்டவன் ஒட்டுகிறான்.

அதனால்தான் ஞானியாகிய சிவகோசரியார் பின்னாலே இருந்தார். பக்தனாகிய கண்ணப்ப நாயனார் முன்னாலே இருந்தார். அவர் கனவிலே போய்ச் சொன்னாராம். அவர் ஆதி சைவ அந்தணர். முப்போதும் தப்பாது கண்ணீர் மல்கி இறைவனை வழிபடுகின்ற உத்தமர். அவர் கனவிலே சொன்னாராம். "அப்பனே! சிவகோசரி, இங்கே தினந்தோறும் வழிபடுகின்ற அந்த வேடர் குமாரன்,

> ''அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
> அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
> அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம் என்றும்
> அவனுடைய நிலைஇவ்வா றறிநீ'' என் றருள் செய்வார்.

அவன் செய்வது அத்தனையும் என்னுடைய செயல். நாளைக்குப் பூஜை பண்ணி எனக்குப் பின்னால் ஒளிந்து இருந்து பார், உனக்கு விளங்கும்'' என்றாராம்.

இப்பொழுது கண்ணப்ப நாயனுர் பக்தி. சிவகோசரியார் ஞானி. சிவாகமங்களையெல்லாம் கரை கண்டவர். ஞானி பின்னுலே இருக்கிருர். பக்தர் முன்னுலே இருக்கிருர். கதை உங்களுக்குத் தெரியும். தொட்டுக் காட்டுகிறேன்.

ஆண்டவனுடைய கண்ணிலே உதிரம் வருகிறது. அந்தப் பக்தர் பார்த்த உடனே அந்த வாயில் இருக்கிற உமிழ் நீர் விழுந்தது. கையில் இருக்கிற தொன்னை சிந்திப் போயிற்று, கையில் இருக்கிற வில் போச்சு. ஒன்றும் புரியவில்லை. அப்படியே ஆடுகிருர். ஐயோ என் ஆண்டவன் கண்ணிலே தண்ணீர் வருகிறதே? கண்ணிலே இருந்து ரத்தம் வருகிறதே? உருகுகிருர். அழுகின்ருர். தொழுகின்ருர். ஓடுகின்ருர். இப்படிச் செய்தவன் யார் என்று தேடுகின்ருர். சுவாமிக்குப் பின்னுலே இருக்கிற ஐயர் அவருக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? சுவாமி அவரைக் காட்டவில்லையாம். பிரும்ம தண்டுபால், ஒத்தை நந்தியாவட்டை பால். என்னஎன்னவோ மருந்துகளை எல்லாம் கொண்டு வந்து விடுகிருர். அது சௌக்கியமாகுமா? அந்த உதிரம் மேலும்மேலும் வருகிறது. கரைகடந்த அன்பு. ஊனுக்கு ஊன் கொடு என்று யாரோ சொன்னதாக ஞாபகம். இந்தக் கண்ணை எடுத்து வைக்கிற வழக்கம் அப்பவே உண்டு. (கண் தானம்.) பதினுறு வயது, கண்ணப்பர். அந்தக் கண்ணை அப்படியே பாணத்தாலே அகழ்ந்து சுவாமிக்குக் கண்ணை வைத்தார். அதுவும் பக்தி. இதுவும் பக்தி. பக்தி ஒரு வஜ்ரம் போல. அந்தப் பக்தியான வஜ்ஜிரத்தினுலே கண்ணப்பர்கண் காளத்தியப்பர் கண்ணிலே ஒட்டிக் கொண்டது. குதிக்கிருர். இங்கே ரத்தம் வருகிறது. அது தோன்றவில்லையே. ஏன்? அந்தப் பக்தியினுடைய முதிர்ச்சியினுலே தன் கண்வலி தெரியவில்லை. நான் நல்ல காரியம் செய்தேன். நான்

பெரிய அறிவாளி என்று தன்னைத் தானே மெச்சிக் கொண்டு குதிக்கின்றார் கண்ணப்ப நாயனார். இன்னும் அவருடைய அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு இந்தக் கண்ணிலும் உதிரம் வருகின்றது. கண்ணப்ப நாயனார் பார்க்கிறார். இந்தக் கண்ணிலும் ரத்தம் வருகிறதா?என்னிடம்தான் இன்னொருகண் இருக்கிறதே (மிகவும் சுலபமாக.) எனக்கு என்ன குறை? என்று எண்ணி அம்பை எடுத்தார். இந்தக் கண்ணையும் அகழ்ந்து விட்டால் அந்தக் கண் இருக்கும் இடம் தெரியாமல் போகுமே என்று ஒரு காலை உந்தி அந்தச் செருப்பணிந்த காலினாலே சுவாமியினுடைய கண்ணுக்கு அடையாளம் வைத்துக் கொண்டார். அவருடைய செருப்பணிந்த கால் சுவாமி மேலே படுகிற போது முருகன் பாதம் படுவது போல் இருந்ததாம் சுவாமிக்கு. இந்தக் குழந்தைகள் பாதம் பட்டால் எப்படி இருக்கும்? அந்த அன்பு மிகுதி. நாம் அப்படிச் செய்யக்கூடாது. அந்தக் குழந்தை செய்கிறபோது அன்பினாலே அதை ஏற்றுக் கொள்கிறோம். அந்தச் செய்கையைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அந்த அன்பை நினைக்கின்றோம். அப்படி அந்த மார்க்கத்திலே போட்டுத் தேய்ந்த பழம் செருப்பு சிவபெருமானுடைய நடு நெற்றிக்கு ஏறிவிட்டது. அவர் வாயிலே கொப்பளித்து உமிழ்ந்த அந்த எச்சில் நீர் கங்கா ஜலம்போல் ஆயிற்று; கடித்துப் பார்த்த மாமிசத்துண்டு இனிய தேவாமிர்தம் போல் ஆயிற்று என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

**"மார்க்கா வர்த்தித பாதுகே பசுபதே ரங்கஸ்ய கூர்ச்சாயதே**
**கண்டு ஷாம்பு நிஷேசனம் புராரிபோ திவ்யாபிஷேகாயதே**
**கிஞ்சித் பக்ஷித மாம்ஸ சேஷ கபளம்**
**நவ்யோப ஹாராயதே"**

காரணம் என்ன என்று சொல்லப் போகிறார், ஆதிசங்கரர். கிம் என்றால் என்ன என்று அர்த்தம்.

''பக்தி: கிம் நகரோதி''

கரம் என்ருல் செய்வது. அதனுலேதான் இதற்குக் கரம் என்று பெயர் வந்தது. சுகத்தைச் செய்வதனுலே இறைவனுக்குச் சங்கரன் என்று பெயர். 'ந' என்ருல் இல்லை. 'பக்தி: கிம் நகரோதி'-பக்தி என்ன செய்யாது? என்று ஒரு கேள்வி கேட்டார். அது என்ன செய்தது?

''அஹோ வனசரோ பக்தாவதம் சாயதே''

வன சரனுயிருக்கிற வேடன், பக்த சிரோமணியாக ஆகி விட்டான். ஆதிசங்கரர் சொல்கிருர். கண்ணப்ப நாயனுரைப் பற்றி, லோக குரு சொல்கிருர். ''பக்தா வதம் சாயதே'' பக்தி வந்து அவன் சிரோமணியாகி விட்டான். மார்க்கத்திலே போட்டுத் தேய்ந்த பழம் செருப்பு பரமசிவனுடைய நடு நெற்றிக்கு ஏறிவிட்டது.

பக்தி என்ன செய்யாது என்று கேட்கிருர். ஐந்து கண்டத்தாரையும் பார்த்து பக்தி இல்லாத ஊமைகள் போல இருக்கிறீர்களே. கோவிலுக்குப் போனுல் வேஷ்டியை எடுத்து இடுப்பில் கட்டக் கூடத் தெரிய வில்லையே. எப்போது கடைத்தேறப் போகிறீர்கள்? என்று ஆதிசங்கரர் கதறுகிருர். நான் சொல்லவில்லை. 'பக்தி: கிம் நகரோதி' பக்தி என்ன செய்யாது? அந்த பக்தியாயிருக்கிற ஒன்றிலே ஆண்டவன் ஒன்றிவிடு கிருர். அதற்கு ஞானம் உதவுகின்றது. அந்தப் பக்திக்கு ஞானம் துணை செய்கின்றது. கயிறு கடைகின்றது. மத்திலே வெண்ணெய் பொருந்தி விடுகின்றது. பக்தி யாய் இருக்கின்ற மத்திலே ஆண்டவனுய் இருக்கின்ற வெண்ணெய் ஒன்றிவிடுகின்றது. இத்தனைக் கருத்தை யும் அப்பர் ஒரே பாட்டிலே,

''விறகில் தீயினன்......முன்னிற்குமே''

மூன்று மலமுடைய ஆன்மாக்கள், இரண்டு மலம் உடைய ஆன்மாக்கள், ஒரு மலமுடைய ஆன்மாக்கள்

என்ற சாஸ்திரக் கருத்துக்களை யெல்லாம் அதிலே அமைத்து மக்கள் நன்ருக விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற பரிபூரணமான கருணையிஞலே அந்தத் தேவா ரத்தைச் சொல்லி, அந்த தேவாரத்திஞலே அந்த இன் பத்தை நமக்கு அருளிச் செய்கின்ருர்கள். நாம் எல்லாம் சுவாமியை நினைக்கின்ருேம். 'நினைப்பற நினைக்க வேண்டும்.' அப்பொழுதுதான் இறைவன் அந்த உள் ளத்திலே வந்து ஒன்றுகின்ருன். வேறு எண்ணங் களோடு நினைத்தால் இறைவன் அங்கே ஒன்ற மாட் டான். இந்தத் துணியிலே அழுக்கு ஏறி விடுமாஞல் இந்த அழுக்குத் துணியிலே சாயம் ஏற்றிஞல் ஒட்டாது என்று சாயம் போடுகிறவர்கள் சொல்லுவார்கள். அப் பொழுது வெண்மையான அழுக்கில்லாத துணியிலே தான் சாயம் ஏறும். அதுபோல நம் உள்ளத்திலே பந்த பாசமான அழுக்குகளை வைத்துக் கொண்டு சுவாமியை நினைத்தால் அந்த உள்ளத்திலே ஆண்ட வன் ஒன்றமாட்டான். ஏன்? ஏற்கனவே பந்த பாசமான அழுக்கு ஒன்றிவிட்டது. இந்தக் கருத்தை அப்பர் சுவாமிகள்

"அருந் துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல் ஞாலத்து அகத்துள் தோன்றி
வரும் துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான் புலன்கள் அகத்து அடக்கி மடவா ரோடும்
பொருத்தணைமேல் வரும் பயனைப் போக மாற்றிப்
பொது நீக்கித் தனை நினைய வல்லோர்க்கு என்றும்
பெருந் துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

சிதம்பரத்திலே சென்று சுவாமிகள் இந்தப் பாடலை அருளிச் செய்கின்ருர். இப்பொழுது நான் பாடிய அந்தப் பாடலுக்கு என்ன பொருள்?

'பொது நீக்கி'—இறைவனை மற்ற தேவர்களோடு சேர்த்து எண்ணக்கூடாது. குடும்பத்தில் அத்தனைப்

பேரிடத்திலும் அன்பாய் இருப்பாள். கணவனை அந்தரங்கத்திலே நினைக்கும் போது அவள் உள்ளம் குழையும். மாமனாரிடம் பிரியமாய் இருப்பாள். மாமியாரிடம் பிரியமாய் இருப்பாள். ஆனால் கணவனாரிடம் உள்ள பிரியம் தனி. அவள் பதிவிரதை அல்லவா? அப்படி அடியார்கள் இறைவனை நாயகனாக வைத்து மற்ற தேவதைகளை எல்லாம் அவருடைய பரிவாரங்களாக எண்ணி எந்த மூர்த்தியினிடமும் வெறுப்புணர்ச்சி இல்லாமல் எல்லா மூர்த்திகளையும் இறைவனுடைய பரிவாரங்களாக எண்ணி இறைவனைத்தான் அந்தரங்கத்திலே பக்தி செய்வார்கள். இந்தக் கருத்தைப் "பொது நீக்கித் தனை நினைய வல்லோர்க்கு என்றும் பெருந் துணையை" - ஆண்டவனை நினைக்கிறார்களோ இல்லையோ அவர்களுக்கெல்லாம் பகவான் அருந் துணையாய் இருக்கிறார். கடவுள் இல்லையென்று சொல்பவருக்கும் ஆண்டவன் அருந்துணையாய் இருக்கின்றான். ஆனால் 'பொது நீக்கித் தனை நினைய வல்லோர்க்கு' எம் பெருமான் பெருந் துணையாய் நிற்கின்றான். இப்போது அரசாங்கம் எல்லோர்க்கும் உதவி செய்கின்றது. ஆனால் அரசாங்கத்தை அணுகுகின்றவர்களுக்குக் கொஞ்சம் சீக்கிரமாக அனுக்ரஹம் பண்ணும். அப்ளிகேஷன் போட்டால் உடனே கவனிக்கிறார்கள். இல்லையென்றால் கிரமமாகக் கவனிப்பார்கள். அப்படித் தெய்வத்தை நிந்திக்கின்றவர்களுக்கும் ஆண்டவன் அனுக்ரஹம் பண்ணுகிறான். கடவுள் இல்லையென்று சொன்னால் சுவாமி உடனே இடியை அனுப்ப மாட்டார். அவன் தலை வெடித்துப் போகாது. அவனும் நம் குழந்தை என்று எண்ணுவார். எதுபோல? பால் குடிக்கிறபோது அந்தக் குழந்தை (பல் வரும்போது) தாயாருடைய அமுதத்தைக் கடிக்கும். பால் குடிக்கிற போது அந்த அமுதத்தைக் கடித்தால் அந்த அம்மாள் இன்னொரு பாலைக் கொடுப்பாள்.

பால் குடிக்கிற குழந்தை மீண்டும் அமுதத்தைக் கடித்தால், மற்றொரு பாலைக் கொடுக்கிற போது, ஜன்ம ஜன்மங்களுக்கும் தாயாராயிருக்கிற ஆண்டவன் ஏதோ கடற்கரையில் இருந்து ஆண்டவன் இல்லையென்றால் இடியையா அனுப்புவான்? என்னமோ அந்தப் புழு அப்படிப் பேசுகிறது என்று எண்ணுவார். இதற்காகவா அங்கேயிருந்து இறங்கி வந்து ஒரு 'ஸ்டெப்' எடுத்துக் கொள்வார்? இதையெல்லாம் திருநாவுக்கரசு சுவாமிகள் சொன்னார்.

"அருந்துணையை அடியார்கள் அல்லல்
.........புலியூரானை."

சிதம்பரத்துக்குப் பெரும் பற்றப் புலியூர் என்று பெயர். புலிக்கால் முனிவராகிய வியாக்கிர பாதர் பூஜை பண்ணினதாலே அதற்குப் புலியூர் என்று பெயர். அந்தக் கோவிலுக்குச் சிதம்பரம் என்று பெயர். 'சித்'– ஞானம். 'அம்பரம்' – ஆகாசம். சித் அம்பரம்—சிதம் பரம். அந்தக் கோவிலுக்குத்தான் சிதம்பரம் என்று பெயர். அந்த ஊருக்குப் புலியூர் என்று பெயர். காலாந் தரத்திலே அந்த ஊர் பேர் மறைந்து கோவில் பேரே ஊரின் பேராக மாறிவிட்டது. கால வெள்ளத்திலே எத்தனையோ மாறிப் போகிறது. திருநீல கண்ட நாயனார் என்று ஒருவர் இருந்தார். அவர் இயற்பெயர் மறைந்தே போய்விட்டது. அவர் அடிக்கடி திருநீல கண்டம், திருநீல கண்டம் என்று சொல்லிக் கொண்டே இருப்பார். அதுவே அவருடைய பெயராகப் போய் விட்டது. அம்மா, அப்பா வைத்த பேர் யாருக்குமே தெரியாது. சேக்கிழாரே சொல்லவில்லை. ஆகையினாலே சிலவற்றை நம்மாலே கண்டு பிடிக்க முடியாது. இப்பொழுது சிதம்பரம் என்ற சொல்தான் பெரு வழக்கில் இருக்கிறது. புலியூர் என்பது வழக்கத்தில் இல்லை. அந்த ஊரை நினைவு படுத்துகின்றார்.

"பெரும் பற்றப்புலியூரானை"-வியாக்கிர பாத முனிவர் வழிபட்ட தலம். அதனால் புலியூர். பெரும் புலியூர் என்று ஒரு ஸ்தலம். அதைத் தான் பெரம்பலூர் என்று சொல்கிறார்கள். (நாமெல்லாம் தமிழை ஒழுங் காகவா பேசுகிறோம்? முண்டகம் என்றால் தாமரை. முண்டகக் கண்ணி மாரியம்மன் – தாமரைக் கண்ணி. முண்டகக் கண்ணி மாரியம்மன் கோவில் என்றா சொல்கிறோம்?) ஆகவே இறைவனை எண்ணும் போது வேறு எண்ணங்கள் இல்லாமல் எண்ண வேண்டும்.

"வான் புலன்கள் அகத்து அடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும் பயனைப் போக மாற்றி"

மடை மாற்றுவது. வழியிலே போகிற தண்ணீரை இன்னொரு மடைக்கு மாற்றுமாப் போல, மனைவி மக்களிடத்திலே செல்கின்ற பிரியத்தை இறை வனிடத்திலே மாற்றி விடுவது. இராம கிருஷ்ண பரம ஹம்ஸர் தேவியோடு நேராகப் பேசுவார். ஆண்டவன் அவருக்குப் பிரத்யட்சம்.

ஒரு சமயம் அவரை ஆதரிக்கின்ற ஜமீன்தார் சுவாமிகளை-குருதேவரைக் காசிக்கு அழைத்தார். அவர் மிதிக்கிற மண்ணெல்லாம் காசி. அதைச் சொன்னால் அவருக்குப் புரியுமா? வருகிறேன் என்றார். தியானம் பண்ணுவது கல்லூரிப் படிப்பு. ஜபம் பண்ணுவது ஹைஸ்கூல் படிப்பு. பாராயணம் பண்ணுவது எலிமெண்டரி ஸ்கூல். படிப்படியாக மேலே போவது. அதன்பின் தியானமும் அற்று நின்று விடுகின்றவர்கள் சமாதி நிலை. பரம ஹம்ஸர் மிகப் பெரியவர். அதை யெல்லாம் அவரிடம் சொல்லிக் கொண்டிருக்கலாமா? காசி நிலா மாதிரி இருக்கும். 64 கட்டம். பரம ஹம்ஸர் ஓடத்திலே 64 கட்டங்களையும் பார்த்துக் கொண்டே போகிறார். தாரகேசுவர் என்று ஒரு கட்டம். தாரகம்

என்றால் பிரணவ மந்திரம். 108 உபநிஷதத்திலே ஒரு உபநிஷதம் தாரகோபநிடதம்.

"கர்ப்ப ஜன்ம ஜராமரண சம்ஸார
மகத்வயாத் சம்ஸாரேதி தத்மாத் தாரகம்"

தாரகம் என்றால் தாண்டச் செய்வது. பிறவிப் பெருங் கடலைத் தாண்டச் செய்வதனாலே பிரணவத்துக்குத் தாரக மந்திரம் என்று பெயர். 'காசி தன்னிடை இறந்தவர்க்கு எம்பிரான் கழறும் ஆசில் தாரகப் பிரமம்'. காசியிலே இறந்து போனவர் முஸ்லிமாக இருந்தாலும், கிறிஸ்துவராக இருந்தாலும், யாராக இருந்தாலும் இறந்து போனவன் காதிலே சிவபெருமான் பிரணவத்தைச் சொல்வதாக ஐதீகம். பரமஹம்ஸர் ஓடத்திலே போய்க் கொண்டிருக்கிறார்கள், அந்த ஜமீன்தாரோடு. அந்தத் தாரகேசுவரம் என்ற கட்டம் வந்தது. ஒரு பிணம் நதியில் வருகிறது. பரம ஹம்ஸர் 'சட்'டென்று எழுந்து குழந்தைப் பிள்ளைகள் மாதிரி அப்படிப் பார்த்தாராம். ஜமீன்தார், "குருதேவா! என்ன" என்று கேட்டாராம். "அந்தப் பிணத்துக் காதில் சிவபெருமான் ரிஷபத்திலே வந்து பிரணவம் சொல்கிறார். என் கண்ணுக்குத் தெரிகிறது" என்றார் பரமஹம்ஸர். அவர் ஒருபோதும் பொய் சொல்லமாட்டார். பரம ஹம்ஸர் பொய் சொன்னார் என்றால் ஏழு ஜன்மத்துக்குப் பாவம் வரும். தேவியை நேராகப் பார்த்தவர். பரமசிவன் வந்து அந்தப் பிணத்தின் காதிலே பிரணவம் சொல்வது பரம ஹம்ஸருக்குத் தெரிகிறது. இவனுக்குத் தெரியுமா? ஸ்வர ஞானம் எல்லோருக்கும் தெரியுமா? தெரிந்தவர்களுக்குத் தான் தெரியும். அது போல சிவபெருமான் வந்து அந்தக் காதிலே பிரணவம் சொல்லுகிறது பரமஹம்ஸருக்குத் தெரிகிறது. அவருடைய சீடர் இந்த வரலாற்றை ஆங்கிலத்திலே எழுதியிருக்கிறார். படித்தவர்களுக்குத்

தெரியும். அப்படிக் கடவுளை நேராகப் பார்க்கின்ற மகான் இராமகிருஷ்ண பரம ஹம்ஸர். மதுரபாபு என்ற ஜமீந்தாருடைய மருமகன் அவரை அணுகி, "குருதேவா! நீங்கள் கடவுளை நேராகப் பார்க்கிறீர்களா? நான் பார்க்க முடியுமா? என்றான். கடவுளைப் பார்ப்பது மிகச் சுலபம்;

"கற்பங்கள் பல கோடி செல்லத் தீய
கனலின் நடு ஊசியின் மேல் காலை ஊன்றிப்
பொற்பறமெய் உணவின்றி உறக்கமின்றி......சிற்பதத்தில்"

பரமஹம்ஸர் சொல்லுகிறார். இமைப்பொழுது நேரத்திலேபார்க்கலாம். சொல்லுகிறவர் குருதேவர் இல்லையா? எப்படி? என்றார்.

"பரமலோபிக்குப் பணத்தின்மேல் உள்ளஆசையும், 25 ஆண்டுகள் பொறுத்து மலடிக்குப் பிறந்த மகன் மேல் இருக்கிறஆசையும், பரமபதிவிரதைக்குக்கணவன் மேல் இருக்கிற ஆசையும் மூன்றும் ஒன்று சேர்ந்தால் கடவுளை விநாடியிலே பார்த்து விடலாம்" என்றார். இன்னொரு தடவை சொல்லுகிறேன். இந்தப் பரம லோபிக்குப் பணத்தின் மேலே எவ்வளவு பிரியம் இருக்கும்? பணத்தைத் தொடாமல் ஆயுள் முழுவதும் பார்த்துக்கொண்டேயிருப்பான். கல்யாணம் ஆன அதே ஆண்டிலே குழந்தை பிறந்தால் அந்தத் தாய்க்கு அந்தக் குழந்தை மேலே பிரியம் இருக்காது. 25 ஆண்டுகளாகக் குழந்தை இல்லாமல் இருந்து பிறகு பிறந்தால் அந்தக் குழந்தையைத் தாய் எப்படிக் கொஞ்சுவாள்? கண்ணகிக்குக் கோவலனிடம் எவ்வளவு பிரியம்? பணம் எல்லாவற்றையும் தொலைத்து விட்டு வந்தானல்லவா. அதற்கு அவள் இப்பொழுதாவது வந்து சேர்ந்தீர்களே என்றாள். அவள் பதிவிரதை. இப்பொழுதாவது வந்தீர்களே என்று சொன்னாளாம். அந்தப் பதி

விரதைக்குப் புருஷன்மேலே இருக்கிற பிரியம். மூன்றும் ஒன்ருகச் சேர்ந்தால் கடவுளே விஞடியிலே பார்க்கலாம். அதைத்தான் அப்பர் சொன்ஞர்.

> "அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
> அருமருந்தை அகல் ஞாலத்து அகத்துள் தோன்றி
> ............பற்றும் விட்டு"

இந்தப் பற்று, மனைவிமேலே பற்று, மக்கள் மேலே பற்று, பொருள் மேலே பற்று, இந்த உடம்பிலே பற்று. கண்ணுடியை எடுத்தால் அரை மணி நேரம் கீழே வைக்க மாட்டான்; மன்மதன் குஞ்சு மாதிரி நினைவு.

> "பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
> நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
> அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
> தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனே"

நான் தினையளவு நேரமாஞலும் சுவாமியை மறந்தால் நான் வாழ்வேஞ? இறைவனை மறக்கின்ற அன்று தான் நான் இறக்கிற நாள். அவன் நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன். இடையருது நினைக்கின்ற அடியார்கள் உள்ளத்தை ஆண்டவன் கோயிலாகக் கொள்ளுகின்ருன். அவன் அனைத்து வேடம்—எல்லா மாய் இருக்கின்ருன். ஒரு பழமொழி. உலகம் பலவிதம். இதை ஜனங்கள் பண்ணுகிற அர்த்தம் வேறு. உலகம் பல விதமாகவா இருக்கிறது? அந்த அர்த்தம் பிழை. உலகம் ஒரு விதம். பல விதமாய் இல்லை. ஒரு விதம். எப்படி? குழந்தைகள் பெறுவதெல்லாம் தாய்மார்கள் தானே? பலவிதமா? பேசுவதெல்லாம் வாயாலே தான். நடப்பது காலாலே தான். செய்வது கையாலேதான். பார்ப்பது கண்ணுலேதான். அப்பொழுது உலகம் பல விதம் என்ருல் என்ன? உலகு அம்பலவிதம். பொறுமை யாய்க் கேளுங்கள். உலகு அம்பல விதம். சொல்லுகிற

பொழுது உலகம் பலவிதம் என்றுதானே வரும்? ஹரி சிவ சம்பு என்ருல் ஹரிசிவசம்பு என்ருல் எப்படி? உலகு அம்பல விதம். அம்பலத்திலே நடராஜா ஆடுகிருர். உலகம் எல்லாம் அசைகிறது. இப்பொழுது கண்ணுடியிலே என்னுடைய வடிவம் தெரியும். அந்தக் கண்ணுடியிலே இருக்கும் வடிவம் அசையுமா? நான் ஆடினுல் தானே அந்தக் கண்ணுடியிலே இருக்கிற பிரதி பிம்பம் அசையும். அப்படி உலகம் எல்லாம் அசையும் பொருட்டு அம்பலத்திலே அம்பலவாணன் அசைகின்ருன். குழந்தைக்கு ஜலதோஷம் என்ருல் அம்மா பத்தியம் இருப்பாள். அதுபோல இந்த உலகம் அசைய வேண்டுமென்று அம்பலத்திலே அவன் அசைகின்ருன். சூரியன் அசைகின்ருன். சந்திரன் அசைகின்ருன். அணு அசைகின்றது. நிலம் அசைகின்றது. நீங்களும் அசைகின்றீர்கள். நானும் அசைகின்றேன். நாம் என்றைக்கு அசையவில்லையோ அன்றைக்கு நாலு பேர் வந்து அசைத்து விடுவார்கள். நாம் அசையும் வரைக்கும்தான் நாலு பேருக்கு வேலை கிடையாது. அப்பொழுது நாமெல்லாம் அசைய வேண்டுமென்ருல் அந்த அம்பலவாணன் அசைய வேண்டும். இந்த உலகம் அசையும் பொருட்டு அவன் அம்பலத்திலே இருந்து அசைகின்ருன். சித் அம்பரம்—சிதம்பரம். அங்கேயிருந்து அசைகிறது. அதனுலே சரீரம் அசைகிறது. ஆகவே உலகு அம்பல விதம். அதை மக்கள் பேசுகிறபோது உலகம் பலவிதம். அர்த்தம் தப்பாய் பண்ணக் கூடாது.

> "அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனை
> நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"
>
> "அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
> தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனே?"

அந்தச் சொல் அழகு, நடை அழகு, கருத்தழகு, இசை அழகு அத்தனை அழகும் வைத்து, ஞானத் தமிழினுலே

எம்பெருமானைத் தான் பாடி, நம்மைப் பாடுமாறு செய்கின்றார்கள், அந்தக் குருநாதர். அதுதான் தேவார இன்பம் என்று உங்களுக்குச் சொல்லி, தேவாரம் என்ற வார்த்தைக்கு அப்பர் பாடிய பாடல் ஒன்றுதான் என்பது மரபு. வாரம் என்றால் அன்பு. இறைவன்மேல் அன்பு விளைவிக்கின்ற பாடல் தேவாரம். திருஞான சம்பந்தர் பாடினது திருக்கடைக் காப்பு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடினது திருப்பாட்டு. இந்தக் கருத்தை இராமலிங்க அடிகளார்,

**"தேன் படிக்கும் அமுதாம் நின் திருப்பாட்டை"**

என்று சொல்லுகிறார்கள். அடிகளார் மரபு வழுவாமல் பாடுகின்றார்கள். ஆகவே இறைவனிடத்திலே அன்பு விளைவிக்கின்ற பாடல் அப்பர் பெருமானுடைய வாக்கு. இந்த அப்பர் என்ற சொல் ஞானசம்பந்தர் திருவாக்கிலேயிருந்து வந்தது. அவர் 'மருள் நீக்கியார்' என்று பிள்ளைத் திருநாமம் பெற்றார். அமண் சமயத்திலே 'தரும சேனர்' என்று பேர் பெற்றார். வித்யாபதியாக இருக்கிற ஆண்டவன் ஏழுஉலகமும் கேட்க, 'திருநாவுக்கரசு' என்று பட்டம் கொடுத்தார். நாக்கு ஞானேந்திரியத்திலும் வரும். கன்மேந்திரியத்திலும் வரும். ஞானேந்திரிய நாக்கு சுவை உணரும். [நினைவுபடுத்துகிறேன்.] கண்டதைப் பேசுவான். கண்டதைத் தின்ன மாட்டான். ஊசிப்போன முந்திரிப் பருப்பைச் சாப்பிட மாட்டான். ஊசிப் போன வடையைச் சாப்பிடமாட்டான். தூக்கியெறிந்து விடுவான். ஊசிப்போன விஷயமெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறான். ஆகவே கன்மேந்திரிய நாக்கு வேறு; ஞானேந்திரிய நாக்கு வேறு அந்த நா படைத்தவர்களுக்கெல்லாம் தலைவர் நாவுக்கரசு. அவர் ஏழாம் நூற்றாண்டிலே திருவாமூரிலே அவதரித்தார். "நல்லாறு தெரிந்து உணர நம்பர் அருளாமையினால் அமண் சமயம் குறுகி சூலைவலியி

ஞாலே தடுத்தாட் கொள்ளப் பெற்று 77 வயதிலே சைவ சமயத்திலே வந்து, [நான்கே ஆண்டுகள் தான் அவர் சைவ சமயத்திலே வாழ்ந்தார்.] சமய நெறியில் நின்றார். யாத்திரைகள் செய்தார். அதி அற்புதமான செந்தமிழ்ப் பாடல்களை எல்லாம் நமக்குப் பாடித் தந்தார்கள். (4900 பதிகங்கள்; இப்பொழுது 312 பதிகங்கள்தான் இருக்கின்றன.) ஆகவே அந்தக் குருநாதர் நமக்காகப் பாடிக்கொடுத்தது தேவாரம். அதில் ஒன்று,

"விறகில் தீயினன் பாலில் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"
"...தனை நினைய வல்லார்க்கு"

என்றும் பெருந்துணையாக இருப்பான். அவன் அம்பலக் கூத்தனாக இருக்கின்றான். உலகு அம்பல விதம் என்பது உலகம் பலவிதம் என்று ஆயிற்று என்ற இக்கருத்துக்களை யெல்லாம் உங்களுக்கு நினைவு செய்து கொண்டு, நாம் பக்தி யோகம் செய்து, அந்த பக்தி யோகத்திலே ஆண்டவனாய் இருக்கிற வெண்ணெய்யை நாம் பெறலாம், என்பதை நினைவு செய்து கொண்டு இதுகாறும் மிகப் பொறுமையாக இருந்த உங்கள் பொன்னார் திருவடிகளுக்கு என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்து எல்லோரும் வாழ எங்கும் நிறைந்த ஆண்டவனை வாழ்த்தி இந்த அளவிலே தேவார இன்பம் என்ற சொற்பொழிவைப் பூர்த்தி பண்ணுகிறேன்.

சைவத்தின் மேற் சமயம் வேறிலை
அதில் சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல் எனும்
நான்மறைச் செம்பொருள் வாய்
மை வைத்த சீர் திருத் தேவாரமும்
திருவாசகமும்
உய்வைத் தரச் செய்த நால்வர்
பொற்றாள் எம் உயிர்த்துணையே.

—சைவ. எல்லப்ப நாவலர்.

உ

திருச்சிற்றம்பலம்

# 6. பெரிய புராணச் சிறப்பு

[21—11—79]

**உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்!**

எல்லாம் வல்ல வயலூர் எம்பெருமானுடைய திருவருளினலே பெரிய புராணத்தின் சிறப்பு என்பது பற்றிச் சில நுண்ணிய கருத்துக்களை உங்களுக்கு முன்னே படைக்கின்றேன்.

அளவிலே மிகப் பெரிய நூல்கள் மகாபாரதம்' ராமாயணம், கந்த புராணம் ஆகிய இவைகள். பதினுயிரம் பாடல்களுக்கு மேற்பட்ட நூல்கள். பெரியபுராணம் நாலாயிரம் செய்யுள்களோடு கூடியது. அப்பொழுது அளவிலே சிறியது பெரிய புராணம். ஆனுல் இதைத்தான் பெரிய புராணம் என்று பெரியவர்கள் சொன்னுர்கள். அப்பொழுது அதிலே ஏதோ ஒரு நுட்பமான கருத்து இருக்கிறது. அளவிலே சிறியதைப் பெரிய புராணம் என்று பெரியவர்கள் சொன்னுர்கள். அந்தக் காரணத்தை உங்களுக்கு இப்போது சொல்லுகிறேன்.

உலகத்திலே மிகவும் இழிந்தது எது என்று ஒருவர் ஆராய்ந்தார். இழிந்தது எது? ஒருவனுக்கு ஒருவன் தொண்டு செய்கிருன். மலம் அள்ளுகின்ருன். இன்னும் வேறு பல பணிகள் செய்கின்ருன். அவைகளெல்லாம் இழிந்தவையல்ல. "ஒன்றைக்கொடு,

நான் வாழ எனக்கு உதவி செய்'' என்று கையேந்தி நிற்பதுதான் இழிந்தது. அதை ஔவையார் 'ஏற்பது இகழ்ச்சி' என்றார். தனக்கென்று ஒன்று கேட்பது மிக மிக இழிந்தது. ஒரு புலவர் பெருமானைப் பார்த்து ஒரு தனவந்தர் கேட்டார்: உலகத்திலே அற்பமானது எது? என்றார். அந்தப் புலவர் சொன்னார், துரும்பு என்றார். அந்தத் துரும்பைவிட அற்பமானது உளதா? என்று கேட்டார். அதைவிட அற்பமானது பஞ்சு என்றார். அந்தப் பஞ்சைவிட அற்பமானது உளதா? என்று கேட்டார். யாசிக்கிறவன் என்றார். புலவர் சொன்னார், யாசிக்கிறவன்தான் ரொம்ப அற்ப மானவன். கேட்கிறவர் விடுவாரா? பஞ்சைக் காற்று அடித்துக் கொண்டு போகிறதே. இந்த யாசிக்கிறவனை ஏன் காற்று அடித்துக்கொண்டு போகவில்லை? என்று கேட்டார். பஞ்சு காற்றிலே போகிறது அல்லவா? இந்த ஐந்து கொடு, பத்துகொடு என்று கேட்கிறவனை ஏன் காற்று அடித்துக்கொண்டு போகவில்லை? அவனிடம் போனால் நம்மை ஏதாவது கேட்பான் என்று அஞ்சி அவனிடம் காற்று வருவதில்லை.

> **நொய்தாந் திரணத்தின் நொய்தாகும் வெண்பஞ்சின்**
> **நொய்தாம் இரப்போன் நுவலுங்கால்—நொய்யசிறு**
> **பஞ்சுதனில் நொய்யானைப் பற்றாதோ காற்றணுக**
> **அஞ்சுமவன் கேட்ப தறிந்து.**
>
> —நீதிவெண்பா.

இதெல்லாம் நான் யுக்தியாகச் சொல்லுவதில்லை. பெரியவர்கள் சொன்னதை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன். அப்பொழுது யாரிடத்திலும் ஒன்றையும் கேளாமல் இருக்க வேண்டும். இரவாமை.

> **''நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்**
> **இல்லெனினும் ஈதலே நன்று''**

இரவச்சம் என்று அதிகாரம் வைத்திருக்கிறார் திருவள்ளுவர். அவர் எரிச்சலாகக் கூடப் பாடுகிறார்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகு இயற்றியான்"

இரந்துதான் உயிர் வாழ வேண்டும் என்று கடவுள் எண்ணியிருந்தால் அந்தக் 'கடவுள் தொலையட்டும் என்றார். அவ்வளவு எரிச்சல் திருவள்ளுவருக்கு இரந்து வாழ்தலில். 'போனகம் என்பது தான் உழந்து உண்டல்' உழைத்துச் சாப்பிடுவது. எறும்பு உழைக்கிறது, மாடு உழைக்கிறது, ஆடு உழைக்கிறது; மனிதன் உழைக்க வேண்டாமா?

உபநிடதத்திலே ஒரு கதை வருகிறது. ஒரு சின்ன கதை. ஒருத்தரிடத்திலும் ஒன்றையும் யாசிக்கக் கூடாது என்று ஒரு மகான் எண்ணியிருக்கிறார். யாரிடத்திலும் ஒன்றையும் கேட்கக் கூடாது. பசி எடுத்தால் ஏதோ காயோ, கனியோ சாப்பிடுவார். பச்சிலை தின்பார். தண்ணீரைக் குடிப்பார். என்னமோ சோதனை மாதிரி அவருக்கு ஒன்றுமே கிடைக்காத ஒரு நிலை வந்து விட்டது. ஒன்றும் கிடைக்கவில்லை. உயிர் தடுமாறுகிறது. இப்படியே தள்ளாடிக்கொண்டு போகிறார். ஒரு திண்ணையிலே பாசிப்பருப்புச் சுண்டல் ஒருவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். இந்த உயிருக்கு ஆபத்து வந்த போது தர்மத்திலிருந்து கொஞ்சம் விலகலாம் என்பது சாஸ்திரம். அதற்கு ஆபத் தர்மம் என்று பெயர். பூஜை ரூமிலே மற்றவர்கள் எல்லாம் போகக் கூடாது. கொஞ்சம் வைதீகமானவர். ஆசாரமானவர். அவரே குளித்துவிட்டுத்தான் போவார். வீடு தீப்பிடித்து விட்டது. ஆசாரமாகத் தான் பூஜை ரூமுக்குப் போவேன் என்று இருக்கலாமா? குளித்தாலும் குளிக்காவிட்டாலும் உள்ளே போய் படங்களை எடுக்க வேண்டும் இல்லையா? ஆபத்துக் காலத்தில் இந்தத்தர்மங்கள் கொஞ்சம் விலகிப்போகும். நாம், பெண்கள் மாதவிலக்கு ஆகும் போது தொட

மாட்டோம். அந்த அம்மாள் வழுக்கி விழுந்து விட்டாள். அப்பொழுது நான் தொடமாட்டேன் என்று சொல்வது? அப்போது கருணையினாலே அந்த அம்மாவைத் தீண்டி எடுத்து ஆதரவு காட்ட வேண்டும். ஆபத்துக் காலத்திலே தர்மங்கள் விலகிப் போகும். அதுபோல "ஒருத்தரையும் ஒன்றும் நான் கேட்டு யாசிக்கமாட்டேன்" என்று இருந்த அந்த மகான் உயிர் தடுமாறுகிற போது, இந்தப் பாசிப் பருப்புச் சுண்டல் சாப்பிடுகிறாரே, அங்கே போய் கொஞ்சம் கேட்டார். பார்த்த உடனேயே பெரியவர் என்று தெரிந்தது. ஒரு கை நிறைய அள்ளிப் போட்டார். அந்தச் சுண்டலைச் சாப்பிட்டவுடன் விக்கல் வந்துவிட்டது. தண்ணீர் கொடுக்கப் போனார். 'நான் யாசித்துத் தண்ணீர் பருக மாட்டேன்' என்றார். 'ஏனய்யா சுண்டலை யாசித்தாயே' என்றார். 'உயிர் போகிறபோது யாசித்தேன். சுண்டலைத் தின்றவுடன் எனக்கு வலிமை வந்துவிட்டது. நடந்து போய்த் தண்ணீர் குடிக்கிறேன்' என்றார். சின்ன கதைதான். இருந்தாலும் நம்மை உலுக்கக் கூடிய கதை. இப்பொழுது எத்தனையோபேர் வசூல் பண்ணுவதே வேலையாய் உட்கார்ந்திருக்கிறார்கள்.

நான் இளமையிலேயே படித்த பாடல் ஒன்று. யாரிடத்திலும் ஒன்றையும் யாசிக்காதே. யாசித்தால் என்ன? நம்மேல் இருக்கிற பெரும் மதிப்பு குன்றிப் போகும். அப் பாடல்,

> "கற்றைக் குழலார் கவின்எல்லாம் ஓர்மகவைப்
> பெற்றக் கணமே பிரியுமே"

ஒரு இளம் பெண் அழகாக இருப்பாள். ஒரு குழந்தை பெற்றவுடன் அவள் வனப்புக் குன்றி விடுமாம். அந்த எழில் குறைந்து விடுமாம். அதுபோலே,

—கற்றருளை

"வேட்ட பெரியோர் பெருமைஎலாம் வேறென்றைக்
கேட்ட பொழுதே கெடும்." —நீதிவெண்பா.

தன்னைப் பற்றி எத்தனைக்கெத்தனை உயர்வாக எண்ணி யிருக்கிறானோ அத்தனையும் ஒரு பொருளைக் கேட்ட வுடனே அந்தப் பெருமையினுடைய (டிகிரி) அளவு குறைந்து போகும். பெருமை தானே சிறந்தது. யாசித்து அந்தப் பெருமைக்கு இழுக்கு உண்டாக்கக் கூடாதே. ஆகவே இன்றிலிருந்து யாரையும் எதையும் போய்க் கேட்காதீர்கள். இன்றையிலிருந்து ஒரு விரதம். அப்பொழுது மிகவும் இழிந்தது எது? "ஈயென இரத்தல் இழிந்தன்று" — புறநானூறு. ஈ - கொடு என்று கேட்பது மிக்க இழிவானது. சொல்கிறவன் சொன்னால் கேட்கிறவனுக்கு என்ன காதா வலிக்கும்? அந்தக் கொடு என்று கேட்பது இழிந்தது என்று சொன்னீர்களே. அதைவிட இழிந்தது உண்டா? என்றார். இருக்கிறது என்றார்.

"அதன் எதிர் ஈயேனென்றல்
அதனினும் இழிந்தன்று"

அவன் இல்லாமல் கேட்டான். வைத்துக்கொண்டு இல்லை என்கிறானே (அவனைவிட) அவன்தான் இழிந்தவன் என்றார். கேட்பது இழிவு. கேட்பவனைப் பார்த்து இல்லையென்று சொல்கிறானே அந்த லட்சாதிபதி மிகவும் இழிந்தவன்.

மறுபடியும் கேட்டார். இப்பொழுது இழிந்தது எது என்று சொன்னீர்கள். உயர்ந்தது எது?

"கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று"

வலியப் போய்க் கொடுக்கிறானே, ரகசியமாய்க் கவரில் போட்டு, யாருக்கும் தெரியாமல். அது மிகவும் உயர்ந்தது. இரவு பத்தரை மணிக்கு அவர் வீட்டுக்குப்

போய் "நாளைக்குத் தீபாவளி. நீங்கள் ஒன்றுமே செய்ய வில்லை என்று கேள்வி. நான் யாருக்கும் சொல்ல மாட்டேன். இதிலே ரூ 250/- வைத்திருக்கிறேன். அம்மாளுக்கு ஒரு புடவை எடுத்துக் கொடுங்கள். கடவுளுக்கும், உங்களுக்கும், எனக்கும்தான் தெரியும்'' என்று ரகசியமாய்க் கவரில் போட்டு யாருக்கும் தெரியாமல் காதும் காதும் கடித்தால் போலக் கொடுக் கிருனே அது உயர்ந்தது என்ருர். "**கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று**''. அதைவிட உயர்ந்தது உண்டா என்ருர். அப்படி வலிய கொண்டு வந்து கொடுக்கும் போது வேண்டாம் என்று சொல்கிருனே அது அதை விட உயர்ந்தது என்ருர்.

> **''அதன் எதிர் கொள்ளேன் என்றல்**
> **அதனினும் உயர்ந்தன்று''**

நான் சொல்வது புறநானூறுப் பாட்டு. வலியக் கொடுப் பது உயர்ந்தது. அப்படிக் கொடுக்கும் போது வேண் டாம் என்று சொல்கின்ருனே அது அதைவிட உயர்ந் தது என்ருர். இப்பொழுது நான் பெரிய புராணம் அல்லவா சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

நாயன்மார்கள் தினம் மூன்று வேளை கோயிலுக்குப் போவார்களாம். சிவபெருமானைப் பார்த்து பொன்னைக் கொடு, பொருளைக்கொடு, எனக்குச் செல்வத்தைக் கொடு, மக்களைக் கொடு, கேஸ் ஜெயிக்க வேண்டும், உத்யோகம் உயரவேண்டும் என்று ஒருநாளும் ஒன்றும் கேட்க மாட்டார்களாம். அதுதான் நிஷ்காம்ய பக்தி. ஒரு நாளும் பகவானிடம் ஒன்றும் கேட்டதில்லையாம். சிவபெருமான் பார்த்தார். 'பார்வதி இவன் 24 வருஷமா கக் கோவிலுக்குத் தினம் மூன்று வேளையும் வருகிருன். ஒன்றையுமே கேட்டதில்லையே. உன்னிடம் ஏதாவது கேட்டானு?' 'உங்களிடம் கேட்காதபோது என்னிடம்

கேட்பானு? நீங்களாகப் பார்த்து ஏதாவது கொடுங்கள்' என்று அம்பாள் சொன்னுள். இவர் மெல்லக் கூப்பிட்டு, “அன்பரே! நீ 24 ஆண்டுகளாக மூன்று வேளையும் ஆலய வழிபாடு செய்கிருயே. என்னிடம் ஒன்றுமே கேட்டதில்லே. நான் சாமான்யமாகத் தரலாமா? என்னுடைய தகுதிக்குத் தக்கவாறு தானே தர வேண்டும். ஆகவே யாராலும் கொடுக்க முடியாத முத்தி இருக்கிறதே, மோக்ஷம். அதை உனக்குத் தரப் போகிறேன்'' என்ருர். அந்த அன்பர் கேட்டார். “பரம சிவமே! இந்த வேலேயை உன்னிடமே வைத்துக் கொள். இதையெல்லாம் என்னிடம் காட்டாதே. நான் மோக்ஷத்துக்கு ஆசைப்பட்டா தினம் உன்னிடம் வருகிறேன்? அதற்கு வெகு பேர் இருக்கிருர்கள், அதைக் கொடு, இதைக் கொடு என்று கேட்கிறவர்கள். அதையெல்லாம் அந்த ஆட்களிடம் வைத்துக் கொள். எத்தனேப் பிறப்பு எடுத்தாலும் ஆண்டவனே நான் உன்னிடம் ஒன்றும் கேட்க மாட்டேன். நான் ஏன் கும்பிடுகிறேன் என்ருல் ‘‘**கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினுர்**'' — பெரிய புராணப் பாட்டு. ‘வீடும் வேண்டா' அந்த உம்மை சிறப்பும்மை. மோக்ஷம் வேண்டும் என்று கேட்க வில்லேயாம். அவன் அன்பாகக் கொடுக்கிருனும், சிவபெருமான். அந்த வேலேயை இங்கே வைத்துக் கொள்ளாதே என்ருராம். அப்பொழுது வலியக் கொடுப்பது உயர்ந்தது. கொடுக்கிற போது வேண்டாம் என்று சொல்வது அதனினும் உயர்ந்தது. சிவபெருமான் வலிய முக்தி உலகம் தருகிறேன் என்ருர். இந்த நாயன்மார்கள் வேண்டாம் என்று சொல்கிருர்களாம். அதனுல்தான் அவர்கள் பெரிய வர்கள்.

**‘‘வேண்டத்தக்கது அறிவோய் நீ**
**வேண்ட முழுதும் தருவோய் நீ''**

என்கின்கிருர் மாணிக்கவாசகர். எனக்கு என்ன வேண்டுமோ அது உனக்குத் தெரியுமே. நான் என்ன உன்னிடம் வந்து யாசிப்பது? நாயன்மார்கள் ஆண்டவனிடத்திலே இதுவரை ஒன்றையும் கேட்ட தில்லை. அதனுல் அவர்கள் பெரியவர்கள். குலத்திஞலே பெரியவர்கள் அல்லர். சலவைத் தொழிலாளி ஒருவர் அதிலே இருக்கிருர். திருக்குறிப்புத் தொண்ட நாயனுர். தீண்டாத குலத்திலே பிறந்தவர்கள் இருக்கிருர்கள். அப்படி என்ன என்னமோ குலத்தவர்கள் எல்லாம் அங்கே தொண்டர்களாயிருக் கிருர்கள். அவர்கள் செல்வத்திஞலே பெரியவர்கள் அல்லர். கல்வியிஞலே அல்லர். கண்ணப்ப நாயனுருக்கு எழுத்து வாசனையே தெரியாது. ஆனுல் அவர்கள் எதிலே பெரியவர்கள்? வேண்டாமையிலே பெரியவர்கள். நாமெல்லாம் இந்த உலகத்திலே பெரியவர்கள் ஆக வேண்டுமென்ருல் யாரிடமும் கடவுளிடம் கூட ஒன்றும் கேட்கக்கூடாது. ஆண்டவனே! எனக்கு ஒன்று கொடு என்று கேட்காதீர்கள். **“வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை யாண்டும் அஃதொப்பதில்”** என்பார் திருவள்ளுவர். ஆகவே அதனுலே நாயன்மார்கள் பெரி யவர்கள். இனி இந்த நாயன்மார்களை நமக்கு அறிமுகம் செய்து வைத்தவர் சுந்தரமூர்த்தி நாயனுர். சுந்தர மூர்த்தி நாயனுர் பாடிய நாயன்மார்கள் 60. 63 அல்ல. அநேகம் பேர் 63 என்பார்கள். அவர்களெல்லாம் தெளி வாகப் படிக்காதவர்கள். 50, 60, 70 அப்படித்தானே கணக்கு வரும். 63 என்று ஒரு கணக்கு வராதே. ஒருவ ருக்கு நாம் நன்கொடை கொடுத்தால் 50, 60, 70 என்று தருவோம். 63 என்று யார் தருவார்கள்? சுவாமி மலைக் குப் படி 60. ஆண்டுகள் 60. மனிதனுக்கு விழா செய் வதும் 60-வது ஆண்டு. ஒரு நாளைக்கு நாழிகை 60, ஒரு மணிக்கு 60 நிமிடம், ஒரு நிமிஷத்துக்கு 60 விஞடி. அப்பொழுது 60 என்று தான் ஒரு கணக்கு வரும்.

சுந்தரமூர்த்தி நாயனர் சிவபெருமான் அடி எடுத்துக் கொடுக்கப் பாடிய நாயன்மார்கள் 60 பேர். நான் மிக்க நினைவோடு பேசிக் கொண்டிருக்கின்றேன். எனக்கு வேறு பழக்கங்கள் கிடையாது. என்னடா இவர் 60, 60 என்று சொல்கிருரே என்று சில பேருக்குத் தோன்றும். நாளைக்குப் புத்தகத்தை எடுத்துப் பாருங் கள். 60 தான் இருக்கும். "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" 60 தான். தந்தையார் ஒரு வீடு கட்டியிருப்பார். தந்தையார் மறைவுக்கு அப்பாலே மகன் அந்த வீட்டில் குடியிருப்பார். மேலே ஒரு சிறு அறை – பூஜை ரூம் போட்டுக் கொள்வார். அப்பா கட்டியிருக்கிற வீட்டுக்கு ஒரு பூஜை ரூம் போட்டு வைத் தால் தியானம் பண்ணலாமென்று. தந்தையார் கட்டிய வீட்டுக்கு மேலே மகன் பூஜை ரூம் போடுவது போலே, 60 நாயன்மார்களைச் சுந்தரமூர்த்தி நாயனர் பாடினர். அவர் மறைந்து ஒரு 100 வருடம் பொறுத்து விநாயகப் பெருமான் அருள் முழுவதும் பெற்ற நம்பி யாண்டார் நம்பி அடிகள் ஆதி சைவ இளைஞர்; அவர் வேதாகமங்களை யெல்லாம் ஓதாதுணர்ந்து சுந்தர மூர்த்தி நாயனர் பாடிய 60 நாயன்மார்களைக் கொஞ்சம் விரிவாகப் பாடுகிருர், கொஞ்சம் விஸ்தாரமாக. சின்ன போட்டோவைக் கொஞ்சம் பெரிதாகப் பண்ணு கிற மாதிரி. அப்போது அந்த 60 நாயன்மார்களைப் பாடி அந்த 60 நாயனரைப் பாடிக் கொடுத்த சுந்தரரையும், அவரைப் பெற்றுக் கொடுத்த அப்பா, அம்மாவையும் சேர்த்து 63 ஆக ஆக்கினர் ஒரு நூருண்டுக்கு அப் பாலே. சுந்தரமூர்த்தி நாயனர் பாடியது 60 தான். அவர் மறைந்து ஒரு நூருண்டுக்கு அப்பாலே 63 ஆக வளர்ந் தது, இந்த வரலாறு. ஆகவே அந்த நாயன்மார்கள் அத்தனைப் பேரும் எல்லையில்லாத பெருமை உடைய வர்கள். தமக்குத் தாமே சமானமான பெருமையை உடையவர்கள். தாங்கள் செய்கின்ற நல்ல காரியங்கள்

அடுத்தவர்க்குத் தெரிய வேண்டுமென்று எண்ணாத வர்கள். ஆகவே இந்த நாயன்மார்களை நமக்கு அறிமுகம் செய்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவர் கைலாயத்திலிருந்து பூலோகத்துக்கு வந்தவர். சிவபெருமான் செக்கச் செவேலென்று இருப்பார். எப்பொழுதுமே சிவப்பு அழகு. கணவனோ, மனைவியோ சிவப்பாயிருந்தால் உவப்பாய் இருக்கும். பரமேசுவரன் பவள மேனி. திருநாவுக்கரசு சுவாமிகள் பாடுகிறார்.

**"குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில்**
**குமிண் சிரிப்பும்,**
**பனித்த சடையும், பவளம் போல் மேனியில்**
**பால் வெண்ணீறும்"**

பவளம் போல் மேனி. அந்தச் சிவப்பு மிக்க அழகு. சிவபெருமான் கண்ணாடியில் தன் திருமேனியைப் பார்த்து அருளினார். அந்த அழகான வடிவம் கண்ணாடியில் தெரிகிறது. அழகல்லவா? சுந்தரா வருக என்றார். அந்தப் பிரதிபிம்பம் ஒரு ஆளாக வந்தது. அவர்தான் சுத்தரமூர்த்தி நாயனார். சிவபெருமானுடைய நிழல. அவர் கயிலாய மலையிலே சிவபெருமானுடைய அருகிலே நிற்க, மாலயனாதி வானவர்கள் எல்லாம் நாலாம் பிராகாரத்தில் இருப்பார்கள். இவர் அருகிலே நிற்கும்படியான பெருமை உடையவர். அவர் தங்கத்தினாலே செய்த திருநீற்றுக் குவளை வைத்திருப்பார். அடியார்கள் வந்தால் அந்தத் திருநீற்றை எடுத்துக் கொடுப்பார் சிவபெருமான். மிகப் பெரியவர் சுந்தரர்.

தேவர்களுக்குச் சில துன்பங்கள் இருந்தன. நரை திரை, மூப்பு, மரணம். நரை வந்து ஒரு துன்பமானது. நரை வந்தவுடன் சிலர் வெட்கப்படுகிறார்களே நமக்கு நரை வந்து விட்டதென்று. நரை வந்தால் திரை வரும். திரை வந்தால் மூப்பு வரும். மூப்பு வந்தால் மரணம்

வரும். அப்படித் தேவர்கள் இந்த நரை, திரை, மூப்பி ஞலே வேதனைப்பட்டார்கள். என்ன செய்ய வேண்டும்? சிவபெருமானிடம் போய்ச் சொன்ஞல் ஒரு வார்த்தை யிலே மாற்றிவிடுவார். தியாகப்ரும்மம் சொன்ஞர்: ராகவா! "நீகு ஒக மாட்ட? நாகு ஒக மூட்ட." ராமச் சந்திர மூர்த்தி வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொன்ஞல் உடனே நம்முடைய வினை மூட்டை காலி ஆகிவிடும்.

இந்தச் சுலபமான வழி தெரியாத தேவர்கள் பாற் கடல் கடைந்தார்கள். மிகப் பெரிய வேலை. ஆயிரம் ஆண்டுகள் கடைந்தார்கள். மந்தர கிரியை நிறுத்தி, சந்திரனைத் தறியாக நிறுத்தி, வாசுகியைத் தாம்பாகப் பிடித்து ஆயிரம் ஆண்டுகள் கடைந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தது அமிர்தம். வந்தது ஆலாகல விஷம் பயங்கரமான நஞ்சு. எல்லோருக்கும் முந்தி ஓடுகிருன் தேவேந்திரன். "ஓடாதீர்கள், ஓடாதீர்கள்" என்று சொல்லிக் கொண்டே ஓடிஞர் பிரும்ம தேவர். படித்தவரில்லையா? கொஞ்சம் சாமர்த்தியமாக ஓடிஞர். எங்கே ஓடுவார்கள்? திரும்பவும் கயிலாயத்துக்கு வந் தார்கள். இந்த இடத்தை அருணகிரிநாதர் சொன்ஞர்.

"விடை பரவி அயன் மாலோடு
அமரர் முனி கணம் ஓட"

மூலைக்கு ஒருவராக ஓடிஞர்கள். சிவபெருமான் கருணையே வடிவானவர். அங்கே திருநீற்றுக்குவளை தாங்கும் சுந்தரரைப் பார்த்து, 'சுந்தரா! அவ் விடத்தை இவ்விடத்துக்குக் கொண்டு வா' என்ருர். மாலயனுதி வானவர்களாலே நெருங்க முடியாத அதி பயங்கரமான ஆலாகல விஷத்தை நாவற்பழம் போலத் திரட்டிக் கொண்டு வந்து கொடுத்தார். அதைச் சிவபெருமான் கையிலே வாங்கி வாயிலே போட்டார். அதை உண்டால் உள்ளே இருக்கிற ஆன்மாக்கள் அழிந்துபடும். உமிழ்ந்

தால் வெளியே இருக்கிற உயிர்கள் அழிந்து விடும். உண்ணுமலும் உமிழாமலும் கண்டத்திலே தரித்தார். அதனுலே நீல கண்டம்.

நாலணு அல்வா கூட நாம் கழுத்திலே நிறுத்த முடியாது. இன்றைக்கே வீட்டில் போய் முயற்சி பண்ணிப் பாருங்கள் கண்டத்திலே ஏதாவது பொருளை நிறுத்த முடியுமா என்று. ஏதாவது ஒரு பழமோ, வாழைப் பழமோ, ஒரு உத்தரணி பாலைக்கூடத் தொண்டையில் நிறுத்த முடியாது. ஒன்று வாயிலே வைக்கலாம்; அல்லது வயிற்றிலே வைக்கலாம். பரமேசுவரன் தான் அந்த நஞ்சைக் கண்டத்திலே தரித்தார். தோடி பாடினுல் தோடி சீதாராமய்யர். பல்லவி பாடினுல் பல்லவி எல்லையர். அதுபோல ஆலாகல விஷத்தைத் திரட்டிக் கொண்டு வந்ததாலே ஆலால சுந்தரர். அந்தப் பேர் கொஞ்சம் வரும். இதனுல் சுந்தரருடைய பெருமையை நீங்கள் கொஞ்சம் உணருவீர்கள். அவர் நந்தவனத்துக்குச் சென்ருர், மலர் பறிக்க. அங்கு உமா தேவியாரோடு நெருங்கிப் பழகுகிற இரண்டு பாங்கிமார்கள் கமலினி, அனிந்திதை. ஸர்வலோக மாதாவுக்குப் பெருந்தொண்டு செய்கிற பேறு பெற்றவர்கள். அந்த இரண்டு பெண்மணிகளும் அங்கு மலர் பறிக்க வந்தார்கள். ஆலால சுந்தரர் ஒரு விஞடி பார்த்தார். பார்த்தது பிழையென்று தன் பார்வையை மாற்றிக்கொண்டார். மலரை எடுத்துத் தொடுத்து ஆண்டவனை அடுத்துக் கொடுத்தார். 'ஆலால சுந்தரா ! நந்தவனத்திலே என்ன நிகழ்ந்தது?' என்று கேட்டார். 'தவறிப் போய்விட்டேன்' என்ருர். இந்த ஜன்மத்திலே நாம் ஒப்புக்கொள்வோமா? 'அங்கே என்ன பார்த்தாய்?' "ஒன்றுமில்லை ஒரு வண்டைப் பார்த்தேன். ஒரு பொன்வண்டு போச்சு. அதைத்தான் பார்த்தேன்" என்பார்கள். யாருமே குற்றத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். வழியில்லாத

வழியிலே போவார். எங்கே போகிறீர்கள்? திருப் போரூர் போகிறேன். இப்படியா போகிறது? வழி தவறிப் போச்சு. வழியா தவறி விட்டது? இவர்தான் தவறினர். குற்றத்தை யாரும் ஒப்புக்கொள்ள மாட் டார்கள். காந்தி ஒப்புக்கொள்வார். 'தங்களுக்கு ஏன் இந்த மூத்த குமாரன் ஒழுங்காகப் பிறக்கவில்லை' என்று காந்தி அடிகளைக் கேட்டார்கள். "அவனைப் பெறுகிற போது நான் காமாதூரனுக இருந்தேன். அப்போது தோன்றிய கரு" என்ருர் காந்தி. சாதம் களியானல் எந்த அம்மாளும் தங்கள் கவனக் குறைவை ஒப்புக் கொள்வது கிடையாது. ஆகவே யாரும் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வழக்கம் கிடையாது. இன்று முதல் ஆண்டவனிடம் நம் குற்றத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். தெய்வத்திடம் நம் குற்றத்தை ஒப்புக் கொண்டால் நாம் எல்லாம் கடைத்தேறலாம். அவன் தானே பாவத்தை மன்னிக்கிறவன். இதனலே தான் நம் அப்பர் பெருமான் குற்றமே செய்யாத குணக் குன்று,

**"குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்"**

என்ருர்.

அப்பர் பெருமானு குலம் பொல்லாதவர்? அப்பர் பெருமானு குணம் பொல்லாதவர்? தனக்கு நஞ்சு கொடுத்தான் மகேந்திரப் பல்லவன்; யானையை விட்டுக் கொல்ல வைத்தான்; கல்லிலே கட்டிக் கடலிலே இட் டான். ஒரு குற்றமும் செய்யாதவர். சைவ சமயத்தி லிருந்து சமண சமயம் போனர். அந்தச் சமயம் தனக்கு ஒப்பவில்லையென்று சைவ சமயத்துக்கு வந் தார். இவ்வளவுதானே. திரும்பவும் தன்னுடைய சமயத்துக்கு வந்தார். இதற்காகக் கல்லிலே கட்டிக் கடலிலே போட வேண்டிய அவசியம் என்ன? நான் எங்கள் வீட்டிலே திண்ணையிலே படுத்திருந்தேன்.

காற்று வரவில்லையென்று திண்ணையிலே வந்து படுத்தேன். கொசு கடித்தது. அடுத்த வீட்டுத் திண்ணையிலே படுத்தேன். மூட்டைப் பூச்சி கடித்தது. திரும்பி என் வீட்டுத் திண்ணைக்கு வந்து படுத்துக் கொண்டேன். அவன் ஏன் என்னை அடிக்க வருகிறான்? நான் என் வீட்டுத் திண்ணைக்குத் தானே வந்தேன். மூன்றாவது வீட்டுத் திண்ணைக்குப் போகவில்லையே. சைவ சமயத்திலே பிறந்து வளர்ந்த அப்பர் பெருமான், அந்த சமயம் போனால் ஏதாவது வாய்ப்பு கிடைக்குமோ? யாருக்கும் எண்ணந்தான். [அந்த ஊருக்குப் போனால் சம்பாதிக்கலாம்.] அங்கே போனார். வந்தது வயிற்று வலி. வேறே வழியில்லை. திரும்பவும் சைவ சமயத்துக்கு வந்தார். இந்தக் குற்றத்துக்காகக் கல்லிலே கட்டிக் கடலிலே போட்டான். தான் செய்தது பிழை என்று உணர்ந்தான் மகேந்திரப் பல்லவன். குருநாதா என்று காலிலே வீழ்ந்தான். வாழ்க என்றார்.

> **''இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
> **புணரின் வெகுளாமை நன்று''**

என்ற திருக்குறளுக்கு நூற்றுக்கு நூறு எடுத்துக் காட்டாக இருந்தவர் திருநாவுக்கரசு சுவாமிகள். அவன் செய்த கொடுமை என்ன? "இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும்,''—நஞ்சு கொடுத்தான், யானையை விட்டுக் கொல்ல வைத்தான், கல்லிலே கட்டிக் கடலில் போட்டான். இத்தனைக் கொடுமை செய்தவன் வந்து காலில் வீழ்ந்தால் "சௌக்கியமாய் இரு'' என்றார். அப்பர் பெருமானை வணங்குகிற நீங்கள் எல்லோரும் யாராவது தப்பு பண்ணி நம்மிடம் வந்தால் வாழ்க என்று சொல்ல வேண்டும். அவ்வளவு பெரியவர்,

**''குலம் பொல்லேன், குணம் பொல்லேன், குறியும் பொல்லேன்''**

என்றார். என்ன தாத்பர்யம்? அப்படிப் பொல்லாதவர்கள் ஆண்டவனை வேண்டுவதற்கு ஒரு பாடல் பாடிக்

கொடுத்தார். அவர் குணம் பொல்லாதவரல்லர். அவர் குலம் பொல்லாதவரல்லர். அவர் குணக் குன்று. மற்ற வர்களுக்காக அப்படி ஒரு பாடலைப் பாடி அருளுகின் றார். ஆகையினாலே நாம் எல்லாம் அது போன்ற பாடல் களைப் பாடி இறைவனிடத்திலே நம்முடைய குற்றத்தை ஒப்புக் கொள்வோமானால் உய்வு பெறுவோம்.

சுவாமி! நான் தவறு செய்து விட்டேன், என்றார் சுந்தரர். அவன் கருணைக் கடல். அப்பா! நீ என்ன தவறு பண்ணி விட்டாய்? அந்தப் பெண்மணிகளைப் பார்த்து ஒரு அரை விநாடி விரும்பினாய். விரும்பியது ஒரு பிழையா?

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்"

அடியார்கள் விரும்பியதைத் தருவது தானே என்னு டைய கருணை. [குழந்தைக்கு என்று அம்மா பிஸ்கட் வாங்கி வந்தாள். சாயங்காலம் தரலாம் என்று பூஜை அறையிலே உறியிலே வைத்து விட்டு அந்த அம்மாள் கோயிலுக்குப் போய்விட்டாள். குழந்தை வந்து பார்க் கிறது. உறியிலே பிஸ்கட். கதவைச் சாத்திவிட்டு ஒரு ஸ்டூல் போட்டு அதற்கு மேலே எவர்ஸில்வர் பக்கெட்டைப் போட்டு அந்தப் பிஸ்கட்டை எடுத்துத் தின்னத் தொடங்குகிறது. தாயார் வந்து விடுகிறாள். பார்த்தால் குழந்தை பிஸ்கட் தின்று கொண்டிருக் கிறது. அடிப்பாளா? "கண்ணு! இது உனக்குத்தான். ஆனால் இதைப் பூஜை அறையில் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது. (டைனிங் ஹால்,) சாப்பாட்டு ஹாலுக்குக் கொண்டு போய்ச் சாப்பிட வேண்டும்" என்று தாய் சொல்லுமாப் போலே,] அந்தப் பெண்களை அணுகி மகிழ்வது—டைனிங் ஹால்—தென்னாடு. அதுதான் கர்மாவை அனுபவிக்கிற நாடு. கைலாசத்திலே—காம தகனம் பண்ணின இடத்திலே பெண்களோடு வாழக் கூடாது. அந்தப் பிஸ்கட்டை எடுத்துக் கொண்டு

டைனிங் ஹாலுக்குப் போ என்று சொல்வது போலே மாதவம் செய்த தென் திசை வாழ்ந்திட நீ பூலோகத்திலே பிறந்து அந்த இரண்டு பெண்களோடு சில காலம் வாழ்ந்து விட்டு வருக'' என்றார். நாம் எல்லோரும் சந்தோஷப்படுவோம். அவர் சந்தோஷப்படுவாரா?

''கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கி''—

கலங்கி விட்டாராம். கலக்கத்துக்கு என்ன காரணம்?

''செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்''—

'சுவாமி! உன் திருவடியை விட்டு நீங்கும்படியான ஒரு துர்ப்பாக்கியம் எனக்கு உண்டாயிற்றே.'—அந்தப் பெண்களோடு வாழப் போகிறோமே என்ற மகிழ்ச்சி ஏற்படவில்லை! இறைவன் திருவடியிலே ஊறுவது பேரின்பம். அங்கே கிடைப்பது சிற்றின்பம். அந்தச் சிறு இன்பத்துக்காகப் பேரின்பத்தை விலகும்படியான ஒரு துர்ப்பாக்கியம் எனக்குக் கிடைத்ததே என்று கலங்குகிறாராம் சுந்தரர். எப்படிச் சொன்னார்?

'' செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
கைகள் அஞ்சலி கூப்பி கலங்கி நான்''

சுவாமி ! தேவரீர் பார்த்து பூலோகத்திலே பிறக்க வேண்டும் என்று சொன்னால் அடிமை மாட்டேன் என்று சொல்ல முடியுமா? சுவாமி! நீ இட்ட கட்டளையை என்னால் மறுக்க முடியுமா? சுவாமி! நீ ஆண்டான்; நான் அடிமை. பிறக்கச் சொன்னால் பிறக்கிறேன். ஒரு வேண்டுகோள்.

''மையல் மானுடமாய் மயங்கும் வழி
ஐயனே தடுத்து ஆண்டு அருள் செய் என''

''மானுடனாகப் பிறந்து மையலிலே அழுந்துகிறபோது ஐயனே! தடுத்து ஆட்கொள்'' என்றார். சுவாமி

மாட்டேன் என்பாரா? அப்படியே என்ருர். அந்தக் கைலாயத்திலிருந்த ஆலால சுந்தரரின் ஆத்மா சூக்கும சரீரத்தைப் பெற்று மேல் உலகத்திலிருந்து அது மழை வழியாகப் பூலோகத்துக்கு வருகிறது. இந்த இடத்தைப் பிரபு சேக்கிழார் பாடுகிருர். திருநாவலூரிலே வந்து அவர் அவதரிக்கிருர். அங்கு ஒரு செய்யுள்,

**"கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலே காட்டி ஆண்டவர் தமக்கு நாடு"**

சுந்தர மூர்த்தி நாயனுர் அவதரிக்கின்ற திருமுனைப் பாடி நாட்டைப் பற்றி தெய்வச் சேக்கிழார்—சோழவள நாட்டிலே முதலமைச்சராகப் பலகாலம் இருந்தவர்; ஆட்சேபணை இல்லாமல் 'உத்தமச்சோழப் பல்லவன்' என்று பட்டம் பெற்றவர். (அந்தப் பட்டம் கொடுக்கிற போது ஒருவரும் அவரை ஆட்சேபிக்கவில்லை.) அதன்பின் அந்தப்பதவி வேண்டாம் என்று வெளியிலே போனவர் சேக்கிழார். (அதையே பிடித்துக் கொண்டு தொங்கவில்லை.) அவ்வளவு பெரியவர் பாடுகிருர்.

**"கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலே காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதி இருமருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு"**

ஒரு இரண்டு மணி நேரம் சிந்திக்க வேண்டிய பாடல் இந்த நான்கு வரிகள். அத்தனை நேரம் சிந்திக்க வேண்டிய அருமை பெருமை நிறைந்த பாடல். சிறிது சொல்லு கின்றேன்.

பரமேஸ்வரன் தலையிலே கங்கை வைத்திருக் கிருராம். அது தூய்மையைத் தெரிவிக்கும். தலையிலே தண்ணீரை ஊற்றினுல்தான் சுத்தம் அடைகிருேம். கழுத்தோடு குளிக்கிறதெல்லாம் ஒரு அளவுதானே.

பரமேஸ்வரன் தலையில் கங்கையை வைத்திருக்கிறார். நான் சொல்வது வேடிக்கையல்ல. ஒரு சொம்புத் தண்ணீரைத் தலையில் விடுங்கள். தலையிலே நிற்குமா? முடியில் விட்டவுடன் அடியில் வருகிறது. பரமேசுவரன் விண்ணுக்கும், மண்ணுக்கும், வெற்புக்கும் அடங்காமல் வந்த ஸஹஸ்ரமுக கங்கையை ஒரு உரோமத்திலே டாம்—அணை கட்டி நிறுத்தினராம். அவரல்லவா பெரியவர். [இன்றைக்கு டாம் கட்டுவதற்கு 3 கோடி ஆச்சு என்கிறான். நியாயமாய்ச் செலவழிந்தது $1\frac{1}{4}$ கோடி.] 'மதியும் பாம்பும்'—சமாதானம் பண்ணுகிறவன் தானே பெரியவன். சந்திரனுக்கும் பாம்புக்கும் தீராத பகை. பரமேசுவரன் அந்தப் பகையை ஒற்றுமையாகத் தலையிலே வைத்தாராம்.

**"மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த அங்கணர்"**

அங்கணர்—அழகிய கண்களை உடையவர்.

**"ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு"**

அது சோலை சிறந்த நாடு, அறச்சாலை சிறந்த நாடு, கல்விக் கழகங்கள் இருக்கின்ற நாடு, திருக்கோயில்கள் இருக்கின்ற நாடு என்றெல்லாம் சொல்லாமல், "மங்கையர்". மங்கையர் என்றால் தாய்மார்கள். "வதன" வதனம் என்றால் முகம். "சீத மதி"—குளிர்ந்த சந்திரனைப் போன்ற முகங்கள் பெண்களுக்கு. அவருடைய 'செங்கயல்' கயல் என்றால் மீன்; மீன் போன்ற அந்தக் கண்கள். உவம ஆகு பெயராகக் கண்ணைக் குறிக்கிறது. "குழைகள் நாடும்"—அது இடவாகு பெயராகக் காதைக் குறிக்கின்றது. (அரியக்குடிப் பாட்டு என்றால் ராமனுஜ ஐயங்கார்.) குழைகள் நாடும் என்றால் காதை நாடுகிறது என்று அர்த்தம். இந்தக் கண் காதை நாடுகிறது. இப்படிக்

கேட்டவுடனே உங்களுக்கு என்ன தோன்றும்? "போயும் போயும் தெய்வச் சேக்கிழார் பெண்கள், கண்கள், காது இதுதானு? வேறு ஒன்றும் பாடுவதற்கு இல்லையா? எடுத்த எடுப்பிலேயே பெண்களேயும் கண்களேயும் பாடி வைத்தாரே'' என்று தோன்றும் சிலருக்கு. அவையெல்லாம் ஆழமாகப் படிக்காத வர்களுக்கு. நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது பெரிய புராணத்தின் சிறப்பு.] இதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. [அடிக்கடி சொல்ல வேண்டும். நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது பெரிய புராணச் சிறப்பு என்று] என்ன தாத்பர்யம்? சுருங்கிய வார்த்தைகளாலே சொல்லுகின்றேன்.

ஒரு குடும்பத்திலே ஐந்து புதல்வர்கள். மூத்தவன் நன்ருகப் படித்து, ஐ. ஏ. எஸ். படித்து கலெக்டராக வந்து விட்டான். கடைசிப் பையன் கந்தசாமி நன்ருகப் படிக்காமல் புத்தகத்தை எல்லாம் விற்று, ஆசிரியர் அமருகிற நாற்காலியில் குண்டுசிச் சொருகி வைத்து, பவுண்டன் பேனவை விற்று, ஒரு டின்னும் ஒரு பெட்டியும் வாங்கி அதை எல்லோருக்கும் ஆளுக்கு ஒன்று நீட்டி ஒரே குச்சியில் அவ்வளவு பேருக்கும் பற்ற வைத்து பரம காலித்தனமாகப் போய், அம்மா புருஷன் பேச்சைக் கேளாமல் தம்பி மகளேக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டாள். 5 வருடம் வாழ்ந்து 7 குழந்தைகளேப் பெற்ருன். சொத்தெல்லாம் குடித்துத் தீர்த்துவிட்டான். அப்பா, அம்மா இறந்து போய்விட்டார்கள். வேறு ஒன்றும் வழியில்லாமல் யாரோ ஒரு பெரிய மனிதர் தன் பஸ் கம்பெனியில் க்ளீனராக வேலே தந்தார், பஸ் துடைக்க. அன்றைக்கு ஆடிக் கார்த்திகை. கிழிந்த சட்டை போட்டுக்கொண்டு, வயிறு முதுகிலே ஒட்டிக் கொண்டு அந்தக் கந்தல் துணியிலே பஸ்ஸைத் துடைத்துக் கொண்டிருக்கிருன். அந்த வழியாக அவனுடைய கடைசி அண்ணு பெரிய

அண்ணு ஐ. ஏ. எஸ். படித்த கலெக்டர்; சம்சாரத்தை அருகிலே அமர வைத்துக் கொண்டு, (பியூன் பின்னல் உட்கார்ந்து கொண்டிருக்கிருன்.) அவர் நெற்றி நிறையத் திருநீறு. கழுத்தில் ஜபமாலே. கார் ஓட்டிக் கொண்டு திருத்தணி போகிறவர் திருமுருகாற்றுப் படை பாராயணம் பண்ணிக் கொண்டு போகிருர்.

> "உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
> பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு
> ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி"

அந்த அம்மாள் கந்தரனுபூதி பாராயணம் பண்ணிக் கொண்டிருக்கிருள் மகாலக்ஷ்மி மாதிரி. கார் பிளேமவுத் கார். அந்த பெருமிதத்தைத் தம்பி பார்க்கிருன். "அப்பா என்னேயும் படிக்க வைத்தார். எனக்குந்தானே சொத்துக் கொடுத்தார். அத்தனேயும் குடித்துத் தீர்த் தேனே, பெருங்குடி மகனுய்ப் போய். நம் அண்ணு படித்து உயர்ந்து விட்டாரே. அவருடைய பெருமை எங்கே? என்னுடைய சிறுமை எங்கே?" என்று தடி மாடாக அழிந்து போன தம்பி இமாசலம் போல் உயர்ந் திருக்கின்ற அண்ணனே ஏங்கிப் பார்க்குமாப் போலே, அந்தத் திருமுனேப்பாடி நாட்டிலே உள்ள தாய்மார்கள் கண்கள் இந்தக் கண்தான் நம்மை நரகத்துக்கு அனுப்புகிறது. காதுதான் பஞ்சாட்சரம் உபதேசம் கேட்டு சிவகதிக்கு வழி அனுப்புவது. கவனமாகக் கேளுங்கள். கண்ணேவிடக் காது உயர்ந்தது. நான் சிந்தித்துச் சொல்கிறவன். கண்ணில்லாதவர்கள் வித்வானுயிருப்பார்கள். செவிடன் வித்வானுயிருந்தான் என்று இதுவரைக்கும் வரலாறு கிடையாது. துவாரம் வேங்கடசாமி நாயுடு, அந்தகக் கவி வீரராகவ முதலியார், மாம்பழச் சிங்க நாவலர் இவர்கள் எல்லாம் கண்ணில்லாதவர்கள். செவிட்டுப் பயல் வித்வானு யிருந்தது இதுவரை கிடையாது. இந்த வாழ்க்கைக்கு

இன்றியமையாதது காது. அதனுல்தான் காதுக்கு முதல் முதல் நகை போடுகிறோம்; கர்ணபூஷணம். ஆகையினுல்தான் தோடுடைய செவியன் என்று செவியைச் சிறப்பிக்கின்ருர். 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்பார் திருவள்ளுவர். கண்ணினுலே கெட்டவர்கள் பலர். இராவணன் கண்ணினுலே கெட்டான். காதினுலே இன்பத்தைப் பெறுபவர்கள் பெரியவர்கள். இப்பொழுது சுந்தர மூர்த்தி நாயனுர் பூலோகத்துக்கு வருகிருர். அவர் பாடப் போகின்ருர்.

"பித்தா பிறை சூடீ பெருமானே அருளாளா"

இந்தத் தமிழ் மறையைக் கேட்பதற்குத் தவம் செய்தது செவி. தவம் செய்யாதது கண். அந்தத் தவம் செய்யாத தம்பி தவம் செய்த அண்ணனை ஏங்கிப் பார்க்குமாப் போலே "அவர் பாடுகின்ற செந்தமிழ் வேதத்தைக் காதண்ணு! நீ கேட்கப்போகின்ருய். நான் கேட்கின்ற வாய்ப்பைப் பெறவில்லையே என்று தவம் செய்யாத கண், தவம் செய்த காதை ஏங்கிப் பார்க்கின்றது" என்ற நுண்ணிய கருத்தை உள்ளே வைத்து, "செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு" என்ருர். அது ஏன் பெண்கள் என்று சொல்ல வேண்டும்? ஆண்களுக்குக் கேட்கிற வாய்ப்பு அதிகம். தாய்க் குலத்துக்கு வாய்ப்பு குறைவு. மாத விலக்கு வரும் வீட்டிலே கடமைகள் இருக்கும். விருந்தினர்களை உபசரிக்க வேண்டும். அவர்கள் நினைத்தவுடனே வெளியே கிளம்ப முடியாது. புருஷர்கள் துண்டைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விடலாம். ஆகையினுல்தான் வாய்ப்பு இல்லாத பெண்களைச் சொல்லி, "மங்கையர் வதன சீத மதி இரு மருங்கும் ஓடிச் செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு." அந்த வரலாறே கண்ணினுலே—அந்தப் பாங்கி மார்களைப் பார்த்து இந்த மண்ணுலகத்துக்கு வந்த வரலாறு. அதனுலே,

"செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு"

நுண்ணிய கருத்துக்களை வைத்து தெய்வச் சேக்கிழார் பாடுகிறார். சுந்தர மூர்த்தி நாயனார் முதன் முதலாகப் பாட எடுத்தது திருநீலகண்ட நாயனார். கண்ணப்பரையோ, சிறுத்தொண்டரையோ, ஞான சம்பந்தரையோ, அப்பர் பெருமானையோ பாடாமல் முதல் முதலாக அவருடைய திருவுள்ளத்திலே தேர்ந்தெடுத்த வரலாறு.

"திரு நீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்"

என்று பேசுகிறார். என்ன காரணம்? ஆசை என்ற ஒரு மரம். அதிலே மூன்று கிளைகள் இருக்கின்றன. ஒன்று பொன்னின் மேல் வைக்கின்ற ஆசை. ஒன்று மண்ணின் மேல் வைக்கின்ற ஆசை. ஒன்று பெண்ணின் மேல் வைக்கின்ற ஆசை. கொஞ்சம் நுட்பமாகக் கேளுங்கள். மண்ணாசையும் பொன்னாசையும் மனிதனுக்கு மட்டும் உண்டு. பெண்ணாசை எறும்புக்கும் உண்டு. யானைக்கும் உண்டு. புழுவுக்கும் உண்டு. இன்னொரு முறை சொல்கிறேன். பொன்னாசையும், மண்ணாசையும் மனிதனுக்கு மட்டுமே உண்டு. ஒரு பசுவிடம் நூறு ருபாய் நோட்டைப் போட்டால் சந்தோஷப் படுமா? ஒரு குழந்தையிடம் நூறு ருபாய் நோட்டைக் கொடுங்கள். பின்னர் நாம் வாங்க முடியாது. அதற்கு ஒன்றும் செய்யத் தெரியாது. குழந்தைகள் முதல் பணம் என்றால் கொஞ்சம் ஆசை. கிழவிகள் எத்தனை பேர் பணத்தை வைத்துக்கொண்டு எண்ணிக்கொண்டேயிருப்பார்கள். யாராவது வந்தால் 'டப்' என்று மூடிக் கொள்வார்கள்.

இரண்டு சந்நியாசிகள் இரண்டாவது காட்சி படம் பார்த்து விட்டு மடத்துக்குத் திரும்பிப் போகிறார்கள். போன படம் 'காதலிக்க நேரமில்லை'. பாதி போகிற வழியிலே ஒரு ருபாய் ரோடிலே இருந்தது. 'டக்'கென்று

ஒரு சாமியார் காலிலே மறைத்துக் கொண்டு, சுத்தானந்த அடிகளே! காலிலே சுளுக்கினுல் போல் இருக்கு. நீங்கள் மடத்துக்குப் போங்கள். நான் வருகி றேன் என்ருர். (எடுத்தால் பாதி ரூபாய் கொடுக்க வேண்டுமே.) சரி என்று அவர் மடத்துக்குப் போய் விட்டார். அவர் சுற்று முற்றும் பார்த்துவிட்டு (ஒருவ ரும் இல்லையென்று) மண்ணோடு எடுத்துச் சட்டைப்பை யில் போட்டுக்கொண்டார். நாளைக்கு இன்னொரு படம் பார்த்து விடலாம். ஒரு ரூபாய் கிடைத்ததே என்று மடத்துக்குப்போய், அறைக்கதவைச் சாத்திக்கொண்டு, விளக்குப் போட்டுப் பார்த்தால் மண்எண்ணெ டின் பேர்த்த தகர மூடி. தகர டின் மூடி ரூபாயாகக் காட்சி அளிக்கிறது, முற்றத் துறந்த முனிவருக்கு. தெரி கிறதா பொன்னுசை என்ன வேலை பண்ணுகிறதென்று. சந்நியாசிகளையும் பிடித்து ஆட்டுகிறது. ஆனுல் ஒரு பசு மாட்டிடம் தங்கப் பவுனைப் போட்டால் காலிலே மறைத்துக் கொள்ளுமா? காட்டில் வாழுகிற விலங்கு கள் இங்கிருந்து இதுவரையிலும் என்னுடைய நிலம் என்று குறியிட்டு வைத்துக் கொள்ளுகின்றனவா? ஒரு முழம் சுவருக்கு ரூ. 30 ஆயிரம் செலவழிக்கிருன். ஆடு மாடுகளுக்கு மண்ணுசை உண்டா? இல்லை. ஆடு மாடுகளுக்குப் பொன்னுசை உண்டா, இல்லை. பெண் ணுசை? எறும்புக்கும் உண்டு. யானைக்கும் உண்டு.

நான் வரிசையாகச் சொல்லி விடுகிறேன். பிருந்தை யைக் கண்டு மயங்கினுர் திருமால், திலோத்தமையைக் கண்டு மயங்கினுர் திசைமுகன்—பிரம்மா, அகலிகை யைக் கண்டு மயங்கினுன் இந்திரன், தாரையைக் கண்டு மயங்கினுன் சந்திரன், மச்சகந்தியைக் கண்டு (இந்தக் கரையிலிருந்து அந்தக் கரைக்குப் போவதற்குள்) மயங் கினுர் பராசரர். மேனகையைக் கண்டு மயங்கி, (அப்பால்—குழந்தை பிறந்த பிற்பாடு) வேண்டாம் என்ருர் விசுவாமித்திரர், குழந்தை பிறந்த பிற்பாடு.

முந்தி எங்கே போயிற்று புத்தி, விசுவாமித்திரருக்கு? அருந்ததியைக் கண்டு மயங்கினர் வசிஷ்டர் லோபா முத்திரையைக் கண்டு மயங்கினர் அகஸ்தியர். இப்படிச் சொல்லிக் கொண்டு போனல் நேரம் ஆகும். அத்தனைப் பேரும் பெண்ணாசையினலே மயங்கினர்கள். ஆனல் இந்தத் திருநீலகண்ட நாயனருக்கு 25 வயது. அப்படி ஒன்றும் வேதாகமங்களையெல்லாம் படித்தவரல்லர். பெரிய சொத்துக்காரரும் அல்லர். புல் குடிசையிலே வாழ்கின்றார். அவர் இளமை மீதூற இன்பத் துறையினில் எளியரானர். மனைவி இருந்தும் ஆங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ணினர். கொஞ்சம் வழுக்கி விட்டார். ஒரு சிறு பிழை. திருநீலகண்டர் மிகப் பெரியவர். குணத்திலே சிறந்தவர். உறுதியிலே சிறந்தவர். இன்பத் துறையிலே எளியராகி ஆங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ணினர். அம்மையார் உணவு கொடுத்தார்கள். 'எங்கே போனீர்' என்று கேட்டார்கள். "ஒரு பரத்தை பால் அணைந்து நண்ணினேன்" என்றார். "மற்றவர்கள் பரத்தை வீட்டுக்குப் போகலாம். நெற்றியிலே திருநீறும், கழுத்திலே உருத்திராட்சமும் தரித்த நீங்கள் இப்படிச் செய்யலாமா? சைவத்துக்கு இழுக்கல்லவா?" என்று அந்த அம்மையார் கணவனிடத்திலே ஊடல் கொண்டு அத்தனைத் தொண்டுகள் செய்தும் கணவனுரைத் தீண்டுவதற்கு ஒருப்படவில்லை. இளம் வயது. அவர் எத்தனை எத்தனையோ இங்கிதமான வார்த்தைகளைச் சொல்லி அம்மையாருடைய சீற்றத்தைத் தணிக்க முயன்றார். அம்மையார் சீற்றம் ஏன்? "மானமும் பொருது வந்த ஊடல்." 12 மணி இரவு. மனைவியார் அருகிலே சென்று அப்படித் தொடுவதற்கு முயன்றார். வேறு ஒன்றும் வழியில்லை. "தீண்டுவீராகில் எம்மைத் திருநீலகண்டம்" என்றார். இந்த ஆணையிடுகிற வழக்கம் நம் நாட்டில் என்றைக்கும் உண்டு. "உன் மைந்தன் ராமன் மேல் ஆணை" என்றார் தசரதர்.

'வேலின் மேல் ஆணை' என்பார்கள். 'என் தந்தையின் மேல் ஆணை', "தாயின் மேல் ஆணை" என்பார்கள். 'ஆணை நமதே' என்பார் திருஞான சம்பந்தர். 'என்னாணை' என்கின்றார் வள்ளல் பெருமானார்.

**"எல்லாம் செயல் கூடும் என்னாணை அம்பலத்தே**
**எல்லாம் வல்லான் தனையே ஏத்து"**

அம்மையார் திருநீலகண்டத்தின் மீது அளவிலா அன்புடையவர்கள் ஆதலினாலே "பெருமானே, என்னைத் தீண்டுவீர்களாகில் திருநீலகண்டத்தின் மேல் ஆணை" என்று சொன்னார். இளம் பருவம். கற்கண்டு மலை போல இருக்கிற மனைவி. திருநீலகண்டத்தின் மீது ஆணை என்று சொன்னவுடனே அவர்,

**"ஆதியார் நீல கண்டத்து அளவுதாம் கொண்ட ஆர்வம்**
**பேதியா ஆணை கேட்ட பெரியவர்"—**

அவர் வயதில் சிறியவர். குலத்திலே சிறியவர். சட்டி, பானை செய்கிறவர். கல்வியிலே சிறியவர். அந்த குலத்திலே அதிகமாய்ப் படிக்க வாய்ப்பிருக்காது. செல்வத்திலும் சிறியவர். வயதிலும் சிறியவர். அனுபவத்திலும் சிறியவர். ஆனால் உறுதியில் பெரியவர்.

**"பெரியவர் பெயர்ந்து நீங்கி"**

அம்மையார் திருநீலகண்டத்தின் மீது ஆணையென்று சொன்னார்கள். "பெயர்ந்து நீங்கி"—பெயர்ந்து, நீங்கி இரண்டுக்கும் ஒரே அர்த்தம். கேட்டு, வாசற்படி என்று சொல்வது போல, ஷாப்பு கடை என்று சொல்வது போல. ஆனால் சேக்கிழார் சுவாமி பாஷா ஞானம் இல்லாதவரா? 'பெயர்ந்து, நீங்கி' என்ன அர்த்தம்? திருநீலகண்டத்தின் மேல் ஆணை என்றவுடனே உள்ளம் பெயர்ந்தது. சரீரம் நீங்கியது! ஒரு பொருள் மேல் உள்ள ஆசை மனதிலே விலக்கம் வரவேண்டும். அதன் பின் சரீரம் விலகவேண்டும். அம்மையார் சொன்ன

வுடனே உள்ளம் பெயர்ந்து விட்டது. உடம்பு நீங்கி விட்டது. "ஏதிலார் போல நோக்கி"—ஒரு வினாடிக்கு முன்னால் அம்மையார் கற்கண்டு மலையாகத் தித்தித் தார்கள். திருநீல கண்டத்தின்மீது ஆணை என்று சொன்னவுடனே பொதுப் பார்வையாகப் பார்த்தார். மனைவி என்ற பாசம் விலகியது.

**" ஏதிலார் போல நோக்கி எம்மையென்றதனால் மற்றை**
**மாதரார் தமையும் என்றன் மனத்தினும் தீண்டேன்"**

என்றார்.

மனத்திலும் என்றால், சரீரத்தாலும், கண்ணாலும் என்று அர்த்தம். எம்மை என்ற படியினாலே உலகத்தில் உள்ள எத்தனைப் பெண்கள் உண்டோ அத்தனை மாதரையும், (சித்திரத்திலேயும்) விரும்பிப் பார்க்க மாட்டேன். இப்படிச் சபதம் பண்ணிக் கொள்ளலாம். நிறைவேற்ற முடியுமா? பொடி போடுகிறவர்கள் விட்டு விடுவார்கள். யாராவது போட்டுக் கொண்டால் கொஞ்சம் ஆசை. எத்தனையோ பேர் புலாலை விட்டு விடுவார்கள். ஜுரம் வந்தவுடன் டாக்டர் சொன்னார் என்று ஆரம்பித்துக் கொள்வார்கள். இப்படித்தான் உறுதிகள் விலகிப் போகும். 25, 26 வயதிலே உறுதி கொண்ட அவர், பெரிய பங்களாவா? குயவனார் வீடு என்றால் எப்படி இருக்கும்? சின்ன வீடு; சிறிய அறை. அம்மா ஒரு பாயில் படுக்கிறார்கள். ஒரு நாலு விரற்கிடை தள்ளி மற்றொரு பாயில் இவர் படுக்கிறார், சிந்தையினாலும் தொடாமல். இமாசலத்திலே போய் மாதர் ஆசையை மாற்றலாம். தனிமையான இடத்திலே விரதத்தைக் காப்பாற்றலாம். ஒரே வீட்டில் ஒரே அறையில் படுத்துக் கொண்டு, அம்மையாரைத் தீண்டாமல், மனசுந்தீண் டாமல் இருக்கிறார் என்றால் கொஞ்சம் சிந்திப்பாருக்குத் தான் விளங்கும். [வால் போஸ்டரைக் கண்டு 72 வய திலே ½ மணி நேரம் நிற்கிற காலம். இந்த முகம்தான்

புது முகமா என்று கேட்கிருன். எந்த முகமாக இருந்தால் இவனுக்கு என்ன?] அந்த இளம் பருவத்திலே சிந்தையினுலும் பிழைபடாதிருந்தார். அதைவிடப் பெருமை என்ன? இதை யாருக்கும் சொல்லாமல் இருந்தார். மிகவும் வேண்டியவர்களிடம் சொல்லுவார்கள். "இப்பொழுது நாங்கள் பத்தியமாகத்தான் இருக்கிருேம்" என்பார்கள். இதைவிட அருமை என்ன? அந்த அம்மையார் யாருக்கும் சொல்லாமல் இருந்தார்கள். அவர்கள் தங்கைக்கோ அக்காவுக்கோ சொல்லலாம் இல்லையா? நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. ஐம்பது அறுபது ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்பொழுது திருநீலகண்டர் எப்படி இருக்கிருர்? வெள்ளிக் கம்பி போலத் தலைமயிர் நரைத்து விட்டது. சதையெல்லாம் வற்றிவிட்டது. நாடிகள் வெளியே தெரிகின்றன. தலை இப்படி அசைகின்றது. கையில் தடி. உடம்பினுடைய தன்மை. இந்த இடத்தைச் சேக்கிழார் பாடுகின்ருர்; இங்குதான் எல்லோரும் கவனமாகக் கேட்க வேண்டும். என்னமாகச் சொன்னுர்?

> "வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
> தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச்
> சாயார்"

சில பேருக்கு வயது முதிர முதிர ஆசாரம், பக்தி எல்லாம் குன்றிப் போகும். அவர் தளர்ந்த பருவம் வந்தும் இறைவனுடைய பக்தியிலே தளர்வு வரவில்லை. அங்கே என்ன சொன்னுர் சேக்கிழார்?

> "வடிவுறு மூப்பு வந்து"

அவர் பெரிய புரட்சிப் புலவர். என்ன புரட்சிப் பண்ணுகிருர்? வடிவு என்ருல் அழகு. திருவொற்றியூரில் அம்பாள் பெயர் வடிவாம்பிகை. இன்றைக்கும் யாழ்ப்

பாணத்து அன்பர்கள் பேசுவார்கள்: "இன்று பேச்சு வடிவாக இருந்தது." என்று. வடிவு என்றால் அழகு. சேக்கிழார் சுவாமிகள் "வடிவுறு மூப்பு வந்து" என்றார். வடிவுறு மூப்பு என்றால், அழகு இளமையில் இருக்கிறதா? முதுமையில் இருக்கிறதா? என்று ஒரு ஆராய்ச்சி. கிழவி அழகா? குமரி அழகா? கிழவன் அழகா? குமரன் அழகா? 85 வயதுக் கிழவி பரத நாட்டியம் ஆடினால் யார் பார்ப்பார்கள்? ஒரு 18 வயது இளம் பெண் ஆடினால் கிழவன் உட்கார்ந்து பார்ப்பான். இது தானே உலகம். அப்பொழுது இளமை அழகாய் இருக்கும். ஆனால் முதுமை? தெய்வச் சேக்கிழார் "வடிவுறு மூப்பு வந்து"—என்ன சொல்கிறார்? அழகு இளமையிலே இல்லை. முதுமையிலே அழகு இருக்கிறது என்று திட்டவட்டமாகப் பாடியிருக்கிறார். பாடினவர், சேக்கிழார் சுவாமிகள். கல்வியில் கரை கண்டவர். இதைச் சாமான்யமான கண் கொண்டு பார்த்தால் விளங்காது. திருவருள் கண் கொண்டு பார்த்தால் விளங்கும். நீங்கள் அழகு இளமையில் இருக்கிறது என்று எண்ணுகிறீர்கள். ஆனால் சேக்கிழாருடைய வாக்கின்படி அழகு முதுமையில் இருக்கின்றது. இதை எப்படித் தீர்மானம் பண்ணுவது?

நமக்கு ஏதாவது சந்தேகம் வந்தால் நகரத்தை விட்டு நாட்டுக்குப் போவோம். நீங்கள் எல்லோரும் புறப்பட்டுக் கிராமத்துக்குப் போங்கள். ஒரு சோலைக்குப் போங்கள். மாங்காய் அழகா? மாம்பழம் அழகா? கொய்யாக்காய் அழகா? கொய்யாப் பழம் அழகா? வாழைக்காய் அழகா? வாழைப் பழம் அழகா? சிந்தியுங்கள். நம் வீட்டில் இருக்கிற கிழவர்களும், கிழவிகளும் சரீரம் வெம்பிப் போகிறார்கள். உள்ளத்திலே பழுக்கவில்லை. திருநீலகண்ட நாயனார், 25 வயதிலிருந்து ஒரே அறையிலே இருந்து, மனைவியாரைப் பராசக்தியாக எண்ணி

ஞான வாழ்க்கையிலே வாழ்ந்து அவர் பழுத்ததனாலே அவருடைய முதுமையைச் சொல்ல வந்த சேக்கிழார் சுவாமி "வடிவுறு மூப்பு வந்து தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயார்'' என்றார். இவை யெல்லாம் இதுவரைக்கும் உரை நடையிலே யாரும் எழுதவில்லை. இப்பொழுது நான் சொல்கிற அர்த்த மெல்லாம் உரை நடையிலே கிடையாது. யாரார் பெரிய புராணத்துக்கு உரை எழுதியிருக்கிறார்களோ அத்தனைப் பேர் உரையையும் எடுத்துப் பாருங்கள், இப்பொழுது நான் சொன்ன உரை இதுவரை வந்திருக்கிறதா என்று. இனிமேல் வரும். 'வடிவுறு மூப்பு வந்து', 'தளர்வொடு சாய்ந்தும்' அந்தச் சின்ன வார்த்தையிலே மிகப் பெரிய பொருளை விளங்க வைக்கின்றார்கள், சேக்கிழார். மற்றொன்று. இந்த ஆசை என்று சொன்னேனே. ஒன்று செல்வத்தின் மேல் வைக்கின்ற ஆசை. ஒன்று மனைவியின் மேல் வைக்கின்ற ஆசை. ஒன்று குழந்தைகள் மேல் வைக்கின்ற ஆசை. அது வட மொழியிலே: "தனேஷணை, தாரேஷணை, புத்ரேஷணை". செல்வத்தின் மேல் வைத்திருக்கின்ற ஆசையைச் சாஸ்த்திரங்களைப் படித்தவர்கள் விட்டு விடுவார்கள். மனைவி மேலே வைத்திருக்கின்ற ஆசையும் ஒரு காலத் திலே விலகிப் போகும். ஆனால் மக்கள் மேல் வைத்த ஆசையை யாராலும் விலக்க முடியாது. "கடந்த ஞானி களும் கடப்பரோ மக்கள் மேல் காதல்''. மனைவியை மறக்கலாம். செல்வத்தை மறக்கலாம். குழந்தையை யாராலும் மறக்க முடியாது. அதனால்தான், "மக்கள் மெய் தீண்ட உடற்கின்பம்'' என்பார். மனைவி நம்ம விருப்பத்துக்கு வருவாள். குழந்தை தெய்வம் கொடுத்து வரவேண்டும். நம் இஷ்டத்துக்குக் குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே மனைவியை விட மக்கள் மேல் உள்ள பிரியம் அதிகம். சிந்தனை பண்ணுங்கள். அந்த மக்கள் மேல் வைத்த காதலை

அறவே துறந்தவர் சிறுத்தொண்ட நாயனுர். 5, 6 குழந்தைகள் இல்லை. 'நாம் இருவர்; நமக்கு ஒருவர்.' அவருக்கு ஒரே குழந்தை; சீராளதேவர். அது தங்க விக்ரஹம் போலே இருக்கும். 5 வயதிலே பள்ளியில் வைத்தவுடன் பெட்ரோலில் தீப்பிடித்த மாதிரி சகல கலைகளையும் கற்று உணர்ந்தார். சீராளர் கல்லாத கலை இல்லை. அடக்கம், அன்பு, அருள், பொறுமை, சாந்தம், கல்வி, கேள்வி அத்தனை நற்குணங்களும் அமையப் பெற்றவர். ஆனுல் அந்தப் பிள்ளையிடத்திலே பாசம் இல்லாமல் வாழ்கின்ருர், சிறுத் தொண்ட நாயனுர். இதை உலகத்துக்கு அறிவிக்க எண்ணுகின்ருன் பரமேசுவரன். சோதனை செய்யவில்லை. அவன் ஸர்வக்ஞன். அதனுலே சித்திரை மாதம் பரணி நட்சத்திரம். இவர் நாள்தோறும் ஆயிரக் கணக்கான அடியார்களுக்கு அன்னம் படைப்பார். சிவபெருமான் கருணை ஒரு அடியாரும் அன்று வராமல் தடுத்து விட்டார். அவருடைய கொள்கை என்ன? அடியாருக்கு அமுது படைத்தல். அந்தத் தொண்டுக்குத் தடை வருமானுல் மாண்டு போதல். கொள்கைக்காக வாழ்ந்தவர். வாழ்வுக்காக கொள்கையை மாற்றிக் கொள்ளமாட்டார். அப்படி வாழ்கின்ற சிறுத் தொண்டர் அன்றைக்குச் சித்திரை மாதம். பரணி நட்சத்திரம். 'அடியார்கள் வரவில்லையே. திருவெண்காட்டு நங்கையே! நான் போய் அடியார்களை அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று தேடிக் கொண்டு போனுர். அடியார்கள் எவரும் கிடைக்கவில்லை. அப்பொழுது சிவபெருமான் வட நாட்டுப் பைரவ சந்நியாசியாக வந்தார். தென்னுட்டுச் சந்நியாசி பிள்ளைக்கறி கேட்பாரா? பைரவ சந்யாசியாய் எலும்பு மணிமாலை, தலைமயிரை முடித்துப் பூணூல் கையிலே தலைமண்டை ஓடு, புலித்தோலை உடுத்திக் கொண்டு, சிறுத் தொண்டருடைய திருமடத்துக்கு நேராக வந்து, பவதி பிக்ஷாம் தேஹி என்ருர். அங்கே

சந்தன நங்கை என்ற ஒரு உத்தமமான வேலைக்காரி அம்மாள், வெளியில் வந்து, "சுவாமி! உள்ளே வாருங்கள். இது சிறுத்தொண்டர் மடம். ஆயிரமாயிரம் பேர் சாப்பிடலாம்" என்றார். "அம்மா! பெண்கள் இருக்கிற இடத்துக்கு நாங்கள், சந்நியாசிகள் வரக் கூடாது. உலகம் பழிக்கும். பனை மரத்தின் கீழே பாலைச் சாப்பிடக் கூடாது" என்றார். உடனே திருவெண்காட்டு நங்கை வெளியே வந்து, "சுவாமி! உள்ளே வர வேண்டாம். நடையில் வந்து சோபாவில் அமருங்கள். இன்னும் பத்து நிமிஷத்தில் அவர் வந்து விடுவார்" என்றார். 'அம்மா! நாங்கள் எல்லாம் உலகம் பழிக்கிற மாதிரி நடந்து கொள்ளக் கூடாது. நான் கணபதீச்சரம் கோவிலில் ஆத்தி மரத்தின் கீழே இருக்கின்றேன். அவர் வந்தால் அங்கு வரச் சொல்லுங்கள். ஆசீர்வாதம்' என்று சொல்லிவிட்டு, கோவிலில் ஆத்திமரத்தின் கீழே உட்கார்ந்திருக்கிறார் சிவபெருமான்.

ஊரெல்லாம் தேடிவிட்டு ஒரு அடியாரும் வரவில்லையே என்று இனி நமக்கு வாழ்வில்லை என்று மடத்துக்கு வந்து மனைவியிடத்திலே நின்று, "திருவெண்காட்டு நங்கையே! ஒரு அடியாரும் கிடைக்கவில்லை. இன்று அமுது படைக்கின்ற தொண்டு மூடப்பட்டு விட்டது. நமக்கு இன்றுதான் கடைசி நாள். ஆயுள் முடிகிறது. என் டைரியை முடிக்கிற நாள்" என்றார்.

அம்மையார் சொன்னார்கள்: "கவலைப் படாதீர்கள். ஒரு அடியார் வந்தார். வடநாட்டுப் பைரவ சந்நியாசி. இருந்து சாப்பிடச் சொன்னேன். பெண்கள் தனித்திருக்கிற இடத்தில் நான் இருக்க மாட்டேன் என்று கோவிலுக்குப் போனார். ஆத்திமரத்தின் கீழே இருக்கிறார். அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்றார். அவருக்கு எப்படி இருக்கும்? அளவிலா மகிழ்ச்சி

யோடு கோவிலில் போய் அடியார் காலிலே விழுந்தார். யாரையா நீர்?

"நின்ற தொண்டர் தமை நோக்கி
நீரோ பெரிய சிறுத்தொண்டர்?"

"நீர்தான் சிறுத்தொண்ட நாயனுரா? அவர் தொண்டிலே சிறியவர் அல்லர். 'உன் மகனை அறுத்துக் கறி சமைத்துப் போடு' என்ருல், 'ஆல்ரைட்' என்ருல், அதுவா தொண்டிலே சிறியது? நீ நான்கு பிள்ளையைப் பெற்ருயே ஒரு பிள்ளையைத் துணைக்கு அனுப்பு என்ருர் விசுவாமித்திர முனிவர். உருண்டு அழுகிருன் சக்கரவர்த்தி. துணைக்குக் கேட்டார். உருண்டு அழுதான் தசரதன். இவர் பிள்ளைக்கறி சமைக்கின்ற பெருந்தகை; அவர் சிறுத்தொண்டர். என்ன காரணம்? வாள் வலியும் தோள் வலியும் மிக்கவர். சேனுதிபதியாகப் பணி புரிந்தவர். அடியாரைக் கண்டவுடனே எட்டு சாண் உடம்பும் ஒன்றரைச் சாணுகப் போவாராம். அதனுலே சிறுத் தொண்டர்.

சீதமதி அரவினுடன் செஞ்சடைமேல் செறிவித்த
நாதனடியார் தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையா ரவர்முன்பு மிகச்சிறியராய் அடைந்தார்
ஆதலினுல் சிறுத்தொண்டர் எனநிகழ்ந்தார்
அவனியின்மேல்.

அவர் அடங்கி ஒடுங்கி மடங்கி நின்ருர். "சுவாமீ! ஆகாரத்துக்கு வாருங்கள். மணி 12½ ஆகிவிட்டது. சாப்பாட்டு நேரம். வாருங்கள்" என்ருர்.

"நமக்குச் சாப்பாடு போட உன்னுல் ஆகாது; போ" என்ருர்.

"சுவாமீ! அப்படிச் சொல்லக் கூடாது. நான் மலை மலையாகச் சமைத்துக் கொட்டியிருக்கிறேன். சாம்பார் அண்டா, மோர்க் குழம்பு அண்டா, பொரியல், அவியல்

எல்லாம் குவியல் குவியலாக வைத்திருக்கிறேன். எங்கள் வீட்டிலே எல்லாம் இருக்கிறது; வாருங்கள்"

"ஓய், எனக்குச் செய்ய முடியுமா?"

"யாதும் அரியது ஒன்றில்லை. உங்கள் ஆசீர்வாதத்தாலே என்னாலே கூடுமானவரைக்கும் தங்களுக்கு விருப்பமானவற்றைச் செய்வேன்"

"அப்படியா? ஆவதைச் செய்வாயா?"

"ஏதோ பத்தியம் இருக்கும் போலிருக்கு. உப்பில்லா பத்தியம். புளியில்லாத பத்தியம். "சுவாமீ! என்ன ஆகுமோ செய்கிறேன்" என்றார்.

'ஆ வதை செய்வாயா?'—ஆ வதை! வடநாட்டுச் சந்நியாசி. இதெல்லாம் சாப்பிட்டுப் பழக்கம் போலிருக்கு. சுவாமீ! பசுக்களிலே மூன்று வகையான பசுக்கள் உண்டு. உங்களுக்கு என்ன பசு? ஆடு, மாடு, எருமை. அதன் உள் அர்த்தம் என்ன? ஒரு மலமுடைய ஆன்மா, இரண்டு மலமுடைய ஆன்மா, மூன்று மலமுடைய ஆன்மா. ஒரு மலமுடைய ஆன்மா விஞ்ஞான கலர். இருமலமுடைய ஆன்மா பிரளயா கலர். மூன்று மலமுடைய ஆன்மா சகலர். இப்படி மும்மலத்திலே மூன்று மலங்களையுடைய ஆன்மாக்களிலே உங்களுக்கு என்ன பசு வேண்டும்?

அப்பா ஒரு குடிக்கு ஒரு மகனாய் இருக்க வேண்டும். சேக்கிழார் வாக்கு.

> "நாதன் தானும் ஒரு குடிக்கு நல்ல சிறுவன் ஒரு மகனைத்
> தாதை அரிய"

ஒரே மகனாயிருக்க வேண்டும். "தாதை அரிய"—அவ்வளவு பேரும் நுட்பமாகக் கேளுங்கள். "தாதை

அரிய'' இடையின 'ர' கரம். இந்த உயிர் உள்ள ஆடு, மாடு, கோழிகளைக் கத்தி எடுத்து வெட்டுவதற்கு அறுக்க என்று போடுவோம். இந்தச் சொல்லை இப்படித் தான் சொல்ல வேண்டும் என்பது மரபு. அவன் கழுத்தை அறுத்தான். லக்ஷ்மண சுவாமி சூர்ப்பனகை யின் மூக்கை அறுத்தார். அப்படித்தான் சொல்ல வேண்டும். தாய்மார்கள் அடுப்படியில் காய் கறிகளை நறுக்குகிறபோது பாவக்காய் அரிந்தாயிற்ரு? பூசணிப் பழம் அரிந்தாயிற்ரு? அந்த உயிரில்லாத காய் கறி களைக் கத்தி எடுத்து நறுக்குவதற்கு அரிவது என்று பெயர். உயிருள்ள ஆடு கோழிகளைக் கத்தி எடுத்து வெட்டுவதற்கு அறுக்கிறது என்று பெயர். இந்த இரண்டு வித்தியாசமும் உங்களுக்குத் தெரியும். காய் கறிகளை அரிவது. உயிருள்ள பொருள்களை அறுப் பது. ஆட்டை அறுக்கிருன். பாவக்காயை அறுப் பாளு? கிடையாது. அரிகிருன் சிராள தேவர் உயி ருள்ள பொருளாய் இருக்க எப்படிச் சொல்ல வேண்டும்?

"தாதை அறுக்க'' அப்படிச் சொல்ல வேண்டும். "தாதை அரிய'' இந்தச் சொல்லிலிருந்து என்ன விளங்கு கிறது? சிறுத் தொண்ட நாயஞர் வடிவாள் எடுத்து 5 வயதுக் குழந்தையை வெட்டுகிறபோது, 'அப்பா எனக்கு வலிக்கிறதே' என்று சொன்ஞல் அது கொலை. அது ஜீவ ஹிம்சை. இவர் கத்தி எடுத்து வெட்டுகிற போது அவர் சரீரத்தை மறந்து (மும்முடிவரத்திலே ஒரு சாமியார் உட்கார்ந்து கொண்டிருக்கிருரே, பல ஆண்டுகளாகச் சரீரத்தை மறந்து. நான் பூண்டி சுவாமிகளைப் பலமுறை தரிசித்தவன். அப்படி உட் கார்ந்து கொண்டிருப்பார். ஒரு 6, 7 பூனைகள் மேலே ஏறிக் குதிக்கும். அவர் உடம்பை மறந்து உட்கார்ந்து கொண்டிருப்பார். கண்ணுலே கண்டது. பிள்ளையார் எறும்பு ஓடிஞலே நமக்குக் கூசுகிறது,

உடம்பு. 5, 6 பூஊ ஏறிக் குதிக்கும். அவர் அப்படியே உட்கார்ந்து கொண்டிருப்பார்.) அப்படி உடம்பை மறந்த அந்தப் பூண்டி அடிகளும், மும்முடிவரத்துச் சுவாமிகளும் இருப்பது போலே சீராள தேவர் சிவ யோக நிலையினுலே தம்மை மறந்து இருப்பாராம். கத்தி எடுத்து வெட்டுகிறபோது அந்த வெட்டுகிற துன்பம் அவருக்குத் தெரியாதாம். கொக்கின் இன் ஜெக்ஷனைக் கொடுத்துவிட்டு நடுவிலே வெட்டினுல் அந்த வெட்டிய துன்பம் தெரியாது. நான் சொல் கிற உவமை உங்களுக்குப் புரிகிறதா? உடம்பில் இங்கு ஒரு ஊசி போட்டு, இங்கே ஒரு ஊசி போட்டால் அந்த உடம்பு கட்டை மாதிரி மரத்துப் போகிறது. கத்தி எடுத்து வெட்டினுல் தெரியாது. அது போல சிவ யோகத்திலே தம்மை மறந்து இருக்கிருர் சீராள தேவர். அப்பா கத்தி எடுத்து வெட்டுகிறபோது அவ ருக்குக் குளோரோபாரம் கொடுத்து வெட்டுகிற மாதிரி. இந்தத் தத்துவத்தை அருணகிரியார் சொன்ஞர்:

"அனித்த மான வூன்நாளும் மிருப்பதாக வேநாசி
யடைத்து வாயு வோடாத வகைசாதித்
தவத்தி லேகுவால் மூலி புசித்து வாடு மாயாச
அசட்டு யோகி யாகாமல் மலமாயை
செனித்த காரி யோபாதி யொழித்து ஞான ஆசார
சிரத்தை யாகி யான் வேறெ னுடல்வேறு
செகத்தி யாவும் வேருக நிகழ்ச்சி யாம நோதீத
சிவச் சொருப மாயோகி யென ஆள்வாய்."

அந்தச் சிவயோக நிலையிலே நின்றவர் சீராள தேவர். அப்பா கத்தி எடுத்து வெட்டுகிறபோது பாவக் காய், கத்தரிக்காய், வெண்டைக்காய் அரிவதுபோல சரீரத்தை மறந்து இருந்தாராம். அப்பா கத்தி எடுத்து வெட்டுகிறபோது அவருக்கு உணர்ச்சி இல்லை. இந்த மகத்தான தத்துவத்தைத் தெய்வச் சேக்கிழார் "தாதை

அரிய''—அந்த இடையின 'ர' கரம் அமைத்தார். நானாக இருந்தால் ''தாதை அறுக்க'' என்று பாடுவேன். இலக்கணத்தாலே பாடுகிறவன். அவர் திருவருளாலே பாடுகிறார். ''தாதை அரிய''. இதைத் தான் பட்டினத்துச் சுவாமி; 'வாளால் மகவு அரிந்து'-அங்கேயும் பாருங்கள். அறுத்து என்று இல்லை. அரிந்து என்று இருக்கிறது.

**''வாளால் மகவு அரிந்து ஊட்ட வல்லேன் அல்லன் மாது சொன்ன**
**சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன் தொண்டு செய்து**
**நாளாறில் கண்ணிடந்து அப்ப வல்லேன் அல்லன், நான் இனிச்சென்று**
**ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பனுக்கே.''**

உயர்ந்த தமிழ். ஒரு சின்ன உ தா ர ண ம் சொல்லுகிறேன்.

இளமையிலேயே திருமணம் ஆகிவிட்டது, சதாசிவம் என்ற ஒரு பிராம்மணச் சிறுவருக்கு. மனைவி தாயார் வீட்டிலே வளர்கின்றாள். இவர் தர்க்கம், வியாகரணம் எல்லாம் படித்து கல்வியிலே கரை கண்டு விளங்குகிறார். 26 வயது. அந்த அம்மாளுக்கு வயது 17. மங்கைப் பருவம் அடைந்தார். அந்தத் தகவலை எடுத்துக்கொண்டு சம்பந்திப் பேர்கள் வந்தார்கள். உங்கள் நாட்டுப் பெண் மங்கைப் பருவம் அடைந்து விட்டாள் என்றனர். வந்தவர்களுக்கும், ஊரிலிருப்பவர்களுக்கும் விருந்து. இவர் 2 மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டு வந்தார். சதாசிவம் கட்டையாகக் கருப்பாக இருப்பார். கடும் பசி. இவரை யாரும் கவனிக்கவில்லை. அடுப்படிக்குப் போனார். ''அம்மா! பசிக்குதே. காலையில் பழையது சாப்பிட்டவனாயிற்றே. எனக்கு இலை போட வேண்டாமா?'' என்றார்.

"சதாசிவம்! உன் மாமனார் வந்திருக்கிறார். மாமியார் வந்திருக்கிறார். மச்சினி வந்திருக்கிறாள். உன் மனைவி மங்கைப் பருவம் அடைந்திருக்கிறாள். நீ கேட்டவுடன் குதிக்க வேண்டாமா? சந்தோஷத்தாலே மீதூர்ந்து இருக்க வேண்டாமா? மனைவி மங்கைப் பருவம் அடைந் தால் நீ ஆட வேண்டாமா? பாட வேண்டாமா? பசிக்குமாடா? புத்தி கெட்டவனே. உனக்கு ஏதாவது விஷயம் தெரிந்ததாடா?" என்றாள் தாய்.

"அவள் மங்கைப் பருவம் அடைந்தாள் என்கிற தகவல் வந்தவுடனேயே எனக்கு இரண்டு மணிக்குச் சாப்பாடு கிடைக்கவில்லையென்றால் அவளே வந்தால் நான் உருப்படுவேனா? இந்த வில்லங்கமே வேண்டாம்" என்று அவிழ்த்துப் போட்டுவிட்டுப் போய்விட்டார். எப்படித் துறவு? மனைவி நாற்காலியால் அடித்தால் சிரிக்கிற ஆண் பிள்ளைகளும் உண்டு. ஏண்டா நாற்காலியால் அடித்தால் சிரிக்கிறாயே என்றால் மேஜையைத் தூக்காமல் நாற்காலியால் அடித்தாளே, அந்த மட்டும் க்ஷேமமடா என்று சொல்வான். இது நம் பெருமை. சதாசிவம் அப்படியே துறந்து போய் விட்டார். அப்போது காமகோடி பீடத்திலே இருக்கிற ஞானாசிரியன் இடம்போய் அந்த ஞானத்துக்காக அழுது விட்டாராம். கல்வி கரை கண்டவர் தர்க்கம், வியாகரணம் எல்லாம் படித்தவர். அனுபவ ஞானத் துக்காக அங்கு போய்த் தொண்டு செய்தார். இருக்கிற வர்கள் எல்லாம், 'இவன் என்னவோ கேள்வி போட்டு எங்களை உருட்டுகிறான். எங்களுக்கு வேதனையாய் இருக்கிறது' என்றார்கள். அப்போதிருந்த மகா சந்நிதானம் "சதாசிவா! வாயை மூடு" என்றார். அன் றைக்கு வாயை மூடினவர்தான். மறைகிற வரைக்கும் வாயே திறக்கவில்லை. ஆசார்யன் வாயை மூடு என்றார். அதற்குப் பிறகு பேசவே இல்லை. அவர் தலையிலேயே

அடித்துக் கொண்டார். உன் அருமை, பெருமை தெரியாமல் சொல்லிவிட்டேனே. குழந்தை நீ பேச மாட்டாயே என்று அழுதார்.

அன்று முதல் அவர் மௌன விரதம் இருந்தார். சரீரத்தையே மறந்து விட்டார். திகம்பரராய் உலாவினர். உடம்பிலேயே ஞாபகம் இல்லை. ஒரு முஸ்லிம் அரண்மனை வழியாகப் போகிறர். அந்த ராஜா நல்லவன். ஆனல் பெண்கள் கோஷாவாயிருக்கிற இடத்திலே நிர்வாணமாகப் போகிறனே. வெட்டுங்கள் என்றர். ஞானி என்று தெரியவில்லை. பின்பக்கமாகப் போன வீரர்கள் வாளை எடுத்து வீசினர்கள். அது கழுத்தில் விழாமல் கையில் பட்டு கை அறுந்து விழுந்து விட்டது. முகம் சுளிக்காமல் கொஞ்சம்கூட ஆடாமல் அசையாமல் போகிறர் சதாசிவப் பிரம்மேந்திராள்.

மந்திர ஜபம் பண்ணிக் கொண்டிருக்கிறவர்கள் குளக்கரையிலே, அப்படித் தன்னை மறந்து ஜபம் பண்ணுகிற போது ஒரு கொசு கடித்தால் அப்படி ஒரு தட்டு தட்டுவார்கள். உடனே கொசுவுக்கு மோக்ஷம் கொடுத்து விடுவார்கள்.

கை அறுந்து கீழே விழுந்து ரத்தம் கொப்பளித்து ஓடுகிறது. முகம் சுளிக்கவில்லை. முஸ்லிம் ராஜா தெரிந்து கொண்டான். 'அவர் யாரோ ஒரு ஞானி. நான் தவறு செய்து விட்டேன்.' என்று அவர் காலிலே விழுந்து என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும், என்றர். வாய் திறந்து பேசாதவர். கையைக் காண்பித்தார். என்ன? என்றர். கையை வெட்டி விட்டார்கள் என்றர். யார் கையை? என்று திரும்ப ஜாடை காட்டினர். உங்கள் கையை என்றர். அப்பொழுதுதான் பார்க்கிறர். எப்போது வெட்டினர்கள்? என்று ஜாடையாகக் காண்பித்தார். இப்

பொழுதுதான் என்றுர். அவர் தொட்டார். கை வளர்ந்தது.

அந்தச் சதாசிவப் பிரம்மேந்திராள் கை அற்ற பொழுதும் தன் நிலை கெடாமல் இருந்தது போலே சீராள தேவர் இருக்கிருர் அப்பா கத்தியை எடுத்து வெட்டுகிறபோது. இத்தனைப் பெரிய தத்துவத்தைத் தெய்வச் சேக்கிழார் "தாதை அரிய"—இந்த ஒரே ஒரு வார்த்தையினுலே விளங்க வைக்கிருர். இதுவரை யாரும் சொல்லாத, எழுதாத உரையை அடியேன் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எப்படி இருக்கிருராம் சீராள தேவர்? "தாதை அரிய"—அப்பா கத்தியை எடுத்து வெட்டுகிற போது அந்தச் சதாசிவப் பிரம்மேந்திராளைப் போல இருக்கிருராம் சீராள தேவர்; பாவக்காய், வெண்டக்காய், கத்தரிக்காய் போல இருக்கிருராம், சீராள தேவர்.

" தாதை அரியத் தாய் பிடிக்கும் பொழுதில்
தம்மில் மனம் உவந்து"

"தம்மில் மனம் உவந்து" என்ருல் என்ன? அந்தக் குழந்தையும் ஒப்புக் கொள்ள வேண்டும். எவனய்யா ஒப்புக் கொள்ளுவான்?

தன்னை வெட்டிக் கறி சமைக்க வேண்டும் என்ருல் யார் ஒப்புக் கொள்வார்கள்? 85 வயதுக் கிழவனை, 'தாதா! நீ எப்போது செத்துப் போவாய்?' என்ருல், 'ஏய்! போடா, நான் இருந்தால் உனக்கு என்ன கேடு' என்பார். கிழவர்களுக்கே இன்னும் நீண்ட நாள் இருக்க வேண்டும் என்று ஆசை. 5 வயதுக் குழந்தை. அப்பா கத்தியை எடுத்து வெட்டுகிருர். அவர் சிரிக்கிருராம். ஏன் சிரிக்கிறது? என்ன காரணம்? உடம்பிலிருந்து உயிர் போய்விட்டால் நாயும், நரியும், கழுகும் அல்லவா இந்த உடம்பைத் தின்னும். இந்த உடம்பை மார்க்

கெட்டில் வைத்து விற்பது கிடையாது. மனிதன் மாமிசத்தை எவனாவது தின்பானா? நாயும், நரியும், காகமும், கழுகும் தின்னும். இப்பேர்ப்பட்ட இந்த அசுத்தமானது ஒரு சிவயோகிக்குப் பயன்படுகிறதே என்று மகிழ்ந்தார். அநியாயமாகப் போகிற உடம்பு ஒரு அடியாருக்குப் பசியாற உதவுகிறதே என்று எண்ணினார். அதனால்,

**"தம்மில் மனம் உவந்தே**
**ஏதமின்றி அமைத்த கறி யாம் இட்டு உண்பது"**

என மொழிந்தார்.

சுவாமி! உத்தரவு பண்ணுங்கள் என்றார் சிறுத்தொண்டர்.

சிவபெருமான் சொன்னார். 'தாதை அரிய'—எந்தக் கத்தி அன்று அவர் சேனாதிபதியாக இருந்த போது லட்சோப லட்சம் பேரைக் கொன்றதோ, அந்தக் கத்தி தான் இன்றைக்கு மகனையும் கொல்லுகிறது. லட்சோப லட்சம் பேரைக் கொன்றார் பரஞ்ஜோதி என்ற அந்த சேனைத்தலைவர். வாதாபி என்ற நகரத்தைத் துகளாக்கி அங்கிருக்கிற கஜானாக்களில் இருக்கிற பணத்தை அள்ளிப் பையிலே வைத்து அந்த இரண்டாம் புலிகேசி என்ற மன்னன் கையிலே விலங்கு பூட்டி ஜயசங்கம் முழக்கிக் கொண்டு வந்தார். அப்போது இங்கே ஆட்சி புரிகின்ற நரசிம்ம பல்லவன் சேனைத் தலைவராய் இருக்கிற பரஞ்ஜோதி என்ற அந்த அந்தணரைப் பார்த்து, "சேனைத் தலைவரே! என்னை இரண்டு முறை வென்றான்; இந்த இரண்டாம் புலிகேசி. எங்களை வென்ற இவனை, நீங்களோ ஐயர். மரக்கறி புசிப்பவர்; அரைக்கீரை சாப்பிடும் ஐயர் எப்படி வென்றீர்?" என்று கேட்டான் மன்னன். அதற்கு அவர் "என் வாள் வென்றது" என்று சொல்லியிருந்தால் அவர் நாயன்மாரில் ஒருவராகச் சேர்ந்திருக்க மாட்டார். அவர்

சொன்னார்: ''நானா வென்றேன்? என்னுடைய வாள் வெல்லவில்லை. என்னுடைய இரண்டு தோள் வெல்ல வில்லை. எல்லாம் சிவன் செயலே. அவன் அல்லாமல் வேறொருவர் வல்லாண்மை வெல்லாது. எல்லாம் சிவன் செயலே''என்றார். இந்த ஒரே ஒரு சொல்தான் மன்னவன் அவருடைய திருவடிகளிலே வீழுவதற்குக் காரண மாயிற்று. என் வாள் வென்றது என்று சொல்லியிருந் தால் அவன் வணங்கியிருக்க மாட்டான்.

''எல்லாம் சிவன் செயலே.........''

என்று சொன்னார். அப்படியே அடியற்ற மரம் போலக் காலில் விழுந்தான். கொண்டு வந்த செல்வத்தோடு தானும் செல்வம் கொடுத்து வணங்கினான். அப்போது லட்சோப லட்சம் பேரை வென்றது சிவன் செயல் என்று சொன்னார். அதே வாளால் மகனை வெட்டுகிற போதும் சிவன் செயல் என்று சொல்லுகின்றார். அன்று எப்படித் தன் செயல் இல்லையோ, இதுவும் தன் செயல் இல்லை. அதைத்தான் பட்டினத்தார்

''என்செயல் ஆவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே
உன்செயலே யென்று உணரப் பெற்றேன்''

இந்த இடத்தை அருணகிரியார் சொல்லுகிற போது,

''சிந்தையும் அவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செயல் அழிந்தழிந் தழிய மெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப் படுவேனோ''

என்பார் திருச்செந்தூர்த் திருப்புகழில். மனிதனுடைய மாட்டாமை. அடுத்த விநாடியில் என்ன வருகிறது என்று நமக்குத் தெரியாது. யாருக்குத் தெரிகிறது? அருணகிரிநாதர் மாதிரி யார் உயர்ந்த கருத்தைச் சொல்வார்கள்?

ஆகவே அந்த வாளினுலே மகனை வெட்டுகிற போது தன் செயல் என்று இல்லை. நான் சாஸ்திரத்திலே பழகுகிறவன். நாம் வந்து ஒரு கருவி. ஆண்டவன் தான் கர்த்தா. ஒருவன் ஆட்டை வெட்டுகிருன். பாவம் கத்தியைச் சேருமா? வெட்டுகிறவனைச் சேருமா? கத்தியைச் சேராது. ஒரு அம்மாள் கரண்டியினுலே பாயசம் போடுகிருள். பாயசம் சுவையாய் இருந்தால் புகழ் கரண்டிக்கா? போடுகிற அம்மாளுக்கு. கரண்டி கருவிதானே? செய்தது அந்த அம்மாள் அல்லவா? கவனமாகக் கேளுங்கள். என் செயல் இல்லை என்று சொல்லி விட்டால் சிறுத்தொண்டர் கருவியாகி விடுகின்ருர். அந்தக் கருவியைக் கொண்டு இயக்குகிறவன் சிவனுக மாறி விடுகிருர். அப்பொழுது எல்லாம் சிவனைச் சேருமே தவிர, கருவியாக இருக்கிற சிறுத்தொண்டரைச் சேராது. சிந்தித்தால் தான் விளங்கும். நாமெல்லாம் கருவி. நான் இப்போது பேசுகிற பேச்சில் உயர்வு இருக்குமானுல் அது அருணகிரியாருடைய கருணை. அவர் என்னைப் பேச வைக்கிருர். அப்போது அத்தனையும் அவரைச் சேருமே தவிர, என்னைச் சேராது. அதுதான்,

> "யாமோதிய கல்வியும் எம் அறிவும்
> தாமே பெற வேலவர் தந்ததனுல்
> பூமேன் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
> நாமேல் நடவீர் நடவீ ரினியே"

உயர்ந்த வாக்கு. ஆகவே தம் செயல் அற்ற இடத்திலே எல்லாம் ஈசன் செயல் என்று எண்ணினுர். ஐயோ நான் மகனை வெட்டுகிறேனே என்று எண்ணவில்லை. ஆகவே,

> "தாதை அரியத் தாய்பிடிக்கும் பொழுதில்
> தம்மில் மனம் உவந்தே
> ஏதமின்றி அமைத்த கறி யாம் இட்டு உண்பது
> என மொழிந்தார்"

அருளே வடிவாகிய சிவபெருமான் இப்படிச் சொன்ஞர். இப்பொழுது இவர் கொள்கை முக்கியமா? மகன் முக்கியமா? கொள்கைதான் முக்கியம். கொள்கைக்காக எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும்.

சிறுத்தொண்ட நாயஞர் மடத்துக்கு வந்தார். அந்த அம்மாள் வழியிலேயே நிற்கிருள். அடியார் வரவில்லையா? என்ருர். போய் அழைத்தேன். அவர் வடநாட்டுச் சந்நியாசி. அவர் சொன்னதை நான் எப்படிச் சொல்வேன் என்ருர். என்ன? என்ருர். ஒன்று மில்லை. அவர் நரமாமிசம் சாப்பிடுவாராம். ஒரு கிழவன் கிழவியை வெட்டிஞல் கூட சாப்பிட மாட்டாராம். ஒரு குடும்பத்துக்கு ஒரே பிள்ளையாக இருக்க வேண்டுமாம். அது ஊமை, திக்கு வாயாக இருந்தால் கூட வேண்டாமாம். சகல கலைகளையும் கற்று இருக்க வேண்டுமாம். அழகாய் இருக்க வேண்டுமாம். அறிவாய் இருக்க வேண்டுமாம். அன்பாய் இருக்க வேண்டுமாம். அப்படியிருக்கிற பிள்ளையைத் தாயார் மடியிலே வைக்க வேண்டுமாம். தகப்பஞர் கழுத்தை அரிய வேண்டுமாம். அப்பா, அம்மா, குழந்தை மூவரும் ஒப்புக் கொள்ள வேண்டுமாம்.

அப்படியிருக்கிற குழந்தையைச் சமைத்தால் சாப்பிடுவார். அப்பொழுது என்ன யோசிக்கிருர்? இத்தனையும் சீராள தேவனுக்கு அமைந்திருக்கிறது. 300 நாள் சுமந்து பெற்ற குழந்தை. இன்னெரு குழந்தை கிடைக்கும் என்று நினைக்க முடியாது. இதற்கு ஒப்புக் கொள்ளவில்லையென்ருல் கணவஞர் மாண்டு விடுவார். கொள்கைக்குத் தடைவந்த போது கணவஞர் உயிரை விட்டு விடுவார். கணவஞர் முக்கியமா? குழந்தை முக்கியமா? என்று பெண்ணரசி யோசிக்கிருள். பெரிய தியாக புத்தி. மிகப் பெரிய தியாகி. கணவனைவிடுவதா? குழந்தையை விடுவதா? என்று யோசித்தார். ஒரு

பெண்ணுக்குக் கணவன்தான் முக்கியம். குழந்தை போனல் இன்னெரு குழந்தையைக் கடவுள் தருவார். கணவன் போனல் இன்னெரு ஜன்மத்திலேயும் பெற முடியாது. ஆகவே சீராள தேவரைக் கறி சமைக்க நான் இசையவில்லை யென்ருல் கணவனர் இறந்து விடுவார். பெண்களுக்கு நான்கு நிலை. மகள், சகோதரி, மனைவி, தாய். அப்பா இறந்து விட்டால் 40 கோடி மக்களையும் அப்பா என்று அழைக்கலாம். சகோதரன் இறந்துவிட்டால் 40 கோடி மக்களை, யும் சகோதரனே என்று அழைக்கலாம். மகன் இறந்தால் 40 கோடி மக்களையும் மகனே என்று அழைக்கலாம். கணவன் இறந்து விட்டால்? வேறு இல்லை. ஆகவே கணவன்தான் ஒரு பெண்ணுக்கு முக்கியம். கணவனுக்காக எல்லாம் தியாகம் பண்ண லாம் என்று அந்த அம்மையார் எண்ணித் துணிந்து, "சுவாமி! சீராளனை நாம் சுவாமிக்காகத் தியாகம் செய்யலாம்" என்ருர். அவர் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிருர். அவர் யோகி. சிவபிரான் உத்தரா பதீச்சுரராக வந்தது எல்லாம் அவருக்குத் தெரி யும், யோகக் காட்சியிஞலே. மகனே வருக என்று அழைத்துக் கொண்டு வந்து பன்னீரும் வெந்நீரும் கலந்து ஸ்நானம் பண்ணி வைத்து, தலையை வாரி, பூ வைத்து, (முத்தம் கொடுக்கவில்லையாம். சுவாமிக்கு நைவேத்யம் பண்ணுகிறதாலே—எச்சிலாகி விடுமே என்று). அவரைத் தொட்டிலிலே போட்டுத் தாலாட்டினுர்கள். தூங்குவது போல நடித்தார். அந்த அம்மாள் அடுக்களையிலே வைத்து,

"கனிவாய் மைந்தன் கைஇரண்டும் கையால் பிடிக்கக்
காதலனும்
.......... .......... ..........
தனிமா மகனைத் தாதையார் கருவிகொண்டு தலைஅரிவார்"

இப்பொழுதும் சேக்கிழார் பெருமான் அந்த வார்த்தையை மறந்து போகாமல் அறுப்பான் என்று போடவில்லை. அந்தக் கத்தி எப்படி இவருக்குக்கருவியாய் இருக்கிறதோ அப்படிச் சிறுத் தொண்ட நாயனுர் சிவபெருமானுக்குக் கருவியாக இருக்கிருர். பிடில் ஒருவர் நன்ருக வாசித்தார் என்ருல் அந்தப் பிடிலுக்கா பெருமை? வாசிக்கிறவருக்குப் பெருமை. பாட்டு எல்லாம் ஒரே பாட்டுத்தான். ஆனுல் அந்தப் பாடினவரைக் கொண்டுதானே அந்தப் பாடலுக்குப் பெருமை வருகிறது. அதுபோல சிறுத்தொண்ட நாயனுரே சிவபெருமானுக்குக் கருவியாக இருக்கிருர். அதெல்லாம் சிவனுக்கு ஆகிறது. அந்தச் சிவமாய் இருந்து செய்கிருர். தன் செயல் அற்ற இடத்திலே அச்செயல் நிகழ்கிறது. இத்தனைத் தத்துவங்களையும்,

"... தாதை அரிய தனிமாமகனை
... கருவி கொண்டு தனை அரிவார்"

அப்படி அரிந்தார். அவருக்குக் கடுகளவு வருத்தம் ஏற்படவில்லை. அவர் அந்தணர். தலைக் கறி உண்பார்கள் என்று தெரியாது; பாவம்! அந்த வேலைக்காரியைக் கூப்பிட்டு தலைக் கறியைக் கொடுத்து கொண்டுபோய் தோட்டத்திலே புதைத்து விடு என்ருர். அந்த அம்மாள் கொஞ்சம் விவரம் அறிந்தவர். வந்தவர் ஒரு வேளை தலைக் கறியைக் கேட்டு விட்டால் என்ன பண்ணுவது? எஜமான் புதைக்கச் சொன்னுரே. எஜமானனைக் கேட்காமலேயே தலைக் கறியைத் தோட்டத்திலே சமைத்து வைத்தாள். இவர் கோயிலிலே போய் அவரை அழைத்து வந்தார். கால் அலம்ப நீர் கொடுத்து, கையலம்ப நீர் கொடுத்து,கூடத்திலே அமரவைத்து, வாழையிலை போட்டு, தீர்த்தம் தெளித்து, உப்பு வைத்து, ஊறுகாய் வைத்து, இந்தச் சீராளனுடைய கறியமுதை எல்லாம் படைத்து இது ஈரல், இது தொடைக்கறி என்று

சொல்ல, அவர் நாக்குக் கறி எனக்கு மிகவும் பிரிய மாச்சே. எங்கே? என்றார். சுவாமீ! நாக்கைக் கூடச் சாப்பிடுவதா? என்றார். "அது மிகவும் மெத்தென்று இருக்குமே. உனக்கு என்று எடுத்து வைத்துக் கொண்டாயா?" என்றார். "சுவாமீ! நாங்கள் எல்லாம் கத்தரிக்காய், வெண்டைக்காய் சாப்பிடுகிறவர்கள். நாங்கள் பரம்பரையாய்ச் சைவர்கள்!' என்றார். "எனக் குத் தலைக்கறிதானே மிகவும் பிரியம்." என்றார். அந்த வேலைக்காரி அம்மாள் தனியாகச் சமைத்து வைத்தி ருக்கிறேன் என்று தோட்டத்திலிருந்து கொண்டு வந் தாள். எல்லாம் வைத்த உடனே சுவாமி சொன்னார்: "நான் தன்னந் தனியாகச் சாப்பிட மாட்டேன். பக்கத் திலே உட்கார்ந்து சாப்பிட ஆள் வேண்டும்" என்றார்.

"உங்களைக் கொண்டு வரத்தான் இந்தப் பாடுபட் டோம். இன்னொரு ஆளுக்கு நாங்கள் எங்கேபோவோம்?" என்றார். "நீங்களும் சிவனடியார் தானே? நீங்களும் பக் கத்தில் உட்கார்ந்து சாப்பிடுங்களேன்" என்றார். பாருங் கள் தன் பிள்ளைக் கறியைத் தான் சாப்பிட வேண்டும். அந்தத் தன்னலம் இல்லாமையினாலே இறைவன் சொல்லுகிறான் என்று பக்கத்திலே உட்கார்ந்து விட் டார். பசி பசி என்று சொன்னார். அருந் தபசி, அருந்த பசி என்றார். கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறாரே. ஒருவேளை நாம் தொட்டால் சாப் பிடுவாரோ என்று இலையில் கையை வைத்தார். அவ் வளவுதான், நெருப்பை மிதித்த மாதிரி, அவர் சொன்னார்: ஆறு திங்கள் கழித்து உண்போம்—ஆறு மாதத்துக்கு ஒரு முறைதான் சாப்பிடுவேன்,

"ஆறு திங்கள் ஒழிந்து உண்போம்
உண்ணுமளவும் தரியாது!
சோறு நாளும் உண்பீர் முன் உண்பது என்?"

என்றூர். சோறு என்றுல் சோறு என்று அர்த்தமில்லே. மோட்சம் என்று அர்த்தம்.

**"சோழ வள நாடு சோறுடைத்து"**

என்று ஒரு பாட்டு உங்களுக்குத் தெரியும்.

"சோழ வள நாடு சோறுடைத்து" என்றுல் மோட்சத்தை உடையது என்று அர்த்தம். ஏன் என்றுல் சோழ வள நாட்டிலேதான் திருவரங்கம், சிதம்பரம், திருவாரூர், சுவாமிமலே ஆகிய முக்கியமான ஸ்தலங்கள் எல்லாம் உள்ளன. சோழ வள நாடு சோறுடைத்து.

'சோறுடைத்து' என்றுல் சோறு உடைத்து என்ரு அர்த்தம்? ஏன்? காவேரி மாதிரி கிருஷ்ணு நதி ஓடவில்லேயா? கோதாவரி ஓடவில்லேயா? எத்தனே எத்தனேப் பிரும்மாண்டமான நதிகள் வடக்கே ஓடுகின்றன. என்ன காவேரி அத்தனேப் பிரமாதம்? அங்கே சோறு என்றுல் மோட்சம் என்று அர்த்தம். இப்பவே உங்களுக்குத் தெரியும்படியாகச் சொல்லுகிறேன். திருவாசகம் படித்தவர்களுக்குத் தெரியும். தகப்பனுருடைய காலே வெட்டினூர் சண்டேசுவர நாயனூர். அவர் ஜாதியிலே வேதியர். பெற்ற தந்தை. தந்தையை வெட்டினது பாவம். அங்கே மாணிக்க வாசகர் பாடினூர்,

**"பாதகமே சோறு பற்றினவா தோணேக்கம்"**

திருவாசகம் சொல்கிறேன். "பாதகமே சோறு"—சோறு என்றுல் சோறு இல்லே. இந்தப் பாதகமே, சோறு-மோட்சத்தைக் கொடுத்ததாம் சண்டேசுவர நாயனுருக்கு. திருவாசகத்தை நாளேக்கு எடுத்துப் படியுங்கள். 'சோறு நாளும் உண்பீர்'—நீர் தினம் மோட்சத்தை 'அடையப் போகின்றீர் என்று சொல்லுகிருர் சிவபெருமான்.

பிள்ளைப் பாசத்தை விட்டவர் அதனாலே 'சோறு நாளும் உண்பீர்.' நான் சாப்பிடுவதற்கு முன்பு நீர் கை வைத்தீரே. 'மாறில் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னை அழையும்'-பிள்ளையைக் கூப்பிடு என்றார். அவர் என்ன சொன்னார்? "ஈறும் முதலும் இல்லாதார்க்கு இப்போது உதவான்'' என்றார். 'நீ உதவாக்கரைப் பிள்ளையா பெற்றிருக்கிறாய்? அவன் என்றைக்கும் உதவுவான், அழை' என்றார். இவர் கருவிதானே. என்னையா குழந்தை தான் வெட்டி ஆச்சே, ஏன் ஐயா என் உயிரை வாங்குகிறீர்கள் என்று தானே சொல்ல வேண்டும்? இவர்தான் தன் நிலை அற்று இருக்கிறாரே. அவர் சொன்னால் நான் கருவி; இந்த மூக்குக் கண்ணாடி இங்கே வைத்தால் அப்படியே இருக்கும். அங்கே வைத்தால் அப்படியே இருக்கும். ஏன் இங்கே தூக்கி வைக்கிறாய் என்று சொல்லுமா? இந்தக் கருவிகள் மாதிரி, தாய்க் குலம் கணவனாரிடம் அடங்கியிருக்குமாப் போலே சிறுத்தொண்ட நாயனார்; தன்னைக் கருவியாக வைத்துக் கொண்டிருக்கிறார். ஆகவே 'இப்போது உதவுவான். நீ அழை. வருவான்' என்றார். பிள்ளைக் கறியை இலையில் வைத்து விட்டு, எப்படி அழைக்க முடியும்? சுவாமி சொல்கிறார். நாம் செய்ய வேண்டும். எனக்கு என்று ஒரு செயல் இல்லை என்று, கணவனும் மனைவியும் தலைவாசலிலே வந்து, "சீராளா! மகனே!'' என்று அழைத்தார்கள். வழக்கம் போல ஓடிவந்தான். கண்ணை நம்ப முடியவில்லை. குழந்தை நிஜார் போட்டுக் கொண்டு வருகிறது. தலைமுடி பின்னியதோடு குழந்தையை எடுத்து உச்சி மோந்து முத்தம் கொடுத்து உள்ளே வந்தால், சிவனடியாரைக் காணவில்லை.

"செழுங் கஞ்சுகத்துப் பயிரவர்''

அவர் சிவப்புச் சட்டை போட்டுக் கொண்டு இருக்கிறாராம். காவித்துணிச் சட்டை. எங்கே போனார்?

இலையில் இருக்கிற கறி இல்லை. இலையில் இருந்த அந்தச் சிவபெருமான் இல்லை. அந்தோ! கொஞ்ச நேரத்துக்கு முன் இருந்தாரே. அவர் போக வழியில்லை. போகிற வழியிலேதான் நாங்கள் நிற்கிறோம். எப்படிப் போக முடியும் என்று திடுக்கிட்டு அப்படி மேலே பார்க்கிறார். தேவ துந்துபி வாத்தியங்கள் முழங்கு கின்றன.

செய்ய மேனிக் கருங்குஞ்சிச்
செழுங்கஞ் சுகத்துப் பயிரவர் யாம்
உய்ய அமுது செய்யாதே
ஒளித்த தெங்கே எனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய
மறைந்த அவர்தாம் மலைபயந்த
தைய லோடும் சரவணத்துத்
தனய ரோடும் தாம் அணைவார்.

எல்லா நாயன்மார்களுக்கும் பார்வதியும் பரமேஸ்வ ரனும் மட்டும் வந்து காட்சி கொடுத்தாராம். இங்கே மட்டும் சோமாஸ்கந்தராக வந்தாராம். சுப்பிரமணியரை யும் அழைத்துக்கொண்டு வந்தாராம். ஏன்? சீராளதேவ ருக்காக முருகப் பெருமானை அழைத்துக் கொண்டு வந்தார்.

''மையல் கொண்டு புறத்து அணைய
மறைந்த அவர்தாம் மலை பயந்த
தையலோடும்''

மலை பயந்த தையலோடும்—தாய்மார்களுக்குத் தையல் என்று பெயர். என்ன காரணம்? கணவனோடு ஒட்டியிருப்பவர்கள்—தைத்திருப்பதுபோல.

''தைய லோடும் சரவணத்துத்
தனய ரோடும் தாம் அணைவார்''

சோமாஸ்கந்தராகக் காட்சி கொடுத்தார். அன்றைக்குச் சித்திரை மாதம். பரணி நட்சத்திரம். சிறுத் தொண்டர், திருவெண்காட்டு நங்கை, அந்த தலைக்கறி சமைத்த சந்தன நங்கை, சீராளன். அந்த நாலு பேரையும் கைலாசத்துக்கு—அழியாத உலகத்துக்குக் கொண்டு போய் விட்டார். அவருடைய வரலாற்றைக் கேட்ட அத்தனைப்பேரும் தன் செயல் அற்று இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை வெளிப்படுத்தினேன். இத்தனையும் தெய்வச் சேக்கிழார்,

"தாதையார் கருவி கொண்டு தலை அரிவார்"

என்ற அந்த இடையின ரகரத்தாலே மகத்தான தத்துவத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றார். இப்படி நினைக்க முடியாத தத்துவங்களை எல்லாம் தன்னகத்தே கொண்டது பெரிய புராணம். அது எண்ணில்லாத சிறப்புக்களை உடையது. அதை வரலாற்றுக் கண் கொண்டு பார்க்காமல் தத்துவக் கண் கொண்டு பார்த்து மகிழ வேண்டும். அப்படிக் குருகுலவாசம் செய்து அரிய பெரிய தத்துவங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது பெரிய புராணம். ஒன்று இரண்டு நான் சொன்னேன். 50, 100 நான் சொல்வேன். சொன்னால் தாய்மார்கள் சிரிப்பார்கள். நீங்கள் கோபப்படுவீர்கள். ஏன்? இரண்டு படி அரிசி போட்டு வேக வைக்கிற தாய்மார்கள், எவர்சில்வர் கரண்டி ஒன்றினால் ஒரே ஒரு சோற்றை எடுத்துத் தொட்டுப் பார்த்துவிட்டு, இரண்டு படி அரிசியும் வெந்து விட்டது என்று வடிக்கிறபோது, பெரிய புராணச் சிறப்புக்கு ஒரு பாடல் தொட்டுப் பார்த்தால் போதாதா? ஒரு ஐந்தாறு சொன்னால் நீங்கள் எல்லாம் எவ்வளவு கோபப் படுவீர்கள். நாங்கள் எல்லாம் பெண்களை விட மட்டமா? எங்களுக்கு ஒன்றைச் சொன்னால் போதாதா? நாங்கள் தெரிந்து கொள்ள மாட்டோமா? நாங்கள் படித்துக் கொள்ள

மாட்டோமா? என்று கோபப்படுவீர்கள். அதற்காகச் சொல்லுகிறேன். அப்படிக் குருகுலவாசம் செய்து படித்து அரிய பெரிய தத்துவங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது பெரிய புராணம். அதைப் பாடிக் கொடுத்தவர் தெய்வச் சேக்கிழார். இறைவனே 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுக்கப் பாடியது. பெரிய புராணத்திலே 'உலகெலாம்' என்ற வார்த்தை 15 இடங்களிலே வருகின்றது. அத்தகைய மகத்தான தத்துவத்தை உடையது. அதை எல்லாம் நீங்கள் படித்து உணர்ந்து இன்பத்தைப் பெற வேண்டும் என்று உங்களுக்கு நினைவு செய்துகொண்டு, இது காறும் மிகப் பொறுமையாக இருந்த உங்கள் பொன்னூர் திருவடிகளுக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டு இந்த அளவோடு இதைப் பூர்த்தி பண்ணுகிறேன்.

**பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல்**
**வழி அனைத்தும் பிழையே அன்றி**
**வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த**
**நெறிதேறி அதீத வாழ்வில்**
**போய் அண்மி அஞ்செழுத்தும் திருநீறும்**
**கண்டிகையும் பொருளாக் கொண்ட**
**நாயன்மார் திருக் கூட்டம் பணிந்திறைஞ்சும்**
**பெரும்பேறு நான் பெற்றேனல்.**

**—சிவஞான முனிவர்**

---

உ

முருகா

# 7. முத்தமிழ்

## [22—11—79]

ஞானமே வடிவாகிய வயலூர் எம்பெருமானுடைய திருவருளினுலே முத்தமிழ் என்பது பற்றிச் சில கருத்துக்களை உங்களுக்கு முன்னே படைக்கின்றேன்.

உள்ளத்திலே இருக்கிற கருத்தை வெளிப்படுத்துவதுதான் மொழி. ஆனுல் வாயிருக்கிறவர்கள் எல்லாம் பேச முடியவில்லை. ஆடு மாடுகளுக்கு எல்லாம் வாய் இருக்கிறது. அதை அடித்தால் என்ன சொல்கிருேம்? 'வாயில்லாத பிராணி' என்கிருேம். அப்பொழுது தின்கின்ற வாய் இருக்கிறது. பேசுகின்ற வாய் இல்லை. ஆகவே அந்தப் பேசுகின்ற வாய்க்குத் தான் பெருமை சாப்பிடுகிற வாய்க்குப் பெருமை இல்லை. அதனுலே தான் அருணகிரிநாதர், இந்தக் காலாலேயே நடக்கிறீர்களே, இந்த நாவினுலே கொஞ்சம் நடவுங்களேன். "நாமேல் நடவீர், நடவீர்" என்ருர். இத்தனை நாட்களாகக் காலால் நடந்தீர்கள். இன்றிலிருந்து நாவினுலே நடவுங்கள்.

> "யாமோதிய கல்வியும் எம் அறிவும்
> தாமே பெற.வேலவர் தந்தது"

அருணகிரிநாதர் தனக்கு அமைந்த கல்வியும் அறிவும் முருகன் தந்தது என்று சொல்கிருர். கற்புடைய பெண் என்ன சொல்லுவாள்? இந்தப் புடவை, நகை என்னுடைய கணவனுர் வாங்கித் தந்தவை என்று சொன்

ுல் தானே கற்புடையவள். நானே வாங்கிக் கொண்டேன் என்று சொன்னுல் சந்தேகப்பட வேண்டிய ஆள் அல்லவா? அப்படிக் கற்புடைய அருணகிரிநாதர் சொல்கிருர்,

> **''யாமோதிய கல்வியும் எம் அறிவும்**
> **தாமே பெற வேலவர் தந்ததனுல்**
> **பூமேல் மயல் போய் அறமெய்ப் புணர்வீர்**
> **நாமேல் நடவீர் நடவீர் இனியே'''**

அப்பொழுது நாவினுலே வசநிப்பது. எல்லாப் பிராணிகளும் உண்ணுகிற வாயை உடையன. மனிதன் பேசுகின்ற வாயை உடையவன். வாய் திறந்து பேசினுல் உள்ளே இருக்கின்ற கருத்துக்கள் வெளிப்படும். வாயை மூடியிருந்தால் என்ன தெரிகிறது? ஆகையினுலே நம்முடைய கருத்தை வெளியே சொன்னுல் நம்முடைய துன்பங்களும் குறையும். டம்ளரிலே இருக்கிற காப்பியை இன்னொரு டம்ளருக்கு மாற்றினுல் சூடு குறையும் அல்லவா? நம்முடைய கருத்தை ஆப்த நண்பனுக்குச் சொன்னுல் அதனுடைய சுமை குறையும்.

பாண்டவர்கள் அரக்கு மாளிகையிலிருந்து விடுபட்டு, (எவ்வளவு பெரிய பதவியில் இருந்தவர்கள்?) அனுதைகளைப் போல வந்து வேற்று இடத்திலே பிராம்மண வடிவத்திலே இருக்கிருர்கள். அள்ளி அள்ளிக் கொடுத்த குந்தி அம்மாள் இன்றைக்கு ஒன்றுமில்லாதவளாய் இருக்கிருள். காலம் பண்ணுகிற கோலம். பீமன் மலையைப் பிடுங்குவான். அர்ஜுனன் சமானம் இல்லாத வில்லாளி. இன்றைக்கு ஒன்றுமில்லாதவர்களாய் உட்கார்ந்திருக்கிருர்கள். பிராம்மண வடிவத்திலே இருக்கிருர்கள். வயிறு ஒன்று இருக்கிறதே. இந்த ஒரு சாண்தானே ஏழு சாணையும் அடக்கி ஆள்கிறது. வயிறு இல்லையென்ருல் ஒன்றுமே

கிடையாது. அதற்காகப் பீமனும், அர்ஜுனனும் போய் பிக்ஷை எடுப்பார்கள். அது 360 பிராம்மணர்கள் வீடுள்ள அக்ரஹாரம். ஒரு வீடு, இரு வீடுதான் தொழிலாளிகள் வீடு. நாவிதர் வீடு ஒன்று. குயவனுர் வீடு ஒன்று. சலவைத் தொழிலாளி வீடு ஒன்று. மிகுதி அத்தனைப்பேரும் அந்தணர்கள். நல்ல வசதி உள்ளவர்கள். போதுமென்ற மனம் உள்ளவர்கள். ஆடம்பர வாழ்வை விரும்பாமல் எல்லாம் தங்கள் தங்கள் அளவிலே சௌக்கியமாய் உள்ளவர்கள். ஒரு பிராம்மணருடைய வீட்டின் பின் கட்டிலே பாண்டவர்கள் குடியிருக்கிருர்கள், இலவசமாக. பீமனும், அர்ஜுனனும் போய் பிக்ஷை எடுத்துக் கொண்டு வருவார்கள். அம்மாவிடம் கொடுத்துவிட்டு, அம்மா சொன்னதைக் கேட்பார்கள். அந்த அம்மாவுக்குத் தெரியும் மகனுடைய வயிறு. அந்த அன்னத்தை இரண்டாகப் பங்கிட்டு, ஒரு பாதியைப் பீமனிடம் கொடுத்து விடுவாள். மற்றப் பாதியை ஐந்தாகப் பங்கிட்டு நாலு பிள்ளைகளுக்கு நாலு பங்கும், தனக்கு ஒரு பங்குமாகச் செய்வாள். பிக்ஷா அன்னம். இப்படியே ஒரு வாரம் ஆன உடன் தாயாரிடம் கண் பிசைந்து அழுதான் பீமன். குழந்தை அழலாம். இவன் பிள்ளையைப் பெற்றவன். இடும்பனைக் கொன்றவன். மலையைப் பிடுங்கினவன். இப்படி ஒரு குழந்தை அழுதது சீர்காழியிலே. வயது மூன்று.

**கண்மலர்கள் நீர்ததும்பக் கைமலர்களால் பிசைந்து**
**வண்ணமலர்ச் செங்கனிவாய் மணிஅதரம் புடைதுடிப்ப**
**எண்ணில்மறை ஒலிபெருக எவ்வுயிரும் குதுகலிப்பப்**
**புண்ணியக்கன்று அனையவர்தாம் பொருமி அழுது**
**அருளினுர்.**

இது போல ஒரு கவி இன்னும் பார்க்க முடியவில்லை, அடியேன் பார்த்த நூல்களிலே. ‘கற்றது

கைம்மண் அளவு கல்லாதது உலகளவு.'' என்ன படித் திருக்கிறோம்? அடியேன் படித்த அளவிலே இது போன்ற பாடல் வேறு எங்கேயுமே கிடையாது. அப் படிக் கனி அமுதமாகப் பாடுகிறார் தெய்வச் சேக்கிழார். குழந்தை அழுவது சின்ன விஷயம். குழந்தை அழுவ திலே என்ன இருக்கிறது? நம்ம வீட்டுப் பிள்ளைகள் அழுகிறது. ஒன்று அம்மா எடுப்பாள். இல்லை அப்பா எடுப்பார். இல்லை பாட்டி எடுப்பாள், வீட்டிலே இருந்தால். இப்பொழுதுதான் கிழவி வீட்டிலே இருக்கக் கூடாதே.“கொஞ்ச நாள் போய் உங்கள் மகள்வீட்டிலே இருந்து விட்டு வாங்க. இருந்து கொண்டு ஏன் கழுத்தை அறுக்கிறீர்கள்'' என்று மாமியாருக்கு மருமகள் போடும் உத்தரவு. நன்கு ஆறிப் போன காபியா கருப்பா கிழவியிடம் அரை டம்ளர் காபி வைப்பாள். பைய னுக்கு 7000 ரூபாய் சம்பளம். [ஒரு வாரத்துக்கு முன் னாலே நேராகக் கண்ணாலே பார்த்துக் கொண்டிருந் தேன். கிழவி யார் இடம் சொல்வாள்? நான் குறிப்பாகத் தெரிந்துகொண்டேன். அந்த வீட்டிலே மாமியாருக்குச் சுகமில்லை.] ஆகவே குழந்தை அழுதால் அந்தக் கிழவி தான் தூக்குவாள்.

அந்தக் குழந்தை சீர்காழியிலே குளக்கரையிலே அழுகிறது. “கண் மலர்கள் நீர் ததும்ப.'' மலரிலே தேன் ததும்புவது போல அந்தக் குழந்தைக் கண்ணிலே யிருந்து அந்தக் கண்ணீர் ததும்பி வருகிறதாம். “கை மலர்களால் பிசைந்து''—கண்ணும் மலர், கையும் மலர். ‘வண்ண மலர்ச் செங்கனிவாய் மணி அதரம் புடை துடிப்ப.' அந்தக் குழந்தை அழுவதனாலே “எண்ணரிய கலைகளும் மற்றெவ்வுயிரும் குதுகலிப்ப.'' அந்த ஒரு குழந்தை அழுகிறது. உலகமெல்லாம் குதூகலிக்கிறது. “புண்ணியக் கன்று அனையவர்தாம் பொருமி அழுது அருளினார்'' பாடத் தெரிந்தவர்கள் பாடினால் இன்னும்

அழகாய் இருக்கும். 'மெய்ம் மேல் கண் துளி பனிப்ப'— இங்கேயிருந்த கண்ணீர்—[இங்கே மெய் என்ருல் சரீரம்.] திருமேனியை நனைக்கின்றதாம்.

> மெய்ம்மேற்கண் துளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
> தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமை தானே
> செம்மேனி வெண்ணீற்ருர் திருத்தோணிச் சிகரம் பார்த்து
> ''அம்மே அப்பா'' என்றென் றழைத்தருளி அழுதருள.

முதலிலே அம்மையைச் சொல்லி பிறகு அப்பா வைச் சொல்கிருர். அம்மா தானே கண்கண்ட தெய்வம். "அம்மே அப்பா, அம்மே அப்பா, அம்மே அப்பா என்றழைத்தருளி அழுது அருள''. சிலபேர் சிரிப்பான். நம்ம குடும்பம் கெட்டுப் போகும். 'சும்மா நில்லுங்க. நான் பார்த்துக்கிறேன்!' என்பான். தொலைந்தது ஏழு லட்சம். சம்சாரம் சொல்லுவாள்: "நிற்கச் சொன்னுனே. அவனு பணத்தைச் செலவழித்தான்? ஒரு பள்ளிக் கூடமாவது கட்டக் கூடாதா? ஒரு ஆஸ்பத்திரியாவது கட்டக் கூடாதா? ஏழு லட்சத்தைத் தொலைத்து விட்டீர்களே. 7000 ஓட்டிலே போச்சென்று வீட்டோடு உட்கார்ந்திருக்கிறீரே? 8000, 10,000 செலவழிக்கக் கொடுத்தீர்களே? அவனவன் வீட்டை ரிப்பேர் பண்ணிக்கொண்டான்'' என மனைவி இடிப்பாள். இவன் என்ன பண்ணுவான்? தெருத் தெருவாக ஓடு ஓடு என்று ஓடினுன். இன்றைக்கு ஓடாமல் கையிலே ஓட்டை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிருன். அவன் சிரித்தான். தொலைந்தது ஏழு லட்சம்.

அந்தக் குழந்தை அழுகிறது. உலகம் வாழ்கிறது. இந்தக் கருத்தை அருணகிரிநாதர் சொன்ஞர். அவருக் கென்று ஒரு பாணி,

> ''அழுது உலகை வாழ்வித்த கவுணிய குலாதித்த''
>
> —திருப்புகழ்

அழுது உலகை வாழ்வித்தார், அந்த மூவாண்டுக் குழந்தை.

"மெய்ம்மேல் கண்துளி பனிப்ப
வேறெங்கும் பார்த் தழுவார்"

அந்தக் குழந்தை அழுதது சரி. ஒரு குழந்தையைப் பெற்று, இடும்பனைக் கொன்ற பேராற்றல் படைத்த பீமசேனன் அழுகிறான் அம்மாவிடம் வந்து குழந்தை மாதிரி. அவள் சிரித்தாள். "பீமா! மலையைத் தூக்குவையே. மரத்தைப் பிடுங்கிப் பல் விளக்குவாய். சங்கிலியை அறுப்பாய். கல்லைக் கசக்குவாய். ஏண்டா, இந்தக் கிழவியிடம் வந்து அழுகிறாய்?". "அம்மாவிடம் அழாமல் யாரிடம் அழப்போகிறேன்!', 'ஏன் அழுகிறாய்?' 'வயிறு பசிக்கிறது' "வயிறு பசிக்கிறதா?' கொண்டு வரும் சாப்பாட்டிலே பாதி சோற்றைப் பங்கிட்டுத்தருகிறேனே?" "நீங்கள் தருகிறீர்கள்.கடவுள் என் வயிற்றைப் பெரிசாய் படைத்துவிட்டார். நான் கடவுள் மேலே வழக்குத் தொடர முடியுமா? நீங்கள் போடுகிற சாப்பாடு நாக்குப் பூச்சிக்குக்கூடக் காணவில்லை!". "பீமா இங்கே இருக்கிறவர்கள் எல்லாம் அள்ளிப் போடுகிறவர்கள் ஆயிற்றே. நிறையக் கொண்டாயேன்!". "அதற்கு மேலே மண் பானையே குயவன் கடையிலே கிடைக்கவில்லை. இருப்பதற்குள்ளே அதுதான் பெரியது." "என்னிடம் அழுது என்ன பண்ணுவதடா? நான் பெண் பிள்ளை." "நீங்க மகாராணி. லட்சம் லட்சம் பேருக்குச் சாப்பாடு போட்டவர்கள். உங்களிடம் அழாமல் யாரிடம் அழுகிறது." என்றான். "எல்லாம் கடவுள் காப்பாற்றுவார் போ" என்றாள்.

அன்றைக்கு மறுநாள் ஏரியிலே உட்கார்ந்து பெரிய மரத்தைப் பிடுங்கி, பீமன் பல் விளக்கிக்

கொண்டிருந்தான். எப்பொழுதுமே வடக்கு நோக்கிப் பல் விளக்க வேண்டும். பல் விளக்கும்போது வருகிற உமிழ் நீரை இடப்பக்கம் துப்ப வேண்டும். வலப்பக்கம் துப்பினுல் பிதுர்களுக்கு நலன் இல்லை. வடக்கு நோக்கிப் பல் விளக்கிக் கொண்டிருந்தான். அந்த மண் வேலை செய்கிற குயவனுர், பாத்திரம் பண்ணுவதற்கு, வண்டி நிறைய களி மண்ணைப் போட்டு, இரண்டு கிடாவைக் கட்டி ஓட்டுகிறுர். வண்டி சகதியிலே இறங்கி விட்டது. கிடா நடக்கவில்லை. அந்தக் குயவனுர், வண்டியைத் தள்ளுவதற்குச் சுற்று முற்றும் பார்த்தார். தள்ளுவதற்கு ஒருவரும் இல்லை. இந்தக் கறுத்த ஐயர் பல் விளக்குகிறுர். "ஐயரே! சகதியிலே சக்கரம் இறங்கி விட்டது. கொஞ்சம் சக்கரத்தைப் பிடித்துத் தள்ளுங்கள்" என்றுர். பீமசேனன் பரம உபகாரி. பல் குச்சியை வைத்துவிட்டு வந்தான். "குயவனுரே! வண்டியிலும் களி மண், மண்டையிலுமா களி மண்? ஏனய்யா! பாரம் கொஞ்சமாய்ப் போட்டு ஓட்டக் கூடாதா? வாயில்லாத பிராணி." என்றுன். "ஐயரே! நீங்கள் சொல்வது நியாயம். நான் நாளையிலிருந்துபாரம் குறைச்சலா ஓட்டறேன். கொஞ்சம் தள்ளுங்க."என்றுன். "இங்கே வா. கிடாவை அவிழ்த்து விட்டுவிட்டு அந்தப் பக்கம் போ" "என்னய்யா! கிடா இருந்துதானே வண்டி ஓடணும். நீங்க வேண்டுமானுல் வண்டியை ஓட்டுங்க. நான் தள்ளுகிறேன்." "சொன்னபடி கேட்கிறுயா? அடி பட்டுச் சாகப் போகிறுயா?" அவன் பயந்து விட்டான். கிடாவை அவிழ்த்து விட்டுவிட்டு, அந்தப் பக்கம் போய் விட்டான். பீமசேனன் அந்தவண்டியையும், மண்ணையும் ஒற்றைக் கையிலே தூக்கினுன். 'உன் வீடு எங்கே?' என்றுன். 'ஐயா நீங்க பீமனு' என்றுர். 'யாராயிருந்தால் உனக்கென்னய்யா? வீட்டைக் காட்டு. இல்லையென்றுல் உன் தலையிலே போடுவேன்' என்றுன். அந்தக் குயவனுர் ஓடுகிறுர். பீமன் நடக்கிறுன். வீட்டைக் காண்பித்

தார். வாசலில் போய் இறக்கி விட்டான். வண்டியை யும் வண்டி மண்ணையும் ஒற்றைக் கையிலே தூக்கி ஞன். சஞ்சீவ பர்வதத்தைத் தூக்கின மாதிரி. 'உனக்கு ஏதாவது நான் செய்யட்டுமா?' "ஏய்! நான் பலன் கரு திப் பணி செய்பவனு? மனுஷனுக்கு மனுஷன் உதவி செய்யணும். பரோபகாரம் இதம் சரீரம். கஷ்டப்படுகிற உனக்கு உதவி செய்தேன். இதற்கு அன்பளிப்பா?". 'அப்படியெல்லாம் ஒண்ணும் சொல்லவில்லை. கொஞ்சம் உள்ளே வாங்க. உங்கள் திருவடி படட்டும். மண் பானைகள் நிறையப் பண்ணியிருக்கிறேன். ஏதாகிலும் உங்களுக்குத் தேவைப்பட்டதை எடுத்துக் கொள்ளுங் கள்.' 'எனக்கு ஒன்றும் தேவையில்லை. எனக்குப் பக வான் கருணைதான் தேவை'. சாஷ்டாங்கமாய்க் காலில் விழுந்து, 'நான் பரம ஏழை. நன்றி பாராட்டணும். ஏதாகிலும் உங்களுக்குச் செய்தால்தான் எனக்குத் தூக்கம் வரும்.' 'சரி. அப்படியென்ருல் இந்த வண்டி மண்ணையும் போட்டு ஒரே பானையாய்ப் பண்ணிக் கொடு.' இந்தக் குயவனுருக்குப் புரியவில்லை. 'என்ன இந்த வண்டி மண்ணையுமா? என்ன உரம் கொட்டுவ தற்கா?' 'உனக்கென்ன? பண்ணிக்கொடு.' அவன் புரி யாமல் ஆறு அடி அகலம் ஒன்பது அடி உயரத் துக்குக் குதிர் மாதிரி பானை பண்ணி பீமனிடம் கொடுத் தான். பீமசேனன் அதை எடுத்துக்கொண்டு போய், ஏரியிலே அலம்பிவிட்டு அக்ரஹாரத்தில்போய் 'பவதி பிக்ஷாம் தேஹி' என்ருன். அக்ரஹாரத்தில் இருப்பவர் கள் ஒரு படி, ஒன்றரைப்படி என்று தனியாக வடித்துப் போடுவார்கள். பீமன் ஏரியிலே போய் குழம்பு, ரசம் எல்லாம் போட்டுப் பிசைந்து, (இந்த சேட்டுகள் ரொட் டிக்கு மாவு பிசைகிற மாதிரி) சாப்பிட்டுவிட்டு தியானம் பண்ணிக் கொண்டு உட்கார்ந்திருப்பான். குந்தி பார்த்தாள். 'மகனே! ஏண்டா, இந்த ஏனத்தைப் பார்த் தால் கேலி பண்ண மாட்டார்களா?' 'ஒரு நாளைக்குப்

பண்ணுவார்கள், அம்மா. அப்பாலே சரியாய்ப் போய் விடும். என் வயிற்றுப்பசி எனக்கல்லவா தெரியும்?' என்முன்.

இதை வில்லிபுத்தூராழ்வார் பாடுகிருர். நான் சொல்வது முத்தமிழ் இல்லையா? இந்தக் கருத்தைச் சொல்ல வந்த வில்லிபுத்தூராழ்வார் அருணகிரியார் காலம். அது எப்படிச் சொல்கிருர்?

**மறையும் உருவினெ டரிய குருகுல**
**மகிபர் நெடுவன சரிதராய்**
**உறையும் வளமனே உடைய மடவரல்**
**உருகு பிரதைதன் உயிரனுள்**
**குறைவில் பொலிவினள் விரத நெறியினள்**
**குழுவு நிதியினள் கொடுமையால்**
**இறையும் ஒழிவற இருகண் அறல்வர**
**எரிகொள் கொடியென விளையினுள்.**

இப்படிப் பாண்டவர்கள் வேற்று உருவத்திலே, பிராம்மண வடிவத்திலே,

**'மறையும் உருவினெ டரிய'**

**"தனன தனதன தனன தன தன**
**தனன தன தன தனதன"—என்ற சந்தம்.**

இந்த மாதிரி சந்தம் கம்பராமாயணத்திலோ, பெரிய புராணத்திலோ, கந்த புராணத்திலோ கிடையாது. அது அருணகிரியார் காலம். அப்படித் தமிழ், காமா பயில்வான் மாதிரி கோதாவில் இறங்கி விளையாடிய காலம்.

**"மறையும் உருவினெ டரிய...சரிதராய்"**

அப்படிச் சொல்ல வேண்டும். பாண்டவர்கள் எப் படி வாழ்கிருர்களாம்? நீரு பூத்த நெருப்பு போல்.

"மறையும் உருவினெ...சரிதராய்"

அந்த நீண்ட வனத்திலே சஞ்சரிக்கிறார்கள்.

'உறையும் வளமனை'-அவர்கள் குடியிருக்கிற வீடு, வளமையான மனை! மூட்டை. மூட்டையாய்ப் பச்சரிசி, மூட்டை மூட்டையாய்த் துவரம் பருப்பு, டப்பா டப்பா வாய் முந்திரிப்பருப்பு, ஏலக்காய் டப்பா, நெய் டின், நல்லெண்ணெய் டின். (அன்றாடம் கடைக்குப் போவார் கள் இல்லையா? அப்படியில்லை.)

பிரதை - குந்தி அம்மையாருக்கு உயிர் போன்றவ ளாம். இப்பொழுது வீட்டுக்காரர்களும், குடியிருக்கிற வர்களும் உறவாகவா இருக்கிறார்கள்? எலியும் பூனையு மாய் இருப்பார்கள்.

"உறையும் வளமனை உடைய—உயிரனாள்"

அந்தக் காலம். அந்த வீட்டு அம்மையார் அழுது கொண்டிருக்கிறாள்.

இறையும்—இறை என்ற வார்த்தைக்குச் சிறிது நேரம் என்று பொருள். 'இரு கண் அறல் வர'—நெருப் பிலே விழுந்த புழு போல, அந்த அம்மாள் கண்ணீ ரும் கம்பலையுமாக அழுது கொண்டிருக்கிறாள்; வீட்டுப் பிராம்மணப் பெண். குந்தியம்மாள் மெள்ள வந்தார் கள். "உங்களுக்கென்னம்மா குறை? ஒரு குழந்தை இருக்கிறான். ஒரு பெண் இருக்கிறாள். உனக்கென்னம்மா கவலை" என்று குந்தியம்மாள் கேட்டாள். அங்கே அந்த அம்மாள் குந்தியிடம் சொல்வதனாலே உள்ளத்திலே இருக்கிற கவலை குறைகிறது. நான் சொன்னேனல் லவா? இந்த ஏனத்திலிருந்து இன்னொரு ஏனத்துக்கு, பாலோ, காபியோ மாற்றினால் அதனுடைய சூடு குறை யும் என்று. அப்படி நம் துன்பத்தை இன்னொருவரிடம்

சொல்லி முறையிட்டால் அது ஒரு டிகிரி குறையும். எல்லாத் துன்பத்தையும் சொல்லிக் கொள்ளலாம். ஒரு துன்பத்தை மட்டும் சொல்ல முடியாது. மனைவி தன்னை வைவாளாகில் யாரிடமும் சொல்ல முடியாது. அப்படியே அதை நினைத்து நினைத்துப் புழுங்கி விடுவோம். மனைவி அந்தரங்கத்திலே வைவதைச் சொல்ல முடியாது. இது அனுபவஸ்தர்களுக்குத் தெரியும். இந்த அம்மாள் தன்னுடைய குறைகளைச் சொல்லி முறையிடுகிறாள். அப்பொழுது இவ்வளவு நேரம் நான் சொன்னதிலிருந்து ஆப்த நண்பர்களிடம் நம்முடைய குறையைச் சொன்னால் அதனுடைய வேகம் குறையும். நமக்கு நண்பர்கள் எதற்காக இருக்கிறார்கள்? நம்முடைய குறையைக் கேட்டு ஆறுதல் சொல்ல. 'தினம் சந்திரன் இருக்க முடியுமா? 15 நாட்களுக்கு ஒரு முறை தானே முழு நிலா வருகிறது. தினம் 24 மணி நேரமும் சூரியன் இருக்க முடியுமா? மாறி மாறி வரும்' என்று பக்குவமாக நமக்கு ஆறுதல் சொல்லுவார்கள். இதற்காகத்தான் மொழி பயன்படுகிறது. ஆண்டவன் நமக்கு எத்தனையோ மொழிகளைக் கொடுத்தான். அதிலே சிறந்த மொழி தமிழ். அந்தத் தமிழிலே பாருங்கள், மூன்று பிரிவு. ஒன்று இயல், ஒன்று இசை, ஒன்று நாடகம். மற்ற மொழிகளில் இந்த மாதிரி மும் மலையாளம், முக் கன்னடம் என்று இல்லை. இதைத்தான் தமிழிலே முத்தமிழ் என்கிறோம்.

"முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே"—அருணகிரிநாதர்

எப்பொழுதுமே தன்மானம் உள்ளவர்கள் யாரிடமும் ஒன்றையும் யாசிக்க மாட்டார்கள். நேற்று கூடச் சொன்னேன், யாசிப்பதைப் பற்றி. நம்ம கிழவி, தமிழ்க் கிழவி, பிள்ளையாரிடம் போய் ஒரு பொருளை யாசிக்கின்

ளூள். "விநாயகப் பெருமானே! நீ எனக்கு மூன்று கொடு—நான் உனக்கு நாலு தருகிறேன்—ஒன்று லாபம் இருக்கு. நீ எனக்குத் தர வேண்டியது, சங்கத் தமிழ். நான் உனக்குத் தருவது,

"பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும்"

பருப்பு என்ருல் துவரம் பருப்பு இல்லே. முந்திரிப் பருப்பு, பிஸ்தாப் பருப்பு, அக்ரூட், பாதாம் பருப்பு. பாலிலே துவரம் பருப்பா கலப்பார்கள்? உங்களுக்குப் பருப்பு என்ருல் துவரம் பருப்புதான் ஞாபகத்துக்கு வரும். பாகு—சர்க்கரைப் பாகு.

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்**
**சங்கத் தமிழ்மூன்றுந் தா.**

அந்தக் கிழவியினுடைய பெருமிதம். நாலு தருகிறேன். மூன்றைக் கொடு என்ருள்.

நாலும் கலந்து—உனக்குக் கலக்குகிற வேலே கூட மிச்சம். குழந்தைக்குப் பருப்புச் சோற்றில் நெய்யை விட்டுப் பிசைந்து அன்னே ஊட்டுவது போல, அந்த ஔவைக் கிழவி அந்த நாலும் பிள்ளேயாருக்கு ஊட்டு கிருராம்.

இன்றைக்கு நான் பேச எடுத்துக் கொண்டது முத் தமிழ். மூன்று தமிழ். இயல், இசை, நாடகம். இயலே விட இசைக்குப் பெருமை. இசையை விட நாடகத்துக் குப் பெருமை. கடவுள் மூன்று நிலே. சத்து, சித்து, ஆனந்தம். சத்து என்ருல் என்றைக்கும் உள்ளது.

சித்து என்ருல் அறிவு மயமானது. ஆனந்தம் என்ருல் இன்ப நிலையைத் தருவது. ஒன்று சத்து, ஒன்று சித்து, ஒன்று ஆனந்தம். அதிலே ஒரு குறிப்பு, சத்து தனியே இயங்கும். அந்தச் சித்திலே சத்தும் கலந்திருக்கும். நாடகத்தில் – ஆனந்தத்தில் சத்தும் சித்தும் கலந்திருக்கும். மூன்றும் கலந்தால்தான் ஆனந்தம். அதேபோல சத்து என்பது இயல் தமிழ்; சித்து என்பது இசைத் தமிழ்; ஆனந்தம் என்பது நாடகத்தமிழ். அதைத்தான் ‘ஆனந்த நடனம் பஜே’ என்று ஒரு கீர்த்தனை பாடியிருக்கிருர், தீக்ஷிதர் கேதார ராகத்திலே. அந்த நாடகத்திலேதான் ஆனந்தம் இருக்கும். சிலபேர் சொல்வார்கள் தமிழ்ப் புலவர்களிலே இசைப்புலவர்களை உலகம் ஆதரிக்கிறது. இவர் பிரசங்கம் பண்ணினுல் 50 ரூபாய் தருவார்கள். அவர் பாடினுல் 5000 ரூபாய் தருவார்கள். இவன் கொஞ்சம் பொருமைப் படுவான். ‘நான் மூன்று மணி நேரம் பேசினேன். 50 ரூபாய்தான் கொடுத்தார்கள். இவன் இரண்டு மணி நேரம் பாடி விட்டு 5000 ரூபாய் வாங்கிவிட்டான்’ என்பார்கள். இயல் தமிழ் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இசையை அவ்வளவு சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியாது.

“எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இருவழியும் வினு ஆகும்மே”

என்று சூத்திரம் சொல்லி இன்ன இன்ன இடத்திலே வினு எழுத்து வரும் என்று நான் மூன்று நிமிஷத்திலே சொல்லிக் கொடுத்து விடுவேன். இசை அப்படியில்லை. சாதகம் கடுமையாகப் பண்ண வேண்டும். அதிலே சில சமயங்களில் அர்த்தங்களும் வரும். நான் ஒரு முறை அமைந்த கரையிலே சொற்பொழிவுக்குப் போயிருந்தேன். செல்வக்கணபதிதான் அழைத்துக் கொண்டு போனுர். என்னுடைய சொற்பொழிவுக்குப் பின்னுலே

சீர்காழி கோவிந்தராஜனுடைய இன்னிசை. அவர் என்னிடம் நிரம்ப விசுவாசமுள்ளவர். என் பிரசங்கம் முடிந்தவுடன் அவர் பாடுகிறார். என் பக்கத்திலே நீதிபதி N. கிருஷ்ணசாமி ரெட்டியார் உட்கார்ந்திருக் கிறார். சீர்காழி 'நாட்டை' பாடுகிறார். 'மபம கமகா' அவர் பாடத் தெரிந்தவர். பின்னிப் பின்னிப் பாடுகிறார். 'மபநி நிபநி மபநி!' இந்தச் சுரம் பாடிக் கொண்டிருக் கிறார். நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். பக்கத்தி லிருந்த ரெட்டியார் சொன்னார்: "அவர் என்ன பாடுகிறார். உங்களுக்குப் புரிகிறதா" என்றார். ஸ்வரம் பாடுகிறார்? நாட்டை ஸ்வரம் என்றேன். அவர் "எனக்கு சுரம் கிரம் ஒன்றும் தெரியாது. அதற்குள்ளே ஒரு அர்த்தம் இருக்கிறது" என்றார். என்ன என்றேன். நிபநி மபநி நீபனி மா பனி—தெலுங்கு தெரிந்தவர். "பனி என்றால் வேலை. நீ பனி மாபனி; உன் வேலை என் வேலை என்று பாடுகிறார்" என்றார் ரெட்டியார். அவர் சொன்ன பிற்பாடுதான் நானும் எண்ணுகிறேன். நமக்கு வெறும் ஸ்வரமாகக் காதில் விழுகிறது. அதற்கு அவர் அர்த்தம் கண்டு பிடிக்கிறார். இதிலேயிருந்து நான் விழித்துக் கொண்டேன். நீ பநி பாநி? தண்ணீர் வேண்டுமென்றால் அப்படிப் பாடுவது. அவன் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கமாட்டான். 'ஸ நி' (சனி என்று வைவது) அப்பொழுது இசையைப் பாடுகிறவனுக்கு இயலைவிட அறிவு பத்து மடங்கு கூட இருக்க வேண்டும். உண்மை. ஒரே சுத்தரிஷபம்; தோடிக்குப் பிடிக்கிற சுத்த ரிஷபம் வேறு, வராளிக்குப் பிடிக்கிற சுத்த ரிஷபம் வேறு. சாதாரண காந்தாரம் வேறு, சுத்த காந்தாரம் வேறு. இந்த இசை நுணுக்கங்கள் எல்லாம் இயல்வாணர்களுக் குத் தெரியாது. அதற்கென்று தவம் செய்து உழைத்து வருகிறார் இசைவாணர்.

அதைவிட உயர்வு நாடகம். அந்த நாடகம்— ஆடுகிற கலை இருக்கிறதே, அந்தக் கண் பேசும்; முக

பாவம் பேசும். ஒரு முறை சம்ஸ்கிருதக் காலேஜிலே தொடர் சொற்பொழிவு செய்து கொண்டிருந்தேன். காலஞ் சென்ற அனந்தராம தீக்ஷிதரின் கொழுந்தியாள் குழந்தைகள், ஒன்று 7 வயது, ஒன்று 9 வயது. தங்கப் பதுமை மாதிரி. அவர்களுக்குச் சதிர்—நடனம் சொல்லிக் கொடுத்த வழுவூர் ராமையா பிள்ளை, "ஸ்வாமி! உங்களுக்கு முன்னாலே இரண்டு பாட்டுப் பாடி—அபிநயம் பிடிக்கச் சொல்கிறேன்" என்றார். சரி என்றேன். அந்த இரண்டு குழந்தைகள் சம்ஸ்கிருத காலேஜிலே என்னுடைய பிரசங்க மேடையிலே "என்னடி பாவி கைகேயி என்னடி செய்தாய்" என்ற இராமாயண கீர்த்தனைக்கு அபிநயம் பிடித்த போது என்னுடைய கண்களிலே தாரை தாரையாகக் கண்ணீர் வருகிறது. உள்ளத்தை உருக்கி விட்டது, அந்தப் பாவம். அதற்கு என்ன காரணம் என்றால் அந்த முக பாவம். அந்தக் கை போகிற வழியிலே கண் போக வேண்டும். கண் போகிற வழியிலே கருத்து போக வேண்டும். இது எல்லோராலேயும் செய்து விட முடியாது. நிரம்ப விஷயம் தெரிந்தவர்களால்தான் முடியும். அறிவுள்ள கணவனார் மனைவியிடம் வாயால் பேச மாட்டார். நான் அநாகரீகமான காட்டுமிராண்டிகளைச் சொல்லவில்லை. நாகரீகம் தெரிந்த உத்தமக் கணவன் தன் மனைவியிடம் நாலு பேர் இருக்கின்ற போது வாயாலே பேச மாட்டான்.

தசரத ராஜா ராமச்சந்திர மூர்த்தி திருமணத்துக்காகப் பரிவாரத்தோடு போய்க் கொண்டிருக்கிறார். நடுவிலே ஐந்து படலங்கள். சந்திர சைல படலம், பூக்கொய் படலம், உண்டாட்டுப் படலம் முதலியன. என்ன அழகான படலங்கள். கம்பன் அப்படியே தமிழைப் பொழிகிறான். நான் ஒன்றே ஒன்று சொல்கிறேன். ஒரு ராஜா தன் மனைவியிடம் 10 பேர் எதிரிலே

வாயாலே பேசக் கூடாது என்று, கையாலே பேசினானும். அந்த அம்மாள் எப்படி? அவள் தோழி வந்தாள். அவள் கண்ணாலே பேசினாளாம். கடைக்கண்ணால் பதில் கூறினாளாம். இதைக் கம்பர் சொன்னார்.

"தாழ நின்ற ததைமலர்க் கையினால்
ஆழி மன் ஒருவன் உரைத்தான்"

தாழ நின்ற—முழங்காலைக் கடந்த கரம். ஆஜாநுபாகு. சாமுத்ரிகா லட்சணம். 'தாழநின்ற ததை மலர்க் கையினால் ஆழி'—ஆக்ஞா சக்கரம் வைத்துக் கொண்டிருக்கிற 'ஆழிமன் ஒருவன் உரைத்தான்' எதனாலே உரைத்தான்? கையினால்; தாழ நின்ற ததை மலர்க் கையினால் ஆழிமன் ஒருவன் உரைத்தான். நான் பேசுவதிலிருந்து நீங்கள் வீட்டுக்குப் போய் இப்படி கை ஜாடையாகவே பேசிக் கொள்ள வேண்டும். மிகவும் உபயோகமான விஷயம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அந்தத் தோழி வந்து கேட்டாளாம். ஐயா என்னமோ சொல்கிறாரே என்று. "வீழியின்கனி மெல்லியல் தோழி கண்ணில் கடைக் கண்ணில் சொல்லினாள்"—எப்படிச் சொன்னாள். கடைக் கண்ணாலே சொல்கிறாளாம். இதை விட நுட்பம். அந்த அம்மாளும் புரிந்து கொண்டாளாம். ராஜாக்கள் எல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள். சேர, சோழ, பாண்டியர்கள். இந்தப் பக்கமெல்லாம் மகாராணிகள். (இந்தப் பக்கமெல்லாம் புது ராஜாக்கள் இருக்கிறார்கள்.) அங்க நாட்டு மன்னர் நிற்கிறார். பெரிய வில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஜனக ராஜா சொன்னார், 'இந்த வில்லை வளைத்தால் ஜானகி மாலை போடுவாள்' என்று. ஏற்கெனவே வில்லைப் பற்றித் தெரிந்தவர்கள் நமக்கும் அதற்கும் வெகு தூரம் என்று நினைத்து மூச்சு விடவில்லை. சில பேர் ஆழம் தெரியாமல்—ஒரு புது ராஜா அந்த வில்லிடம்

போய் அந்த வில்லின் அடியையும் நுனியையும் பார்த்தானும். வந்து உட்கார்ந்தான். என்னவென்றால் நான் தூக்கப் போகவில்லை. பார்க்கப் போனேன் என்றான். அடுத்தவன் இதைவிட அவசரக் குடுக்கை; கையை விட்டான்; எட்டவில்லை. வந்து உட்கார்ந்து விட்டான். என்னடா வென்றால் வளைக்கப் போகவில்லை. அளக்கப் போனேன். இவன் என்ன டைலரா? இன்னொருத்தன் தூக்கினான். தூக்க முடியவில்லை. வந்து உட்கார்ந்து விட்டான்; என்னடா வென்றால் எடுக்கப் போகவில்லை. நிறுக்கப் போனேன் என்றான். என்ன பலசரக்குக்கடை வியாபாரியா? வேறு ஒருவரும் அசையவில்லை. நீங்கள் என்ன இளைஞராய் இருக்கிறீர்களே? என்றார். எனக்குச் சீதை சகோதரி முறை. நான் ஆசீர்வாதம் பண்ண வந்திருக்கிறேன் என்றானும். நீங்கள் என்ன சார். எனக்கு மெட்ராஸ் ("ஐ") கண் வலி வந்திருக்கிறது. இன்னொருத்தன், எனக்கு வயிற்றுப் போக்கு. எவன் போவான்? அப்பொழுது ராமச்சந்திர மூர்த்தி துடிக்கிறார். குருநாதன் சொன்னால் (இது என்ன வில்லா, இது வெறும் புல்.) ஒரு வினாடியில் வளைத்து விடலாம். குருநாதன் பேசாமல் இருக்கிறாரே. குருநாதரைப் பார்க்கிறார். வில்லைப் பார்க்கிறார். குருநாதரைப் பார்க்கிறார். வில்லைப் பார்க்கிறார். [சில பெரிய மனிதர்கள் வீட்டிலே (சீஃப் கெஸ்டாக) சிறப்பு விருந்தினராக இருக்கிறவர் (இந்தப்) பருப்புச் சாதத்தைப் பிசைந்து கொண்டு, (இந்த) அரசியலைப் பேசிக் கொண்டிருப்பார். மற்றவர்கள் பசியாய் இருப்பார்கள். அவன் சாப்பிட்டால் தானே மற்றவர்கள் சாப்பிடலாம். மற்றவர்களுக்குக் கடும்பசி. அந்த மாதிரி] வில்லைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ராமச்சந்திர மூர்த்தி. அப்பொழுது விசுவாமித்திரர், அப்படிக் கண்ணாலே பார்த்தார். என்ன நாகரிகம்! "இது பழைமையான வில். தக்ஷயக்ஞத்தில் பழுதுபட்ட வில். இது நீண்ட காலம் ஜனகராஜன், அவன் வமிசத்

தார்கள் பஞ்சாமிர்தம், பால், தேன், சந்தனம் முதலிய வைகளால் அபிஷேகம் செய்து இத்துப் போன வில். உன்னுடைய தோள் ஆற்றலுக்கு இது ஏற்றதல்ல. பின்னாலே பரசுராமர் கொடுக்கப் போகின்றார் 16 தங்க மணிகள் கட்டிய பிரசண்ட கோதண்டம். இதை நீ நினைத்தால் வளைத்துக் கொள்ளலாம். உனக்கு எல்லாம் செய்ய வன்மை உண்டு. ஆகவே இதை வளைக்காதே. இதை ஒடித்து விடு. பின்னாலேதான் வில் வரப் போகிறதே. 'கோதண்டபாணி' என்ற கீர்த்தி பின்னாலே வரும்'' என்று இத்தனையும் இந்தக் கண்ணாலேயே சொன்னாராம். அவர் புரிந்து கொண்டாரா என்று கேளுங்கள்; பாட்டு சொல்லப் போகிறேன்,

**நினைந்தமுனி பகர்ந்தவெலாம் நெறிஉன்னி அறிவனுந்தன்**
**புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்**
**வனைந்தனைய திருமேனி வள்ளலுமம் மாதவத்தோன்**
**நினைந்தஎலாம் நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான்.**

புனைந்த சடை என்றால் என்ன? வசிஷ்டரோடு போட்டி போட்டு ஆலம், பிசின் வைத்து ஒட்டினது, விசுவா மித்திரர் சடை. பதவிக்கு என்று சிலர் கட்சி மாறுகிற மாதிரி. 'புனைந்த சடை முடி துளக்கிப் போரேற்றின் முகம் பார்த்தான்'. அந்தப் போர் ஏறாயிருக்கிற இராகவனுடைய முகத்தைப் பார்த்தாராம்.

'வனைந்தனைய திருமேனி வள்ளலும்'—இங்கே தான் கவனமாகக் கேட்க வேண்டும். அம் மாதவத்தோன் 'நினைந்த எல்லாம் நினைந்து' - நினைந்தது ஒன்று அல்ல. 'நினைந்த எல்லாம்'—''இது பழைய வில், தக்ஷயக்ஞத் தில் பழுதுபட்ட வில். நீண்ட காலம் பூஜை பண்ணி ஆற்றல் குறைந்தது. பின்னாலே பரசுராமர் தரப் போகின்றார். அதுதான் பிரசண்ட கோதண்டம்'

இந்த வில்லை வளைக்காதே. ஒடித்துவிடு.'' என்று இப்படி அவர் 'நினைந்த எல்லாம் நினைந்து அந்த நெடுஞ் சிலையை நோக்கினான்'. இது எங்கே நடக்கிறது? மிதிலாபுரியிலே. காவேரிக் கரையிலே உட்கார்ந் திருந்து தியாகப்ரும்மம் நிஷ்டையிலே இருக்கிறபோது (டெலிவிஷனிலே) தெரிகிறது இந்தக் காட்சியெல்லாம். மத்தியான நேரத்திலே மத்யமாவதி ராகத்திலே கீர்த்தனை பாடிக் கொண்டிருக்கிறார். காலை நேரமாய் இருந்தால் பிலஹரி பாட வேண்டும். இன்னும் கொஞ்சம் முன்னேரமாய் இருந்தால் பூபாளம் பாட வேண்டும். இப்பொழுது பௌளியைப் பாடிவிட்டுப் பூபாளம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், சங்கீத உலகத்திலே. பாடுவது பௌளி; சொல்வது பூபாளம்.

[ஆகவே கணவன் என்ன நோக்கத்திலே பார்க் கிறார் என்று மனைவி தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு 40 ஆண்டுகளுக்கு முன் சென்னையில் மந்தைவெளிக்குப் போய் இருந்தேன். அங்கே ஷண்முகம் பிள்ளை என்று ஒரு நண்பர் இருந்தார். பெரிய சுப்ரமண்ய பக்தர். அப்பொழுது அதிக வேலைகள் கிடையாது. கொஞ்சம் ஆறுதலாய் இருக்கும். 'சுவாமீ! இங்கேயே சாப் பிடுங்கள்' என்றார். 'சரி' என்றேன். திருப்புகழைப் பற்றி நான் பேசிக் கொண்டிருந்தேன். அவர் அழுது கொண்டே கேட்டுக்கொண்டிருந்தார். மணி எட்டு ஆயிற்று. மனைவியைக் கூப்பிட்டு சுவாமிகள் வந் திருக்கிறார். அப்படி...கையால் அசைவு காட்டினார். மணி 9-30 ஆயிற்று. சாப்பிட்டு விட்டுப் பேசலாம் என்று உள்ளே போனால், அந்த அம்மாள் விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டிருந்தார். எழுப்பினார்; 'நீ சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள்' என்று சொன்னீர்களே, என்றார். இப்படிக் கையைக்

காண்பித்தால் படுத்துக் கொள் என்று அர்த்தமாம். அவருக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. இதை எத்தனை இடத்தில் சொல்வாரோ என நாணினர்.] தியாகப்ரும்மம் திருவையாறிலிருந்து டெலிவிஷனில் பார்க்கிறார்.

"முநிகனு சைக தெலிசி சிவதநுசு விரிசே சமயமு
அலகலல லாடககனி ஆராண்முனி
எடு பொங்கெனே"

என்று பாடுகிறார். இவ்வளவும் எதற்காகச் சொல்லு கிறேன்? அந்தக் கண் சைகையினாலே தெரிந்து கொள்ள வேண்டும். அந்த நடனம் ஆடுகிற ஒருவனோ, ஒருத்தியோ, கை போன வழி கண் போக வேண்டும். அந்தக் கண் போன வழி கருத்துப் போக வேண்டும். மிகவும் கஷ்டமான கலை. அந்த நடனக் கலைக்குக் குரு யார்? நடராஜர். அந்தப் பிரபு அம்பலத் திலே ஆடுகிறாராம். அதை அருணகிரியார் சொன்னார்.

"குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடில சடை பவுரிகொடு தொங்கப் பங்கில்
கொடியாடக்

குலதடினி அசையஇசை பொங்கப் பொங்கக்
கழலதிர டெகுடெகுட டெங்கட் டெங்கத்
தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத்
தொகுதீதோ

திமிதமென முழவொலிமு ழங்கச் செங்கைத்
தமருகம ததிர்சதியொ டன்பர்க் கின்பத்
திறமுதவு பரதகுரு வந்திக்குஞ்சற் குருநாதா"

அசந்தால் வசந்தா பாட வேண்டும், எப்பொழுது அசந்து போய் விட்டானோ அப்பொழுது வசந்தா பாட

வேண்டும். வசந்தா பாடினுல் ஆண்டவனே உன் அருள் என் வசம் தா—உன் பாதம் என் வசம் தா—எனப் பொருளாகும். அருணகிரியார் வசந்தாவிலே பாடினுர். நடராஜப் பெருமான் நடனம் ஆடுகிருராம். அறையிலே இல்லே. அம்பலத்திலே. இப்பொழுதெல்லாம் அறையிலே ஆடுகிருர்கள். அவர் அம்பலத்திலே ஆடுகிருர். எப்பொழுதுமே நடிகர்கள் என்ருல் யாருக்கும் கொஞ்சம் பிரியம் அதிகம். அவர்கள் தெருவில் போனுல் ஒழுங்காகப் போக விட மாட்டார்கள். ஒரு பட்டாளம் கூடப் போகும். இந்த நடிகர்களுக்கெல்லாம் ராஜா நடராஜா. அவருடைய நடனக் கலேயைக் கண்டு ஒரு இளம் பெண் காதல் கொண்டாள். கல்யாணம் ஆகாத பெண். தோழி சொன்னுள்: "ஒருவாரமாய் சாப்பிடுவதில்லேயே, தூங்குவதில்லேயே, உனக்கு என்ன கவலே" எனக் கேட்டாள் தோழி. அவள்,

> "அம்பலத்தில் ஆடுகின்ருர் பாங்கிமாரே அவர்
> ஆட்டம் கண்டு நாட்டம் கொண்டேன் பாங்கிமாரே"

நான் நாட்டம் கொண்ட அந்த நடிகர் மதுபானம் பண்ண மாட்டார். பொய் சொல்ல மாட்டார். மிகவும் ஒழுக்க சீலர். மன்மதனேயே எரித்தவர். நான் வீட்டிலே கூடத்திலே அம்மா பக்கத்திலே படுத்திருந்தேன். அவர் காலிலே பஞ்சை ஒட்டிக் கொண்டு, (சத்தம் வராமல் இருப்பதற்காக,) நடந்து வந்தார். திண்ணேயிலே எங்கப்பா படுத்திருந்தார். ஆர். டி. ஓ. அவர் என்னமோ பச்சிலேயைக் கொண்டு வந்து பூட்டு மேலே பிழிந்தார். இரும்பை உருக்குகின்ற பச்சிலே. (எனக்குத் தெரியும். சொல்ல மாட்டேன். இரும்பு மேலே அந்தப் பச்சிலேயைப் பிழிந்தால் இரும்பு உருகிப் போகும். அது தான் சித்தர்கள் செய்யும் வேலே.) நடையிலே என் அண்ணு படுத்திருந்தார்; 'ஏட்' அண்ணு. அதையெல்

லாம் கடந்து, (எங்க அம்மா 10 ஆண்களுக்குச் சமானம். எங்கம்மா கனைத்தால் எங்கப்பாவுக்கு ஜுரம் வரும். அவ்வளவு கெட்டிக்காரி.) நான் கல்யாணம் ஆகாத இளம் பெண். 19 வயது. எங்கம்மா பக்கத்திலே பாதுகாவலாகப் படுத்திருந்தாள். இவர் 12 மணி ராத்திரிக்கு வந்து என் தலை மயிரையெல்லாம் இப்படிக் கோதி, என் கன்னத்தை இப்படித் தட்டி, இந்த வளையல் எல்லாம் எண்ணிப் பார்த்தார். எனக்கு என்னமோ போல் இருந்தது. அதை மெல்லவும் முடியவில்லை. சொல்லவும் முடியவில்லை. மெள்ளப் போய் விட்டார் தோழி; நான் என்னத்தைச் சொல்வேன்?''

திண்ணையிலே படுத்த ஆர்.டி.ஓ. ஆணவ மலம்; அங்கே நடையிலே படுத்திருந்த ஏட் அண்ணு கன்ம மலம்; பக்கத்திலே படுத்திருந்த தாய் மாயா மலம். மாயா மலத்திலேதான் எல்லாம் அடங்கும்.

> ''காவலை எல்லாம் கடந்து பாங்கிமாரே என்னைக்
> கை கலந்த கள்ளர் அவர் பாங்கிமாரே''

கள்ளர் என்றால் என்ன? தன்னையறியாமலே உள்ளத்தை அபகரிக்கிற உள்ளங் கவர் கள்வன். மனைவி அப்படியே ஈஸிசேரில் சாய்ந்து படுத்துக் கொண்டிருந்தாள். ஏதோ ஆபீஸ் வேலையாக ஸ்கூட்டர் எடுத்துக் கொண்டு 3 மணிக்கு வீட்டுக்கு வந்தார். வெறுங் கதவு. இந்த அம்மாள் சாய்ந்து படுத்துக் கொண்டிருந்தாள். அயர்ந்த தூக்கம். உள்ளே போய் எடுத்துக் கொள்ள வேண்டிய சாமானை எடுத்துக்கொண்டு போகிறவர், [மனைவிக்குப் புது வளையல் பண்ணிப் போட்டாரே. ஆபீஸ் லோனிலிருந்து கடன் வாங்கி. நல்ல முத்து வளையல்.] அதில் நான்கு வளையல்களைக் கழட்டிக் கொண்டு போய்விட்டார். இந்த அம்மாள் அரை மணி நேரம் பொறுத்துப் பார்த்தாள். வளையலைக் காணோம்.

அன்று வெள்ளிக்கிழமை. ஐயோ வெள்ளிக்கிழமையா இப்படி? என வருந்தினாள். கணவனார் 5-30 மணிக்கு வந்தார். "சரோஜா! இன்று புதுப்படம் ஒன்று வந்திருக்கிறது. நாகலக்ஷ்மி என்று. வா. படம் பார்க்கப் போகலாம். ஏன் சரோஜா அழுகிறாய்? என்ன உனக்கு வருத்தம்? நீ சொன்னபடி நான் கேட்கிறேனே" என்றார். 'கோபித்துக் கொள்ளாதீர்கள்; நான் அப்படி லேசாகக் கண்ணை மூடினேன். வளையலைக் காணோம்' என்றாள். "நீ எதற்கும் தேடிப் பார். உனக்குப் பிள்ளையாரைத் தானே பிடிக்கும். அங்கே தேடி இங்கே தேடி பிள்ளையாருக்கு அடியிலே இருந்தது. பிள்ளையாரப்பன் எடுத்துக் கொண்டார்" என்று கொடுத்தான் கணவன். இதைச் சொன்னார் அப்பர் பெருமான்,

"வஞ்சித்து என் வளை கவர்ந்தான் வாரானே ஆயிடினும்"

வஞ்சித்து—நாயகி நாயக பாவம். யார்? திருநாவுக்கரசு சுவாமிகள் பாடுகிறார். ஆகவே,

'காவலை எல்லாம் கடந்து, பாங்கிமாரே என்னைக்
கை கலந்த கள்ளர் அவர் பாங்கிமாரே'

"கண்டவ ரெல்லாம் பழிக்கப் பாங்கிமாரே என்றன்
கன்னியழித்தே ஒளித்தார் பாங்கிமாரே."

தோழி! அவர் இப்படி வரப் போக இருந்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. தினம் வர ஆரம்பித்து விட்டார். ஒருத்தருக்கும் தெரியவில்லை. அதென்ன மாயமோ, என்ன மந்திரமோ! அப்பால் நான் 3 மாதம் முழுகாமல் இருந்தேன். அம்மா கேட்டாள். வயிற்றிலே கட்டி என்றேன். அப்படியென்றால் டாக்டர் பலராமன் இடம் அழைத்துக் கொண்டு போகிறேன் என்றாள். நான் என்ன சொல்லுவேன்? அதெல்லாம் ஒன்றும்

வேண்டாம் அம்மா என்று சொன்னேன். அப்பால் அவரைப் பார்த்து, "நிரம்ப ஆபத்தான நிலை. என்னை வடபழனிக்குக் கூட்டிக்கொண்டு போய் உற்றார் அறிய ஊரார் அறிய திருமணம் பண்ணிக் கொள்ள வேண்டும்" என்றேன். அப்பொழுது அவர் கேட்டார்: "நீ என்ன குலம்?" என்று கேட்டார். யார், வந்தவர்; நீ என்ன ஜாதி என்று கேட்கிறார். எப்பொழுது? மூன்று மாதம் முழுகாமல் இருக்கும்போது.

**"கூடி எனை அணைந்தார் பாங்கிமாரே—இப்போ**
**கொண்டு குலம் பேசுவாரோ பாங்கிமாரே"**

**"கூடல் விழைந்தேன் அவரைப் பாங்கிமாரே அது**
**கூடும் வண்ணம் கூட்டிடுவீர் பாங்கிமாரே."**

வள்ளல் பெருமானார் அனுபவிக்கிறார்.

"கூடி எனை......" – அந்த ஜீவனும் சிவனும் ஒன்று பட்டு விட்டது. அறம், பொருள், இன்பம் (மூன்று மாதம், முழுகாமல் இருக்கிறார்.) இனி வீடு பேறு கிடைக்க வேண்டும்.

**"கூடி எனை அணைந்தார் பாங்கிமாரே இப்போ**
**கொண்டு குலம் பேசுவாரோ பாங்கிமாரே"**

அங்கே என்ன குலம்? ஆன்மாவிலே மூன்று குலம் இருக்கிறது. ஒரு மலமுடைய ஆன்மா; இரு மலமுடைய ஆன்மா; மூன்று மலமுடைய ஆன்மா. இந்த ஒரு மல முடைய ஆன்மா விஞ்ஞான கலர்; இரு மலமுடைய ஆன்மா பிரளயா கலர்; மூன்று மலமுடைய ஆன்மா சகலர். அந்த ஒரு மலமுடைய ஆன்மாக்களுக்கு இறைவன் உள் நின்று உணர்த்துவான். இரு மலம் உடைய ஆன்மாக்களுக்கு முன்னிலை நின்று அருள் புரிவான். மூன்று மலமுடைய ஆன்மாக்களுக்குப்

படர்க்கையிலிருந்து அனுக்ரஹம் புரிவான். தன்மை, முன்னிலை, படர்க்கை. அதைத்தான் கேட்கிருராம். இப்போது நீ மூன்று மாதம் முழுகாமல் இருக்கிருய்; அறம், பொருள், இன்பம் மூன்றையும் பெற்ருயே. நான் உனக்கு அனுக்ரஹம் செய்ய வேண்டுமே. நீ சகலரா, பிரளயாகலரா, விஞ்ஞான கலரா?' என்று கேட்கிருராம். நீ என்ன குலம் என்று கேட்டாராம்.

**"கொண்டு குலம் பேசுவாரோ பாங்கிமாரே"**

**"அம்பலத்தில் ஆடுகின்ருர் பாங்கிமாரே அவர்**
**ஆட்டங் கண்டு நாட்டங் கொண்டேன் பாங்கிமாரே"**

அவர் எப்படி ஆடுகின்ருர்? அவர் ஆனந்த நடம் ஆடுகின்ருராம் கனகசபையிலே. அப்பொழுது அங்கே இருக்கிற திங்கள் அசைகின்றது; (சந்திரன்). குமுதம் என்று ஒரு மலர். அது இரவிலே மலரும். தாமரை பகலிலே மலரும். இரவிலே மலர்கின்ற அந்தக் குமுத மலருக்குப் பதி சந்திர பகவான். சிவபெருமான் தலையிலே இருக்கிருன். ஏன் தலையிலே இருக்கிருன்? அவன் அடியில் விழுந்தான். முடியிலே வைத்தார். என்ன கருணை! அதனுல்தான் காமகோடி பூஜைபண்ணுகிற மூர்த்திக்குச் சந்திர மௌளீஸ்வரர் என்று பெயர். அடியிலே விழுந்தால் மடியிலே வைக்கலாம்தானே. பிள்ளைகளைத் தூக்கி மடியிலேதான் வைக்கிறேம். அடியிலே விழுந்த சந்திரனை முடியிலே வைத்தாராம். பரமேஸ்வரனுடைய பெருங் கருணை. ஆகையினுலே அவர் அசைகின்றதாலே அந்தத் தலையிலே சந்திரன் அசைகின்ருன். அப்படிப் பன்னீர் தெளிப்பது போல அந்த இனிய அமுத கிரணங்கள் சிந்துகின்றனவாம்.

**"குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்த..."**

[இந்தப் பாட்டு பாடுகிறபோது சிந்துகிறது பாருங்கள்.]

**"சரண பரிபுர சுருதி கொஞ்ச"**

பரிபுரம் என்பது திருவடியில் உள்ள அணிகலம். சுருதி என்றால் ஓசை. இது சுருதி என்று பெயர்; (சுருதி பெட்டி). வேதத்துக்கும் சுருதி என்று பெயர்.

கொஞ்சக் கொஞ்ச என்றால் என்ன? இந்தக் குழந்தைகள் கொஞ்சுவது போல. குழந்தைகள் கொஞ்சிப் பேசினால் என்ன மகிழ்ச்சியாய் இருக்கும்? ஒருத்தன் பிளாட்பாரத்திலே சொன்னானும், இன்றைக்கு வீணை தனம்மா வீணை ஏ ஒண்ணு என்றான். அடுத்தவன் சொன்னான், சஞ்சீவிராவ் புல்லாங்குழல் ஆஹா! மிக நேர்த்தி என்றான். கிடையாதடா வீணைதான் உயர்வு. மண்டையை உடைப்பேன். குழல்தான் உயர்வு. அங்கே ஒரு பெரியவர் உட்கார்ந்து சிரித்துக்கொண்டே யிருந்தார். என்ன சண்டை போடுகீறீர்களே? உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறதா? என்றார். பிறக்கவே யில்லை யென்றான். போய்ச் சண்டை போடுங்கள் என்றார்.

> "குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச்சொல் கேளாதவர்."

குழந்தை மழலையைக் கேட்டிருந்தால் குழலினிது, யாழினிது என்று சொல்லுவார்களா? அந்தக் குழந்தை அம்மா அப்பா என்று சொன்னால் என்ன ஆனந்தம். தனம்மாள்வீணையிலே அந்த ஆனந்தம் ஏது? "நாளைக்குப் போயிருந்தியே நேற்றைக்கும் போவபா" என்றால் எப்படியிருக்கும் கொஞ்சல் வார்த்தை! இது மாதிரி நாம் பேசினால், அடி அல்லவா விழும். அந்தக் குழந்தை பேசுவது போல் இருக்கிறதாம், சிவபெருமானுடைய நடனம் ஆடுகிற திருவடியில் இருக்கிற பரிபுரம்.

"சரண பரிபுர சுருதி கொஞ்ச......"

குடிலம் என்ருல் வளேவு.

"குடில சடை பவுரி கொடு தொங்க"

அந்தச் சடை அப்படித் தொங்கி ஆடுகிறது.

"பங்கில் கொடி ஆட"

அவள் சிவகாமவல்லி. எப்போதுமே பெண்கள் கொடி போல இருக்க வேண்டும். வல்லி என்ருல் கொடி.

"பங்கில் கொடி ஆட. திமிதமென
முழவொலி முழங்க செங்கை...... தமருகம்"

தமருகம் என்ருல் அந்த உடுக்கைக்குப் பெயர்.

"தமருகம ததிர் சதியொ......
தொங்க தொங்க...... குலதடினி அசைய"

அந்த கங்கா நதி அசைகின்றதாம்.

'கழலதிர' — நடராஜர் தூக்கிய திருவடியிலே ஒரு மணி இருக்கிறது. அதற்கு வீரக் கழல் என்று பெயர். அது வீரர்கள் அணிகின்ற அணியாகும்.

"தொகுகுகு தொகுகுகு"

உடுக்கையின் ஒலி. தனியாக உட்கார்ந்து சொல்லிப் பாருங்கள், அந்த உடுக்கை ஓசை. அருணகிரியார் ஓசை முனிவர்.

'தொகுகுகு தொகுகுகு தொங்கத் தொங்கத்
தொகுதீதோ"

நந்தி மிருதங்கம் வாசிக்கின்ருராம்.

"........அன்பர்க்கு இன்பத் திறம் உதவு பரத குரு" ப-பாவம், ர-ராகம், த-தாளம். பாவ, ராக, தாளம் மூன்றும்சேர்ந்தால் பரதம். நடனம்ஆடுகிறவர்களுக்குப் பாவம் இருக்க வேண்டும். அந்தப் பாவத்துக்கு ஏற்ற ராகம். ஒன்று எதுகுல காம்போதி, அல்லது கானடா. அப்படியே உருகி விடுவான். அதற்கு ரூ 2000 (பீஸ்.) அதற்கு ஏற்ற ராகம். அதற்கேற்ற தாளம். பாவம் ராகம் தாளம் மூன்றும் சேர்ந்து ப—ர—த—பரத. இந்த நாட்டுக்கே உடைய கலை இது. ஏனைய நாடுகளிலே இந்தக்கலையே தெரியாது. அதனால்தான் அந்தச் சுவாமி யைத் திருடிக்கொண்டு போய் 5 லட்சம், பத்து லட்சத் துக்கு விற்று விடுகிறான். அவர் அனவரதமும் ஆடுவா ராம். அவருக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கிடை யாது. நடராஜாவினுடைய நாட்டியத்திலே ஏதாவது ஓய்வுஉண்டா? இந்தக் கூரை வீடுகளில் ஓட்டை இருக் கும். அந்த ஓட்டைவழியாகச் சூரியவெயில் வரும். அந்த வெயிலிலே லட்சக் கணக்கான அணுக்கள் அசையும். கூரை வீட்டில் வசிக்கிறவர்களுக்குத் தெரியும். அந்த அணுவை எடுத்து அணு ஆராய்ச்சிக்காரன் உடைத் தான். அந்த அணுவுககுள் 96 அணுக்கள் ஒன்றை ஒன்று தொடாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றனவாம். இன்னொருதரம் சொல்கிறேன், அணு கண்ணுக்கே தெரியாது; அது கூரை வீடுகளிலே அந்த ஓட்டை வெளிச்சத்திலே உலாவும். அந்த ஒரு அணுவைப் பிடித்து ஆராய்ச்சி பண்ணுகிறவர்கள் கருவியினாலே உடைத்துப் பார்த்தால் 96 அணுக்கள் ஒன்றை ஒன்று தொடாமல் அப்படிச் சுற்றிக் கொண்டிருக்கின்றன வாம். இதைத்தான்,

"அணுவினைச் சத கூறிட்ட கோணினும் உளன்"

என்கிறார் கம்பநாடர். சத கூறிட்ட—96 அணு என்று அவன் கண்டான்; அவர் நூறு என்று சொன்னார்.

"அணுவினைச் சத கூறிட்ட கோணினும் உளன்"

என்று பிரகலாதாழ்வார் ஹிரண்யனுக்குச் சொல்கிற இடம் இது அதைக் கம்பநாட்டாழ்வார் பாடுகிறார். அருணகிரியார் சொன்னார். அருமையான பாட்டு,

'பரம குருவாய் அணுவில் அசைவாய்........"

இது வேதத்தில் வரும்: 'அணோரணீயான் மகதோ மஹீயா னாத்மா குஹாயாம்' ஆத்மா என்றால் ஆன்மாக்கள். இந்த இடத்திலே ஒரு ஹிருதய கமலம் தொங்குகின்றது. இப்படி. அந்த இதய கமலத்திலே ஒரு வெளி இருக்கிறது. அது ஞான வெளி. இதெல்லாம் ஜடாகாசம். அறிவில்லாத வெளி. அது அறிவுள்ள வெளி. அதற்கு அம்பரம்—ஆகாசம். சித்து என்றால் ஞானம். சித்—அம்பரம். சிதம்பரம். இந்தச் சிதம்பரத்தை நான் சொல்லவில்லை. இங்கேயிருக்கிற (உள்ளே இருக்கிற) சிதம்பரத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அந்த ஞான வெளியிலே ஒரு பெரிய ஒளி. அது என்றைக்கும் இப்படி அசைகின்றது. 'ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி' என்பது நக்கீரர் திருவாக்கு. ஓவுதல் — வெளியே செல்லுகின்ற மனதை அடக்கினவர்களுக்கு அது வெளியாகும். ஓவுதல் என்றால் செல்லுதல். சேண் என்றால் ஞான ஆகாசம். இங்கே இந்த ஞான ஆகாசத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன் நான். ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி. அதைச் சொல்லுகிற போது உவமை சொல்லவேண்டுமே.

"பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு
உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு"

தெரிந்ததைக் கொண்டு தெரியாததைச் சொல்லுகின்றார் நக்கீரர். நமக்குத் தெரிந்தது ஞாயிறு. லண்டன்

வாசிகள் வருடம் முழுவதும் சம்பாதித்து, வருடத்துக்கொரு தரம் வெயில் எங்கே இருக்கு என்று தேடிக் கொண்டு போய் பணத்தைச் செலவழித்து விட்டு வருவார்கள். அவன் வெயிலுக்கு அவ்வளவுப் பணம் செலவழிக்க வேண்டும். வெயில் அங்கு காணுவதே இல்லை. 'ஸன் பாத்' என்பார்கள். வெயிலைப் பார்த்தால் தாயாரைப் பார்த்த மாதிரி குதிப்பார்கள். நமக்கு வெயில் இங்கே புழுங்குகிறது. நமக்குக் குளிர்ச்சி பிரியம் என்றால், அவர்களுக்கு வெயில் பிரியம். அப்பொழுது மற்றவர்கள் எல்லாம் விரும்புவது ஞாயிறு.

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"

என்பார் இளங்கோ அடிகள்.

ஞாயிறைக் கண்டால் யார்தான் விரும்பமாட்டார்கள்? ஆகவே "உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு" ஞாயிறை நீங்கள் எல்லாம் எங்கே பார்க்கிறீர்கள்? மலையிலே பார்க்கிறீர்கள். இரண்டு மலை போட்டுத்தானே ஞாயிறு போடுகிறார்கள். சாத்திரம் சொல்லுகிறது, உதயகிரி, அஸ்தகிரி என்று. மலையிலே ஆதித்தன் தோன்றுகிறான். மலையிலே அவன் போய் மறைகிறான். இதுதான் சாத்திரம். கந்தபுராணம் படித்தவர்களுக்குத் தெரியும். ஆதித்தன் தோன்றுவது உதயகிரி. உதயகிரி என்று ஒரு சுப்பிரமணிய சுவாமி ஸ்தலம் இருக்கிறது. அப்பொழுது மலையிலே ஞாயிறு தோன்றுகிற பொழுது நக்கீர தேவர் "பலர் புகழ் ஞாயிறு மலைக்கண்டாங்கு" என்று பாடலாமே? ல, லை மோனையாயிற்றே. நான் சமீபத்தில் ஒரு நூலைப் படித்துக் கொண்டிருந்தேன். அறுவகை இலக்கணம் என்று பெயர் அதற்கு. அதிலே இரண்டு வரி படித்தேன்.

''மோனை இல்லாத முத்தமிழ் நூல்கள்
நாணமில்லாத நங்கைக்கு நிகர்''

தண்டபாணி சுவாமிகள் பாடினது. பெண்களுக்கு நாணமில்லாமல் இருந்தால் எப்படியிருக்குமோ அப்படி மோனையில்லாத தமிழ். அதுதான் தாய்கள் ஒப்பாரிப் பாட்டிலே கூட மோனை வைத்துப் பாடுவார்கள்.

''கண்ணுன தொப்பையிலே கல்லா விளைஞ்சுதடா,
பொன்னுன தொப்பையிலே புண்ணு விளைஞ்சுதடா''

மோனை. அந்த மோனை இருக்க வேண்டும். 'பலர் புகழ் ஞாயிறு மலைக்கண்டாஅங்கு' என்பது நன்றாக இருக்குமே. அப்படிச் சொல்லவில்லை. பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு. ஆங்கு என்பது உவம உருபு. 'அது போல'. ஏன் கடற் கண்டாஅங்கு என்றார்? நக்கீரர் எவ்வளவு பெரியவர்? எவ்வளவு காலம் சிந்தனை பண்ணிச் சொல்கிறார். இப்பொழுது மலையில் ஆதித்தன் தோன்றுகிறான். அதுதான் உண்மை. ஆனால் நக்கீரர் சொல்கிறார். கடலிலே தோன்றுகிறான் என்று. கருத்தென்ன? அவருக்குச் சொல், எழுத்து முக்கியமல்ல. அந்த ஆழமான பொருள்தான் முக்கியம்.

இப்பொழுது ஒரு 5 செல் இருக்கிற டார்ச் லைட்டை ஒரு கல்லின் மேல் அப்படிக் காண்பித்தால் அந்த வெளிச்சம் படும். ஆனால் அந்தக் கல்லை ஊடுருவிக் கொண்டு உள்ளே போகாது. சரி. ஒரு பாத்திரத்திலே தண்ணீர் கொட்டி டார்ச் லைட்டை அடியுங்கள். அந்தத் தண்ணீர் முழுக்க அந்தஒளி போய் அப்படி அலையும். அதுபோல சிவமாய் இருக்கிற அருட்பெருஞ் ஜோதி இந்த ஆன்மாவாகிய கடலிலே தோன்றுகிற பொழுது அந்தத் தண்ணீரிலே ஒளி அத்வைதமாகக் கலப்பதுபோல் ஜீவனில் சிவஒளி கலக்கின்றது. அத்வைதமாக ஒன்று படுகின்றது, என்ற தத்துவத்தை விளக்கும் பொருட்டு, 'பலர் புகழ் ஞாயிறு

கடற் கண்டாஅங்கு' என்றார். இப்பொழுது நான் இயல் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எப்படிச் சொன்னார்? கல்லிலே ஒளி கலந்து நிற்காது. ஆனால் நீரிலே ஒளி கலந்து நிற்கும். ஜீவனாயிருக்கிற நீரிலே சிவமாய் இருக்கிற ஒளி அத்வைதமாகக் கலந்து இருக்கிற நுட்பத்தை விளக்கும் பொருட்டு 'பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு' என்பார். இன்னொரு அர்த்தம். அந்தக் கடலிலே ஞாயிறு தோன்றி மேலே செல்லுகிற பொழுது, அந்த ஆதித்தன் ஒளி அந்தக் கடல் நீரை மேலே ஈர்த்து மழையாகப் பொழிகிறது. இன்னு மொரு முறை சொல்கிறேன். கடலிலே தோன்றிய ஞாயிறு மேலே எழுந்து தன் உஷ்ணத்தினாலே கடல் நீரை ஈர்த்து மழையாகப் பொழிகிறது. அதுபோல இந்த ஜீவனிலே தோன்றிய சிவம் அந்த ஜீவனிலே இருந்து எழுந்து அந்த ஜீவனைச் சிவமாக மாற்றி கருணை பொழிகின்றது. ஒன்று. இந்தக் கடல் நீரை அந்த ஞாயிறு ஒளி ஈர்க்கின்றதே அன்றிக் கடலிலே இருக்கிற உவரை ஞாயிறு எடுக்காது. உவரை எடுத் திருந்தால் மழை ஜலம் உப்பாக இருக்கும். கடல் நீர் உவர். அந்த மழை ஜலத்திலே உவர் கிடையாது. அதுபோல ஜீவனிலே ஆணவமாகிய உவர் இருக் கின்றது. சிவமாய் இருக்கிற ஞாயிறு அந்த ஜீவனிலே கலந்து அந்த ஜீவனை எடுத்து ஆணவ மலமாகிய உவரை மாற்றி அருள் பொழிகின்றது எனற நுட்பமான கருத்தை விளக்கும் பொருட்டு, 'பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு' என்றார். அந்த ஞாயிறு உவரை விட்டு வருகின்றது. இந்த சிவமாக இருக்கிற ஞாயிறு ஆணவத்தை விட்டு விடுகிறது.

**''சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே''**

என்ற கருத்தை மாணிக்க வாசகர் சொல்லுகிறார்.

நக்கீரருடைய புலமை சமானமில்லாதது. இதற்குப் பரிமேலழகர் உரை எழுதியிருக்கிருர். நச்சினர்க்கினியர் உரை எழுதியிருக்கிருர். இப்பொழுது நான் சொன்ன உரை இதுவரையிலும் உரையிலே வந்ததில்லை. திருவருள் இதனை உணர்த்தியது. ஆகையினாலே இன்று நீங்கள் தெரிந்துகொண்ட ஒரு புதுமையான உரை. ஜீவன் என்பது கடல். முருகன் என்பது ஞாயிறு. அது ஜீவனில் தோன்றி ஜீவனிலே கலந்து அத்வைதமாக ஒன்றுபட்டு அந்த ஆணவ மலமாகிய உவரை மாற்றி அதைச் சிவமாக ஏற்றுக் கொள்ளுகிறது. அது இங்கே எப்போதும் விளங்கித் தோன்றிக் கொண்டிருக்கிறது. ஆன்மாவை விட்டு ஒரு போதும் அந்தச் சிவம் பிரியாது. அது அனவரதமும் ஆடுகின்றது. கற்பனை கடந்த ஜோதி, கருணையே உருவமாய், அது தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் எட்டாத சிற்பரவ்யோமமாய் இருக்கின்ற திருச்சிற்றம்பலத்திலே நின்று அற்புதத் தனிக் கூத்து ஆடுகின்றது, அந்த பரமாத்மா. ஆகையினாலே அந்தச் சிவ ஒளி இங்கே விளங்கித் தோன்றுகிறது. அதனால் இந்த இடத்துக்கு ஹிருதய கமலம் என்று பெயர்—இதய தாமரை என்று பெயர்—மனக் கமலம் என்று பெயர். அங்கேதான் ஆண்டவன் இருக்கின்ருன். இதைத்தான்,

> ''மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடுவாழ் வார்''

என்ருர் திருவள்ளுவர். மலர் என்பது இதய மலர். அங்கேயிருந்து எம்பெருமான் அருள் புரிகின்ருன். எப்போதும் அசைந்து கொண்டேயிருக்கின்ருன். அங்கே ஒரு குகை இருக்கிறது. அந்தக் குகையிலே ஞான வெளி இருக்கிறது. அது அனவரதமும் அசைந்த வண்ணமாய் இருக்கிறது. அந்த அசைவு

நின்று விட்டால் இந்த உடம்பு அசையாது. அப்படி அம்பலவாணர் அசையவில்லையானால் கோடானுகோடி அண்டங்களும் அசைவற்று நின்று விடும். எல்லோரும் அசையும் பொருட்டு அவன் அசைகின்றான். உதாரணம் சொல்கின்றேன்.

நான் ஒருதரம் உதயபூருக்குப் போயிருந்தேன். ஒரு ஏரிக்கு நடுவே அரசனுடைய அரண்மனை. இப்பொழுது அது அரசாங்க உடைமையாக மாற்றியிருக்கிறது. அங்கே போனேன். லட்சம் லட்சமாக ரசம் பூசிய கண்ணாடிகளைப் புதைத்திருக்கிறார்கள். அதிலே நடுவில் நின்றவுடன் லட்சம் கிருபானந்தவாரி உருவங்கள் தெரிகிறது. நான் எப்படி எப்படிச் செய்கிறேனோ அந்த மாதிரி அந்த லட்சம் பிரதிமைகளும் செய்கிறது. அப்பொழுது நான் நடராஜாவை நினைத்தேன். நாம் எல்லாம் அசையும் பொருட்டு அம்பலவாணர் அசைகின்றார். அவனுக்கென்ன தலையெழுத்து அசைய வேண்டுமென்று? ஆசிரியர் மாணவருக்குப் பாடம் சொல்லுகிறவர், 1, 2, 3, 4, 5, 6 என்று விரல் விட்டு அந்தக் குழந்தைக்குச் சொல்லுமாப் போலே, உருவமே இல்லாத எம்பெருமான் ஆதியும் நடுவு மில்லாத அற்புதத் தனிக் கூத்து ஆடுகின்றான் அம்பலத்திலே. அதனாலேதான் அவன் பரதகுரு—நாடகாசிரியன்—அம்பலவாணன். அவன் அம்பலத்திலே நம்மை உய்விக்கும் பொருட்டு ஆடுகின்றான். அந்தக் கருத்தை அருணகிரிநாதர், "பரத குரு" என்றார். அந்தப் பரத கலைக்குக் குருவாக இருக்கின்றான் பரமேஸ்வரன்.

"திமிதமென முழவொலி முழங்கச் செங்கை
ஃ ஃ ஃ ஃ
பரதகுரு வந்திக்கும்..."

கண்ட ஜாதி திரிபுடை தாளத்திலே, இந்தத் திருப்புகழ் அமைந்திருக்கிறது.

ஓசை முனிவர் அருணகிரிநாதர். திருத்தணியிலே போய்ப் பாடுகின்றார் அந்தக் குருநாதர். சூரபன்மன் யுத்தத்துக்கு வருகிறான். [அந்த நாளிலே அழக நம்பி, தக்ஷிணாமூர்த்தி பிள்ளை, மாமுண்டியா பிள்ளை, அந்தப் பழங்கால வித்வான்கள் மிருதங்கம் வாசிக்கும் போது தாங்கள் அசைய மாட்டார்கள். இப்போது மத்தளம் அசையாது. இவர்தான் அசைவார். தான் ஆடாமலே மிருதங்கம் வாசிப்பார்கள் பழங்கால வித்வான்கள். அப்படி அற்புதமாக மிருதங்கம் வாசிக்கிறார்களாம்] இதை அருணகிரியார் சொன்னார்.

**"தனத் தனத் தன தன தன தன தன**
**திமித் திமித் திமி திமி திமி திமி திமி**
**... ... ... ... ... ... ... ...**
**தமித்த மத்தள தமருக விருதொலி கடல்போல**
**... ... ... ... ... ... ... ...**
**திருத்தணிப்பதி மருவிய குறமகள் பெருமாளே"**

திருத்தணித் திருப்புகழ். தமருக—தமருகம் என்றால் உடுக்கை

சிங்க முகாசுரன் போருக்கு வருகிறான். நிரம்ப ஆர்ப்பாட்டக்காரன்; ஆயிரம் தலை கொண்டவன். சேனைத் தலைவன். எல்லாம் கிடுகிடுத்தாடின.

**"தகு தகுகு தகு தகுகு"...**

சூரபன்மன் யுத்தம். தன தனன தன தனன—கண்ட நடையிலே கொடுக்கிறார். அந்தத் தாள ஒத்து, நடையெல்லாம்—இந்த மாதிரி வேறே ஒரு பாட்டும் கிடையாது. அருணகிரிப் பெருமானுக்குத்தான் அப்படிப் பாட வரும். அவர் ஓசை முனிவர்.

அம்பாளுடைய கடைக்கண்ணைப் பற்றிச் சொல்ல வருகிறார் கடைக்கண்ணைப் பற்றி அபிராமிபட்டர் கூடப் பாடுகிறார். "நல்லன எல்லாந் தரும் அபிராமி கடைக் கண்களே". அதெல்லாம் சாதாரணக் கிழவர்கள் நடக்கிற மாதிரி. அருணகிரிநாதர் 18 வயது பால்யர். கல்யாணம் ஆகாத பருவம். அவர் கிளியாகவே இருந்தார். அதனாலே தான் அவருக்குச் சுகம் என்று பெயர். சுகபதம் பெற்றவர். அந்த நிலையை அவர் சொன்னார்.

**"தரணியில் அரணிய......மாசாம்பவி தந்தவன்"**

இது அருணகிரியாருடை திருவகுப்பு. எப்பொழுதும் அருணகிரியார் முருகனைத் தவிர ஒருவரையும் பாடாத பரம பதிவிரத நிலை உடையவர். அம்பாளைப் பற்றிப் பாடி அந்தப் பார்வதியின் குழந்தையென்று முத்தாய்ப்புக் கொடுத்தார்.

உலகத்திலுள்ள பிராம்மணர்களையெல்லாம் கூப்பிட்டான் ஹிரண்யன். அவ்வளவு பேரும் வேதம் படித்தவர்கள். வேதம் சொல்லச் சொன்னான்.

**''பிரபஞ்சோப ஸமம் சாந்தம் சிவம்'**

சிவம் என்ற இடத்திலே அதை அடித்துவிட்டு ஹிரண்யன் என்று எழுதச் சொன்னான். "பிரபஞ்சோப ஸமம் சாந்தம் ஹிரண்யம் மன்யந்தே." "ஓம் நமோ நாராயணா"வை, "ஓம் நமோ ஹிரண்யாய" என்று மாற்றச் சொன்னான். 'ப்ரத்யயஞான மனந்தம் ப்ருஹ்ம' இந்த ப்ருஹ்ம என்று வருவதை ஹிரண்யன் என்று மாற்றி எழுதச் சொன்னான். எல்லா வேதங்களிலேயும் எங்கே எங்கே பிரம்ம சப்தம், எங்கே எங்கே சிவசப்தம், எங்கே எங்கே விஷ்ணு சப்தம் வருமோ அவையெல்லாம்

மாற்றி அங்கங்கே ஹிரண்ய சப்தத்தைப் போட்டு வேதத்தையே திருத்தி அமைத்துப் பள்ளிக்கூடங்களில் எல்லாம் தன் படத்தையே வைக்கச் சொன்னுன். 5 கோடி 70 ஆயிரத்து 61 வருஷ காலம் ஆட்சி புரிந்தான். இவனைத் தொலைக்க வேண்டுமென்று பெருமாள் திட்டம் போட்டார். பாதி நரன், பாதி சிம்மமாக வந்தாராம். கூட்டணியாக வந்து இவனைத் தொலைத்தாராம். முதல் முதலில் கூட்டணியைக் கண்டுபிடித்தவர் பெருமாள்.

"தரணியில் அரணிய முரணிரணியன்"

5 கோடி 70 ஆயிரத்து 61 வருஷம் தெய்வம் இல்லை யென்று ஆட்சிபுரிந்த-மூன்று உலகத்தையும் வென்ற அந்த ஹிரண்யனை முளைத் தண்டு மாதிரி நகத்திலே கிள்ளினாராம்.

"தரணியில் அரணிய ......... கவுரி
காவேந்திய பைங்கிளி மாசாம்பவி"

கவுரி என்றால் பொன் நிறமுள்ளவள்.

இதிலே இயலும் இருக்கின்றது. இசையும் இருக்கின்றது; நாடகமும் இருக்கின்றது.

அம்பாள் நடனத்தைச் சொன்னர். அந்த அம்பாள் நடனம் ஆடுகிருளாம். 'நடநவில்' அம்பாளுடைய பாதத்தில் நான்கு வேதங்களும் சிலம்புகளாக ஒலிக்கின்றனவாம். முத்தமிழும் சேர்ந்து அருணகிரியார் பாடலிலே களிநடம் புரிகின்றன. அருணகிரியாரைப் போல முத்தமிழைக் கரை கண்டவர்கள் பதினுன்கு உலகங்களிலும் கிடையாது.

மிகப் பெரிய தத்துவங்களை எல்லாம் சொல்லு கிறார். காயத்திரி மந்திரத்தைச் சொல்லுகிறார். மகத்தான மகா மந்திரத்தை (பஞ்சாட்சரம்) எடுத்துச் சுலபமாய்ச் சொல்லுகிறார்.

"சிவய நம நமசிவய காரணன்"

சிவயநம என்பது கல்லூரி. நமசிவய என்பது உயர்பள்ளி. ஹைஸ்கூலிலே படிக்கிறபோது நமசிவய என்று சொல்ல வேண்டும். காலேஜிக்குப் போன பிறகு சிவயநம என்று சொல்லவேண்டும். 'அது ஸ்தூல பஞ்சாட்சரம். இது சூட்சும பஞ்சாட்சரம். இவை யெல்லாம் அருணகிரிநாதர் அப்படி விளையாடுகிற மாதிரி.

"சிவயநம நமசிவய காரணன் சுரந்து
அமுதமதை அருளிஎமை ஆளும் எந்தைதன்
திருவுருவின் மகிழ் எனது தாய் பயந்திடும்
புதல்வோனே"

—(ஒருவரையும்) திருப்புகழ்.

முருகப் பெருமானுக்குத் தாயார் அருணகிரியாருக்குத் தாயார். அருணகிரியார் சதா உட்கார்ந்து கொண்டு வள்ளி நாயகியைத் தியானம் பண்ணுவாராம். அருண கிரியார் தியானக் கண்ணிலே வள்ளி வந்து காட்சி தருவார்களாம். அவர் சொன்னார்; 'விதியானவன் இளையாள்' எல்லோர் தலையிலேயும் விதிக்கிறாரே அந்தப் பிரம்மாவுக்குத் தங்கை வள்ளி

"விதியானவன் இளையாள்."

எல்லோர் தலையிலேயும் எழுதுகின்றவர் தானே பிரம்மா. ஒவ்வொருத்தர் தலையிலும் ஒவ்வொரு மாதிரி

எழுதுவார். என் தலையிலே என்ன எழுதியிருக்கிறது? ஒருநாள் கூட வீட்டுச் சாப்பாடு கிடையாதென்று. வெளியே போனால் அவர்கள் இஷ்டத்துக்கு ஆக்கிப் போடுவார்கள். நம்ம இஷ்டத்துக்கு இல்லை. 30 லட்சம் சொத்து இருக்கும். 300 ஏக்கர் நிலம் இருக்கும். அரிசிச் சோறு உள்ளே போகாது. சர்க்கரை வியாதி. சில பேருக்கு ஏர் கண்டிஷன். வெல்வெட் மெத்தை. என்ன மாத்திரை போட்டாலும் தூக்கம் வராது. தலை எழுத்து. ஒவ்வொருத்தர் தலையிலே ஒவ்வொரு மாதிரி எழுதியிருக்கும். ஆனால் அருணகிரியாருக்கு அந்தப் பிரம்மாவினுடைய கையெழுத்து வேலை செய்யாது.

"விதியானவன் இளையாள் எனது
உளமேவிய வளிநாயகி
வெகு மாலுற தனமேலணை முருகோனே"

அருணகிரியார் உள்ளத்திலே வள்ளியம்மையார் இருக்கிறார்களாம்.

தியானபுருஷர் அருணகிரிநாதர். தியான அனுபவத்திலேயே சதா இருந்து அந்த முருகனுடைய அருள் முழுவதும் பெற்றவர். அவருடைய பாடலிலே இயல் உண்டு. இசை உண்டு. நாடகம் உண்டு. எத்தனை எத்தனையோ நுட்பமான கருத்துக்களையெல்லாம் சுலபமாகப் பாடுகின்ற பேராற்றல் படைத்த ஓசை முனிவர் அருணகிரிநாத சுவாமிகள். தாளங்களை எல்லாம் பார்க்க வேண்டுமென்றால் அருணகிரியார் பாடலிலே தான் பார்க்கலாம். அவருடைய பாடலிலேதான் இந்தத் தாள நுட்பங்கள் இருக்கும். அதிலே திஸ்ரம் இருக்கும், கண்டம் இருக்கும், மிஸ்ரம் இருக்கும். கண்டத்தைச் சொல்வார்.

“எந்தை வருக ரகுநாயக வருக
மைந்த வருக மகனே இனிவருக
என்கண் வருக எனதாருயிர் வருக அபிராம
இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர் சூடிட வருக
என்று பரிவினொடு கோசலை புகல”

அந்த நடையைக் காட்டுகிறார். திஸ்ரம் காட்டுவார்.

... சந்ததம் உவந்துகண் டரிவையர்க்கு
... இந்திரிய சஞ்சலங்களை அறுத்து
... அம்புயப் பதங்களின் பெருமையைக் கவிபாடி ...
... என் செயல் அழிந்தழிந் தழிய மெய்

அப்படிக் குழந்தை முருகப் பெருமான் மூன்று அட்சரத் திலே—திஸ்ர நடையிலே அப்படிக் கைலாசத்திலே தளர் நடையிடுகின்றாராம். அம்பாள் இருந்து ரசிக் கிறாளாம், குழந்தையைப் பார்த்து.

“கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம் புயம் பெறஅரக் கருமாளக்

குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டலம் அசைந்திளங் குழைகளில்
ப்ரபைவீச”

பிரபை — ஒளி.

சுவாமி அப்படித் தவழ்ந்து, அப்படி திஸ்ர நடையிலே தளர் நடையிலே இருந்தாராம். அவர் திருவடியிலே தண்டை, சிலம்பு இவைகள் எல்லாம் ஒலிக் கின்றனவாம். எப்படி ஒலிக்கின்றது?

"தந்தனம் தனம் தனம் தனவென
தந்தனம் தனம் தனம் தனவென
தந்தனம் தனம் தனம் தனவென."

"12 கைகள் இருக்கின்றன. அள்ளிக் கொடுப்பதற் காகவே நான் இருக்கிறேன்" என்று ஒலிக்கிறதாம்.

"செஞ்சிறு சதங்கை கொஞ்சிட மணித்
தண்டைகள் கலின் கலின் கலினென"

இந்தக் குழந்தையைப் பார்த்தால் யார்தான் முத்தம் கொடுக்க மாட்டார்கள். முருகப் பெருமானை அள்ளி யெடுத்து குழந்தையின், அந்தக் கன்னத்தைக் கிள்ளி யெடுத்து முத்தம் தந்தாராம் சங்கரி. தாய்மார்கள் குழந்தையை முகத்தோடு முகத்தை வைத்தால் அழகாய் இருக்கும். அதைத்தான் பட்டினத்தார் சொன்னார்.

................................"மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே"

அதனாலே இந்தக் கருத்தையெல்லாம் அருணகிரியார் சொன்னார்.

"சங்கரி மனங் குழைந்து உருக
முத்தம் தர வரும் செழுந் தளர் நடை
சந்ததி ஜகந் தொழும் சரவணப் பெருமாளே"

இப்படி எத்தனை எத்தனை நடை பேதங்கள், எத்தனை எத்தனை ஜதி பேதங்கள். 108 தாளங்களையும் அருணகிரியார் திருப்புகழிலே பார்க்கலாம். அந்தக் கண்கொண்டு பார்க்க வேண்டும். பழங்காலத்திலே இந்தத் தமிழகத்திலே உள்ள பழம் புலவர்கள் இந்தத்

திருப்புகழைப் பொன்னே போல போற்றி அதைத் தங்களுடைய இன்னிசையிலே சேர்த்து, அவர்கள் முருகனை உபாஸனை செய்து தன் மாணவர்களுக்கும் அதைச் சொல்லிக் கொடுத்து வளமையை வளம் செய்தார்கள். ஆகவே முத்தமிழும் அருணகிரியார் திருப்புகழிலே பார்க்கலாம் என்பதை நினைவு செய்து கொண்டு, இந்த முத்தமிழை உபாஸனை பண்ணினால் முருகப் பெருமான் வருவான். உங்களுக்குத் தெரியும். அந்த வல்லினம், மெல்லினம், இடையினம் மூன்று இனங்கள். 'த' வல்லினம்; 'மி' மெல்லினம்; 'ழ்' இடையினம். இயல், இசை, நாடகம். அந்த முத் தமிழ் வடிவாக முருகன் விளங்குகின்றான் என்ற கருத்தை உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, முருகப் பெருமானுடைய கருணை துணை செய்ய ஏதோ சில கருத்துக்களை உங்களுக்கு முன்னே படைத்தேன். அவைகளை எல்லாம் நீங்கள் கேட்டுச் சிந்தனை செய்து திருவருள் வழிக்கு ஆளாக வேண்டும் என்று சொல்லி இந்த அளவிலே இந்தச் சொல்லைப் பூர்த்தி பண்ணிக் கொள்கிறேன்.

இரவுபகற் பலகாலும் இயலிசைமுத் தமிழ் கூறித்
திரமதனைத் தெளிவாகத் திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே பரசிவதத் துவஞான
அரனருள்சற் புதல்வோனே அருணகிரிப் பெருமாளே.

———: 0 :———

உ

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக

# 8. சைவ சித்தாந்தம்

## [12—1—1980]

எல்லாம் வல்ல வயலூர் எம்பெருமானுடைய தனிப் பெருங் கருணையினாலே இங்கே இந்தப் பேரவைக்குத் தலைமை பூண்டு சுருக்கமாகவும், உருக்கமாகவும் தலைமை உரையாற்றிய அவைத் தலைவர் அவர்களுக்கும், நம்முடைய சகோதரி டாக்டர் சீதா அம்மா அவர்களுக்கும் ஏனைய அன்பர்களுக்கும், தாய்க்குலத்துக்கும் இனி வர இருக்கிற அன்பர்கள் இருந்தால் அவர்களுக்கும் வணக்கம். இதையெல்லாம் நானே ஏதோ வேடிக்கையாகச் சொல்லுகிறேன் என்று எண்ணிவிடக் கூடாது.

9-ம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர் சுந்தர மூர்த்தி நாயனார். மிகப் பெரியவர். இந்த உலகம் தோன்றிய நாள் தொட்டு மேல் உலகத்திலிருந்து இந்த உலகத்துக்கு வரவேற்பு அழைக்க வந்தார்கள் என்பது வரலாறு கிடையாது. சங்கராச்சாரியாருக்கோ, மத்வாச்சாரியாருக்கோ, ராமானுஜருக்கோ, மெய்கண்டாருக்கோ ஒருத்தருக்கும் கிடையாது. சுந்தர மூர்த்தி நாயனாருக்கு வயது 18. இளம் வயது. அவர் திருவஞ்சைக்களத்திலே இருக்கிற பொழுது, இன்னும் ஏன் வாழ வேண்டும்? என எண்ணினார்; 18 வயதிலேயே. இப்பொழுது 85 வயதிலேயும் அடுத்

தவர்களுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறூர்கள். 18 வயது வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனுர் நாம் போகலாம் என்று திருவுளம் பற்றினுர். இங்கே 'சுவிட்சு' போட்டவுடன் அங்கே விளக்கு எரி கிறது, கைலாசத்திலே. என்ன பண்ணினுர்? ஆச்சரிய மான கதை. அங்கே தேவர்கள் எல்லாம் குழுமி நிற்கிறூர்கள் திருக்கயிலாயத்திலே. அந்தத் தேவர் குழாங்களுக்குத் தலைவன் இந்திர பகவான். 'இந்திரா' என்றூர் சுவாமி. "பூலோகத்திலே நம்முடைய அன்பன் சுந்தரன் இங்கே வரவேண்டுமென்று எண்ணுகின்றூன். நீ இருந்து அழைத்துக் கொண்டு வா. அந்தப் பக்கம் திரும்பினுர். ஸ்ரீமங் நாராயணர்—பரவாசு தேவர். நாராயணு நீயும் போ. அப்படித் திரும்பினுர். எல்லோர் தலையிலேயும் எழுதுகிற பிரும்மா. அப்பா நீயும் போ. எல்லோருமே போங்கள்" என்று சொல்லிவிட்டார். விண்ணுலகத்திலிருந்து ஒரு பெரிய கூட்டம் வந்து இறங்குகிறது மண்ணுலகத்துக்கு. இவர் 'சிவாய நம' என்று ஜெபித்துக் கொண்டிருந்தார். வயது 18. பெரிய தாடி, சடை உடைய மகரிஷிகள், தேவர்களைப் பார்த்தார். "எல்லோரும் என்ன வேலையாய் வந்திருக் கிறீர்கள்?" என்றூர். "உங்களைத்தான் அழைக்க வந்தோம்." என்றூர். சிவபெருமான் ஓலை காட்டி ஆட் கொண்ட அடியவர் அவர். எஜமானனை அழைக்க மற்றவர்கள் போகலாம். வேலைக்காரனை அழைக்க எஜமான் போவதுண்டா? பொட்லர் வருகிறூர் என்று கவர்னர் கார் அனுப்புவதுண்டா? பி. ஏ. நீ போய் அழைத்துக்கொண்டு வா என்பார். சரித்திரம் காணு தது. இதெல்லாம் அவரே சொல்லுகிறூர். சேக்கிழார் சொன்னது இல்லை. சுந்தரரே சொல்லுகிறூர்.

**இந்திரன் மால்பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம்,**
**வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து**

மந்திர மாமுனிவர் இவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே.

இந்திரன்—அவர்தானே இப்போது லீடர். மால்—நாராயணர்; பரவாசு தேவர். பிரமன்—சதுர்முக பிரம்மா. எழிலார் மிகு தேவரெல்லாம் வந்து எதிர் கொள்ள—ஒரு மண்ணுலகவாசி; பதினெட்டு வயது இளைஞரைக் காலங் கண்ட தேவர்கள் வந்து வரவேற்கிறது என்றால் இது வரலாறு சொல்லியிருக்கிறதா? சங்கரரையோ, மத்வாச்சாரியாரையோ, ராமானுஜரையோ அழைத்திருக்கிறார்கள் என்று சரித்திரம் உண்டா? கிடையாது. ஞானசம்பந்தரை அழைத்தார்கள் என்று வரலாறு கிடையாது. மாணிக்கவாசகரை அழைக்கவில்லை. இவர் ஒருவரைத்தான் அழைத்தார்கள். மிகப் பெரியவர். அவர் இந்த யானையைப் பார்த்தவுடனே அழுதார். "எனக்கா இந்த மரியாதை! ஐயோ எனக்கு யானையா?" என்றார் சுந்தரர். "சுவாமி! நீங்கள் அமரவில்லையென்றால் எங்களுக்கு வேலை போய் விடும். நீங்கள் அமருங்கள்.' என்றனர் தேவர்கள். தொழுது அமர்ந்தார். அது விண் வழியாகப் போகிறது. கைலாச மலையிலே போய் அந்த உள் மாடவீதி வழியாக வலம் வருகிறது. அங்கே பெரிய பெரிய மகரிஷிகள். யுகங் கண்டவர்கள். பெரிய பெரிய தாடி. பெரிய பெரிய சடை. பொன்மேனி. மரீசி, "ததீசி முனிவரே! இவர் யார்? இளம் சிறுவர். பரமேசுவரன் ஆரோகணிக்கின்ற ஐராவணம் என்ற வெள்ளை யானை. அது இராண்டாயிரம் தந்தங்களை உடையது. சுவாமி ஏறலாம்; அம்பாள் ஏறலாம்; விநாயகர் ஏறலாம்; முருகன் ஏறலாம். யாரோ ஒரு மானிடன். இளம் பிள்ளை. இன்னாரென்று தெரியவில்லையே." கைலாச மலையிலே பவனி வருகிறவர்களை நீங்கள் யார் என்று

கேட்டால் அது மரியாதைக் குறைவு. சுவாமியையே போய்க் கேட்டு விட்டார்கள். "ஆண்டவனே! உங்கள் யானையிலே யாரோ இளைஞர் வருகிறாரே? யார்?" என்றனர். "அவர் நம்மவர்" என்றார். இது அவர் காதிலே விழுந்தது. இன்னும் கொஞ்சம் அழுதாராம்.

"மந்திர மா முனிவர் இவன் ஆர் என"

கேட்டவர்கள் எல்லாம் வெறும் ரிஷிகள் அல்ல. உருளைக் கிழங்கும் பூரியும் தின்கிற ஆட்கள் அல்ல. சில பேர் சாமியார் என்று பெயர் வைத்துக்கொண்டு எவ்வளவு சாமான் உள்ளே போகிறது? ஒரு சாமியார் துறந்து போய், மூன்று நாள் பொறுத்து திரும்ப வீட்டுக்கு வந்தாராம். மனைவியார் கேட்டார்களாம்; துறந்து போனீர்களே ஏன் வந்தீர்? என்று கேட்டாராம். சுண்ணும்பு டப்பா நடை மாடத்திலே இருக்கிறது; உள்ளே எடுத்து வை. சொல்ல மறந்து விட்டேன். என்றாராம். இவன்போன்றவர்கள் எல்லாம் துறவிகளா? இவர்கள் எல்லாம் முற்றத் துறந்த பற்றற்ற பரம ஞானிகள். அவர்களுக்கெல்லாம் என்ன பேர் சொன்னார்?

"மந்திர மாமுனிவர் இவன் ஆர் என எம்பெருமான்
நம் தமர்..."

தமர் என்றால் உறவு என்று அர்த்தம்.

"நம்தமர் ஊரன் என்றான்
நொடித்தான் மலை உத்தமனே"

சிவபெருமானை உத்தமன் என்கிறார். பரமசிவன் உத்தமன்; அம்பாள் உத்தமி. "இமவான் மடந்தை உத்தமி பாலா", "மத்தள வயிறனை உத்தமி புதல்வனை"—திருப்புகழிலே இந்தப் பிரயோகங்கள்

எல்லாம் வரும். அவள் தான் உத்தமியாம். அதனாலே சுவாமி உத்தமன். அவ்வளவு பெரியவர் சுந்தர மூர்த்தி நாயனார். கையாலத்திலிருந்து அழைப்பு வரப் பெற்றவர். அவருக்கு மேலே பெரியவர் கிடையாது. அவர் திருத்தொண்டத் தொகை பாடி நமக்கு உதவி செய்தார். ஆண்டவனைப் பாடி விடலாம். தொண்டர்களைப் பாட முடியாது. ஆண்டவன் புகழ் நம்முடைய சொல்லுக்கு அடங்கும். தொண்டர்கள் புகழ் அடங்காது. ஏன்? ஆண்டவனுக்கு ஒரு வோட்டு. தொண்டர்களுக்கு இரண்டு வோட்டு. தொண்டர்கள் உள்ளத்திலே இறைவன் இருக்கிறான். சூரியனை எதிர்க்கலாம். சூரியனுடைய அருள் பெற்ற நொய் மணலை எதிர்த்து இருக்க முடியாது கொன்று விடும், சூரிய மணல். பெருமாளையே எதிர்த்தான் ஹிரண்யன். வாழ்ந்தான். பிரகலாதரை எதிர்த்தான், வீழ்ந்தான். அடியார்களை எதிர்த்து வாழ்ந்தவர்கள் கிடையாது. ஆண்டவனைவிட அடியார்களுக்குப் பெருமை அதிகம். அதனாலே திருத்தொண்டத் தொகை பாடுகிற பொழுது சுவாமியே அடி எடுத்துக் கொடுத்தாராம். உலகம் உய்ய நீ பாடு என்றார்.

**“தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்”**

இது சிவனே தந்த முதல். அதற்குப்பின் ஒவ்வொன்றாக அவர் பாடுகிறார்.

**“திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்”**

பெரியவர்களைக் குலம் குறித்துச் சொல்லக் கூடாது; ஆனால் அதே பெயர் உள்ளவர்கள் மூன்று பேர் இருக்கிறார்கள். திருநீலகண்ட நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீல நக்க நாயனார். அப்பொழுது எந்த அன்பர் என்ற சந்தேகம் வருமே. அதற்காகக்

கொஞ்சம் குலம் குறித்து இந்த ஒன்றே ஒன்றைச் சொன்னார்.

'திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்'

அப்படியே பாடிக் கொண்டே வந்தார். கடைசியிலே என்ன திருவுளம் பற்றினார்? எனக்கு முந்தியிருந்த அடியார்களைப் பாடினேன். என் சம காலத்தில் இருந்த அடியார்களைப் பாடினேன். எனக்கு அப்பாலும் ஞானிகள் வருவார்களே. 1920லே ஒரு சிவஞானி வருவாரே. அவர்களை இப்போதே வணங்க வேண்டு மென்று,

"அப்பாலும் அடி சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்"

எனக்குப் பின்னாலே யாராவது வந்தால் அவர்களுக்கும் இப்போதே வணக்கம் செலுத்துகிறேன் என்றார். அதைத் தான் நானும் சொன்னேன். பின்னாலே வருகிறவர்களுக்கும் வணக்கம் என்று. இதெல்லாம் அவர்கள் போட்ட ரோடு. நாமாக எங்கே ரோடு போட்டுக் கொண்டு போகின்றாப் போலே இருக்கிறது?

இப்போது பேச இருப்பது சைவ சித்தாந்தம். இது மிகவும் கடினமானப் பகுதி. லகுப்படுத்திச் (எளிதாக்கிச்) சொல்கிறேன். கொஞ்சம் இரும்புக் கடலையாக இருக்கும்; சஹாரா பாலைவனப் பிரயாணம் மாதிரி இருக்கும். அதனால்தான் பலபேர் படிப்பதில்லை. சாதாரணக் கதை என்றால் எல்லோரும் படிப்பார்கள். "சோலைவனக் கிளி"—கிழவன் கூடப் படிப்பான். "நாம் இருவர்", "இருவரும் ஒருவர்" மிகவும் விரும்பிப் படிப்பான். சித்தாந்தம் என்றால் படிக்க மாட்டான். நான் கூடுமானவரை எளிதாகச் சொல்ல முயற்சிக் கிறேன்.

எள் இருக்கிறதே அதற்குத் 'திலம்' என்று பேர். அந்த எள்ளின் தொடர்பு உள்ள பொருள் தைலம். திலத்தின் தொடர்புடையது, தைலம். தைலம் போட்டுத் தேய்த்துக்கொள் என்கிறார்களே. 'திலா' என்ற எள்ளிலிருந்து வந்தது என்பது அதற்குப் பொருள். 'சிலா' என்றால் கல். அந்த மூர்த்தி சிலையினாலே, (தாம்பரத்தாலே) ஆனது என்கிறார்களே. சிலை என்றால் கல். அந்தச் சிலை என்ற கல்லின் தொடர் புடையது சிலை. ஸ்ரீசைலம், சிவ சைலம். சைலம் சிலாவின் தொடர்புடையது என்று பொருள். திலத்தின் தொடர்புடையது தைலம். சிலாவின் தொடர்புடையது சைலம். அதுபோல் சிவத்தின் தொடர்புடையது சைவம். சைவம் என்ற வார்த்தைக்குச் சிவத்தோடு தொடர்பு கொண்டது என்று அருத்தம். கொஞ்சம் நுட்பமாகக் கேட்க வேண்டும். சிவத்தோடு எது தொடர்பு கொள்ளவில்லை? அவர்தான் எல்லாவற்றிலும் இருக்கிறாரே. அவரின் தொடர்பு இல்லாத பொருள் ஒன்று உண்டா?

"அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்"

என்பார் தாயுமானார்.

ஔவையார் நடந்தே போகிறவர். அப்போது ஏது பஸ்? ஆட்டோ ரிக்ஷா கிடையாது. நடந்து களைத்து ஒரு சிவாலயத்தில் போய் சிவலிங்கத்திற்கு நேராகக் கால் நீட்டி ஒரு தூணில் (கம்பத்தில்) சாய்ந்தார். எப்போதுமே உலகத்தில் ஒரு பெண் மணிக்கு இன்னொரு பெண்மணியைக் கண்டால் பிடிக்காது. "அவள் என்ன ராங்கா புடவை கட்டி யிருக்கிறாள்? தலை வாரி எப்படி முடித்திருக்கிறாள் பார்" என்பார்கள். எதுவும் ஒரு அசூயை. உமாதேவியாருக்கு ஔவையாரைப் பிடிக்கவில்லை. "கர்வம் பிடித்த

கிழவி. இந்த வயசாகியும் கர்வம் போகவில்லை. "சுவாமி! உங்களுக்கு முன் காலை நீட்டி இருக்கிறாளே" என்றார். "அவள் வாயில் கோலைக் கொடுக்காதே; அவள் நிறையப் படித்தவள்." "இல்லை சுவாமி! நான்தான் கேட்டு அடக்க வேண்டும். நான் ஜகன்மாதா; திரிபுர சுந்தரி." "சரி உன் இஷ்டம்". "கிழவி! உனக்கு ஞானம் இருக்கிறதா? சுவாமிக்கு முன் கால் நீட்டி இருக்கிறாயே" என்றார். ஔவையார் எழுந்து, "பராசக்தி! லோகமாதா! ஜகதாம்பிகே! கருணாம்பிகே! சிறியேன் செய்த பிழையைத் தேவரீர் பொறுக்க வேண்டும் அம்மா."

நீ யார்?

"ஞால முதல்வி இமயம் பயந்த மின்
நீலி கவுரி பரை மங்கை குண்டலி
நாளும் இனிய கனி எங்கள் அம்பிகை த்ரிபுராயி

நாத வடிவி அகிலம் பரந்தவள்
ஆலினுதரமுள பைங்கரும்பு வெண்
நாவலரசு மனை வஞ்சி தந்தருள் பெருமானே"

பாடத் தெரிந்தவர் ஔவையார். தெரியாத போது விட்டு விடலாம். தெரிந்தபோது என்ன. "ஆரபிமானம்"—ஆர்மேலே அபிமானம். ஒருவர் மேலும் இல்லை. பறந்து விரிந்த சிந்தை உடையவர் ஔவைக் கிழவி. "தாயே! நீ சர்வலோக மாதா. நான் சின்னப் பெண். குழந்தைகள் செய்த குற்றத்தைத் தாய் பொறுக்க வேண்டாமா? ஜகன் மாதா! சுவாமி முன் காலை நீட்டி விட்டேனோ? மன்னிக்க வேண்டும். அவர் இல்லாத இடத்தைக் காட்டுங்கள், அங்கு நீட்டுகிறேன்" என்றார். "தேவி! வாயைக் கொடுக்காதே என்றால் கேட்டாயா? நான் இல்லாத இடம் எங்கே நீ

காட்டப் போகிருய்?'' என்ருர் சுவாமி. அவன் தான் எங்கும் நீக்கமற நிறைந்தவன் ஆயிற்றே.

''பார்க்குமிட மெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணுனந்தமே''

ஆண்டவன் எங்கே இல்லை? (திலத்தின் தொடர்புடையது தைலம். சிலாவின் தொடர்புடையது சைலம். சிவத்தின் தொடர்புடையது சைவம்.) சிவம் எதோடு தொடர்பு உடையது இல்லை? எல்லாவற்றிலும் இருப்பது. எனவே எல்லாம் சைவம். நீ கிறிஸ்துவன் என்று சொல்லிக்கொள். முஸ்லிம் என்று சொல்லிக்கொள். நீ தெய்வம் இல்லை என்று சொல்லிக் கொள். என்ன வேணுமென்ருலும் சொல்லிக் கொள். நீ சைவம்தான். என்று வாரியாரா சொல்வது? திருஞானசம்பந்த சுவாமிகள் சொல்கிருர்.

''நின்றதுவும் சரிப்பதுவும் சைவமேயாய்''

டைரியில் குறித்துக் கொள்ளுங்கள். "நின்றதுவும் சரிப்பதுவும்" என்ருல் என்ன? உங்கள் வீட்டுப் பசலைக் கொடி சைவம், அவரைச் செடி, அவரைக் கொடி சைவம். உங்கள் வீட்டு உரல் சைவம். அம்மி சைவம். ஏன்? அங்கும் சிவன் இருக்கிருர் என்று ஞான சம்பந்தர் கூறுகிருர்.

''நின்றதுவும் சரிப்பதுவும் சைவமேயாய்''

"ஐயா, நான் கடவுளை ஒப்புக் கொள்ளாமல் இருந்தேனே." ஒப்புக் கொள்ளாமல் இருப்பது உன் உரிமை. ஆனல் அவன் உன்னிடத்தில் கலந்து இருக்கிருன். சில பேர் தாயாரை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். "நீ பெற்றவளா?" என்பான். அவள் சிரிப்பாள். "நான் இல்லாமலா நீ பிறந்தது? நீ என்ன காளான் மாதிரி

பூமியில் முளைத்தாயா? ஆலங்கட்டி மழையில் விழுந்தாயா? அவள் (மனைவி) பேச்சைக் கேட்டுக் கொண்டு பேசுகிறாயா?'' அவள் திண்டுக்கல். அந்தத் திண்டுக்கல் அம்மா பேச்சைக் கேட்டு அம்மாவை மறுப்பது போல ஆணவ மலத்தினாலே கடவுளை மறுப்பவர்கள் உண்டு. அப்போதெல்லாம் சுவாமி சிரிப்பாராம். அவன் என்னையே இல்லை என்கிறான்.

''நக்கு நிற்பன் அவர் தமை நாணியே''

என்பது அப்பர் தேவாரம். இப்பொழுது சைவன் என்ற வார்த்தைக்குப் பொருள் சொன்னேன். சிவத்தின் தொடர்புடையது சைவம். சரி. அதை உணர்கின்றவன் சைவன். உணர்ச்சியில்லாமல் இருக்கலாம்தானே. அது சைவம். உணர்ந்து அனுபவிக்கிறவன் சைவன். இனி சித்தாந்தம் என்றால், சைவ சித்தாந்தம். சித்தம்-முடிவு. அந்தம் என்றால் முடிவு. அந்த முடிந்த முடிவாக இருப்பது சைவ சித்தாந்தம். இதுதான் சரியான அர்த்தம். சிலர் சித்தர் முடிவு என்று சொல்வார்கள். சிலர் சித்தத்தின் முடிவு என்று சொல்வார்கள். அந்தக் கருத்துக்கள் எல்லாம் பிழை. முடிந்த முடிவு எது? வேதாந்தம். வேதத்தின் அந்தம் வேதாந்தம். அந்த வேதாந்தத்தின் முடிவாக இருப்பது சித்தாந்தம். அதுதான் முடிந்த முடிவின் முடிவு. "வேதாந்தத்தின் தெளிவான சைவ சித்தாந்தம்'' என்கிறார் குமரகுருபர சுவாமிகள், பண்டார மும்மணிக் கோவையில். வேதத்தின் நுண்பொருளாய் இருக்கின்ற உபநிடதங்களின் சாரமாய் இருப்பது சைவ சித்தாந்தம். அதை எடுத்து விளக்கமாகச் சொல்கிறார் காசிப முனிவர் சூராதி மக்களுக்கு. மிகத் தொன்மையான விஷயம். எத்தனையோ யுக யுகங்களுக்கு முன் காசிப முனிவருக்கு மூன்று புதல்வர்கள் தோன்றினார்கள். சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் என்று. அந்தப் பிள்ளைகளைப் பக்குவமாய்

இருக்க வைத்து, [பிள்ளைகளுக்கு நல்ல புத்தி சொல்ல வேண்டும்.] ஒரு அம்மையார் சொன்னார்கள்.

**" ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே அவனைச்**
**சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"**

சொத்து சேர்த்து வைப்பது இல்லை. அவனைச் சான்றோனாக்க வேண்டியது பிதாவின் கடமை.

**"நன்னெறி நல்குதல் வேந்தர்க்குக் கடனே"**

ராஜா வரி வசூல் செய்து ரோடு போடுவது இல்லை. நன்னெறி நல்குதல்—மக்களுக்கு நல்ல நெறிகளை எடுத்துச் சொல்லுதல். அதற்கு ஒரு கழகம் வைத்து மக்களிடம் போய் சாத்திரங்களைச் சொல்ல வைத்தல். இப்போது அரசாங்கம் "தவறு செய்வாயேயானால் உன்னைத் தண்டிப்பேன்" என்று சொல்கிறது. அது எப்படி இருக்கிறது? மேலே களிம்பு போடுவதுபோலே. அது மேல் சிகிச்சை. பாவம் செய்வாயேயானால் உன்னை அறம் சீறும். நீ தண்டிக்கப்படுவாய், என்று உள்ளுக்குள்ளே உணர்த்துவது சமயம். அதனால்தான் அரசாங்கம் செய்யாத வேலையைச் சமய குருமார்கள் செய்கிறார்கள். பழங்காலத்திலே சமய குருமார்களை அரசர்கள் பேணி வணங்கினார்கள். அதனாலே,

**"நன்னெறி நல்குதல் வேந்தர்க்குக் கடனே"**

காசிப முனிவர் அந்த மூன்று புதல்வர்களை இருக்க வைத்து, "குழந்தைகளா! பெரிய தத்துவத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று சைவ சித்தாந்தத்தைச் சொல்லுகிறார் காசிப முனிவர். வாரியார் சொல்லுகிறார் என்று எண்ணாதீர்கள். அவர் சொன்னதை அடியேன் சொல்லுகிறேன்.

"சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன"

சான்றவர்-பெரியோர்கள்; அறிவிலே உயர்ந்தவர்கள். ஆய்ந்திடத் தக்கவாம் பொருள் மூன்றுள-ஏன் முப்பது என்று சொல்லக் கூடாதா? ஒரு முந்நூறு என்று கூறக் கூடாதா? மூன்று; அது என்னென்ன? தொல்பதி—பதி என்றால் கடவுள். ஆருயிர் தொகை—ஆன்மாக்கள். தளை—அந்த ஆன்மாவிலே உள்ள பாசம்; தளை.

"ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான் திகழ் தளையென வகுப்பர் அன்னவே"

பதி—பசு—பாசம். பதி என்றால் இறைவன்; பசு என்பது ஆன்மா; பாசம் என்பது ஆன்மாவைப் பிடித் திருக்கிற ஒரு கட்டு; தளை. அதற்குப் பல பேர்கள் உண்டு. மலம், பாசம், தளை என்று. பதி—பசு—பாசம். இந்தச் சென்னைக் கடற்கரையிலே விவேகானந்தஜீ பிரசங்கம் பண்ணினார். அப்போது தஞ்சாவூர் நல்லு சாமிப்பிள்ளை அவர்கள் விவேகானந்தரைப் பாராட்டி னார். "நீங்கள் திருஞான சம்பந்தரைப் போல வெளி நாட்டிலே சென்று பர சமயங்களை எல்லாம் எதிர்த்துப் பேசி, அவைகளுக்கெல்லாம் நாயகமானது இந்த வைதிக சமயம் என்று சொல்லி வந்தீர்களே, உங்க ளுக்கு நாங்கள் நன்றி பாராட்டுகிறோம்." என்று பாராட் டினார். இருப்பிடம் வந்ததும், "நல்லுசாமிப்பிள்ளை! இங்கே வா; ஞானசம்பந்தர் என்று சொன்னாயே, அவர் யார்?" என்றார்கள். விவேகானந்தர், வடக்கே இருந்த மகாமுனிவர். "சுவாமி! சைவ சித்தாந்தத்திற் குக் குருமகான் அவர்தான்; ஆசாரியர்; எங்களுக்குக் குரு" என்றார். அவர் கொள்கை என்ன? என்றார். பதி— பசு—பாசம். இப்போது நான் சொன்னதை விவே கானந்தர் ஜே. எம். நல்லுசாமிப்பிள்ளையிடம் கேட்டார்,

மூன்று என்றீரே, ஐந்து, ஆறு இருந்தால் என்ன? என்றார். சுவாமி! அதற்கு மேல் இருக்க முடியாது என்றார்.

விவேகானந்தருக்கு ஜே. எம். நல்லுசாமிப் பிள்ளை சொன்னது. "சுவாமி! தானே அறிகின்ற பொருள் ஒன்று; (பதி—பசு—பாசம் என்று சொல்ல வில்லை.) அறிவித்தால் அறிகின்ற பொருள் ஒன்று; அறிவித்தாலும் அறியாத பொருள் ஒன்று. இவ்வளவு தான் சுவாமி. அவருக்கு உணர்த்துகின்ற முறை வேறு.

தானே அறிகின்ற பொருள் எது? இறைவன். இறைவனுக்கு எல்லாம் தெரியும். நாம் எண்ணுகிறது; தனியாக அறையில் இருந்து பொய்க் கணக்கு எழுதுவது எல்லாம் அவனுக்குத் தெரியும். இருப்பதெல்லாம் தெரியும், பேசுவதெல்லாம் தெரியும், செய்வது எல்லாம் தெரியும். ஆன்மாக்களாகிய நமக்கு அறிவித்தால்தான் அறிய முடியும். உங்களுக்கு என்ன வயது என்று கேட்டுத்தான் தெரிந்துகொள்ள முடியும். 64 ஆகிறது. மூன்று குழந்தைகள்—சம்சாரம்—ஆமாம் சௌக்கியம். நிலம் இருக்கிறதா? ஆமாம். 20 ஏக்கர் இருக்கிறது. இவையெல்லாம் கேட்டுத்தான் தெரிந்துகொள்ள முடியும். ஒன்றை மட்டும் கேட்கக் கூடாது. உங்களுக்கு அறிவு இருக்கிறதா என்று கேட்கக் கூடாது பெரிய கூட்டத்தில் ஒருவர் நகத்தைக் கடித்துக்கொண்டிருந்தால் அறிவு இல்லையென்று அர்த்தம். அதைச் செயலில் தெரிந்து கொள்ளலாம். ஆகவே அறிவித்தால் அறிவது ஆன்மா; அறிவித்தாலும் அறியாதது பாசம். இந்த மேஜைக்கு என்ன தெரியும்? நீ என்னுடைய மேஜை என்று சொன்னால் தெரியுமா? இந்த உலகம் ஜடம். பாசம் ஜடம். ஒன்றும் தெரியாது. யார் சொன்னது? ஜே. எம். நல்லுசாமிப்

பிள்ளை, பரம ஞானியாய் அமெரிக்காவில் வேதாந்த மழை பொழிந்த அந்த ஞான சிங்கத்திற்குச் சொல்கிறார். சுவாமி சரி என்றார். விவேகானந்தர் ஒப்புக் கொண்டால், நீங்கள் ஐயுறலாமா? விவேகானந்தரை விடவா நீங்கள் பெரியவர்கள்? வேதாந்த சிங்கம். அநுபவஞானி, விவேகானந்தர்.

எப்படிச் சொன்னார்? தானே அறிகின்ற பொருள் ஒன்று. அறிவித்தால் அறிவது ஒன்று. அறிவித்தாலும் அறியாதது ஒன்று. தானே அறிகின்ற பொருள் இறைவன், அறிவித்தால் அறிவது ஆன்மா, அறிவித்தாலும் அறியாதது பாசம். பதி—பசு—பாசம். அது 'கோடு' வார்த்தை. அதற்கு விளக்கம் சொன்னார். அவன் எங்கும் நிறைந்து இருப்பான். இன்பமயமாக இருப்பான். ஆனால் இன்னொன்று கேட்டுக் கொள்ளுங்கள். இல்லாத பொருள் ஒன்று புதிதாகத் தோன்றாது. உள்ள பொருள் சிதைந்து போகாது. இதுதான் சைவ சித்தாந்தத்தின் அடிப் படையான தத்துவம். சற்காரிய வாதம் என்று பெயர். இல்லாதது நூதனமாகத் தோன்றுவதில்லை. இந்த உயிர்களையெல்லாம் இறைவன் படைக்கவில்லை. அப்படிச் சில பேர் எண்ணுகிறார்கள். எத்தனை எத்தனையோ குழறுபடிகள். ஆன்மாவே இறைவன் என்று சொல்கின்ற மதம் உண்டு. என்றைக்குமே அவன் வேறு நான் வேறு என்று சொல்கின்ற மதம் வேறு.

நமது சைவ சித்தாந்தம் தெளிவாகச் சொல்கிறது. ஆன்மாவாகிய நீ அவனை அடைந்து ஒன்று படுகின்றாய். அதைத்தான் இது உணர்த்துகிறது; இந்த சின் முத்திரை. இந்த இரண்டு விரலும் ஒன்று படுவதுபோல் ஜீவனும் சிவனும் ஒன்றுபடுகிறது. இரண்டே என்று சொலகின்றவர் சிலர். ஒன்றே என்று

சொல்கின்றவர் சிலர். அத்வைதம் என்று எண்ணுப் பொருளிலே வைத்துச் சொல்வது சைவ சித்தாந்தம். ஒன்றுமல்ல, இரண்டுமல்ல. கலப்பினுலே ஒன்ருகிறது. பொருளினுலே வேருகிறது. நான் உதாரணம் சொல் கிறேன். கண்ணிலே ஒரு ஒளி இருக்கிறது. கண் ஒளி. ஒளி இல்லையென்ருல் ஒன்றும் தெரியாது. கண் இருக்கும். ஒன்றும் தெரியாது. “யாரு? ‘நான் சரோஜினி’. வாம்மா, எனக்கு ஆறு மாசமாக ஒன்றும் தெரியவில்லை.” என்பான். கண் இருக்கும்; ஒளி இருக்காது. ஆனுல் இந்தக் கண்ணொளியே எல்லா வற்றையும் பார்க்காது. அமாவாசை நடுராத்திரி; விளக்கு இல்லை. ‘சுவிச்’ போட்டால் தீபம் எரியவில்லை. கார்ப்பரேஷனிலேயே போய்விட்டது. கண் இருக் கிறது. கண்ணில் ஒளி இருக்கிறது. வந்தது ஆணு, பெண்ணு, தெரியுமா? (அது யார் நிற்கிறது? அத்தான். நான்தான் கொழுந்தியாள். சர்வ ஜாக் கிரதையாகப் பழக வேண்டும்.) இன்னெரு ஒளியின் துணையினுலே கண்ணொளி மற்ற பொருளைப் பார்ப்பது போல, ஆன்ம போதத்திற்கு இறைவன் அருளறிவு, துணை செய்தாலொழிய ஆன்மா தானே ஒன்றை அறியாது. இந்த உவமையை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கண்ணொளிக்குக் கதிரவனுடைய ஒளி, துணை செய்வதுபோல—டார்ச் லைட் ஒளி துணை செய்து, கண்ணொளி எல்லாவற்றை யும் பார்ப்பது போல, ஆன்ம அறிவானது இறை வனுடைய அருள் துணை செய்து எல்லாவற்றையும் அறிகிறது. ‘‘அறிவித்தால் அறிவது.’ ஆனுல் இறைவன் என்றைக்கு உண்டோ அன்றைக்கே ஆன்மா உண்டு. ஆன்மாவைக் கடவுள் படைக்கவில்லை. இவையெல்லாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய பகுதி. கொஞ்ச நாளைக்கு முந்தி ஒருத்தர் கீர்த்தனை பாடினுர். சொல்கிறேன்,

"வேலனே இந்த வீணனை ஏன் படைத்தாய்—" அடாணாவில் ஒரு கீர்த்தனை-வேலனே- (பாஸ்கர ராஜு இயற்றியது.) சிறு வயதில் பஜனையில் பாடுவார்கள். "வேலனே இந்த வீணனை ஏன் படைத்தாய்—" அந்த கருத்து, பிழை. இறைவன் ஆன்மாக்களைப் படைக்க வில்லை. ஆண்டவன் என்றைக்கு உண்டோ அன்றைக்கே ஆன்மாவும் உன்டென்று திருமூலர் சொன்னார்.

**"பதியினைப் போல் பசு பாசம் அனாதி"**

ஆதி இல்லாதது அனாதி. இதைத் தாயுமானார் சொன்னார்.

**"என்று நீ அன்று நான்"**

நீ என்றைக்கு உண்டோ நான் அன்றைக்கு உணடு. அப்போது இறைவனும் ஆன்மாவும் ஒன்றா? இல்லை.

**"என்றும் நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ"**

இறைவனே நீ என்றைக்கு உண்டோ அன்றைக்கே நானும் உண்டு. ஆனால் நீ ஆண்டவன். நான் அடிமை. எதுபோல? 25 லட்ச ரூபாய் பங்களா. ஒரு முதலாளி. அவர் பெயர் செல்வக்கணபதி. ஏர்கண்டிஷன். அதே பங்களாவில் ஒரு வாச்மேன் இருக்கிறான். அவர் ஆண் டானாக இருக்கிறார். அவன் வாச்மேனாக, அடிமையாக இருக்கிறான். பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் பார்த்திருப்பீர் களே. ஏர்கண்டிஷனில்—மெத்தையில் உட்கார்ந்து இந்து பேப்பர் பார்த்துக்கொண்டு போகிறார், தகுதி யுள்ள ஒருவர். வசதி இல்லாதவர் 'கீழ்வகுப்பில்' கூட் டத்தில் புளிமூட்டை மாதிரி ஒற்றைக்காலில் நடராஜா போல நின்று கொண்டு போகிறார். அரக்கோணம் வந்து விட்டதா? என்பார். இன்னும் அவுட்டரே தாண்ட

வில்லை. இவர் துக்கியாகப் பிரயாணம் செய்கிறார். அவர் சுகியாகப் பிரயாணம் செய்கிறார். இதைத்தான் ஆதிசங்கரர்,

"அஹம் பாரதா துக்க பவான் தீனபந்தோ"

அஹம்-நான். பாரதா துக்க-பெரிய துக்கியாக இருக்கின்றேன். "முருகா! நீ பெரிய தீனபந்துவாக இருக்கிறாய்" என்று ஆதிசங்கரர் சுப்ரமண்ய புஜங்கத்தில் சொல்கிறார். "அஹம்பாரதா"—மனுஷனுக்கு எத்தனையோ கவலை. எல்லோருக்குமா நல்ல பிள்ளை பிறக்கிறது? அங்கிருந்து வரும்போதே இரண்டாளாக வருவான். ஜேபி நிறைய 5, 6 பெட்டி இருக்கும். துக்கம். காலேஜில் சேர்க்க அமைச்சர், பதிவாளர் கை காலைப் பிடித்துச் சேர்ப்பான். அவன் அங்கேயே ஒன்றைச் சேர்த்துக் கொள்வான். இதெல்லாம் வெளியில் சொல்லாதீர்கள். வருமானவரி துக்கம். விற்பனைவரி துக்கம். குமாஸ்தாவின் ஆரவாரம். "நீ தரலேன்னா நான் எழுதிப் போட்டுவிடுவேன், (வருமானவரி ஆபீஸுக்கு)" என்னத்தைப் பண்ணித் தொலைக்கிறது. "அஹம் பாரதா துக்க பவான் தீனபந்தோ" நான் துக்கத்தின் வடிவம்; ஆண்டவன் சுக சொரூபி. ஆண்டவன் உண்டான போதே நாம் இருக்கிறோம். அவன் சுகியாக இருக்கிறான். நாம் துக்கியாக இருக்கிறோம். இந்தத் துக்கம் எதனாலே வருகிறது என்று சொல்லப் போகிறேன். அது தானே சைவ சித்தாந்தம். இந்தத் துக்கம் எதனாலே விளைகின்றது?

துக்கத்துக்கெல்லாம் மூல காரணம் ஆணவமலம். அது இடையிலே வந்ததில்லை? என்றைக்கும் உள்ளது. மூல மலம்; சகஜ மலம். ஆன்மா என்றைக்கு உண்டோ அன்றைக்கே ஆணவ மலம் உண்டு. உதாரணம்,

என்றைக்குத் (தாம்பரம்) தாமிரம் உண்டோ அன்றைக்கே களிம்பு உண்டு. அந்தக் களிம்பு போனால் அந்தச் செம்பு தங்கமாகும். அப்படி மலம் போனால் சீவன் சிவமாகும். சிவமாகும் தன்மையை அடியேன் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அது எளிதல்ல. சுலபமாக முடிகிறதில்லை. இன்னொரு முறை சொல்லுகிறேன். இதைப் பாண்டி நாட்டு முதலமைச்சராக இருந்த மணிவாசக சுவாமிகள்—அந்தக் குருநாதர் எப்படிச் சொன்னார்?

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

அற்புதமானப் பாட்டு. சித்தமலம் அறுவித்து சிவமாக்கி—ஜீவனைச் சிவமாக்கி விட்டாராம் ஆண்டவர். நதி போய்க் கடலோடு கலந்தால் நதி ஜலம் கடல் நீராக மாறிவிடும். ஒருத்தன் கேட்டான், எப்படி சார் இரண்டு சாமான் ஒன்றாகுமென்றான். நாழிஎன்றால் கால்படி. கால்படி உப்பு. அப்புஎன்றால் தண்ணீர். கால்படி அப்பு. ஒரு கால்படி உப்பு அளந்து ஒரு கால்படி தீர்த்தம் அளந்து ஒரு எவர் சில்வர் குண்டானில் இடுகிறான். பிறகு அளக்கிறபோது அரைபடியா இருக்கும்? இரண்டும் சேர்ந்து கால்படி ஆவது போல, ஜீவனும் சிவனும் சேர்ந்து ஒன்றாகி விடுகிறது.

"நாழி உப்பும் நாழி அப்பும் நாழியானவாறு போல்"

என்பது சிவ வாக்கியர் பாடல். இதெல்லாம் நானே வலிந்து யோசனை பண்ணிச் சொன்னது இல்லை. எப்பவுமே சொல்லமாட்டேன். எந்த போஸ்ட்மேனாவது அவனாக ஒரு தபால் எழுதிக் கொடுத்திருக்கிறானா? போஸ்ட்மேன் செய்யாத வேலையா நான் செய்வேன்? மகான்கள் சொன்னதையே யுகங் கணக்காகச் சொல்லவேண்டுமே.

நம்முடைய அற்ப அறிவினுலே என்ன சொல்லமுடியும்? நமக்கு என்ன ஞானம் இருக்கிறது? அவர்கள் அல்லவா பூரண ஞானம் பெற்றவர்கள். அந்த மகான் கள் சொல்லுகிருர்கள்; அதைச் சிறியேன் சொல்லு கிறேன். வந்த தபாலை போஸ்ட்மேன் கொடுக்கிற மாதிரி—அவன் அதைக் காலத்திலே கொடுக்கிருனே, அதற்கு நன்றி சொல்ல வேண்டும். ஆகவே "நாழி உப்பும நாழி அப்பும் நாழியானவாறு போல்", அப்படி ஆவதற்குத் தடையாக இருப்பது அந்த மூல மலம். அந்த மூல மலத்தை விலக்குவதற்கு இறைவன் இரண்டு மலங்களைக் கொடுக்கிருன். ஒன்று மாயா மலம். இன்னென்று கன்ம மலம். ஒரு மலத்தைப் போக்க இரு மலமா? என்ன விபரீதம்? என்று ஒரு கேள்வி. காலிலே ஒரு முள் குத்திஞல், அந்தச் சிறிய முள்ளை ஒரு பெரிய முள்ளால்தானே எடுக்க வேண்டும்? முள் எந்த அளவோ 'அந்த அளவு முள்ளைஎடுத்தா குத் துவோம்? சிந்தியுங்கள். முள்ளை முள்ளால்தான் குத்த வேண்டும். வைரத்தை வைரத்தால்தான் அறுக்க வேண்டும். குழந்தைகள் மலம் போனுல் பசுவின் மலத் தாலேதான் சுத்தம் செய்கிருர்கள். சாணி மலம் தானே. பெண்கள் சத்தம் போட்டால் "வாயை மூடு". என்று இவன் சத்தம் போட்டுத்தான் அடக்க வேண்டும். சத்தத்தைச் சத்தத்தால், அடக்குமாப் போலே வைரத்தை வைரத்தால் அறுப்பது போலே, மானைக் காட்டி மானைப் பிடிப்பது போலே, மலத்தை மலத்தால் தான் போக்க வேண்டும் என்று இறைவன் எண்ணுகிருன். அப்போ இருக்கிற ஆணவ மலத்தைப் போக்க கன்ம மலமும், மாயா மலமும் தருகிருன் இறைவன். மாயாமலம் என்று சொல்கிறேன். அது ஒரு டார்ச் லைட் போலே. அதுதான் கொஞ்சம் வெளிச்சம். ஆணவ மலம் ஒரே இருட்டு. அந்த ஆணவ மலத்தைக் கன்ம மலத்தினுலே போக்க வேண்டும். அதற்காக

மாயாமலத்தைக் கொடுத்தான். இப்போது மூன்று மலமாயிற்று. ஆணவம், கன்மம், மாயை. அரிசி உங்கள் எல்லோருக்கும் தெரியும். அரிசிதான் ஆன்மா. அந்த அரிசிக்கு மேலே இருக்கிற உமி மாயா மலம். அந்த நுனியில் இருக்கிற முளை கன்மம். கன்மம் முளைக்கும். நன்ருக அழுத்திப் பிடித்திருக்கும் தவிடு ஆணவ மலம். எல்லாருக்கும் தெரிந்த உவமை. அரிசி யாருக்குத் தெரியாது? அரிசியுடனேயே பழகிக் கொண்டிருக்கிறோம். அதனுல் அந்த உதாரணம் என்றைக்கும் மறக்காது. அரிசி ஜீவாத்மா. மேலே இருக்கிற உமி மாயா மலம். குத்துகின்ற போது முதலிலே எது போகும்? உமி போகும். (மாயாமலம்). இன்னும் கொஞ்சம் குத்திஞல் முளை (கன்மமலம்) போகும். இன்னும் கொஞ்சம் குத்திஞல் தவிடு போகும். (ஆணவ மலம்).

இதுதான் (சுட்டுவிரல்) ஜீவாத்மா. இது (பெருவிரல்) பரமாத்மா. எப்போதும் இந்த சிறுசுகள் (மற்ற மூன்று விரல்கள்) எல்லாம் ஒன்ருக இருக்கும். பெரியவர் அந்தப் பக்கம் ஒதுங்கி விடுவார். என் கையைப் பாருங்கள்; சிறுசுகள் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்திருக்கிறது. பெரியவர் ஒதுங்கியிருக்கிருர். இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? இந்த மூன்று பேரையும் விட்டு விட்டு, இறைவனேடு ஒன்றுபட வேண்டும். எப்படி? இந்த விரல் அசையாது. அப்படியே இருக்கும். இதுதான் மாயா மலம்; இது கன்ம மலம்; இது ஆணவ மலம். பாருங்கள். ஆணவ மலம்தான் ஆன்மாவோடு ஒட்டியிருக்கும். இந்த விரல் இருக்கிறதே இது சுண்ணும்பு தீட்டும், வெற்றிலைக்கு. இது ஆள் காட்டும். வீணை வாசிப்பதிலே அவர் சக்கரவர்த்தி. கிழச் சந்திரனு? இல்லை. பால சந்திரன். அவர் சீர்காழி. கோவிந்தராஜன். ஆளைக் காட்டுகிறது. இது ஆத்மா. இதுதான்

மோதிரம் போட்டுக் கொள்கிறது. (தர்ப்பை மோதிரம்) மணவியை நம்பால் சேர்க்கிறது, கல்யாணத்தில். இந்த விரல் (நடுவிரல்) தனியாக ஒரு வேலைக்குப் போகிறதா, எப்பொழுதுதாவது? பல் விளக்குகிறதா? இது கூட்டத்தோடு கூட்டமாகப் போகுமே தவிர, தனியாக ஒரு வேலைக்குப் போச்சு என்று கிடையாது. ஒன்றும் உபயோகமில்லாத விரல். ஆனால் உயரமாக இருக்கிறது. அப்படி உலகத்துக்கோ, மக்களுக்கோ உதவாதவன்; வீடு பெரிதாக இருக்கும். கார் பெரிதாக இருக்கும். எல்லாம் பெரிதாக இருக்கும். இலை வந்து விழுந்தால் சுத்தமாக வந்து விழும் ஒன்றும் அதிலே இருக்காது. ஒரு நல்ல காரியத்துக்கு நாலணு கொடுக்க மாட்டான். அவனுக்கெல்லாம் நடுவிரல் என்று பெயர். இதைப் படிக்காசுப் புலவர் பாடுகிறுர். என் சொந்தச் சரக்கல்ல.

> **சுண்ணும்பு தீட்ட நல்ஆள்காட்ட மோதிரம் சூட்டமலர்க்**
> **கண்ணுரைக் கூட்ட விரல்நான் கிருக்கக் கதிர்க்கம்பிபோல்**
> **எண்ணு நடுவிரற் கேதாம் உலோபருக்கேது கண்டாய்**
> **கண்ணூர் நுதல் அண்ணல் சேய்வணிகா செந்தில்**
> **காத்தவனே.**

அப்படிப் பரமலோபி இந்த ஆணவ மலம். இந்த ஆன்மா ஆணவத்தோடும், கன்மத்தோடும், மாயையோடும் சேர்ந்து இருக்கிறது. நாம் எல்லாம் ஆன்மாக்கள் தானே. அப்போது என்ன செய்யவேண்டும்? அதிலே இருந்து பிரிந்து இறைவனேடு ஒன்றுபட வேண்டும். இங்கே பாருங்கள், இந்தப் பெருவிரல் ஏதாவது அசைகிறதா என்று. ஆண்டவன் அசைவற்று நிற்கின்றுன். நாம்தான் மும்மலத்தை விட்டு இறைவன் திருவடியில் சேருகின்றேம். சித் என்றுல் ஞானம். முத்திரை என்றுல் அடையாளம். "சின் முத்திரை". இப்படிக் கொஞ்ச காலம் நிஷ்டை பண்ணினுல்

ஆண்டவன் கருணாமூர்த்தி; கிருபா நிதி. அவன் நமக்குச் சலுகை கொடுத்து தன்னோடு சேர்த்துக் கொள்கின்றான். 40 ரூபாய் சம்பளத்தில் இருந்த ஒருவர் நன்றாகத் திறமையாக, நேர்மையாக இருந்தால் நாலணா (பார்ட்னராக) கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்வார். முந்தி 40 ரூ. 50 ரூ. சம்பளக்காரன் இப்போது பார்ட்னராக-கூட்டாளியாக ஆகிவிடுகிறான். அதுபோல அடிமையாய் இருந்த ஆன்மாவைத் தன்னோடு சேர்த்துக் கொள்கிறான். இப்படி வந்துவிடும். இப்படி இருந்தது இப்படி வருகிறது. (பெருவிரல் அடியில் பொருந்தியிருந்த ஆள்காட்டு விரல், பெரு விரலின் நுனியில் பொருந்தியிருத்தல்) இது முதிர்ச்சி. சாதனையின் முதிர்ச்சி. இது சாதக சின் முத்திரை. இது சாத்ய சின்முத்திரை. இது போதக சின்முத்திரை. ஆதிசங்கரர், மாணிக்க வாசகர், தக்ஷிணா மூர்த்தி ஆகியோர் இப்படிக் கையை வைத்திருப்பார்கள். அது போதிப்பது.இதுதான் சிறந்த கருத்து. இதுதான் சைவ சித்தாந்தம். எல்லோரும் தெரிந்து கொள்ளுங்கள் என்று ஆண்டவன் காட்டுகிறான். நீயும் நானும் ஒன்றாக இருக்கிறோம், பார். முன்பு நீ அடிமையாக இருந்தாய். நான் ஆண்டானாக இருந்தேன். முன்பு குமாஸ்தாவாக இருந்தவனைப் பார்ட்னராக – பங்குதாரனாக ஆக்கி, சரக்கு வாங்க ஆலோசனை பண்ணுவார். இன்னாருக்கு நாற்பதாயிரம் கொடுக்கலாமா? எனக் குமாஸ்தாவைக் கேட்க மாட்டார். நாலணா (பார்ட்னரை) பங்குதாரரை அனுசரித்துப் போவார். அவன் கூட்டாளி அல்லவா? இலாப நஷ்டத்திற்கு உடையவன் அல்லவா? வியாபாரம் பண்ணு'பவருக்கு நன்றாகத் தெரியும் தானே. அது மட்டும் இல்லை.

நம் குழந்தையை யாருக்குத் தரலாம் என்று மனைவியைக் கேட்டுத்தான் செய்வான். மனைவி

என்ன அடிமையா? வாழ்க்கைத் துணை நலம். "பார்வதி! இந்தப் பையனுக்கு நம் பெண்ணைத் தரலாமா?" என்பான். "வேண்டாங்க, ஏனுங்க அன்றைக்குப் பார்த்தோம் ஸ்கூட்டரில் வேறு ஒரு அம்மாவோடு போனான்." என்பாள். அந்த அம்மாள் மிக்க நுட்பமாகக் கவனித்து இருப்பாள். அவன் மனைவியைக் கேட்டுச் செய்வான். அப்படி ஆன்மாவும், பரமான்மாவும் ஒன்றுபடுகிறது. சிவாத்வைதம் அது. இதற்கு என்ன சொன்னேன்? சாதக சின்முத்திரை, சாத்ய சின் முத்திரை, போதக சின் முத்திரை. அந்த நிலையை அடைவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? தீவினையைச் செய்யக் கூடாது. நல் வினையை நிஷ்காம்யமாகச் செய்ய வேண்டும். சாமியைக் கும்பிடுவது புண்ணியம் என்று கும்பிடக் கூடாது. என் கடன் பணி செய்து கிடப்பதே. நான் இறைவனை வணங்குவது என்னுடைய கடமை. ஒருவருக்கு உதவி செய்வது, சிவன் தந்தது, சிவனுக்குத் தருகின்றேன். அந்த உடைமை என்னுடையது அல்ல, ஈசன் தந்தது. ஈசன் தந்ததை ஈசனடியாருக்குத் தருகின்றேன் என்று, பூஜை செய்தாலும், ஒருவருக்கு ஒன்றைக் கொடுத் தாலும், கோயிலுக்குப் போனாலும், எல்லாம் நிஷ்காம்ய மாகப் பலா பேக்ஷை இல்லாமல் செய்வது. தீவினை செய்வதில்லை. நல்வினை நிஷ்காம்யமாகச் செய்வதனாலே இருவினை ஒப்பு உண்டாகும் அதற்குப் பிறகு சாதனை முதிர்ச்சியினாலே முதலில் மாயா மலம் விலகும். பிறகு கன்ம மலம் விலகும். பிறகு ஆணவ மலம் விலகும். அப்பொழுது இருவினையும், மும்மலமும் போனால் அந்த ஜீவனும், சிவனும் ஒன்றுபடுகிறது. இந்த மிகப் பெரிய தத்துவத்தை அருணகிரிநாத சுவாமிகள் திருவிடைமருதூர்த் திருப்புகழிலே,

"இருவினை மும்மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயும் நானுமாய்
இறுகும் வகை பரம சுகம் அதனையருள் இடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா இமையவர்
பெருமாளே!"

மிகப் பெரிய விஷயம். "இருவினை மும்மலமுமற."— என்ன அற்றுப் போகவேணும்? இருவினை. இன்றிலிருந்து நீங்கள் யாருக்காவது உதவி செய்தால் நாம் செய்கிறோம் என்ற எண்ணம் இருக்கக் கூடாது. இருந்தால் அது புண்ணியமாக வந்து பிறப்பைக் கொடுக்கும். இந்தத் தீவினை என்பது இரும்பினாலே செய்த விலங்கு. புண்ணியம் என்பது தங்கத்தினாலே செய்த விலங்கு. அதுவும் விலங்குதானே. தங்கத்தினாலே விலங்கு போட்டாலும் அது விலங்கல்லவா? தங்கப் பாத்திரத்தில் கஷாயம் கொடுத்தால் அது இனிக்குமா? வேப்பிலைக் கஷாயம். தங்கப் பாத்திரம். அதுவும் கசக்கும் தானே. பாத்திரம் தானே, தங்கம். சிவத்த மனைவி; சொல் பேச்சுக் கேட்கவில்லையானால் இனிக்குமா? இவன் ஒரு மணிக்குப் போய் இருப்பான். சிவத்த மனைவி. "சமையல் ஆச்சா" என்று கேட்பான். "ஆனால் கூப்பிடுவேன் உட்காருங்கள்" என்பாள். சிவத்த மனைவியாச்சே என்று இனிக்குமா? அனுபவசாலிகளுக்குத் தெரியும்.

அதுபோல புண்ணியம் என்பது தங்கத்தினாலே செய்த விலங்கு. அதுவும் விலங்குதானே. இன்றையிலிருந்து நான் செல்லுகிறேன். இன்றைக்கு நல்ல நாள். இன்றையிலிருந்து பாவத்தைச் செய்யக் கூடாது. மன, வாக்கு, காயங்களினாலே புண்ணியத்தை நிஷ்காம்யமாகச் செய்ய வேண்டும். அவன் தந்தது அவனுக்குத் தருகிறேன் என்றும் பூஜை செய்வது

அன்பினாலே, கடமையினாலே என்றும் செய்தால் அந்த நல்வினை ஏறாது. அப்பொழுது நல்வினை, தீவினை ஒன்றுபடும். மாயா மலம் வலி குன்றி விடும். கன்ம மலம் வலி குன்றி விடும். ஆணவ மலம் வலி குன்றி விடும். எப்படி? காலையிலே 8 மணி. கிராமத்திலிருந்து வைக்கோல் வண்டி கொண்டு வருகிறான். "ஏய் நிறுத்து வண்டியை. இறக்கடா. உள்ளே என்னது?" என்பார் காவல் துறையினர். "ஒண்ணுமில்லை ஐயா; இப்போதுதான் கிராமத்திலிருந்து வைக்கோல்கொண்டு வருகிறேன்" என்றான். "இறக்கடா; எனக்குச் சந்தேக மாய் இருக்கிறது. இறக்கு பூரா" என்பார். "காப்பி சாப்பிடுங்கள்" என்பான். "சரி. ஓட்டிக் கொண்டு போ" என்பார். ஏதோ கொஞ்சம் பசி ஆறினார். அந்தச் சாலையையே (ரோட்டையே) கலக்கும் ஒருவர்,ஒரு மந்திரி, கலெக்டர், அல்லது கவர்னர் வரும்போது கூட வருவார். இருப்பதே தெரியாது. இவர்தானே அன்றைக்கு (சாலையை) ரோட்டைக் கலக்கிய ஆள். அவர் இருக்கிற இடம் தெரியாதபடி பதுங்கி ஒதுங்கி விடுவார். அந்தப் பெரிய அதிகாரிக்கு அருகிலே அவர் இருப்பதே தெரியாததுபோல, அந்தச் சிவஞானம் ஏற்பட்டுச் சிவ சந்நிதியிலே இந்த மலங்களெல்லாம் வலிகுன்றி விடும். ஆதித்தனுக்கு முன்னால் நட்சத்திரங்கள், வலி குன்றி யிருப்பது போல்—(நட்சத்திரங்கள் ஆதித்தனுக்கு முன்னே தெரியாது.) சூரியன் சந்நிதியிலே நட்சத்தி ரங்கள் மறைந்துவிடுவதுபோல, அந்தச் சிவஞான சூரியன் தோன்றுகிறபோது இந்த மலங்களெல்லாம் வலி குன்றி இருக்கும். அது ஒன்றும் வேலை செய்யாது. அது இருக்கும். அது வேலை செய்யாது. அந்தக் கான்ஸ் டபிள் நிற்பார். வைக்கோல் வண்டியோட்டியிடம் வைக்கோலை இறக்கு என்று சொல்லமாட்டார். கவர்ன ருக்குப் பக்கத்திலே அவர் பாட்டுக்குப் பேசாமல் இருப் பார். வலி குன்றி இருப்பார். அதுபோல் அந்த மூன்று

மலங்களும் செயலற்று நிற்கும். நமக்குச் செயல் இல்லாது போனால் சரிதானே. அந்த நிலை உண்டாகும். அப்போது இறைவன் இடத்திலே போய் ஜீவன் ஒன்றி விடுகிறது. இரண்டறக் கலந்து விடுகிறது.

"இருவினை, மும்மலமு மற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயும் நானுமாய்"

இரண்டறக் கலந்து அந்தச் சிவானந்தப் பெருவாழ்விலே திளைக்கிறது ஆன்மா. நதி போய்க் கடலோடு கூடுமாப் போலே ஜீவன் சிவனோடு ஒன்றிவிடுகிறது. அந்த இன்பத்திற்குப் பேரின்பம் என்று பேர். அதை அருணகிரி நாதர் 'பரம சுகம்' என்றார். இந்த உலக சுகமெல்லாம் கொஞ்ச நேரம் இருந்து, கொஞ்ச நேரம் இல்லாமல் போய்விடும். அது அனுபவிக்க, அனுபவிக்க எப்போதுமே அந்த இன்ப ஊற்று வரும். அந்தப் பெரு நிலையை நமக்குத் தருவது நம்முடைய சாத்திரங்கள். அந்த வழியை நமக்குக் காட்டி, ஜீவனாய் இருக்கிற நீ சிவனை அடைந்து பேரின்பத்தை நுகர வேண்டுமென்று நமக்கு வழி காட்டுகின்றது. அப்படி வழி காட்டியவர்கள் மார்க்க தரிசிகள். நால்வர்கள், திருமூலர், பட்டினத்துச் சுவாமிகள், மெய்கண்டார், அருணகிரிநாதர், தாயுமானார், அண்மைக் காலத்திலிருந்த இராமலிங்க அடிகளார், நம் காலத்தில் இருந்த பாம்பன் சுவாமிகள். அவர்களெல்லாம் மார்க்க தரிசிகளாவார்கள். ஆன்மாவாகிய நீ உண்டு, உடுத்து, உறங்குவதற்காக வரவில்லை. அந்த நிலை வருகின்றவர்களுக்கு இந்த உலக நிலை தோன்றாது. இந்தச் சுகங்களெலலாம் சுகமாகத் தோன்றாது. கவனமாகக் கேளுங்கள். ஏர்க் கண்டிஷன் ஏர்க் கண்டிஷனாக இருக்காது. மனைவி ரதிபோல வந்து நிற்பாள், வைரமாகப் பூட்டிக் கொண்டு. அவன் மனைவியைப் பார்த்து ரசிக்கமாட்டான். உணவுப் பொருள்கள்

இருக்கும். மாம்பழம் ஜூஸ் எடுத்துப் பிழிந்து, கொல்லி மலைத் தேனை விட்டு, ஏலக்காய்த் தூளைப் போட்டு, குங்குமப்பூ போட்டு, சிறிது ரோஸ் வாட்டரை விட்டு, அப்படியே ஐஸ்பெட்டியிலிருந்து எடுத்து தங்கத் தம்ளரில் வைத்து இருக்கிறது. அதைப் பார்த்து ரசித்துக் குடிக்க மாட்டான். இமாம் பசுந்து மாம்பழம் அப்போது தான் ஜூஸ் பண்ணினது. அவனுக்குச் சுவைக்காது. அவனுக்கு அந்தப் பிறவிப் பிண்டம் தொலைந்து இறைவன் அடி சேருவதிலேயே நாட்ட மிருக்கும். இவையெல்லாம் நானுகச் சொல்வதாக எண்ணிக் கொள்ளாதீர்கள். தாயுமானப் பெருந்தகை யார் சொல்கிருர்.

'ஐந்து வகை ஆகின்ற பூத பேதத்திஞல்'—இந்தச் சரீரம் இருக்கிறதே. பிருதிவி, அப்பு, வாயு, தேயு, ஆகாயம் – பஞ்ச பூதத்தின் பரிணமம். பால் தயிராக மாறுவது போல–பஞ்ச பூதங்கள் இந்தச் சரீரமாக இருக்கிறது. இது என்ன வெண்கலம் என்று நினைக் கிறீர்களா? இல்லை இரும்பா, பித்தளையா? சதைக்கட்டி. பாருங்கள். சதைக்கட்டி, எப்பவும் கீறிஞல் ரத்தம் வரும். சர்க்கரை வியாதி வந்தால் ஆருது. அப்பால் வெட்டி எடுக்கவேண்டும். என்ன பெரிதாக நினைத்திருக் கிறீர்கள்? ஒரு முள் குத்திஞல் போச்சே.

"ஐந்து வகை ஆகின்ற பூத பேதத்திஞல்
ஆகின்ற யாக்கை"

எவ்வளவு உறுதி? நீர்மேல் அமர்கின்ற குமிழி. தண்ணீர் மேலே இருக்கும் குமிழி, எவ்வளவு உறுதி? அவ்வளவு உறுதி இந்த உடம்பு. "ஹலோ டாக்டர்!" என்பார். வரு வதற்குள்ளே உயிர் போய்விடுகிறது. தனிப் பெரும் தலைவர்—தனக்கென்று வாழாத ஒருவருக்கே (காமராஜ ருக்கே) இந்த முடிவு என்ருல் நாமெல்லாம் எந்த மூலை.

"நீர் மேல் அமர்கின்ற குமிழியென நிற்கின்றதென்ன
நான் அறியாத காலமெல்லாம்"

[ஆரம்பத்திலேயே ஞானம் வருமா?] இது இவ்வளவு தான். இந்தச் சரீரத்தின் தன்மை இன்னதென்று நான் அறியாத காலம் ஒன்று உண்டல்லவா? அதுபோது எப்படி இருந்தேன்?

"அறியாத காலமெல்லாம்
புந்தி மகிழுற உண்டு, உடுத்து, இன்பம் ஆவதே
போந்த நெறியென்று இருந்தேன்"

அப்படி அந்தத் திருவருள் உணர்த்தாத காலம். திருவருள் உணர்த்தாத போது அந்தக் கண்ணுடியில் பார்த்துக்கொள்வேன். நிழலில் பார்த்துக்கொள்வேன். அதன்பின் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனுல் எடை போட்டு எழுதிவைத்துக் கொள்வேன். சட்டையெல்லாம் ஒழுங்குபடுத்திக் கொள்வேன். கர்ச்சிப்பைப் பாதி மேலே, பாதி கீழே வைத்துக்கொள்வேன். அதன் பின் இப்படிக் கொஞ்சம் வைத்துக் கொள்வேன்; சட்டைக்கு மேலே. அப்படியெல்லாம் இருந்தேன், ஒரு காலம். தாயுமானுர் சொல்கிருர்.

அந்த இடம் தெரிந்து சொல்லும் ஆற்றல் உடையவர். "நீர்மேல் என்று சொல்ல மாட்டார். "நீர் மேல் அமர்கின்ற" (இசைக் குறிப்பு—சுராக்ஷரம்) நான் இப்போது என்ன செய்தேன் என்பது அவருக்குத் தெரியும். சுவாமிநாதனுக்குத் தெரியும். அம்மாளுக்குத் (ஸ்ரீ சீதா அம்மையார்) தெரியும். மற்றவர்களுக்கெல்லாம் தெரியாது, இதெல்லாம் 'அரிய' வேலை என்று. புரிந்து கொள்ளவில்லையென்ருல் என்ன பண்ணுவது? சம்ஸாரம் வந்து நிற்பாள், சந்தணக் கலர் புடவையுடுத்து. அதை ரசிப்பான்; இதை ருசிப்பான்; இவை எல்லாம் எப்போது ?

"அறியாத காலமெல்லாம் புந்தி மகிழுற......இருந்தேன்
பூராயமாக நினது அருள் வந்து உணர்த்த"

அந்தப் பக்குவக் காலத்தில் ஆசார்யன் வடிவத்தில் இறைவன் வருவான். அவர் எந்த ரூபத்திலும் வருவார். ஒரு விறகுக்காரனுக வருவார். ஒரு மாட்டுக்காரனுக வருவார். ஒரு சிறுமியாக வருவார். எந்த வடிவத்தில் வருவாரோ என்ன தெரியும்?

"இவை போன வழி தெரியவில்லை" அது எங்கே போனது எனத் தெரியவில்லை. என்ன சட்டை போடு கிறேன்? எப்படி வேட்டி கட்டுகிறேன்? க்ஷௌளம் பண்ணிக் கொண்டு எத்தனை நாளாச்சு? ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. முந்தி நானே இரண்டு வேளையும் பண்ணிக் கொள்வேன். பள...பள...என்றிருப்பேன். இப்போது ஒன்றுமே தெரியவில்லை.

"எந்த நிலை பேசினும் இணங்கவிலை அல்லால்
இறப்பொடு பிறப்பை உள்ளே எண்ணினுல்
நெஞ்சது பகீரெனத் துயிலுருது இருவிழியும்"

படுத்தால் தூக்கம் வரவில்லை. ஒரு சின்ன உதராணம்:

தேர்தலிலே நிறைய உழைத்தார் ஒரு அன்பர். கொஞ்சம் ஓய்வெடுக்கச் சென்னைக்கு வந்தார். கடற் கரை ஓரமாக அவருடைய நண்பர் இல்லம். "அண்ணு! கொஞ்சம் எட்டு நாளைக்கு இங்கே ஓய்வு" என்ருர். "உங்கள் வீடு, சௌக்யமாக இருங்கள். நான் 'கெஸ்ட் ஹவுஸ்' கட்டிவிட்டு இருக்கிறேன்". தைலம் கொடுத்து, ஸ்நானம் பண்ண வைத்து, ஜீரகச் சம்பாப் பச்சரிசி அன்னம், காலிப்ளவர் சாம்பார், நல்ல அன்ருசிப் பழம் மோர்க்குழம்புடன் விருந்தளித்தார். சௌக்கிய மாக இருந்தது. இரவு 7, 7½ மணிக்கு குறுந்தக்காளி வத்தக் குழம்பு, பலாப்பழ ரசம், ஆரஞ்சு கிச்சடி,

ஆப்பிள் பஜ்ஜி, கொத்துமல்லி துவையல், சுசி ருசியாகச் சாப்பிட்டார். 8 மணி. ஸ்பிரிங் கட்டில், பெல்ஜியம் கண்ணுடி, பச்சை டும் லைட், ஏர்கண்டிஷன், ரவிவர்மா படம். எல்லா வகையான நூல்களும், சைவ சித்தாந்தம், வேதாந்தம், சித்தாந்தம், ஆங்கிலம், ஆனந்த விகடன், கல்கி, பொம்மை, சாவி, கல்கண்டு, நாளிதழ் தினமணி, சுதேசமித்திரன், இந்து, மாலேமுரசு, அலேஓசை சகல பேப்பரும் இருந்தன. இரவு மணி 8½. “அண்ணு ! சௌக்கியமாகத் தூங்குங்கள். பெண்களே வரமாட்டார்கள். சத்தமே வராது. இது உங்கள் வீடு. சௌக்கியமாகத் தூங்குங்கள். இங்கே பாருங்கள் பிளாஸ்கிலே பன்னீர் டீ வைத்திருக்கிறேன். வேண்டுமானுல் சாப்பிடுங்கள். மண் கூஜாவில் குளிர்ந்த நீர் இருக்கிறது. கூப்பிட்டால் வேலேக்காரன் வருவான். பெயர் ராமு. இந்த சுவிட்ச் போட்டால் வெந்நீர் வரும். இந்த சுவிட்ச் போட்டால் குளிர்ந்த நீர் வரும். இது துணி தோய்க்கிற மிஷின். துணியைப் போட்டால் தோய்த்து உலர்த்திக் கொடுத்து விடும். இது உங்கள் வீடு. என் வீடு இல்லே. சௌக்கியமாக இருங்கள். நான் காஞ்சீபுரம் போய்விட்டு நாளே 8 மணிக்கு வருகிறேன்” என்று உபசரித்தார். கல்கி, விகடன் படித்துக் கொண்டிருந்தார். மணி 9½ ஆயிற்று. கொஞ்சம் பன்னீர் டீ சாப்பிட்டார். வறுத்த முந்திரிப் பருப்பு—நெய்யில் வறுத்து மிளகுத் தூள் போட்டது சாப்பிட்டார். குளிர்ந்த நீர் குடித்தார். ஒரே ஆனந்தம். தாழம்பூ ஊதுவத்தி வாசனே. படுத்த உடனே ஸ்பிரிங், அப்படி அசைந்தது. சிங்கப்பூர் கோவிந்தசாமிப் பிள்ளேக் கடையில் வாங்கின வெல்வெட்டு. பல கலர். சொர்க்கம் மாதிரி. என்ன ஆனந்தம். கண்ணே மூடும் நேரம். “அண்ணு ! நான் கார் எடுத்துக் கொண்டு புறப்படப் போகிறேன். எல்லாம் வீட்டில் சொல்லியிருக்கிறேன். நான் போய்

வருகிறேன். ஒரு சின்ன விண்ணப்பம். சொல்ல மறந்து விட்டேன். இந்த ஜன்னல் வழியாக ஆறடி கருநாகம் சிலநாள் போகும். நேற்றுப் படுத்து மூன்று பேர் இறந்துவிட்டார்கள். நேற்றைக்கு முன்னுள் ஐந்து பேர் இறந்துவிட்டார்கள். ஆனுல் இன்றைக்கு வந்தாலும் வரும். வராவிட்டாலும் 'வராது. நீங்கள் கொஞ்சம் எச்சரிக்கையாய் இருங்கள்." என்ருர்.

இப்போது கவனியுங்கள். இத்தனைச் சுகமும் சுகமாகத் தோன்றுமா? மெத்தை, கட்டில்......கருநாகம் வரும் என்ற உடனே அத்தனையும் உவர்ப்பு அடைவது போலே, இந்த உலக சுகமெல்லாம் எனக்கு உவர்க்கிறது என்ருர் தாயுமானவர். அதற்காகத்தான் மெனக்கெட்டு இந்த உதாரணம் சொன்னேன். இப்பொழுது பழைய பாட்டைக் கவனியுங்கள்.

"ஐந்துவகை ஆகின்ற பூத பேதத்தினுல்
    ஆகின்ற யாக்கை நீர்மேல்
அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநான்
    அறியாத காலமெல்லாம்,
புந்தி மகிழுற உண் டுடுத்தின்ப மாவதே
    போந்தநெறி என்றிருந்தேன்
பூராயமாக நின தருள்வந் துணர்த்த இவை
    போனவழி தெரியவில்லை"

அப்படி ஒரு காலம் இருந்தேன். மனைவியின் படத்தைப் பர்சில் வைத்துக்கொண்டு, எங்காவது வெளியூர் போனுல் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டே போவேன். அது ஒரு காலம். இப்போது பார்க்கும் பெண்களெல்லாம் பராசக்தியாகத் தெரிகிருர்கள். இங்குள்ள தாய்மார்கள் எல்லாம் ஜகந் மாதாவாகக் காட்சியளிக்கிருர்கள்.

"பார்க்கும் இடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணாநந்தமே"

பரமஹம்சர் சந்தனம் இழைத்துக் கொண்டிருந்தார். ஒரு பூனை வந்து இடையூறு செய்தது. சந்தனக் கட்டையால் அடித்தார். அது போய்விட்டது. தேவியை வழிபடப் போனார். தேவி கன்னத்திலே உதிரத்தைக் கண்டார். "ஹா, அம்பா! உன் கன்னத்தில் என்ன ரத்தம்" என்றார். "மகனே! பூனையும் நான் தானே? பூனையை அடித்தாயே? என் கன்னத்திலே ரத்தம்" என்றார் தேவி. "அம்மா! எல்லாம் நீதானா அம்மா?" என்றார். "ஆமாம். எல்லாம் நான்தான்" என்றார் அம்பிகை. சர்வம் சக்தி மயம் ஜகத். இதை ஏன் முன்னமே சொல்லக் கூடாது? எல்லாம் அம்பாளாகப் பார்க்கிறார். இளமையில் கல்யாணமாகி சாரதாமணி தேவி வந்தார். தேவி என்று காலில் விழுந்தார். உலக மெல்லாம் தாயாரென்றால், மனைவி மட்டும் மனைவி யாய்த் தெரியுமா? இதை விவேகானந்தர் நம்பவில்லை; இருக்குமா? படித்தவர் அல்லவா? படித்தவன் கடைசி வரையிலும் ஆராய்ச்சி பண்ணிக்கொண்டே இருப்பான். "அங்கார சதுர்சீ நாரீ க்ருத கும்ப சம: புமான்" என்று படித்தவர். அது நாரத பரிவிராஜ உபநிஷத். அங்காரம் என்றால் நெருப்பு. நாரி என்றால் பெண். பெண்கள் எல்லோரும் அக்கினி. கிருதம்என்றால், நெய். கும்பம் என்றால் குடம். புமான் என்றால் புருஷன். ஆண்கள் எல்லோரும் நெய்க்குடம். பெண்கள் அக்கினி. நெருப்பைக் கண்டு எந்த நெய் உருகாது? பரமஹம்சர் உருகவில்லை. 12 வயது இளம் பெண்ணைக் காட்டி, "நீர் கல்யாணம் பண்ணிக்கொள்ளும்" என்று சொல்கிறார் பெற்ற அப்பா. ஞான சம்பந்தர், "நீ பெற்ற பெண் இறந்து விட்டது. இது நான் பெற்ற பெண்" என்றார். நெருப்புக்கு உருகாத நெய்க்குடம் ஒன்று, இரண்டு உண்டு.

விவேகானந்தஜீ அமெரிக்காவில் எழுந்தருளியிருந் தார். அங்கு வேதாந்த மழை பொழிகிறார். அந்த நாடெல்லாம் அவரை வணங்கி வாழ்த்துகின்றன. ஒரு கோடீஸ்வரி அழைத்துப் போய் விருந்து வைத்தாள், தனியான இடத்திலே. சின்னஞ்சிறு பெண். தன்னந் தனியான இடம். "சுவாமிஜி! நான் கோடீசுவரி. இந்தச் சொத்து, இந்தப் பங்களா, நான் எல்லாம் உங் கள் அடிமை. என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கும்பிட்டாள். "உன்னை 'சிஸ்டராக' (சகோதரியாக) ஏற்றுக் கொள்கிறேன்" என்றார். எவன் சொல்வான் இப்படி? பரமஹம்ஸருடைய அனுக்ரஹம் பெற்றவர். "இந்த சொத்தையெல்லாம் ஏற்றுக்கொள்கிறேன். உன்னையும் ஏற்றுக்கொள்கிறேன். சகோதரியாக ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்றார்.

அவருடைய சந்நிதானத்திலே ஆசாபாசங்கள் எல் லாம் போய்விடும். சூரியனுக்கு முன்னால் பனி இருக் குமா? அத்துணைப் பெரிய மகரிஷிகள் அல்லவா, இராம கிருஷ்ணரும், விவேகானந்தஜீயும். அவருடைய பெய ரிலே தான் மயிலாப்பூரில் ஒரு மடம் இருக்கிறது; ராம கிருஷ்ண மடம். அவர் மனைவியையே தாயாராக— சக்தியாக நினைத்தாராம். அப்படி உலகமெல்லாம் பரம் பொருளாகத் தோன்றும் சிவஞானிகளுக்கு. அவர் களுக்குக் கண்டதெல்லாம் அவனாகத் தோன்றும். வேறு பொருளே தோன்றாது.

தாயுமான சுவாமிகள் மலர் எடுக்கப் போனார். முல்லை, இருவாட்சி, பாரிஜாதம். வெறும் குடலையைத் தூக்கி வந்து விட்டார். மலர் எடுக்கவில்லை. இருந்த சீடர்கள் கேட்டார்கள். "சுவாமீ! மலர் எடுக்கப் போனீர்களே; மலரே கொண்டு வரவில்லையே" என்றார் கள். "மலரே இல்லையே. மலரே என் கண்ணுக்குத் தெரியவில்லையே" என்றார். "அதோ இருக்கிறதே"

என்றார்கள். "உன் கண்ணுக்கு மலராகத் தோன்று கிறது. என் கண்ணுக்குச் சிவமாகத் தோன்றுகிறது. சிவத்தைக் கிள்ளி சிவத்தின் மேல் போடலாமா?" என்றார்.

"பார்க்கின்ற மலரூடும் நீயே இருத்திஅப்
பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன்"

தாயுமானவர் சொல்கிறார். அந்த அனுபவ ஞானத் தாலே. நமக்கு மல்லிகையாகத் தோன்றுவது 'அவருக் குச் சிவமாகத் தோன்றுகிறது. உலகத்திலுள்ள எல் லாப் பொருளையும் சிவமாகப் பார்க்கின்றார் தாயுமானர்.

சும்மா கும்பிடுங்களேன். சும்மா கும்பிட மாட் டேன். ஏன்? என் உள்ளும் இருக்கிறார்; புறமும் இருக் கிறார். நான் கும்பிட்டால் இருபுறமும் இருக்கிறாரே.

"நான் கும்பிடும்போது அரைக் கும்பிடு ஆதலால்
நான் பூஜை செய்யல் முறையோ"

இதைக் கேட்டு நீங்கள் யாராவது பூஜை செய்பவர் இருந்தால் விட்டு விடக் கூடாது. ஏன்? மாடி மேல் ஏறி யவர் ஏணியைத் தள்ளுகிறார். நாம் எல்லாம் பாதி ஏணி யில் இருக்கிறோம். அவர் தள்ளினார் என்று நாமும் தள்ளினால் மண்டை உடைந்துவிடும். அவர் அந்த நிலை பெற்றவர். அந்த அருள் நிலை பெற்றவர் சொல்லு கின்றார்.

"பண்ணேன் உனக்கான பூஜைஒரு வடிவிலே
பாவித்து இறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்திஅப்
பனிமலர் எடுக்க மனமும்

**நண்ணேன் அலாமல் இரு கைதான்·குவிக்க எனில்**
**நாணும் என் உளம் நிற்றி நீ**
**நான் கும்பிடும்போது அரைக் கும்பிடு ஆதலால்**
**நான் பூசை செய்யல் முறையோ"**

இதெல்லாம் அந்த அனுபவ ஞானிகள் சொல்கின்ற வார்த்தைகள்

ஆகவே அந்த அதீத நிலையிலே ஜீவனும் சிவனும் ஒன்ருகி விடும். அப்போது உண்டாகிற இன்பத்துக்கு எல்லை கிடையாது. அந்த அனுபவமான ஞானத்திலே திளைத்துக் கொண்டிருந்தார்கள். அதைச் சொல்வதற்கு மொழியும் கிடையாது; அதைச் சொல்ல வாயும் கிடையாது; அப்படியே இன்பத்திலேயே நிலைத்து நிற்பார்கள். அவர்கள் முகத்திலே அருள் ஒளி வீசும். அந்த முகமே சொல்லும் அவர்கள் பரம ஞானிகள் என்று. அந்தச் சரீரமெல்லாம் இன்ப மயமாய், ரோமத்துவாரங்கள் எல்லாம் இனிக்கும். இறைவனும் அவர்களும் ஒன்று கலந்து இருப்பார்கள். முன்பு சொன்னேன் அல்லவா உப்பும் அப்பும் ஒன்றுபடுகிறது என்று, அதுபோல்.

கடைசி நேரம். மேட்டுக் குப்பம் என்று ஒரு இடம். வடலூரிலிருந்து இரண்டு மைல். வடலூரில் 1941-முதல் 50 வரைக்கும் திருப்பணி செய்தேன். 9 வருஷம் இருந்து அந்த ஊரிலே சத்தியஞான சபைத் திருப்பணி பண்ணினவன் நான். அப்போது நெய்வேலிகிடையாது. அந்த மேட்டுக் குப்பம் வடலூரிலிருந்து இரண்டு மைல். அங்கே சித்திவளாகத் திருமாளிகை. ஒரு குடிசை அது. அங்கே சுவாமி இருந்து சிவயோக சாதனையில் ஈடுபட்டு, அந்தச் சாதனையிலே மீதூர்ந்து, அந்த அனுபவ நிலையிலே இருந்து அழுது அழுது, "ஆண்டவனே! அம்பலவாணு! உன் அருளை நான்

பெற வேண்டாமா! முழுவதும் பெற வேண்டாமா" என்று எத்தனை காலம் அழுது எத்தனை காலம் தொழுதாரோ, அப்படியே மூர்ச்சித்து விட்டார் வள்ளல் பெருமான். பாதி ராத்திரி. அம்பலவாணர், சிதம் பரத்திலே இருக்கிற எம்பெருமான், ஆனந்தத் தாண் டவம் ஆடுகின்றவர்; அதிலே ஆதியும் அந்தமும் கிடையாது. அவர் ஆடினுல்தான் உலகம் எல்லாம் ஆடும். அதுதான் உலகு அம்பல விதம். அது சேர்ந்து வரும்போது உலகம் பலவிதம் என்று வரும். உலகு அம்பலவிதம். சேருகிறபோது உலகம் பல விதம். பல விதம் என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது. அம்பலத்திலே ஆடுகிறுர். உலகம் ஆடுகிறது. அப்படி ஆண்டவன் அம்பலத் திலே இருந்து அந்த மேட்டுக்குப்பத்துக்குப் போனுர். சித்திவளாகத் திருமாளிகையின் கதவைத் திறந்தார். அங்கே வள்ளல் பெருமானுர் மூர்ச்சையாகி இருக் கிறுர். (மூர்ச்சித்து இருக்கிறுர்.) சுவாமி வந்தது அவருக்குத் தெரியாது. அவருக்குச் சரீரமே ஞாபகம் இல்லை. ஆண்டவன் வள்ளலாரை எடுத்து அந்தக் கண்ணீரைத் துடைத்து, அருட் கண்ணுலே பார்த்து, அவர் கண்ணிலே கலந்தார். அந்தக் கண்ணிலே ஒளி மயமாக நுழைந்தார். அதைத்தான் சீதை சொன்னுள் ராமச்சந்திரனைப் பார்த்து,

**"என் கண் வழி நுழையுமோர் கள்வனே கொலாம்"**

என்று பிராட்டியார் தெரிவித்தவாறு, அவர் கண்ணிலே கலந்து, அவர் உள்ளத்திலே கலந்து, உணர்விலே கலந்து, நாடியிலே கலந்து, நரம்பிலே கலந்து, ஊனிலே கலந்து, உயிரிலே கலந்து விட்டார். இதுதான் அந்தப் பேரின்பம். அப்பொழுது சுவாமிக்கு இந்த மூன்றரைக் கோடி ரோமத்துவாரமெல்லாம் தித்திக்கின்றது.

அனுபவசாலிகளுக்குத் தெரியும்; குழந்தைகள் தொட்டால் நமக்கு எவ்வளவு ஆனந்தமாய் இருக்கு மென்று.

"மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்." என்று வள்ளுவர் சொல்கின்றார். இது சுதானந்தம். அது சதானந்தம். குழந்தை தொட்டால் அந்த இடம் மட்டும் தித்திக்கும். இது நாடி நரம்பெல்லாம் தித்திக்கும்.

முந்தியை விட ஒரு ஸ்வரம் கூட வைத்து அழுதார் இராமலிங்க சுவாமிகள். இப்பொழுது நடராஜர் எங்கே இருக்கிறார். உள்ளுக்குள்ளே இருக்கிறார். [விலைவாசி ஏறிப்போச்சே? என்று நடுத்தரமானவர்கள் சிரமப்படு கிறார்கள். கணக்கிலே வராத பணம், ஏழு தலைமுறைக்கு வருமே, 'அண்டர் கிரவுண்டி'லே வைத்துக் கொண்டிருக்கிறாயே, நீயேண்டா அவனோடு சேர்ந்து கொண்டு, நீயும் அங்கலாய்க்கிறாய்? எண்ணெய் விலை ஏறிப்போச்சே, வெங்காயம் விலை ஏறிப் போச்சே, (வெங்காயமே வாங்குவதில்லை) வெங்காயம் விலை கிலோ 4 ரூபாய். உன் பணத்திற்குத் தான் 4000 கிலோ வாங்கலாமே. அவ்வளவு பணம் வைத்திருக்கிறாயே, கணக்கிலே காட்டாத பணம். அங்கே எல்லாம் உள்ள வனும் இவனோடு சேர்ந்து பரிதாபப்படுவது போலே] பகவான் சொன்னார்: "இராமலிங்கம்! நீ வேறு நான் வேறாய் இருந்த போது நீ துன்புற்று மருகி அழுதாய், உன்னிலே நான் கலந்து, ஆனந்த வெள்ளத்தைக் குற்றால அருவி மாதிரி கொட்டிக் கொண்டிருக்கின்றேனே. ஆனந்த வெள்ளத்திலே நீ நீந்திக்கொண்டிருக்கிறாயே. இப்போது ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாராம், நடராஜா. சுவாமி சொன்னார்களாம், "இந்த இன்பம் எனக்கு மட்டும் இருந்தால் போதுமா ஸ்வாமீ! இந்த மன்பதைகள் எல்லாம் பெற வேண்டாமா? இந்த ஏழை மக்களுக்கெல்லாம் இந்த இன்பம் கிடைக்க வேண்

டாமா? முன்பு எனக்கு இன்பம் வேண்டும் என்று அழுதேன். இப்போது எல்லா உயிர்களுக்கும் இந்த இன்பம் கிடைக்க வேண்டுமென்று அழுது கொண்டிருக் கிறேன்'' என்ருராம். எவ்வளவு பெரிய ஞானம். சரி கிடைத்துப் போச்சு. "சமையல் ஆச்சு. பையா, கத வைச் சாத்து, தனியா, இலை போடு'' என்பவர் போலவா சொன்னுர்?

"ஆமாம். நடராஜாவும், ராமலிங்க சுவாமிகளும் பேசினது வாரியாருக்கு எப்படித் தெரியும்? ஒரு கேள்வி. இவர் இப்போதைய—சமீபத்திய ஆளாச்சே? அது போன நூற்ருண்டாயிற்றே. அங்கே பத்துக்கால் பூச்சியாய் இருந்தாரா? பல்லியாய் இருந்தாரா?'' ஒரு ஆராய்ச்சி.

இதை வள்ளலாரே சொல்லுகிருர்.

''பாதி இரவில் எழுந்தருளி...''

பாதி ராத்திரி. "பாதி இரவில் எழுந்தருளி''—அந்தத் தமிழ், "எழுந்தருளி" என்ருர். பெரியவர்களை வந்தார் என்று சொல்லாமல் எழுந்தருளினுர்கள்; விஜயம் செய் தார்கள்; அப்படிச் சொல்ல வேண்டும்! கோயில் நிர்வாக அதிகாரியாக இருக்கிறவர்கள், "சுவாமி எழுந்தருளி யாச்சா?'' என்று கேட்க வேண்டும். "சுவாமியைத் தூக்கியாச்சா?'' என்று கேட்கக் கூடாது. தூக்குவது வேறு. அந்த நல்ல தமிழ், ''பாதி இரவில் எழுந்தருளி''. அந்த அடக்கம்; "பாவியேனை எழுப்பி''—தன்னை எப் படிச் சொன்னுர்? பெரியவர்களுக்கு அடையாளம் என்ன? தன்னை மிகவும் குறைவாகச் சொல்லிக் கொள்வார்கள். "நஜானுமி பத்யம் நஜானுமி கத்யம்''— ஆதிசங்கரர். எனக்குப் பத்யம் தெரியவில்லை, கத்யம் தெரியவில்லை என்ருர். தெரியாதா? சதுர்வேத பண்டி

தர். அவர்களுடைய தன்னடக்கம் அப்படி. ஆகையி ஞலே பாவியேனை எழுப்பி—எழுப்பி என்றுல் என்ன? மூர்ச்சித்து இருந்தார் என்பது பொருள். தன்னை மறந்து இருந்தார்.

“பாவியேனை எழுப்பி அருள் ஜோதி யளித்து...”

இப்பொழுது எங்கே இருக்கிறுர்? என் அகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றுர். வள்ளலாரும் அவரும் கலந்து நிற்கிறுராம்; கலந்து.

பாலிலே சீனியைப் போட்டால் மேலேயா இருக்கும்? இல்லை அடியிலேயா இருக்கும்? பால் முழுக்க சீனி கலந்திருக்கும். ஆனல் கண்ணுக்குத் தெரியாது. பாலிலே சீனி கண்ணுக்குத் தெரியுமா? “நான் ‘டபுள்’ எம். ஏ. படித்தவன். சீனி இருந்தால் கண்ணுக்குத் தெரியாதா?” என்பான். தொட்டுப் பார்த்தாலா தெரி யும்? இல்லை காதிலே விட்டாலா தெரியும்? நாக்கிலே விட்டால்தான் தெரியும்.

அப்படி அனுபவத்தை அனுபவத்தாலேதான் அறிய வேண்டும். எப்படித் தொட்டு அறிவது? ‘கரண்ட்’ (மின்சக்தி) இருக்கிறதா, இல்லையா என் பதைத் தொட்டுப் பார்த்தா தெரிந்து கொள்வது? விளக்குச் சுவிச்சைப் போட்டுப் பார்க்க வேண்டும்.

அது போல, “பாவியேனை எழுப்பி அருட்ஜோதி அளித்து என் அகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்ருய் நீதி நடஞ்செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும் பேற்றை ஓதி முடியாது.” அது ஓதி முடியாது. ஏன்? அந்த அனுபவத்தை வார்த்தையினுலே வசனித்துச் சொல்ல முடியாது.

ஒருத்தர், பாலை நன்ருகக்காய்ச்சி 'பிரவுன்' கலரிலே சாப்பிட்டார். அம்பலப்புழா பாயசம் என்று பார்த்தவர்களுக்குத் தெரிந்திருக்கும். அதுமாதிரிப் பாயசம் எங்கும் கிடையாது. பகவானுக்கு அம்சை ஆகும். பழனி பஞ்சாமிர்தம் மாதிரி அம்பலப்புழா பாயசம். அதைப் பற்றி நான் அதிகம் சொல்லவில்லை. எப்பொழுதாவது அங்கே (குருவாயூருக்குப்) போனீர்களேயானுல் பகவானுடைய பிரசாதமாய் அதைச் சாப்பிட்டுப் பாருங்கள். ஆயுளிலே அந்த மாதிரி ஒரு வாய்ப்பு இருக்காது. நாலைந்து மைல்களிலிருந்து பசுக்களைக் கொண்டு வந்து கண்ணபிரான் கோயிலிலே, பசுவுக்கு அபிஷேகம் பண்ணி, பாலைச் சுத்தமாகக் கறந்து சந்நிதானத்துக்கு முன்னுலே, மடைப்பள்ளியிலே அத்தனைப் பாலையும் விட்டு, பாசிப் பருப்புப் பொடி போட்டு, ஏழெட்டு மணி நேரம் அப்படியே வற்றக் காய்ச்சி அப்படியே கண்ணபிரானுக்கு அம்சை பண்ணிக் கொடுக்கிருர்கள். அம்பலப்புழா பாயசம். அநேகம் பேருக்குத் தெரியாது. இங்கேயே இருந்தால் எப்படித் தெரியும்? வெளியிலே போகவேண்டும். பந்த பாசத்திலேயே அழுந்தி இருந்தால் எப்படித் தெரியும்? அந்த அம்பலப்புழா பாயசம் சாப்பிட்டால் நன்ருக இருக்கும். அதை எப்படிச் சொல்வது? வியாக்கியானம் செய்ய முடியாது. குடித்துப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அதைச் சொல்ல முடியாதல்லவா?

**"செவ்வான் உருவில் திகழ்வேலவன் அன்**
**றெவ்வாததென உணர்வித் ததுதான்**
**அவ்வாறறிவாரறி கின்றதலால்**
**எவ்வாறொருவர்க் கிசைவிப்பதுவே."**

அதைச் சொல்லுவதற்கு மொழி கிடையாது.

**"நீதி நடஞ்செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும்பேற்றை**
**ஓதி முடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல்வேண்டுவனே"**

இப்பொழுது வள்ளலாருக்கு என்ன ஆர்வம்? ரொம்பப் பெரியவர்கள். "பிறவா நிலனும் இல்லை. அவ்வயின் இறவா நிலனும் இல்லை" பேசாத மொழியே கிடையாது. என்றபடி எல்லாம் கடந்த நிலையில் உள்ளவர்கள் மகான்கள். அவர் சொன்னுர்: ஒரு ஜாதி அல்ல, ஒரு மதம் அல்ல, ஒரு சமயம் அல்ல, ஒரு இனம் அல்ல. என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே! எல்லோரும் இந்த இன்பத்தைப் பெற வேண்டும். அவர்கள்தான் இந்த பூரண ஞானிகள். தான் பெற்ற இன்பத்தை எல்லோரும் பெற வேண்டுமென்று, "சேர வாரும் ஜகத்தீரே" என்ருர் தாயுமானுர். இந்து சமயத்தார் மட்டுமல்ல. கிருஸ்துவரோ, முஸ்லிமோ, யாராயிருந்தாலும் சேர வாரும் ஜதத்தீரே! அங்கே என்ன இருக்கிறது? 'அன்பு நிலையை அடைவதற்குத் தேடும் பருவம் இது கண்டீர்! சேரவாரும் ஜகத்தீரே.'

சில பேர் பூஜையிலே உட்காருவார்கள். உடம்பு பூஜை பண்ணும். மனசு எங்கோ போகும். 'காடும் கரையும் மனக்குரங்கு கால் விட்டு ஓட, அதன் பிறகே ஓடும் தொழிலால் பயனுளதோ' நான் வடக்கே எல்லா ஸ்தலங்களுக்கும் போய் இருக்கிறேன். புனுவிலிருந்து 20, 30 மைல்கள் போனுல் துக்காராம் சுவாமிகள் அவதாரம் பண்ணின தேவ்காம் உளது. அவர் அவதாரம் பண்ணின வீடு இப்பொழுதும் இருக்கிறது. அவர் பூஜை பண்ணின பண்டரிநாதர்—பாண்டுரங்கசுவாமி இருக்கிருர். ஒரு 300, 350 ஆண்டுகட்கு முந்தி வாழ்ந்தவர். பரமஞானி. அவர் பிறப்பினுலே வணிகர் மரபு. எல்லா அருள் நலங்களும் பெற்றவர். அவர் கீதையை மகராஷ்டிர மொழியிலே 8 பாகங்களாக மொழி பெயர்த்தார். அப்போது இருந்தவர்களுக்கெல்லாம் அது பெரிய அமிர்தமாய் இருந்தது. புனுவுக்குப் பக்கத்திலே இந்திரா நதிக்கரையிலே நம்முடைய திருவாவடுதுறை,

தருமபுரம் மடம் மாதிரி ஒரு மடம். அங்கே பிராம்மணர்களுக்கெல்லாம், உலகத்துக்கு எல்லாம் குரு நாராயண யதீந்திர சுவாமிகள். இந்த நாராயண யதீந்திர சுவாமிகள் அவர்கள் வேதங்களை எல்லாம் கரை கண்டவர். மடாதிபதி. அவருக்குத் துக்காராம் சுவாமியைச் சேவிக்க வேண்டுமென்று ஆசை வந்தது. 300 வருஷங்களுக்கு முந்தி; ஜாதிக் கட்டுப்பாடு. நான் பிராம்மண குரு. அவரோ ஜாதியிலே வணிகர். எப்படிப் போய்ப் பார்க்கிறது? அந்தக் கட்டுப்பாடு. ஆனால் உள்ளம் துடிக்கிறது. இது அவருக்குத் தெரிந்து விட்டது. ஒரு மகாத்மா பார்க்க வேண்டுமென்று நினைக்கிறார் என்று அவரே வலிய வந்து விட்டார்; உள்ளே விடுவார்களா? இவர் சாதாரணமாய் ஒரு துணி கட்டிக் கொண்டிருக்கிறார். வெளியே காத்துக்கொண்டிருந்தார். உள்ளே மடாதிபதி பூஜை பண்ணிக் கொண்டிருக்கிறார். மூன்று மணி நேரம் ஆயிற்று. பூஜை முடிந்து தீர்த்தப் பிரசாதம் கொடுத்துக் கொண்டிருந்தார். இவர் நமஸ்காரம் பண்ணி கையை நீட்டினார். யார் நீ என்று கேட்டார். 'நான் துக்காராம். பல வருஷங்களாக உங்கள் திருவடியைத் தரிசிக்கலாமென்று நினைத்தேன். இன்று தான் வாய்ப்பு கிடைத்தது' என்றார்.

"எப்பொழுது வந்தீர்கள்?"

"நீங்கள் பூஜை பண்ணுகிறபோது வந்தேன்"

"நான் மூன்று மணி நேரம் பூஜை பண்ணினேனே."

"கீரைப்பாத்திக்குத் தோட்டக்காரன் தண்ணீர் பாய்ச்சினானே, இல்லையோ? என்று நினைத்தீர்களே அப்போது நான் வந்தேன்" என்றாராம். எப்படிக் கதை?

உடம்பு பூஜை பண்ணுகிறது. மனசு எங்கோ அலைகிறது.

காடும் கரையும் மனக்குரங்கு கால்விட்டோட அதன்பிறகே
ஓடுந் தொழிலால் பயனுளதோ ஒன்ருய்ப் பலவாய்
உயிர்க்குயிராய்
ஆடுங் கருணைப் பரஞ்சோதி அருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும் பருவம் இதுகண்டீர் சேர வாருஞ் சகத்தீரே.

இந்தத் தருணம் போனல் அப்புறம் நீ ஆடு மாடாய்ப் பிறந்தால் ஜபம் பண்ண முடியுமா? நீங்கள் ஒரு பெருச்சாளியாய்ப் பிறந்தீர்களானுல் பூஜை அறையில் அமர முடியுமா? அடித்துப் போட்டு விடுவார்கள். நீங்கள் ஒரு தேளாய்ப் பிறந்து சொற்பொழிவு கேட்கலாம் என்று வந்தால் நாற்காலியில் இருக்க முடியுமா? உடனே அடித்துப் போட்டு விடுவார்கள். மனிதர்களாகப் பிறந்ததனுலேயே சௌகரியமாய் இருந்து கேட்க முடிகிறது. ஜபம் பண்ண முடிகிறது. ஆகவே "தேடும் பருவம் இது கண்டீர். சேர வாரும் சகத்தீரே" இந்த சகத்தீரே என்பது அந்த விரிந்து பரந்த உள்ளம். ஒரு சமூகம், ஒரு மதம், ஒரு இனம், ஒரு கட்சி இல்லை. சேரவாரும் சகத்தீரே — அனைத்து உயிர்களையும் விளித்து அழைக்கின்ருர்.

"ஓதி முடியாது என் போல்இவ்
உலகம் பெறுதல் வேண்டுவனே"

அந்த அதீத நிலையைப் பெற்றவர்கள், பெருதவர்களெல்லாம் பெறவேண்டுமென்று நமக்காகத் தவம் செய்வார்கள். அவர்களே அந்த முதிர்ந்த அனுபவ ஞானிகள். மார்க்கதரிசிகள். தீர்க்கதரிசிகள். அந்நிலையை அடைந்தவர்கள் நம் நாட்டிலே எத்தனை எத்தனையோ மகான்கள். அண்மையில் இருந்தவர்கள் பாம்பன்

சுவாமிகள். நம் காலத்தே முருகனைக் கனவிலும், நன விலும் பல காலம் தரிசித்து சைவ சித்தாந்த சண்ட மாருதமாக, சைவ சித்தாந்த சரபமாக இருந்தவர்கள் அவர்கள். சைவ சமய சரபமென்று ஒரு நூல் எழுதி யிருக்கிருர்கள். அவர்கள் சொல்லுவார்கள்: 'என் கண் ணும் கருத்தும் நுழையாத நூல் இல்லை' என்பாராம். அவர்கள் திருக்குரான் படித்தவர்; பைபிள் படித்தவர். எல்லாவற்றிலும் சாரத்தைக் கொண்டு எந்த மதத்தை யும் இகழாமல், எந்த மதத்தையும் பழிக்காமல் பரந்த நோக்கம் உடையவர். அப்பர் சுவாமிகள் சொன்ஞர்:

"விரிவிலா அறிவிஞர்கள் வேருெரு சமயம் செய்து
எரிவிஞல் சொன்ஞரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்"

1985-ல் ஒரு புது மதம் தோன்றிஞலும், அதையும் சுவாமி ஏற்றுக் கொள்கிருர் என்ருர். எதுபோல? திடீரென்று 55 வயதிலே ஒரு குழந்தை பிறந்து விட்டது. கழுத்தை முறித்து கிணற்றிலே போடு என்ரு சொல்லுவோம்? இல்லை என்றுதான் நினைத்தோம். எப்படித் தள்ளிவிட முடியும் நம்ம குழந்தையை? அப்படி இந்தப் பாரத நாட்டிலே ஒரு புது மதம் தோன்றிஞல் ஜகத் பிதாவான ஆண்டவன் தள்ளி விடுவாஞ? விரிவிலா அறிவிஞர்கள் வேருெரு சமயம் செய்து எரிவிஞல் சொன்ஞரேனும் எம்பிராற்கு ஏற்ற தாகும். சைவ சமயம் யாரையும் இகழ்வதில்லை. பழிப்ப தில்லை. தள்ளுவதில்லை. எம். ஏ. வகுப்பில் படிக்கிறவர் சின்ன வகுப்பில் படிப்பவனை இகழ்வாரா? தள்ளுவாரா? இதைப் படித்துத்தானே அங்கே போக வேண்டும். ஆகவே யாரையும் இகழ மாட்டார்கள் பரம ஞானிகள். தெய்வம் இல்லை என்கிருர்களே, அவர்களையும் இகழ்வ தில்லை. அவன் இல்லை என்று சொன்னதஞலேயே உண்டு என்று அர்த்தமாய்விட்டது. (இல்லாத

பொருளை இல்லை என்று சொல்ல வேண்டியதில்லை தானே.) இல்லை என்று சொல்கின்றதாலேயே உண்டு என்று சித்திக்கின்றது. நாராயணசாமி இல்லை என்றால் அவன் இருக்கிறான்; அந்த நேரத்திலே இல்லை. சைவ சித்தாந்தத்திலே ஒரு அருமையான கருத்து. தெய்வம் உண்டு என்று எப்படிச் சொல்லுகிறாய்? என்றார். உளது என்றேன். இலது என்றார். அவர் இல்லை என்று சொன்னதனாலே இருக்கிறது என்றார். அவன் ஏன் இல்லை என்று சொன்னான் என்றால், அவனுக்குத் தெளிவு இல்லாமையினாலே, அவனுக்கு இல்லாமலிருக்கிறது. பக்குவம் இல்லாதவனுக்கு இன்பம் இன்பமாகத் தோன்றாது.

ஏழு வயதுப் பெண்ணுக்கு உறவுமுறை பற்றித் திருமணம் செய்து விட்டார்கள். கணவனுருக்கு 21 வயது. இதுவோ ஏழு வயதுப் பெண். பொம்மையுடன் விளையாடும்; பிகில் வைத்துக் கொண்டு விளையாடும். அந்த 21 வயதுக் கணவரைக் கரும்பாய் எண்ண வேண்டும். வேம்பாய் எண்ணுகிறாள். 'போ, போ' என்பாள். இது சின்னக் குழந்தை. அவன் சிரித்துக் கொண்டே போய்விட்டான். அவன் எங்கெங்கோயோ போனான். டெல்லியிலே போய் வேலையெல்லாம் பார்த்தான்.

இந்தக் குழந்தைக்கு ஒரு 10 வயது போய் 17 வயது ஆகிறது. விகடன், குமுதம் எல்லாவற்றையும் பார்க்கிறது. ஜோடி ஜோடியாகப் படங்கள். "ஏம்மா என் கணவனூர் எங்கே?" என்பாள். "அவர் டெல்லியிலே இருக்கிறாரம்மா" என்பாள் தாய். அவன் பிறந்த நாள் விழாவுக்குக் கலர் போட்டோ எடுத்து அனுப்பி வைத்தான். 'ஹாட்டு', 'சூட்டு', 'கோட்டு', 'பூட்டு', எல்லாம் அணிந்துள்ள போட்டோ. "ஏம்மா! இவர்தான்

'என் கணவராம்மா?'' எனக் கேட்பாள். 'அவரேதா னம்மா!' 'வருவாரா?' 'வருவார்;' அம்மா சொல்கிருள்.

''விறல்மாரன் ஐந்து மலர்வாளி சிந்த
மிகவானில் இந்து வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூற
குறவாணர் குன்றில் உறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீர
குளிர்மாலை யின்கண் அணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ''

திருச்செந்தூர்த் திருப்புகழ். குறை தீர வந்து குறுகாயோ. இதனை 48 நாட்கள், மனம் உருகிப் படித் தாள் தெருவிலே 'ஆரன்' சத்தம் கேட்டது. ஜன்னல் பக்கம் எட்டிப் பார்த்தாள். மன்மத வடிவாக, கல்கண்டு மலையாகக் கணவனுர்தான். அப்பொழுது ஈரத் தலை யோடு வந்த அந்தக் குழந்தை சொல்கிருள், "அம்மா! உங்கள் மாப்பிள்ளை வந்து விட்டார்'' என்று. "போய் முகூர்த்தத்துக்கு என்று எடுத்த புடவையைக் கட்டிக் கொள். தலையிலே கனகாம்பரம் மலர் சூடிக் கொள்'' என்ருள் தாய். அந்தப் பெண் புடவையை எல்லாம் மாற்றிக் கொள்கிருள். அவர் தெரு அறையிலே அமர்ந்து கொண்டு, "மாமி! எல்லோரும் சௌக்யமா? சரோஜா என்ன பண்ணிக் கொண்டிருக்கிருள்'' என்ருர். "இதோ காபி கொண்டு வருகிறேன்'' என்ருள் அவள். வெள்ளிக் கூஜாவிலே 'நெஸ்' காபி போட்டுக்கொண்டு டபுள் தம்ளர் போட்டு எடுத்துக் கொண்டு ஒரு ஓர மாக, தமிழ் நாட்டுக்கே உள்ள பண்பாட்டுடன் நாணத்தோடு கோணி, தலை குனிந்து, "இப்பொழுது தான் வந்தீர்களா?'' என்ருள். "சரோ! சரோ! நீயே போட்ட காபியா? இந்தக் காபியைவிட உன்னுடைய குணம் இனிக்கிறது சரோஜா'' என்ருர். இப்பொழுது

அவள் கணவனுரை எப்படிப் பார்க்கிருள்? வேடிக்கை யில்லை. கல்கண்டு மலையாய் எண்ணுகிருள். அவளுக்குப் பக்குவம் வராதபோது வேம்பாய் இருந்தது. அவன் ஒருத்தன் தான்; பொருள் ஒன்றுதான். இவள் பக்குவம் அடையாத போது ஏழு வயதிலே கணவன் வேம்பா யிருந்தான். இவள் பக்குவம் அடைந்த போது கரும்பாக ஆகி விட்டான். ஆண்டவன் ஒருத்தன் தான். ஆன்மாவுக்குப் பக்குவம் வராதபோது கடவுள் இனிப்பதில்லை. பக்குவம் வந்த போது அது இனிக் கிறது. அந்த இனிப்பு வந்தபோது உலக இனிப் பெல்லாம் கசக்கின்றது.

**"கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே"**

என்ருர் அருணகிரிநாதர். அருணகிரிநாதர் மாதிரி யார் சொல்லுவார்கள்?

**"பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற**
**பேதை கொங்கை**
**விரும்புங் குமரனே"**

அவன் என்ன கிழவனு? 21 வயது குமரன்.

**"குமரனே மெய்யன்பினுல் மெல்ல மெல்ல உள்ள**
**அரும்பும் தனிப் பரமானந்தம் தித்தித்து அறிந்த அன்றே**
**கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்து"**

அந்தப் பேரின்பம் வருகிறபோது இந்த உலக இன்பமெல்லாம் கசந்து போம். அதைத்தான் சொன்னுர்.

**"பாதி இரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பி அருள்**
**ஜோதியளித்தென் உள்ளகத்தே சூழ்ந்துகலந்து துலங்குகின்ருய்**
**நீதி நடஞ்செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும் பேற்றை**
**ஓதி முடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே."**

அகில உலகங்களும் இந்த இன்பத்தைப் பெற வேண்டும். அதற்காக நான் தவம் பண்ணுகின்றேன். பெரியவர்கள் எல்லாம் தனக்காகத் தவம் செய்வதில்லை. தனக்காக வாழ்வதில்லை. உலகமக்களுக்காக அவர்கள் உண்பார்கள்; உலக மக்களுக்காகப் பேசுவார்கள்; உலக மக்களுக்காக அவர்கள் தவம் செய்வார்கள். எல்லாம் வேடிக்கையல்ல. சில சமயத்திலே தாயார் மருந்து உண்பாள். வியாதி குழந்தைக்கு. அம்மா மருந்து உண்பாள். அந்த மருந்தை நேராகக் குழந்தைக்குச் சாப்பிடக் கூடிய ஆற்றல் இல்லை. அந்தக் குழந்தையின் நோய்க்காகத் தாய் மருந்து உண்பது போலே, பெரியவர்கள் நமக்காகத் தவம் செய்கிறார்கள். அவர்கள் நமக்காக வழிபாடு செய்கிறார்கள். அவர்கள் நமக்காக ஆலயங்களுக்குப் போகிறார்கள். அவர்கள் நமக்காக வாழ்கின்றார்கள். அவர்கள் சிவமாம் தன்மையைப் பெற்றவர்கள். அவர்கள் உண்பதும் உடுப்பதும் உலகத்துக்காக. இந்த மகத்தான தத்துவத்தை நமக்கு உணர்த்துவது சைவ சித்தாந்தம்.

மணி ஆறுச்சு என்று ஆராய்ச்சி பண்ணக் கூடாது. இப்போது மணி ஆறுயிற்று. இன்னும் என்ன ஆராய்ச்சி? ஆராய்ச்சி பண்ணிக் கொண்டே இருப்பதா? அனுபவத்துக்கு வரவேண்டாமா? ஆகவே நான் இவ்வளவு நேரம் பேசிய பேச்சு, "சைவம் என்று சொன்னால் சிவத்தோடு தொடர்பு கொண்டது. சிவம் எல்லாவற்றிலும் தொடர்ந்து இருக்கிறது. நின்றதுவும் சரிப்பதுவும் சைவமேயாம். சித்தாந்தம் என்பதற்கு முடிவு என்பது பொருள். வேதாந்தத்தின் முடிவு சித்தாந்தம். ஆகவே முடிந்த முடிவாய் இருப்பது. அதிலே திரண்ட பொருள், இறைவன், ஆன்மா, பாசம்.

**"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்**
**மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன**
**ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை**
**வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே"**

என்பது, கந்தபுராணத் திருவிருத்தம். இந்தச் சைவ சித்தாந்தத்தைச் சூரபன்மனுக்குக் காசியப முனிவர் உணர்த்துகின்ருர். அதைத் தான் வேத ஆகமங்களெல்லாம் சொல்லுகின்றன. வேதத்திலே சைவ சித்தாத்தம். ஆகமத்திலே சைவ சித்தாந்தம். புராணங்களிலே சைவ சித்தாந்தம். திருமுறைகளிலே சைவ சித்தாந்தம் சாஸ்திரங்களிலே சைவ சித்தாந்தம். நம்முடைய வாழ்விலே சைவ சித்தாந்தம். இப்படிப் பாரம்பரியமாக வந்தது சைவ சித்தாந்தம். அது ஏன் அதிகமாகச் சில பேருக்குத் தெரியவில்லே? என்று என்ஐ ஒருத்தன் கேட்டான். "மற்ற மதங்கள் பரவின மாதிரி சைவ சித்தாந்தம் பரவவில்லேயே" என்று கேட்டான். "அது, தரம் குறைவு என்று இல்லேயப்பா. குறைவாய் இருப்பதனுல் சந்தன மரத்துக்குத் தரம் குறைவா? வெகுவாய் இருப்பதனுல் வேலிக் கருவை மதிக்கப்படுகிறதா? எங்கே பார்த்தாலும் வேலிக்கருவை. குறைவாய் இருப்ப ஞல் சந்தன மரத்தை அவமதிக்க முடியுமா?

யாரோ ஒரு அம்மாள் வைர நெக்லஸ் போட்டிருக்கிருள். எல்லோரும் போட்டுக் கொண்டிருக்கிருர்கள் தங்கம். தங்கத்துக்கா பெருமை? வைரத்துக்குத்தான் பெருமை. வைர நெக்லஸ் தகுதி உள்ளவர்கள் தான் போட முடியும். சைவ சித்தாந்தத்தை எல்லோரும் கையாள முடியாது. அது மிகப்பெரிய நுட்பமான நூல். ஆகையிஞலே அது நுணுகித் தெரிந்து கொள்ள வேண்டியது. பக்குவம் ஆனவர்கள் தெரிந்து கொள்ளு

வார்கள்'' என்று ஒரு சமயம் அதற்கு நான் பதில் சொன்னேன்.

ஆகவே இன்று முதல் எல்லோரும் சைவ சித்தாந்தக் கொள்கைகளை மனதிலே வைத்துக் கொண்டு, ஆன்மா என்றைக்கும் உள்ளது; ஆன்மாவிலே ஆணவ மலம் அனாதியே உண்டு. அதை நீக்குவதற்கு வந்தது கன்ம மலம், மாயா மலம். அது சாஸ்திர ஞானத்தாலே, அனுபவ ஞானத்தாலே இந்த மலங்கள் போய் ஜீவன் சிவனாகிறது'' ஆகிய தத்துவங்களை இத்தனை நேரம் உங்களுக்குச் சொன்னேன். எத்தனைக்கெத்தனை கேட்கிறோமோ அத்தனைக்கத்தனை சிந்தனையிலே தெளிவு உண்டாகும். பல வருடங்கள் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியதைச் சில மணி நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நாமாக அரிசி வாங்கி, பருப்பு வாங்கி, அடுப்பு கட்டி, நாமாக காய்கறி நறுக்கிச் சமையல் பண்ணிச் சாப்பிடுவது எப்படி? அப்படியே பொட்டலமாக வாங்கிச் சாப்பிடுவது எப்படி? அந்த மாதிரி கற்றவர்கள் நீண்ட நாள் அனுபவத்தைச் சுருக்கிச் சொல்கிறார்கள். அதைத் தான் ''கற்றிலனாயினும் கேட்க'' என்றார். 'கேள்வி முயல்' என்று சொன்னார்கள். செவி படைத்த பயனே நல்ல சாத்திர ஞானங்களைக் கேட்பது. அந்தக் கேள்விச் செல்வம் உங்களுக்கு வந்திருக்கிறது. இத்தனை நேரம் உங்களுக்கு இதை எல்லாம் பேசுமாறு செய்த—இந்தத் தகுதியை வழங்கிய அன்பர்களுக்கும், சென்னைச் சர்வ கலாசாலை அன்பர்களுக்கும், தலைமை தாங்கி நடத்திக் கொடுத்த நம் பதிவாளர் C.K. குமாரசுவாமி அவர்களுக்கும், இசைத்துறைத் தலைவி டாக்டர் S. சீதா அம்மாள் அவர்களுக்கும், மிகப் பொறுமையாய் இருந்து கேட்டு இதை மனதிலே பதிய வைத்துக் கொண்ட உங்கள் அன்புக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரி

வித்துக் கொள்கிறேன். மற்றுமொரு முறை உங்கள் பொன்னுர் திருவடிகளுக்கு என் வணக்கத்தைச் செலுத்தி எல்லோரும் வாழ எங்கும் நிறைந்த ஆண் டவனை வாழ்த்தி, இந்த வார்த்தையை இந்த அளவிலே பூர்த்தி செய்துக்கொள்ளுகிறேன்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக

திருச்சிற்றம்பலம்

செய்வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்
கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லையென
உய்வகையால் பொருள் சிவன்என் றருளாலே
உணர்ந்தறிந்தார்.

—பெரிய புராணம்

“குடிலை என்னும் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதம் என்னும் பாதவம் வளர்த்தனை
பாதவம் அதனில் படுபயன் பலவே, அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே இலைஒரீஇத்
தளிர்கொண்டு வந்தனர் பலரே தளிர் ஒரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்காய் என்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே”

—குமரகுருபரர் (பண்டார மும்,மணிக்கோவை)

உ

சிவமயம்

# 9. சிவசக்தி

சிவபரம்பொருளின் பேரருள், பேரறிவு, பேராற்றல், பேரின்பம் முதலிய இறைமைக் குணங்களுக்குச் சத்தியென்று பெயர். நீரினின்று குளிர்ச்சியும் நெருப்பினின்று வெப்பமும் பிரிக்கப்படாதது போல், சிவத்தினின்றும் சத்தியும் சத்தியினின்றும் சிவமும் வேருகாமல் இரண்டும் ஒரே பொருளாய், தாதான்மியமாயிருக்கும். சிவபரம் பொருள் சத்தியோடு கூடியிருத்தலினுல் எத்தொழிலேயும் செய்ய வல்லதாயிருக்கின்றது. இல்லாவிடில் சிவம் எத்தொழிலேயுஞ் செய்யாது. "சிவமெனும் பொருளுமாதி சத்தியொடு சேரினெத் தொழிலும் வல்லதாம், இவள் பிரிந்திடினியங்குதற்கு மரிதரி தெனுமறை யிரைக்குமால்" என்றனர் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும்.

சிவபரம் பொருள் தன்னுடைய இறைமைக் குணங்களாகிய பேரருளேயும் பேராற்றலேயும் பேரறிவையும் பிரபஞ்சம் காரியப்படுவது கருதி வெளிப்படுத்திய தன்மையைச் சிவத்தினின்றுஞ் சத்தி தோன்றியதாக ஞானநூல்கள் கூறுநிற்கும். சிவம் சத்தியுடன் கூடிப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தலால், சிவம் உயிர்களுக்கெல்லாம் தந்தையாகவும், சத்தி தாயாகவும் துணியப்படும். சிவம் ஆண் எனவாவது பெண் எனவாவது சொல்லப்படாத பொருளாயிருந்தும் ஆன்மாக்களின் மீது வைத்த காருண்யத்தால் சிவமும் சத்தியும் ஆணும் பெண்ணுமாகிய திருமேனிகளேத்

தாங்கி, படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும். இதனால் இவர்களாற் படைக்கப்படும் உலகுயிர்களும் இவர்களைப் போலவே குண குணிகளாகவும் ஆணும் பெண்ணுமாகவும் இருக்கின்றன. என்று சிவம் உண்டோ, அன்றே சத்தியும் உண்டு. சத்தியின்றிச் சிவமில்லை; சிவமின்றிச் சத்தியில்லை. அதுபோல்உலகில் என்று ஆண் உண்டோ அன்றே பெண்ணும் உண்டு. ஆணின்றிப் பெண்ணில்லை. பெண்ணின்றி ஆணில்லை.

> **பண்ணுமின் னிசையு நீருந் தண்மையும் பாலும் பாலில்**
> **நண்ணுமின் சுவையும் பூவு நாற்றமும் மணியு மங்கேழ்**
> **வண்ணமும் வேறு வேறு வடிவுகொண் டிருந்தா லொத்த**
> **தண்ணலு முலக மீன்ற அம்மையு மிருந்த தம்மா.**

—திருவிளையாடற் புராணம்.

சத்தி ஒன்றே உயிர்களின் பலவாறான பக்குவங்களுக்கிணங்கப் பலவாறான பேதங்களையுடையதாயிருக்கும். அச் சத்தியைத் தன் குணமாகக் கொண்ட சிவமும் அச் சத்தியையே தன் வடிவமாகவுங் கொண்டு பலவ்வகையான பேதங்களைப் பெற்று விளங்கும். பளிங்கானது தன்னை யடுத்த பொன்னிறம் நீலநிறம் முதலியவற்றைத் தான் பெற்றுத் தோன்றினாலும் தன் இயற்கை நிலைமை மாறாதிருப்பது போல், சத்தியின் பேதமெல்லாம் சிவபேதமாக விளங்கினும், சிவம் தன்னிலைமை மாறாமல் நிர்விகாரியாயிருக்கும்.

சத்தியின் பேதங்கள் எண்ணிறந்தனவாயினும் அவை சிவபரம் பொருளின் சந்நிதியில் நடைபெறும் (சிருஷ்டி) படைத்தல், (திதி) அளித்தல், (சங்காரம்) அழித்தல், (திரோபவம்) மறைத்தல், (அநுக்கிரகம்) அருளல் என்னும் ஐந்தொழில்களை நோக்கி,: பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி

என்னும் ஐவகைச் சத்திகளாகத் தொகுத்துரைக்கப் படும்.

இவற்றுள் பராசத்தியே ஆதிசத்தி அல்லது திரோதசத்தியாயும், இச்சா ஞானக் கிரியா சத்திக ளாயும் சிவபெருமானுக்குத் திருமேனியாயும், சுத்த மாயையும் அசுத்த மாயையுமாகிய விந்து மோகினி மான் என்னும் உபாதானங்களைக் கூடி நின்று காரியப்படுத்தி, சிவபெருமான் செய்யும் பஞ்ச கிருத்தியங்களுக்கும் காரணமாயுமிருக்கும். திரோத சத்தியானது ஆன்மாக்களைப் போகத்தில் அமிழ்த்திக் கன்ம நாசஞ் செய்து ஆணவ மலத்தைப் பரிகாரப் படுத்தும். இச்சாசத்தி யென்பது சர்வான்மாக்களையும் மோட்சத்திற் சேர்க்கவேண்டும் என்னும் பேரரு ளாகும். ஞான சத்தியென்பது ஆன்மாக்கள் செய்த இருவினைகளின்படி அவைகள் வினைப்பயன்களைப் புசித்துத் தொலைக்கச் செய்யும் பேரறிவாகும். கிரியா சத்தியாவது ஆன்மாக்களின் பொருட்டுப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும் பேராற்றலாகும். சிவபெருமான் இச்சா ஞானக் கிரியா சொரூபனுயிருத் தலினுல் அவருக்கு இலய சிவன் என்றும் போக சிவன் என்றும் அதிகார சிவன் என்றும் திருநாமங்கள் உண்டாயின.

பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானங் கிரியைபர போக ரூபந்
தருங்கருணை யுருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்க டாங்க
விரிந்தவுபா தானங்கண் மேவி யொன்ருய்
விமலமா யைந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்
தரந்தைகெட மணிமன்று ளாடல் காணும்
அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்.

—சிவப்பிரகாசம்

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்ருேஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே.

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழுமீச
னுவந்தரு ளுருத்திரன்ருன் மாலய னென்றி னென்ருய்ப்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்ருய்
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்.

—சிவஞான சித்தியார்

சிலர், கடவுளைத் தாயும் தந்தையுமாக வழிபடு வாரைப் பார்த்து "கடவுளுக்கும் ஒரு மனைவி உண்டா" என்று கேட்டுப் பரிகாசஞ் செய்கிருர்கள். 'இவர்கள் மேலே கூறிய சிவசத்திகளின் இலக்கணங்களை உணர் வார்களாயின், இவர்களுக்குச் சிவபெருமானும் அவரருட் சத்தியுங் கூடி உயிர்களுக்குத் தந்தையுந் தாயுமா யெழுந்தருளி உபகரித்து வரும் அருட்டிறம் விளங்கும். உலகத்தின் இருப்பையும் இலக்கணங் களையுங் கொண்டு கடவுளின் இருப்பையும் இலக்கணங் களையும் அறிய வேண்டும். இதனை

"ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடுங்
காலமே"

என்ற திருவாசகத்தாலுணர்க. உலகம் சித்து அசித்து என்னும் இருவகைப்படும் பிரபஞ்சமாகும். சித்துப் பொருள்கள் என்பன அறிவுடைப் பொருள்களாகிய ஆன்மாக்கள். அசித்துப் பொருள்கள் என்பன அறிவில் பொருளாகிய தனுகரணபுவன போகங்கள். இவற்றுள், சித்துப் பொருள்களாகிய ஆன்மாக்கள் இயற்கையில் பூதங்களல்ல, இந்திரியங்களல்ல, கரணங்களல்ல, ஆணல்ல, பெண்ணுமல்ல; அறிவே ஆன்ம சொருப மாகும்.

இவ்வாறிருந்தும், ஆன்மாக்கள் புல்லாகவும் பூடாகவும் மரமாகவும் பறவைகளாகவும் விலங்குக ளாகவும் மனிதராகவும் ஆணுகவும் பெண்ணுகவும் இருக்கக் காண்கிருேம். இவ்வாறே, கடவுளும், ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாத ஞான சொரூப ராயினும், அவர் பல திருநாமங்களையும் பல திருமேனிகளையும் பெற்று ஆணுகவும் பெண்ணுகவு மிருக்கிருர் என்று உணர்தல் வேண்டும். ஆனல் ஆன்மாக்கள் பாசவசப்பட்டு, சுதந்திரமிழந்து, அறிவும் ஆற்றலுமழுங்கி மாயையைக் கொண்டு கடவுளால் தமக்குக் கொடுக்கப்படும் சரீரங்களைப் பெற்று ஆணும் பெண்ணுமாகப் பிறந்து உழல்கின்றன. கடவுளோ ஆன்மாக்களைப் போலன்றி, மலரகிதராய் சுதந்திரமும் பேரறிவும் உடையவராய், அவ்வான்மாக்களுக்கு அருள் செய்ய வேண்டி, தம் இச்சையின்படி, அவைகளின் பக்குவங்களுக்கிணங்க அவைகளைப் போலவே ஆணும் பெண்ணுமாகவும் அவைகளுக் கெல்லாம் தாயுந் தந்தையுமாகவும் இருந்து அருள் செய்கிருர். இதனை,

> **"குவளைக்கண்ணி கூறன் காண்க**
> **அவளுந் தானு முடனே காண்க"**

எனத் திருவாசகமும்,

> **"தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமேயாய தலைவனுர்"**

என்று தேவாரமும் முழக்கும். ஆன்மாக்களுக்கென வசிக்க ஓர் இடமில்லாதிருந்தும் அவைகளுக்கு வினைப் பயனை ஊட்ட வேண்டி நம்மிறைவர் அவைகளின் வினைக்கீடாகப் பலவகைப்பட்ட புவனங்களாகிய இடங் களைக் கொடுப்பதுபோல் நம்மிறைவரும் ஆன்மாக்கள் உச்சீவிப்பது கருதி காருண்யத்தால் சிவலோகம் ஸ்ரீகைலாயம் முதலிய இடங்களையும் குரு லிங்க சங்க

மங்களாகிய தானங்களையும் தம்மிருப்பிடமாகக் கொண்டிருக்கிறார். சிலர் "தாயுந் தந்தையுமாயிருப்பவர் கடவுள் ஒருவரேயாயிருக்க, அவரைத் தந்தையாக மாத்திர மேனும் தாயாக மாத்திரமேனும் வழி பட்டாற் போதாதோ" என்பார்கள்.

தாயின்றித் தந்தையும் தந்தையின்றித் தாயும் இல்லை யாகையாலும், கடவுள் தாயும் தந்தையுமா யெழுந்தருளி உயிர்களுக்கு அருள் செய்வது சுருதி யுத்தியனுபவங்களாற் பெறப்படுதலாலும், அவரைத் தாயுந் தந்தையுமாக வழிபடுவதே சிறந்தவழிபாடாகும். தாயுமானார் என்று இறைவனுக்கு ஒரு பெயர். தந்தையாக இருக்கிறார். அவரே தாயாகவும் ஆனார்.

தாயும் ஆனார் என்ற உம்மை அவன் உயிர்கட்குத் தந்தையாக இருப்பவன், இப்போது தாயாகவும் ஆனான் எனப்பெறும்.

**தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்**
**பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்**
**சூலமுந் தொக்க வளையுமுடைத் தொன்மைக்**
**கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!**

—திருவாசகம்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
    மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
    குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
    நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
    விளங்குக உலகம் எல்லாம்.

எல்லாம் அரன் நாமமே சூழ்க !
வையகம் துயர் தீர்க !!
வாழ்க உலகெலாம் !!!

முற்றும்